# சைவத் தெளிவு

முனைவர்
ம.சா.அறிவுடைநம்பி



# சைவத் தமிழ்

o

முனைவர் ம. சா. அறிவுடைநம்பி
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

o

கிடைக்குமிடம்

கருமணி பதிப்பகம்
'மகிழ்மனை'
4/578 வள்ளலார் தெரு
அன்புநகர்
தாசில்தார் நகர்
மதுரை-625 020

கருமணி பதிப்பகம்
சி 3 குடியிருப்பு வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

முதற்பதிப்பு : தி.வ.ஆ. 2023, ஐப்பசி
அக்டோபர்-1992

உரிமை : ம. சா. அறிவுடைநம்பி

SAIVAT TAMIZH
BY
DR. M. S. ARIVUDAI NAMBI M.A., Ph.D.,

பக்கம் : 236

விலை : உரு 40 00

இந்நூல் திருமலை திருப்பதி தேவத்தானத்தின் 'பக்தி நூல்கள் பதிப்பித்தல்' எனும் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற்று வெளியிடப்படுகிறது.
This book is published with the financial assistance of Thirumala Thirupati Devasthanams Under their scheme "Aid to publish religious books"

மேலட்டை ஓவியம் : மனோஸ், தெற்காவணி மூலவீதி,
மதுரை-1

அச்சகம் : அமுதச்சகம்
38, மேலப்பொன்னகரம் 7வது தெரு,
மதுரை-625 010
தொலைபேசி 32029

முனைவர் சி. பாலசுப்பிரமணியன் எம் ஏ., எம்.லிட்., பிஎச்டி.,
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

# அணிந்துரை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாகவும் விளங்கும் சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்றுப் பரவித் தழைத்த பழமையான சமயம் சைவ சமயம். அந்தமிலா ஆனந்தம் பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும் சிவ பெருமான், அடியார் சிந்தனையுள் சிறந்து தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் பெருந்தகையாகத் திகழ்பவர் என்பதைச் சிவனடியார்கள் தம் சைவ சமயத்தின் நெறிநின்று தெளிவுறுத்துவர். தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டான் என மணிவாசகப் பெருமான் மொழிவதற்கேற்பத் தென்தமிழ் நாட்டின் தெய்வமாய் விளங்கும் சிந்தனைக்கரிய சிவனைப் போற்றி எழுந்த சைவ சமய நூல்களெல்லாம் தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும் எழிலுக்கும் துணையாயின என்பதை இலக்கிய வரலாறு காட்டும். தமிழில், சங்க இலக்கியங்கள் முதலாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் சிவபெருமானைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்து பன்னெடுங்காலமாகத் தழைத்தோங்கி வளர்ந்து வருவதை அறிஞர் உலகம் நன்கறியும். அவ்வப்பொழுது வெளிவரும் ஆராய்ச்சியுரைகளும், சொற்பொழிவுகளும் சைவத் தமிழின் மேன்மையை மேலும் மேலும் பறைசாற்றி வருவதைப் பாரோர் அறிவர். இவ்வகையில் 'சைவத் தமிழ்' என்ற தலைப்பிலேயே இப்புதிய நூல் வெளிவருவது தமிழுலகிற்குப் பெருங்கொடையாகும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் அரிய கையெழுத்துச்சுவடித் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரியும் முனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்கள் தாம் அவ்வப்போது எழுதி வெளியிட்ட பதினான்கு கட்டுரைகளைத் தொகுத்து இந் நூலினை உருவாக்கி வெளியிட்டுள்ளார். சைவத் திருமகனார் முனைவர் ச. சாம்பசிவனார் அவர்களின் புதல்வரான இவர்

இச் சைவத்தமிழைத் தொகுத்து அளித்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியதாகும். பதினான்கு கட்டுரைகளையும் பத்திமை நுனிசொட்ட மிகவும் பாங்காக அமைத்துள்ளார்.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில் சைவ சமய நெறி தழைத்தோங்கியதும், பிற்காலத்தில் தோன்றிய பத்திமை இலக்கியங்கள் அவற்றை வித்தாகக் கொண்டு மேலும் வளர்ச்சியுற்றதையும் 'பழந்தமிழ் இலக்கியத்தில் சைவம்' என்னும் முதல் கட்டுரையே தெளிவுறுத்துகின்றது.

சிவஞானப்பால் அருந்திய ஞானத்திருவுருவாம் திருஞான சம்பந்தர் அருளிய முந்நூற்று எண்பத்து நான்கு பதிகங்களும் திருநெறிய தமிழ் என்றும், அருண்மாலைத் தமிழ் என்றும் போற்றப்பெறுவன. அவற்றுள் முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெறும் இலக்கியக் கூறுகளை ஆராய்கிறது 'திருக்கடைக் காப்பு' என்னும் இரண்டாவது கட்டுரை. சம்பந்தரின் முதற் பதிகச் சிறப்பும், இறைவன் இறைவியின் திருவருள் சிறப்பும் இப்பகுதியில் சிறப்புற விளக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தருக்கு அடுத்த நிலையில் பெரிதும் போற்றப் பெறுபவர் நாவுக்கரசர் ஆவார். இவ்விருவரும் சைவ சமயத்தின் இருகண்களாக விளங்குபவர்கள். சைவத் திருத்தொண்டின் பெருமையை விளக்க வந்த அப்பரடிகள் மொழிந்த முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெறும் இலக்கியக் கூறுகளை ஆராய்கிறது 'தேவாரம்' என்னும் மூன்றாவது கட்டுரை.

சந்தமிகு இன்தமிழ் மாலைகள் பாடியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவருடைய முதல் ஐந்து பதிகங்களில் காணப் பெறும் இலக்கியக் கூறுகளை நான்காவதான 'திருப்பாட்டு' என்னும் தலைப்பிலான கட்டுரை விவரிக்கின்றது. மூவர் தேவாரத்தின் முதலைந்து பதிகங்களின் சுவையை உணர்வோர்க்கு இக்கட்டுரைகள் பெருவிருந்தாகும். மூவர் தேவாரத்தில் குறிப்பிடப்பெறும் திருமால் அவதாரங்கள் பற்றிய ஐந்தாவது கட்டுரையும் மிகவும் அருமையானதாகும்.

அருளாளர்கள் வழங்கிய சைவத்தமிழில் திருமுறைகளில் காணலாகும் ஓவியக்கலை பற்றிய செய்திகள் தொகுப்பும், சிற்றிலக்கியப் பனுவல்களான அந்தாதி, மும்மணிக்கோவை

போன்றவற்றின் எழுச்சி பற்றிய கட்டுரைகளும் சிறப்புற அமைந்துள்ளன.

மாதவச் சிவஞானமுனிவர் இயற்றிய திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் காட்டும் இலக்கியக் கூறுகளை இந்நூலாசிரியர் தனியே விரித்துரைக்கின்றார். இதேபோன்று திருக்கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதியிலுள்ள அரிய பல செய்திகளும் அணிநயங்களும் சித்தாந்தக் கருத்துக்களும் சிந்தனைக்கு விருந்தாகப் படைக்கப் பெற்றுள்ளன.

சைவ நூல்களில் முடிந்த முடிபைக் கூறும் நூல்களைச் சைவ சித்தாந்தம் என்பர். சிவம் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த சைவம் என்ற சொல், சிவனைப் பற்றிய நிலையையும், சைவ நூல்களையும், சிவனடி சேர்தற்குரிய நெறியையும் குறிக்கும். சித்த அந்தம் என்பது முடிந்த முடிபு என்று பொருள் பெறும். சைவ சித்தாந்த நூல்களைக் கற்றுணர்வோர் இம்மையிலும் மறுமையிலும் பயன்பெறுவர் என்பது ஆன்றோர் முடிபு. சித்தாந்த வேதாந்தம் செம்பொருளாதலால் சித்தாந்த வேதாந்தம் சிவனைக் காட்டும் என்பது திருமூலர் வாக்கு. சைவ சித்தாந்த மரபில் தோன்றிய மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமும் அதன் விளக்கமாக அருணந்தியார் அருளிய சிவஞான சித்தியாரும் 'போதமும் சுபக்கமும்' என்னும் தலைப்பிலான நீண்டதொரு கட்டுரையில் அரிதின் விளக்கப் பெறுகின்றன.

சைவ சித்தாந்தத்தின் முக்கிய தத்துவக் கொள்கையாகப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை பேசப்பெறும். சைவ சித்தாந்தம் காட்டும் இந்த அடிப்படை உண்மைகளை இந்தியாவில் தோன்றிய மற்றொரு சமயமான சமண சமயக் கொள்கைகளோடும் ஒப்பிட்டு ஆராய்கிறார் இந்நூலாசிரியர். தமிழ் இலக்கண இலக்கிய வரலாற்றில் சமணர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது என்ற நிலையில் சைவத்தையும் சமணத்தையும் இவர் ஒப்பிட்டாராய்வதும் பொருத்தமே. இருசமயத்தாரின் கடவுட்கொள்கை, கருமத்தைப் பற்றிய சிந்தனையில் இவ்விரு சாராரின் கொள்கை வேறுபாடுகள், முத்தி சாதனங்களில் ஒற்றுமைக் கூறுகள் எனப் பல்வேறு வகையில் இவ்விரு பெரும் தத்துவங்களும் ஆராய்ந்துரைக்கப் பெற்றுள்ளமையும் போற்றத்தக்கதாகும். இக்கட்டுரைகள்

அனைத்தும் நூலாசிரியரின் சைவப்பற்றையும் தமிழாய்வுச் சிந்தனையையும் தெளிவுறுத்துகின்றன. சைவப்பெருமக்களுக்கும் தமிழுலகிற்கும் இந்நூல் சிறந்த விருந்தாகும் என நம்புகிறேன்.

முனைவர் ம. சா. அறிவுடைநம்பி அவர்கள் சைவ சமயம், தமிழ் இலக்கியம், நுண்கலைகள், அரிய கையெழுத்துச் சுவடிகளைப் பதிப்பித்தல் ஆகிய துறைகளில் ஆர்வம் கொண்டு உழைத்து வரும் இளைஞர். போதமும் சுபக்கமும், மூவர் தேவாரம் முதல் ஐந்து பதிகங்கள் மூலமும் உரையும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் போன்ற நூல்களையும் இவர் உருவாக்கி அளித்துள்ளார். இவற்றுடன் 'சைவத்தமிழ்' என்ற இப்புதிய நூலையும் இவர் பதிப்பித்தளித்துள்ளமைக்காகப் பாராட்டி வாழ்த்துகிறேன். இதன் தொடர்ச்சியாக மேலும் பல அரிய நூல்களைப் படைத்துத் தமிழுலகிற்கு இவர் அளிப்பார் எனவும் நம்புகிறேன்.

14—10—1992

சி. பாலசுப்பிரமணியன்

# என்னுரை

சைவம் சிவபிரானோடு தொடர்புடையது. சைவமும் தமிழும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கலந்திருப்பதைத் தமிழிலக்கியங்கள் எடுத்தியம்பும். சைவ சமய குரவர்களும் ஏனைய அருளாளர்களும் இறைவனோடு தமிழை இணைத்து இசையமைத்துப் பாடியிருப்பதைச் சைவ உலகம் நன்கறியும். 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்றார் அப்பரடிகள். தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்தன்' என்றே சம்பந்தரும் பல பாக்களில் அழைத்துக் கொள்வார். இவ்வாறு தமிழோடு தொடர்புடைய சைவ சமயக் கட்டுரைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்துச் 'சைவத் தமிழ்' எனுந் தலைப்பில் இந்நூல் உருவாக்கப்பெற்றுள்ளது.

'சைவத்தமிழ்' எனும் இந்நூலில் பதினான்கு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆறுமுகநாவலர் நூற்றாண்டு விழா மலர், மெய்கண்டார் திங்களிதழ், சைவத் திருமுறை மாநாட்டு மலர், சூரியனார் கோயில் கும்பாபிடேகச் சிறப்பு மலர் போன்ற இதழ்களிலும் யான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளும், மாநாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வு செய்த கட்டுரைகளும் இந்நூலை அணிசெய்கின்றன.

இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெருமைசால் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களாவர். பல்வேறு பணிகளுக்கிடையே தம் உடல்நலம் குன்றியிருந்த போதும் நூலைப் படித்து அரிய அணிந்துரை வழங்கிய அவர்கட்கு என் பணிவான நன்றி.

'பக்தி நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல்' எனும் திட்டத்தின் மூலம் இந்நூல் வெளிவருவதற்கு நிதியுதவி அளித்த திருமலை திருப்பதி தேவத்தானத்திற்கு என் நன்றி.

இந்நூல் வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தார்க்கு என் நன்றி.

பல்வேறு வகையில் உறுதுணை புரிந்த பேராசிரியர் முனைவர் பா. சுப்ரமணியன், புலவர் திரு செ. இராசு, முனைவர் வே. இரா. மாதவன், திரு தி. சு. கோவிந்தசாமி, புலவர் ப. வெ. நாகராசன், திரு சி. தட்சிணாமூர்த்தி ஆகியோர்க்கும் என் நன்றி.

அவ்வப்பொழுது அறிவுரைகள், கருத்துரைகள் வழங்கி நெறிப்படுத்தியதோடு இந்நூல் அச்சாகும்பொழுது பிழை திருத்தம் செய்து உதவிய என் தந்தையார் முனைவர் ச. சாம்பசிவனார் அவர்கட்கு என் நன்றி.

மேலட்டை ஓவியம் வரைந்து கொடுத்த ஓவியர் திரு பி.எம்.ஆர். சுரேசு அவர்கட்கும், இந்நூலை அச்சிட்டுத்தந்த அமுதச்சக உரிமையாளர் திரு சா. திருமாவளவன் ஆகியோர்க்கும் என் நன்றி.

தமிழ்ப் பெருமக்கள் இந்நூலினை வாங்கி ஆதரவு நல்குவர் என நம்புகின்றேன்.

தமிழ் வாழ்க !

தஞ்சாவூர் 613005
தி. வ. ஆண்டு 2023
ஐப்பசி 4.
20-10 1992

அன்பன்
ம. சா. அறிவுடைநம்பி

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. பழந்தமிழ் இலக்கியத்தில் சைவம் | ... | 1— 8 |
| 2. திருக்கடைக்காப்பு | ... | 9—21 |
| 3. தேவாரம் | ... | 22—30 |
| 4. திருப்பாட்டு | ... | 31 - 41 |
| 5. தேவாரத்தில் திருமால் அவதாரங்கள் | ... | 42—56 |
| 6. திருமுறைகளில் ஓவியக் காட்சிகள் | ... | 57 - 61 |
| 7 திருமுறைகளில் அந்தாதி இலக்கியங்கள் | ... | 62—74 |
| 8. திருமுறைகளில் மும்மணிக்கோவை இலக்கியங்கள் | ... | 75—90 |
| 9. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் | ... | 91—113 |
| 10. திருக்கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி | ... | 114—134 |
| 11. அம்புலிப் பருவத்தில் சந்திரன் | ... | 135—140 |
| 12. சைவ இலக்கியச் சுவடிகள் | ... | 141—148 |
| 13. போதமும் சுபக்கமும் | ... | 149 —187 |
| 14. சைவமும் சமணமும் | ... | 188 211 |
| நூலோதி | ... | 212—219 |

# 1. பழந்தமிழ் இலக்கியத்தில் சைவம்

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''[1]

என்றார் மணிவாசகப் பெருந்தகை. சிவபெருமானை வழிபடும் சமயம் சைவமாகும். சைவத்துக்கு இலக்கணம் கூற வந்த திருமூலர் ''சைவம் சிவனுடன் சம்பந்தமானது''[2] என்றார். சைவசமயம் எப்பொழுது தோன்றியது என்பது கற்பனைக்கு எட்டாததாயுளது. ஆயின் பழந்தமிழ் இலக்கியங்களில் சைவநெறி அஃதாவது சிவப்பண்பு எவ்வாறு வழங்கப் பட்டு வந்துள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

'சிவம்' எனும் சொல்

பழந்தமிழ் இலக்கியங்களில் 'சிவம்' எனும் சொல்லையோ, 'சிவன்' எனும் பெயரையோ எங்கும் காண்பதற்கில்லை. ஆயின் 'சிவம்' என்ற சொற்பொருளினைக் குறிப்பனவாகிய செம்பொருள், சிறப்பு, மெய்ப்பொருள், சார்பு போன்ற சொற்களைக் காணமுடிகின்றன.

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

''எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

''சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்''[3]

என்னும் குறளால் இனிது விளங்கும்.

முழுமுதற் கடவுளைச் 'சிறந்தது' எனும் சொல்லால் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.[4] 'சிவ' என்பது சிவப்பு நிறத்-

---

1. திருவாசகம், போற்றித் திருவகவல் 164-165.
2. திருமூலர், திருமந்திரம் 1486.
3. திருக்குறள் 358, 355, 359.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் 90

தைக் குறிக்கும் உரிச்சொல்லாகும். ஆகவே 'சிவன்' சிவந்த நிறத்தினை உடையவன்; அவனுடைய சடைமுடியும் சிவப்பு நிறத்தை உடையதாகும் என்பதை அறிய முடிகிறது.

### சங்க இலக்கியங்களில் சைவம்

சங்க இலக்கியங்களாகப் போற்றப்பெறும் பத்துப்பாட்டிலும், எட்டுத் தொகையிலும் சிவபெருமானைப் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன.

''பால் போன்ற பொலிந்த சென்னியையும், நீலமணி மிடற்றையும் உடைய ஒப்பற்ற இறைவன் போல நீயும் நிலை பெறுக''[5] என்று அதிகமானை அவ்வையார் பாராட்டுவார்.

''குவிந்த கொத்துக்களை உடைய பொலிவற்ற இலைகளை உடைய எருக்க மலராயினும் அன்போடு கூடியவற்றைச் சிவபிரான் ஏற்றுக் கொள்வர்; அதுபோல அறிவற்றவரும் கொண்டுவந்து கொடுக்கும் அன்பு கனிந்த பாடல்களை ஏற்றுப் பரிசில் நல்குவான் பாரி''[6] என்று கபிலர் புகழ்வார்.

''நல்லனவாகிய பொருள்களை உலகிற்கு ஆய்ந்து அருள் புரிந்தவன்; நீண்டு நிமிர்ந்த சடை உடையவன்; உலகிற்கெல்லாம் முதல்வன்''[7] என்று சிவபெருமானைப் பற்றிக் கூறுகிறார் கௌணியன் விண்ணந்தாயனார்.

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப்பற்றியே அமைந்துள்ளன.

'கற்றறிந்தார் எத்தும் கலி' எனப் போற்றப்பெற்ற கலித்தொகையில் சிவபெருமானைப் பற்றிய பல செய்திகளைப் பரக்கக் காணமுடிகின்றன.

---

5. புறநானூறு 91.
6. மேலது 106.
7. மேலது 166.

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
வேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மற் றைஇய"[8]

குறிஞ்சி திரிந்த இப்பாலையில், படைப்போன் முதலாகிய விண்ணவர்கள், தன் பகைவர்களாகிய அசுரர்களால் படும் துன்பத்தைப் பொறுக்கலாற்றாது சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர் அவர்களைக் காக்கும் பொருட்டுச் சிவபெருமான் சினந்து நோக்கிய அளவில் அவ்வசுரரது முப்புரங்களும் அழிந்தன; தூளாயின கதிரவனின் வெம்மையால் மலை பிளந்து தூளாயினமைக்கு இச்செய்தி உவமையாக உரைக்கப்பட்டுள்ளது.

இவைதவிரச் சடைமுடி உடையவன்,[9] முக்கண்ணன்,[10] நீலமணிமிடற்றன்,[11] முழுமுதற்கடவுள்,[12] மாதொரு பாதியன்,[13] கங்கை அணிந்தவன்,[14] அழித்தற்கடவுள்,[15] ஆலமரத்தின் நிழலில் அமர்ந்தவன்,[16] வாளேந்தியவன்[17] போன்ற தொடர்களெல்லாம் சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடுவனவாக வருகின்றன.

---

8. கலித்தொகை பாலைக்கலி 1:1-10.
9. புறநானூறு 1, கலித்தொகை 38
10. கலித்தொகை 2.
11. புறநானூறு 1,55,56, 91, பரிபாடல் 8,9.
12. புறநானூறு 166.
13. ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து.
14. கலித்தொகை, புறநானூறு கடவுள் வாழ்த்து, திருமுருகாற்றுப்படை 93-94.
15. புறநானூறு 56
16. கலித்தொகை 81, சிறுபாணாற்றுப்படை 96-97, அகநானூறு 181, புறநானூறு 198.
17. கலித்தொகை 103.

## சிலம்பில் சைவம்

சிவபெருமான் உமையம்மையைத் தம் திருமேனியில் ஒருபாகமாகக் கொண்டார். இதனை,

''அருந்திரு மேனிதன்பா லங்கொரு பாகமாகத்
திருந்திட வைத்தார்''[18]

என்று நாவரசர் போற்றுகின்றார். இவ்வாறு இறைவனும் இறைவியும் ஈருருவும் ஓருடலுமாய் விளங்குவதானது படைத்தல், துடைத்தல், இல்லறம், துறவறம், சிற்றின்பம், பேரின்பம் ஆகியன ஒன்றோடொன்று இணைந்து, வித்தும் விளைவுமாயிருப்பதன் குறிப்பாகும். செங்குட்டுவனின் முன்னிலையில் கூத்தச்சாக்கையர் ஆடிய ஆட்டத்தைக் குறிப்பிட வந்த இளங்கோவடிகள்,

''திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவுஞ்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழா
துமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொட்டிச் சேதம்''[19]

என்னும் வரிகளில் இறைவன் பெண்ணொருகூறனாய் விளங்குவதைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு வகையான கோயில்களும், வழிபாடுகளும் காணப்பட்டாலும் சிவபெருமானையே முதன்மையாக மக்கள் கொண்டுள்ளார்கள் என்பதனை இளங்கோவடிகள்,

''விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலு
மறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வாழ்வளை மேனி வாலியோன் கோயிலு

18. அப்பர் தேவாரம் 4. 73. 1.
19. சிலப்பதிகாரம், நடுகற் காதை 67 75.

நீல மேனி நெடியோன் கோயிலு
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்''[20]

என்று கூறும் கூற்றால் அறிய முடிகிறது

சமணர்களும் தங்களது உயரிய நிலையினைக் கூறும் பொழுது சிவகதி[21] எனவும், அதன் தலைவனைக் கூறும் பொழுது சிவகதி நாயகன்[22] எனவும் கூறியுள்ளார்கள்.

சிவபெருமானைத் தலைவராகக் கொண்டு வாழும் திருநெறியாளர்கள் கனவிலும் வேறு கடவுளரைத் தலைவராகக் கொள்ளார். ''செங்குட்டுவன் சிவபெருமானின் செவ்வை-யான திருவடிகளை வெற்றி பொருந்திய வஞ்சி மாலையுடன் தன் தலையிலே சூடிக்கொண்டான்; யாவருக்கும் வணங்காத தன் திருமுடியால் சிவன் சேவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்கி அவன் கோயிலை வலம் வந்தான்; திருமால் திருக் கொடைப் பொருளைப் பெற்றுத் தோண்மிசைக் கொண்-டான''[23] என்று சிலம்பில் கூறியதனைக் காணமுடிகின்றது.

திருநெறியாளர்களால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் திருவைந்தெழுத்து மந்திரத்தைப் பற்றி முதன்முதலில் குறிப்பிடும் தமிழ் நூல் சிலம்பேயாகும். இவ்வைந்தெழுத்து மந்திரம் என்றும், அது வேதத்தில் வருவதாகவும் சிலம்பு கூறுகிறது.[24]

திருப்பள்ளியெழுச்சி முரசம் சிவபெருமான் திருக்கோயி-லிலும், மன்னவன் திருக்கோயிலிலும் மட்டுமே முழங்கும். இதனை இளங்கோவடிகள்,

''அருந்தெறற் கடவு ளகண்பெருங் கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த
காலை முரசக் கனைகுர லோதையும்''[25]

என்னும் வரிகளில் இயம்பியுள்ளார்.

---

20. சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதை 168-173
21. மேலது, நாடுகாண் காதை 180.
22. மேலது, நாடுகாண் காதை 186.
23. மேலது. கால்கோட் காதை 54—67.
24. மேலது, காடுகாண் காதை 128—130.
25. மேலது, புறஞ்சேரி யிறுத்த காதை 137-140.

சைவர்கள் அணியும் சிவ சின்னங்களுள் ஒன்று திரு-வெண்ணீறு அணிவது. 'சடையின ருடையினர் சாம்பற் பூச்சினர்'[26] எனும் வரியில் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்-றார்.

''இமையச் சிமையத் திருங்குயி லாலுவத்
துமையொரு பாகத் தொருவனை வணங்கி''[27]

எனும் வரிகளில் சிவபெருமான் திருக்கயிலையாகிய வெள்ளி மலையில் வீற்றிருந்து அருளிய காட்சியினைக் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

மணிமேகலையில் சைவம்

புகார் நகரத்தில் வாழும் மக்கள் பல கோயில்களில் வழிபாடு நிகழ்த்துகின்றனர். அவற்றுள்ளும் நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானையே முதன்மையாக மக்கள் கொண்டுள்-ளனர். இதனை,

''நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
யாறறி மரபி னறிந்தோர் செய்யுமின்''[28]

எனும் வரிகளில் சாத்தனார் மொழிந்துள்ளார்.

மணிமேகலை, சமயங்கள் பலவற்றையும் அவ்வச்-சமயத் தலைவர்பாற் கேட்டனள். முதலில் மறையொடு பட்ட அளவைவாதிகள், பத்தும் எட்டும் ஆறும் ஆகிய அளவைகளைப் பகர்ந்தனர். அடுத்துச் சைவவாதி சிவ நெறியினைப் பின்வருமாறு கூறுகிறான்.

''இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரும் யாக்கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனுந்

26. சிலப்பதிகாரம் கால்கோட் காதை 225.
27. மேலது, நடுகற் காதை 102.
28. மணிமேகலை. விழாவறை காதை 54-57.

துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனுந்
தன்னில் வேறு தானொன் றில்லோனு
மனனோ னிறைவ னாகுமென் றுரைத்தனன்''[29]

இதில், இறைவன் எட்டிடங்களிலும், உயிரும் உடலும் போன்று கலப்பால் ஒன்றாய்ப் பொருட்டன்மையால் கண்ணும் கதிரவனும் போன்று வேறாய்ப் படைப்பு முறையில் நிற்பன்; அழித்துத் துயர் தீர்க்கும் முறையில் இவற்றுடன் உயிர்க்கு உயிராதல் தன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் அறிவொளியும் போன்று உடனுமாய் நிற்பன் என்பது காணப்பெறும்.

இவையே புணர்ப்புநிலை என்கின்ற அத்துவித நிலையாகும். மேலும் இறைவனின் அறிவுருவும் படைத்தல் அழித்தலாகிய தொழிலும் ஒப்பின்மையும், நிறைவும் ஆகிய பெருந்தன்மைகளும் காணப்பெறுகின்றன. ஐம்பெரும் தொழில்களும் படைத்தலாகிய முதலையும், அழித்தலாகிய இறுதியையும் கூறினமையாலே இடைக்கண் நின்ற காத்தல், மறைத்தல், அருளல் எனும் மூன்றும் அதன்கண் அடங்கும் என்பது விளங்கும். தோற்றத்தையும் அழிவையும் செய்கின்றவன் எவனோ அவனே இறைவனாவான். இதனையே,

''அவனவ ளதுவெனு மவைமூ வினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்''[30]

எனும் நூற்பாவில் மெய்கண்டார் கூறியுள்ளார்.

சிந்தாமணியில் சைவம்

சமண முனிவரான திருத்தக்கத்தேவர்,

''இன்பமற் றென்னும் பேரான்
எழுந்தபுற் கற்றை தீற்றித்
துன்பத்தைச் சுரக்கு நான்கு
கதியெனுந் தொழுவிற் சேர்ந்து

29. மணிமேகலை, சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை 89—95.

30. மெய்கண்டார், சிவஞான போதம் 1.

நின்றபற் றார்வ நீக்கி
நிருமலன் பாதஞ் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச்
சிவகதி யடைய லாமே''[31]

என்ற பாடலில் சிவகதி அடையும் நெறியினைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களில் சைவநெறி தழைத்தோங்கிப் பிற்காலத்தில் தோன்றிய பத்திமை இலக்கியங்களுக்கு வித்திட்டு விளங்கியதை இதுவரை கண்டோம்.

31. சீவக சிந்தாமணி, முத்தி இலம்பகம் 507.

# 2. திருக்கடைக்காப்பு

மூவரருளிய தேவாரத்துள் திருஞானசம்பந்தர் அருளிய பாக்கள் 'திருக்கடைக்காப்பு' எனவும், 'பால்ய தேவாரம்' எனவும் ஆன்றோரால் அழைக்கப் பெறுகின்றன. சம்பந்தர் அருளிய பாக்கள் முதல் மூன்று திருமுறைகளாகும். இவற்றுள் முதல் திருமுறையில் அமைந்துள்ள முதல் ஐந்து பதிகங்களில் காணப் பெறும் இலக்கியக் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பதிக அமைப்பு

திருப்பிரமபுரம், திருப்புகலூர், திருவலிதாயம், திருப்புகலியும் திருவீழிமிழலையும், கீழைத்திருக்காட்டுப்பள்ளி ஆகிய ஐந்து பதிகங்கள் முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. தலங்களின் பெயர்களே பதிகத்திற்குரிய பெயராக உள்ளன. முதல் நான்கு பதிகங்களில் 11 பாக்களும், ஐந்தாவது பதிகத்தில் 10 பாக்களும் (2ஆவது பாடல் கிடைக்கவில்லை) ஆக 54 பாக்கள் உள்ளன. முதல் நான்கில் 8, 9, 10, 11 ஆவது பாக்களில் முறையே இராவணன், அடிமுடி தேடியது, பிற சமயக் கண்டிப்பு, பதிகப்பலன் ஆகியவற்றைக் காணமுடிகின்றன. ஐந்தாவது பதிகத்தில் இவ்வமைப்பு முறை இல்லை. இதில் 10ஆவது பாடலில் பிறசமய மறப்பும், அடிமுடி தேடிய வரலாறும் உள்ளன. 11ஆவது பாடலில் பதிகப்பலன் சொல்லப்பட்டுள்ளது.

## சில பொதுத் தன்மைகள்

சம்பந்தர் தேவாரத்தில் பொதுவாகச் சில தன்மைகள் காணப்பெறும். எடுத்துக்கொண்ட தலத்தின் நீர் வளத்தையும், நிலவளத்தையும். மற்றுமுள்ள இயற்கை, செயற்கை வளங்களையும் அழகுணர்ச்சியோடும் இசைப்போக்கோடும்வருணிப்பார் அடுத்து, ஏழாவது பாடலில் திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவனின் இயல்பையும் பெருமையையும் கூறுவார். எட்டாவது பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பு இருக்கும். ஒன்பதாவது பாடலில் அரியும் அயனும்சிவபெருமானது திருவடி, திருமுடியினைக் காணஇயலாமல்

கர்வம் ஒழிந்து இறைவனை வழிபட்டு நிற்கும் இயல்பு இயம்பப்படும் பத்தாவது பாடலில் புறச்சமயத்தினராகிய புத்தர்களையோ அல்லது சமணர்களையோ இழித்தும் பழித்தும் கண்டனம் செய்வது காணப்படும். இறுதியாகத் தம்முடைய பாக்களைப் பாடியவர் வினை நீங்கி வீடுபேறு எய்துவர் என்று தம் பாட்டையே தாம் புகழ்வர் இதனைப் 'பதிகப்பலன் கூறும் பாட'லாகச் சான்றோர் கொள்வர். மேலும் இதனை 'முத்திரகவி' என்றும், 'திருக்கடைக்காப்பு' என்றும் கூறுவதுண்டு இதனால்தான் 'சம்பந்தன் தன்னைப் பாடுவான்' எனும் பழமொழியும் எழுந்தது போலும்!

முதற் பதிகச் சிறப்பு

'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பாடலே சம்பந்தர் பாடிய முதற் பாடலாகும். இப்பாடல் அமைந்த பதிகமே இவரருளிய முதற் பதிகமாகும். சம்பந்தர் தமது மூன்றாவது அகவையில் இப்பதிகத்தைப் பாடினார். அகப்பொருள் அமைப்பில் உள்ள இப்பதிகத்தில் சம்பந்தரின் உள்ளங்கவர்ந்த கள்வனுடைய சிறப்புக்கள் இயம்பப்பட்டுள்ளன.

சம்பந்தரின் அழுகைக்குரல் சென்று பரந்து திருமுலைப்பால் அருளச் செய்தது திருச்செவியாதலின் அதனை முதற்கண் கூறுகின்றார். உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைதலே பொருளாகப் பாடல் பரமனார் திருச்செவியில் சென்று சேர, திருச்செவியை முதற்கண் சிறப்பித்தார். இதனைப் 'பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து'[1] என்று சேக்கிழார் கூறுவதனால் அறியலாம். 'தோடுடைய செவி' என்றதால் இடப்பாகத்துச் செவி என்பது குறிக்கப் பெறுகின்றது. கருணைக்கு ஏற்றது தாய் தழீஇய இடப்பக்கமாதலின் அதனை முற்கூறினார்.

தாம் இறைவனைக் கண்ட முதற் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார். ஐந்தொழில் இயற்றும்

1. சேக்கிழார், பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் 76.

முழுமுதற்கடவுள் சிவபிரான் என்பதனை இப்பாட்டின் மூலமாக அடையாளங்களுடன் நமக்குக் காட்டுகின்றார்.

1. தோடுடைய செவியன் — படைத்தல்
2. விடையேறி - அருளல்
3. ஓர் தூ வெண்மதிசூடி — காத்தல்
4. காடுடைய சுடலைப் பூசி — அழித்தல்
5. என்னுள்ளங் கவர்கள்வன் — மறைத்தல்

'தோடு' என்பது மகளிர் அணியும் காதணி வகைகளுள் ஒன்று. ஆடவர் அணியும் காதணி 'குழை' எனப்படும். 'தோடொரு காது ஒரு காது சேர்ந்த குழையான்'[2] என்று பிறிதோரிடத்தும் கூறுவார் சம்பந்தர். இங்குத் 'தோடணிந்த செவியன்' என்றதனால் 'மாதொரு பாகன்' என்பதாயிற்று. இது படைத்தல் தொழிலுக்கு உரிமை கூறியதாம்.

கடவுள் உயிர்களைப் படைப்பதன் நோக்கமே உயிர்களிடம் உள்ள குற்றங்களை நீக்கிப் பேரின்பமாம் அருளைத் தருவதற்கேயாம். சிவபிரான் உயிர்களுக்கு அருள்புரிய வரும்பொழுது விடையின் மீதே எழுந்தருளி வருவான் என்பது சைவ சமயக் கொள்கை. இதனைச்,

''சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாகும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள் கொடுத்தான்''[3]

என்னும் பெரியபுராணத்தால் அறியலாம். எனவே இறைவன் அருளல் தொழிலுக்கும் உரியவன் என்பதை வெளிப்படுத்தவே 'விடையேறி' என்றார் சம்பந்தர். மேலும், தமக்கு அருள் புரியத்தானே இப்போது அவன் விடைமேல் வந்து காட்சி அளிக்கின்றான் என்று கருதியும் அவ்வாறு பாடினார் என்றும் கருதலாம்.

2. சம்பந்தர் தேவாரம் 3.107.3.
3. சேக்கிழார், மு.கா.நூல். திருநகரச் சிறப்பு 46.

சிவபிரான் சந்திரனைக் காத்தற்பொருட்டுத் தம் திரு-முடியில் அச் சந்திரனை வைத்துக் கொண்டார். எனவே இறைவனின் காத்தல் தன்மையை எடுத்துக் கூறுவதாகச் சம்பந்தர் 'தூவெண்மதிசூடி' என்றார்.

அழிவின் இடம் சுடுகாடாகும். பேரூழிக் காலத்தில் உலகங்கள் யாவையும் அழித்து ஒடுக்கி விடுபவன் சிவபெரு-மானேயாவன் அவ்வாறு அழிக்கப்படும் இடம் இறைவன்றன் திருமேனியாம் எல்லையற்ற வானமாகும். அப்பொழுது இறைவன் வெண்பொடியைத் தம் உடலெங்கும் பூசியிருப்பன். எனவே சம்பந்தர் இறைவனின் அழித்தல் செயலைக் 'காடு-டைய சுடலைப் பொடிபூசி' என்று கூறினார்.

கள்வன், ஒருவர் பொருளை அறியாதவாறு கவர்ந்து கொள்வது போலச் சிவனும் உயிர்களின் - பொருள்களின் உள்ளிருந்து கொண்டு அவற்றிற்கு நிகழ உள்ளவற்றையும் அறிய வேண்டாதவற்றையும், மறைத்தல்' என்னும் தொழி லால் மறைவாக வைத்துள்ளான். இப்பணியையும் இறைவன் உயிர்களின் நலங்கருதியே நடத்துகின்றான். எனவே சம்பந்தர் மறைத்தல் தொழிலை 'என்னுள்ளங் கவர்கள்வன்' என்று கூறினார்.

"'விடையேறி' என்பது நித்யத் தன்மையை வேண்டிய அறக்கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டதால் சிருட்டியும், 'மதிசூடி' என்பது சந்திரனுக்கு அபயம் தந்து திருமுடியில் ஏற்றிக் காத்ததால் திதியும், 'பொடி பூசி' என்பது சர்வசங்காரகாலத்து நிகழ்ச்சியை அறிவித்தலால் சங்காரமும், 'கள்வன்' என்பது இறைவன் எல்லா உயிர்களி-டத்தும் நீக்கமற நிறைந்திருந்தும் அவைகள் வினைப் போகங்களை நுகர ஒளித்து நிற்பதால் திரோபவமும், 'அருள் செய்த' என்பது அனைவர்க்கும் அருள் செய்யும் அனுக்கிரகமும் ஆகிய ஐந்தொழிலையும் விளக்கும்"[4] என்று கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரும்,

"'தோடுடைய செவியன்' முதலாயின இறைவனது எண்குணங்களாகிய சிறப்பியல்புகளை உணர்த்துவன என்றும் பிரமாபுரம், 'விடையேறி' முதலியன இறைவனது தசாங்கங்-

---

4. சம்பந்தர் தேவாரம், தருமபுர ஆதீனம் பதிப்பு, முதல் திருமுறை, பக். 4 - 5.

களைக் குறிப்பால் உணர்த்தி நிற்பன என்றும், 'விடையேறி', 'பொடிபூசி', 'உள்ளங்கவர்கள்வன்' என்பன முறையே இறைவனுடைய மூன்று திருமேனிகளாகிய உருவம், அருவுருவம், அருவம் என்ற மூன்றையும் குறிக்கும்'' என்று செப்பறை சுவாமிகளும்,[5]

'' 'த், என்ற மெய்யெழுத்தின் மேல் 'ஓ' என்னும் உயிரெழுத்தைக் கூட்டினால் 'தோ' என்றாகும். வடமொழி வேதங்கள் நான்கும் தோன்றுதற்கு மூலமாயுள்ள ஒலி 'ஓம்' ஆகும். அதுபோலச் சைவ சமயத்தின் தமிழ் வேதங்களாகிய பன்னிரு திருமுறைகட்கும் முதற்பாட்டின் — முதலடியின் முதற்சொல்லாய் அமைந்துள்ள 'தோடு' என்ற சொல்லில் ஓங்காரத்தின் முதலெழுத்தாயுள்ள 'ஓ' என்ற எழுத்தமைந்திருக்கின்றது. ஆகவே, தமிழ் மறைகளும் 'ஓ' என்ற ஓங்காரங்கொண்டே தொடங்கப்பட்டுள்ளமையால் வடமொழி வேதங்களுடன் தமிழ் மறைகள் பன்னிரண்டும் ஒத்த சிறப்புடையனவாம்'' என்று சேக்கிழாரும்[6] இம்முதற்பாடலின் சிறப்புபற்றி இயம்பியுள்ளனர்.

இறைவனை அம்மை அப்பராகக் காண்கிறார் சம்பந்தர். எனவே இம்முதற்பதிகத்தை 'நாயக நாயகி' பாவத்தில் பாடியுள்ளதைக் காண முடிகின்றது. செயல் அழிந்திருந்த தலைவியின் சிந்தையை வலிய வந்து கவர்கின்றான் தலைவன். மேலும் தலைவனைக் காணாத தலைவியின் உடல் மெலிவடைகிறது. அதனால் முன்கையில் செறிந்திருந்த சங்க வளையல்கள் சோர்ந்தன. இதனை இரு பாடல்களில்[7] சம்பந்தர் கூறுகின்றார். இது 'உடம்பு நனிசுருங்கல்' என்னும் மெய்ப்பாட்டை உணர்த்தி நிற்கிறது.

இறைவன் இயல்பு

அடியார் உள்ளங்களைக் கவர்ந்தவன்; விடையின்மீதேறி அருள் வழங்குபவன்; நடனமாடுபவன்; இசையில் தங்கியவன்; அடியவர்களின் நோயை நீக்குபவன்; அணுவினுக்கு அணுவாய் இருப்பவன்; எத்தகைய தவ ஆற்றல் உடையவர்க்கும்

5. சம்பந்தர் தேவாரம், தருமபுர ஆதினம் பதிப்பு, முதல் திருமுறை, ப. 5.
6. மறை. திருநாவுக்கரசு, பெரியபுராண ஆய்வுரை, மூன்றாம் தொகுதி, சம்பந்தர், ப. 33.
7. சம்பந்தர் தேவாரம் 1.1.3,6.

அவரவர் நிலைக்கேற்பக் குறித்து உணரத்தக்க பொருளாய் நிற்பவன்; பூதங்களுக்குத் தலைவன்; தேவர்கள் தொழுதேத்த நின்றவன்; மும்மதில்களை அழித்தவன்; ஆனையை உரித்துப் போர்த்திய பித்தன்; பலிதேரும் பொருட்டு எருதிலேறி வருபவன்; இராவணனுக்கு அருள் செய்தவன்; காமனை அழித்தவன்; மால், நான்முகன் இருவர்க்கும் ஒளிப்பிழம்பாக ஓங்கி வளர்ந்தவன் என்றிவ்வாறு சிவபிரான் இயல்புகளைச் சம்பந்தர் கூறியுள்ளார்

இறைவன் தோற்றப் பொலிவு

சிவபிரான் சடையினில் கங்கை, ஊமத்தை பூவையும், முடியினில் பிறை, நாகத்தையும், நெற்றியில் திருவெண்ணீற்றையும், ஒருகாதில் தோட்டையும் மறு காதில் குழையையும், மார்பினில் கொன்றைமலர் மாலையையும், கைகளில் அனல், மழுவையும், இடுப்பில் புலி, மான் தோல்களையும், வலத்தாளில் வீரக்கழலின் ஓசையையும், இடத்தாளில் சிலம்பின் ஓசையையும், உடம்பின் ஒருபக்கத்தில் உமையவளையும், ஆமையோடு, பாம்பு, பன்றியின் முளை போன்ற கொம்புகளை அணிகலன்களாகவும் கொண்டு தலையோட்டைப் பிச்சைப் பாத்திரமாகவும், இடபத்தை ஊர்தியாகவும் கொண்டிருப்பதாகச் சம்பந்தர் கூறுகின்றார்.

இமைக்காத மூன்று கண்களை உடையவன்; கழுத்தில் கொடிய நஞ்சை உண்டதனால் திருநீலகண்டனாக விளங்குபவன்; முப்புரி நூல் உடையவன்; சிவந்த மேனியைக் கொண்டவன்; சிவஞானத்தால் அருளே வடிவாகக் கொண்டு வழிபடும் திருவடியை உடையவன் என்று சம்பந்தர் கூறுவார்.

இறைவி

உமையவளைப் பற்றியும் பாக்களில் சம்பந்தர் பின்வருமாறு கூறுகின்றார். கருமை சேர்ந்த அழகிய கூந்தலை உடையவள்; ஒளி பொருந்திய நெற்றியை உடையவள்; மான் போன்ற விழியுடையவள்; பாம்பின் படம் போன்ற அல்குலை உடையவள்; மூங்கில் போன்ற தோள்களைக் கொண்டவள்; மின்னல் போன்ற இடையினை உடையவள்; முன்கையில் சங்கு வளையல்களை அணிந்திருப்பாள்; காதில் தோட்டையும், காலில் சிலம்பையும் அணிந்திருப்பாள்.

வழிபாடு

இறைவனை அடியார்கள் வழிபடும் முறையையும், அவ்வாறு வழிபடுவதனால் ஏற்படும் நன்மைகளையும் ஆங்காங்கே கூறியுள்ளார் சம்பந்தர். காலையில் மலர்ந்த பூக்களையும், நீரையும் கொண்டு வழிபடுதல் வேண்டும்.

> ''கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதி செய்து
> மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும் புகலூரே''[8]

என்று கூறுவார்.

விதிப்படி வழிபடும் சிவனடியார்களோடு இருக்கும் அடியார்கள் பலரும் அழகிய மலர்களை வைத்து நீரை மந்திரங்களுடன் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே குரலில் சொல்வர். மனம் ஒன்றி இறைவனை வழிபடுகின்றவர்களுக்கு வினைகளால் வரும் துன்பமும் பிறவிகளால் வரும் துன்பமும் சேர மாட்டா.

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்கள் வழிச் செல்லாமல் ஒன்றுபட்ட உள்ளத்துடன் இறைவனின் திருவடிகளை வணங்குவர்; அடியவர்கள் இறை புகழை இன்னிசை பாடித் தம்மை மறந்து துதிப்பர்; காலையிலும், மாலையிலும் நீருள் மூழ்கி மறைகள் கூறிப் போற்றுவர்.

இயற்கைக் காட்சிகள்

சம்பந்தர் பாக்களில் இயற்கை வருணனை மிகுதியாகக் காணப்பெறுகின்றது. இங்குக் காட்டப்படும் ஐந்து பதிகங்களிலும் இயற்கைக் காட்சிகள் உள்ளன. தலங்கள் ஆற்றங்கரை, கடற்கரையோரங்களிலும், பூஞ்சோலை, வனங்களின் இடையேயும் அமைந்து விளங்குகின்றன. அதனால்தான் தலங்களைக் கூறும்பொழுதும், தலத்து இறைவனைப் பாடும் பொழுதும் இயற்கைக் காட்சிகளை இணைத்துப் பாடிச் செல்வதைக் காணமுடிகின்றது

---

8. சம்பந்தர் தேவாரம் 1-2-10

சோலைகள் சூழ்ந்து விளங்கும் தலத்தைப் பின்வருமாறு கூறுவார்.

> ''கறைகலந்தடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
> பிறைகலந்தபிர மாபுரம்''[9]

> ''வண்டுவைகும் மணமல்கிய சோலைவளரும் வலி-
> தாயம்''[10]

வண்டுகள் மலரிடத்தே தேனுண்ணும் சோலைகள் சூழ்ந்த புகலூர்[11] சோலைகள் மிகுந்து காணப்படும் இப் புகலூரில் வண்டுகள எப்பொழுதும் இசை பாடிக் கொண்டிருக்கும்.[12]

பொழிலின் அழகைப் பின்வருமாறு இயம்பக் காணலாம்.

> ''போகம் வைத்த பொழிலின் னிழலான் மதுவாரும்
> புகலூர்''[13]

> ''மடையிலங்கு பொழிலின் னிழல்வாய் மதுவீசும்
> வலிதாயம்''[14]

> ''பொழில் மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும் புகலி''[15]

> ''பூகவனம் பொழில் சூழ்ந்த அந்தண் புகலி''[16]

> ''வெங்கதிர் தோய் பொழில்சூழ் மிழலை''[17]

> ''வீமரு தண்பொழில் சூழ் மிழலை''[18]

> ''வெறிகமழ் பூம்பொழில் சூழ் மிழலை''[19]

---

9. சம்பந்தர் தேவாரம் 1-1-6
10. மேலது 1.3.11
11. மேலது 1.2.1.
12. மேலது 1.2.2
13. மேலது 1.2.9.
14. மேலது 1.3.2.
15. மேலது 1.4 2.
16. மேலது 1 4.4.
17. மேலது 1.4 6.
18. மேலது 1.4.7.
19. மேலது 1 4.9.

ஒவ்வொரு தலத்திற்கும் தீர்த்தம் உண்டு. பிரமபுரத் தீர்த்தத்தைக் கூறும்பொழுது, 'தாமரை மலர்கள் நிறைந்த அகன்ற பிரம தீர்த்தம்'[20] என்று கூறுவார்.

பூம்பொழிலின் அழகைப் புனைந்துரைத்த புகலிவேந்தர், அவற்றிடையே வாழும் பற்பல பறவைகளைப் பற்றி அழகாய்ப் பாடுவர். வெண்ணிற அன்னம், பைங்கிளி முதலிய பறவைகளைப் பற்றியும், மந்தி, கடுவனைப் பற்றியும், நீர்ப்பறவைகளைப்பற்றியும் அழகுறக் கூறியுள்ளார்.

> ''கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
> பெடைமுயங்குபிர மாபுரம்''[21]

> ''மந்தி வந்து கடுவனொடுங்கூடி வணங்கும் வலிதாயம்''[22]

புகலூரில் நாரை முதலிய நீர்ப்பறவைகள் வந்து தங்கும்; வயல்கள் நிறைந்திருக்கும் பெற்றியை உடையன.[23]

கமுகு, பலா முதலியவற்றிலிருந்து தேன் சொரியும் வளம் மிக்க தலமே வலிதாயமாகும்.[24] மேகம் தவழும் மதில் சூழ்ந்த பெருமையை உடையது மிழலைத்தலமாகும்.[25] புகலியில் ஒளிபொருந்திய சங்கு, சிப்பி, மீன்கள் முதலியவற்றை வரிசையாய் அலைகள் மேலும் மேலும் பெரிய ஓசையுடன் கொண்டு வந்து சேர்க்கும் புகழ்மிக்க தலமாகும்.[26]

பொன் கொழிக்கும் பொன்னியான காவிரியின் அழகைக் கீழைத்திருக்காட்டுப்பள்ளிப் பதிகத்தில் அழகுறப் புனைந்துள்ளார் சம்பந்தர்.

> ''திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
> செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்

20. சம்பந்தர் தேவாரம் 1.1.11.
21. மேலது 1.1.7.
22. மேலது 1.3.5.
23. மேலது 1.2.7.
24. மேலது 1.3.8.
25. மேலது 1.4.4.
26. மேலது 1.4.6.

கரைகளெல் லாமணி சேர்ந்துசிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி''[27]

என்று காவிரி அலைகளின் கரையின் சிறப்பைக் குறிப்பிட்டார். பிறிதொரு பாடலில் ஆற்றின் நீரானது அயலேயுள்ள வயலருகே பாய, கயல்மீன்கள் மேலே துள்ள, அவ்வதிர்ச்சியால் மலர்கள் தேன் சொரிய, அந்நறுமணத்துடன், வாழை மரத்தினின்றும் கையால் பறிக்கக் கூடிய உயரத்தில் பழுத்திருக்கும் வாழைக் கனிகளின் மணமும் கலந்து வீசிற்றாம்.

''செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளி''[28]

என்பன அவ்வடிகள்.

''சலசல சந்தகி லோடுமுந்திச்
சந்தன மேகரை சார்த்தியெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப்
பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி ருங்கழலான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே''[29]

என்ற பாடலின் இன்னோசையில் காவிரியின் சிலம்பொலி நடையினைக் காணலாம்; கேட்கலாம்.

காட்டுப்பள்ளியில், இதழ்களின் கட்டுக்கள் அவிழ்ந்த குளிர்ச்சி மிக்க நீலம், நெய்தல், தாமரை, செங்கழு முதலிய நீர்ப்பூக்களை அவிழும் கூந்தலையுடைய மகளிர் களையாகப் பிடுங்கி எறிகின்றார்கள்; நாற்று முடிகளைக் கையினால் பறிக்கின்ற வலிய உழவர்களின் மணிக்கட்டின் வலியைப் போக்குவதற்காகக் கரும்பின் கட்டியை உடைப்பர்; தாமரை, நீலம், நெய்தல் முதலான மலர்கள் பூத்துப் பொலிவெய்துகின்றன; அம்மலர்களை உடைய பொய்கையில் மகளிர் நீராடுவர்.

27. மேலது 1.5.3.
28. மேலது 1.5.1.
29. மேலது 1.5.5.

புராண மரபுச் செய்திகள்

சம்பந்தர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணனை அடர்த்து அருள் செய்த வரலாறும், ஒன்பதாவது பாடலில் திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடிய வரலாறும் இடம்பெற்றுள்ளன. வெண்மதி சூடிய வரலாறு,[30] பலிதேர்ந்த வரலாறு,[31] கங்கையைச் சடையில் தரித்த வரலாறு,[32] முப்புரம் அழித்த வரலாறு,[33] பிரமகபாலம் ஏந்திய வரலாறு,[34] உமையொருபாகனான வரலாறு.[35] மழுவேந்திய வரலாறு,[36] இராவணனை அடர்த்த வரலாறு,[37] அடிமுடி தேடிய வரலாறு[38] யானைத் தோலுடுத்திய வரலாறு,[39] கடல் நஞ்சுண்ட வரலாறு,[40] காமனை எரித்த வரலாறு[42] ஆகிய புராண வரலாற்றுச் செய்திகளைச் சம்பந்தர் சிவபிரானின் பெருமைகளை உலகோர் அறியும் வகையில் ஏற்றவிடங்களில் கையாண்டுள்ளார்.

தத்துவ முத்துக்கள்

உலக வாழ்வு இன்பமும், துன்பமும் கலந்ததாக இருக்கும். உயிரின் வினையே காரணமாக மாறிமாறித் துய்க்கப்படும். ஆன்மாவைப் பிடித்த மலப்பரிபாகம் ஆகியே அதனை விட்டுக் கழியும் அப்பரிபாகம் நிகழும் பொருட்டே உயிர்களை இறைவன் மீண்டும் மீண்டும் பிறப்பிக்கின்றான். இதனைத் ''துயரிலங்குமுலகில்பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்''[43] என்று சம்பந்தர் குறிப்பர்.

---

30. சம்பந்தர் தேவாரம் 1.1.1.3, 1 2 7, 1.3.6.
31. மேலது 1.1.2, 1.2.1, 1.3.6, 1.4.8.9.
32. மேலது 1.1.3 7, 1.2 7.
33. மேலது 1.1-4, 1.2.4, 1 3.9, 1 5.9
34. மேலது 1.1.4, 1.3.2, 1.4.2.
35. மேலது .1.5 1.3.7. 1.5.1
36. மேலது 1.1.6 7. 1 2.1, 1.5 4
37. மேலது 1.1.8, 1.2.8, 1 3.8, 1.4 8,
38. மேலது 1.1.9, 1.2.9 1-3.9. 1.4 9. 1.5.10.
39. மேலது 1.1.10 1.3.6.
40. மேலது 1.2.4. 1 3.8. 1.5.3.
41. மேலது 1.3.7 1.4.7. 1.5.8.
42. மேலது 1.2.6.
43. மேலது 1.1.8.

இறைவன் ஆன்மாக்களின் பருவநிலைக்கேற்ப விறகில் தீயாகவும். பாலில் நெய்யாகவும், மணியில் சோதியாகவும் கலந்து நிற்பான். அஃதாவது, ஒருமலம் உடையோர். இரு-மலம் உடையோர், மும்மலம் உடையோர் என்ற மூவகை-யினருக்கும் அவரவரது பக்குவநிலைக்கேற்ப மறைந்து நின்று அருள் செய்வன் என்பது சித்தாந்தக் கருத்து. இதனைச் சம்பந்தர், ''இவ்வுலகெல்லாம்நெறி கலந்ததொரு நீர்-மையன்''[44] என்ற தொடரால் குறிப்பர்.

துன்பங்கள் மூவகைப்படும். 1. தன்னைப்பற்றி வருவன. இதனை 'ஆத்யாத்மிகம்' என்பர். அஃதாவது. உடலுக்கு வரும் பிணிகளும், மனத்திற்கு வரும் காமம், கோபம் முதலி-யனவும் ஆகும். 2. பிற உயிர்களைப்பற்றி வருவன. இதனை 'ஆதிபௌதிகம்' என்பர். மனிதர், விலங்கு, பிசாசு முதலிய-வற்றால் நேர்பவை. 3. தெய்வத்தைப்பற்றி வருவன. இதனை 'ஆதிதைவிகம்' என்பர். காற்று, மழை, இடி முதலியவற்றால் நேர்பவை. இம் மூன்றையும் வடநூலார் 'தாபத்திரயம்' என்பர். இறைவனை மனம் ஒன்றி வழிபடுகின்றவர்களுக்கு வினைகளால் வரும் இடர்களும், பிறவியால் வரும் துன்பமும் நீங்கும் என்றும், ஒரு நெறிய மனம் வைத்து வணங்குகின்ற-வர்களுக்கு ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் எனும் தொல்-வினை நீங்கும் என்றும் சம்பந்தர் கூறுவர்

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரி-யம் எனும் உட்பகை ஆறனையும் வென்றழித்துத் தாமரை மலரில் வீற்றிருப்பவன் நான்முகன். இதனைச் சம்பந்தர்,

''செறிமுளரித் தவிசேறி ஆறும்செற்று
அதில் வீற்றிருந்தானும்''[45]

எனும் வரிகளில் குறிப்பிடுவர்.

தமிழ்ப் பற்று

சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் இறுதிப்பாடலில் தம் தாய் மொழியை உயர்த்திப் பேசுகின்றார். திருநெறிய தமிழ்,

44. சம்பந்தர் தேவாரம் 1.4.9.

45 மேலது 1.2.1.

தமிழ் மாலை, அருண்மாலைத் தமிழ், மாலை பத்து எனக் கூறும் பலவிடங்களும் அவர்தம் தமிழ்ப் பற்றையும், பேரார்வத்தையும் வெளிப்படுத்துவனவாய் அமைகின்றன. மேலும் இறுதிப்பாடலான 'திருக்கடைக்காப்பி'ல் தம் பெயர் கூறுமிடத்தில் தம் ஊர்ப் புகழ், சிறப்புக்களைக் கூறுவார். தம் பாக்களைத் 'தமிழ்', என்றும், 'தமிழ் மாலை' என்றும் விளம்புவார். சிலவற்றில் தம் குலம், குடிபற்றித் தெரிவிப்பார். பலவற்றில் இவை யாவற்றிற்கும் மேலாகத் தமிழின் பழைமை, தெய்வத் தன்மை, ஒப்பிலா உயர்வு, நிலைத்த தன்மை முதலியவற்றைக் கூறுவார்.

சம்பந்தர் ஞானத்தின் திருவுருவாகக் காணப்பெற்றவர். சிவஞானப்பால் அருந்திய காரணத்தால் சிவஞானமாகவே விளங்கியவர். இவர் அருளிய பாக்களில் தம்மைப் புகழ்ந்து பாடிய காரணததினால் 'சம்பந்தன் தன்னைப் பாடினான்' என்று சிவபிரான் சொன்னதாக ஒரு பழமொழி எழுந்தது போலும்! இவரருளிய 384 பதிகங்களில் முதல் ஐந்து பதிகங்களில் மட்டும் காணப்பெறும் இலக்கியக் கூறுகள் இதுவரை ஆராயப்பெற்றன

# 3. தேவாரம்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் அருளிய பாக்கள் 'தேவாரம்' ஆகும் இரட்டையரே மூவர் திருப்பதிகங்களைத் 'தேவாரம்' என்ற சொல்லால் முதன் முதல் குறிப்பிட்டவராவார்.[1]

> "மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
> தேவாரஞ் செய்த திருப்பாட்டும்"[2]

என வருவதனை இவண் குறிப்பிடலாம். ஆயின் திருநாவுக்கரசர் அருளிய பாக்கள் 'தேவாரம்' எனவும் 'விருத்தாப்பிய தேவாரம்' எனவும் ஆன்றோர் அழைப்பர். இவரருளிய பாக்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளாக வகைப்படுத்தப்பெற்றுள்ளன. நான்காம் திருமுறையில் அமைந்த முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெறும் இலக்கியக்கூறுகளை இக் கட்டுரை ஆய்கிறது

பதிக அமைப்பு

திருவதிகை வீரட்டானம், திருவையாறு, திருவாரூர் ஆகிய மூன்று தலங்களில் முதல், மூன்றாவது தலங்களில் இரு பதிகங்களும், இரண்டாவது தலத்தில் ஒரு பதிகமும் கொண்டு திகழும் இப் பதிகங்களில் மூன்றாவது பதிகம் தவிர ஏனையவற்றில் ஒவ்வொன்றிலும் 10 பாக்களும், மூன்றாவது பதிகத்தில் 11 பாக்களும் கொண்டு ஆக 51 பாக்களை உடையனவாகத் திகழ்கின்றன. தலப் பெயர்களே பதிகங்களுக்கும் பெயரிடப்பட்டுள்ளன. முதல் நான்கு பதிகங்களில் இறுதி அடி ஒரே அமைப்பில் பாடப்பெற்றிருப்பதைக் காண முடிகின்றன. அஃதாவது, 'அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே', 'அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை', 'கண்டேனவர்திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்', 'ஆரூர் அமர்ந்த அம்மானே'

1. தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு 13, 14, 15 ஆம் நூற்றாண்டு, ப.66.
2. ஏகாம்பரநாதருலா, கண்ணி 78.

ஆகிய அடிகள் இவ்வாறு பாக்கள்தோறும் அமைந்துள்ளன. இறுதிப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியில் ஏதாவதொரு பழமொழி அமைந்திருப்பதனால் இப் பதிகத்தைப் 'பழமொழிப் பதிகம்' என்றும் ஆன்றோர் அழைக்கின்றனர்.

பதிகந்தோறும் இராவணன் தொடர்பான செய்திகள் காணப்பெறுகின்றன. இராவணனுக்கு இறைவன் அருள் புரிந்த செய்தியைக் கூறிப் பதிகத்தை அப்பர் முடிக்கின்றார். எனவே இராவணன் பாடலை 'முடிக்கும் பாடல்' எனக் கூறலாம் 3.4 ஆவது பதிகம் தவிர ஏனைய மூன்று பதிகங்களிலும் இறுதிப் பாடலில் இராவணன் இடம் பெற்றுள்ளான்.

முதற்பதிகச் சிறப்பு

அப்பருக்கு ஏற்பட்ட சூலைநோயானது அவரை எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தியது என்பதனை அவரருளிய முதற்பதிகத்தின் மூலம் நாம் அறியமுடிகிறது. சூலைநோயின் கொடுமைகளைப் பறித்தல், புரட்டல், அறுத்தல், ஈர்த்தல் முதலான சொற்கள் மூலம் கூறியுள்ளார். மேலும் சூலைநோய், "கூற்றுவனைப் போல் வருத்துகின்றது; வயிற்றினுள்ளே குடரோடு சுற்றி முறுக்கி நிற்கிறது; கொடிய விடம்போலத் தோன்றி வருத்துகின்றது; உயிரைக் கொள்ளை கொண்டு உண்ணுகின்றது" என்று சூலையின் கொடுமைகளை இப்பதிகம் முழுவதும் கூறிச் செல்கின்றார். இறுதியாக இறைவனிடம், "தம்மை அடைக்கலம் புகுந்தவர்களது வினைகளை ஒழித்து அருளுகின்ற தன்மை பெரியார்களுக்கு உண்டு எனில் நான் உன் அடியேன் ஆதலால் எனக்குண்டான வருத்துகின்ற இச் சூலை நோயை விலக்கி அருளுவது உன் கடமையாகும்" என்று வேண்டுகின்றார்.

இறைவன் இயல்பு

இறைவன் இயல்புகளை முதல் ஐந்து பதிகங்களில் கூறியதைப் பின்வருமாறு கூறலாம்

இறந்தவர்களது சாம்பலைத் திருமேனியில் பூசிக் கொள்வன்; இறந்தவரது தலையோட்டில் பிச்சை ஏற்றுத் திரிவன்; இடபத்தை ஊர்தியாக விரும்பி ஏற்றுக் கொள்ளுவன்; தலைமாலையைத் திருமேனி முழுவதும் அணிந்து

# 3. தேவாரம்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் அருளிய பாக்கள் 'தேவாரம்' ஆகும் இரட்டையரே மூவர் திருப்பதிகங்களைத் 'தேவாரம்' என்ற சொல்லால் முதன் முதல் குறிப்பிட்டவராவார்.[1]

''மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்''[2]

என வருவதனை இவண் குறிப்பிடலாம். ஆயின் திருநாவுக்கரசர் அருளிய பாக்கள் 'தேவாரம்' எனவும். 'விருத்தாப்பிய தேவாரம்' எனவும் ஆன்றோர் அழைப்பர். இவரருளிய பாக்கள் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளாக வகைப்படுத்தப்பெற்றுள்ளன. நான்காம் திருமுறையில் அமைந்த முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெறும் இலக்கியக்கூறுகளை இக் கட்டுரை ஆய்கிறது

பதிக அமைப்பு

திருவதிகை வீரட்டானம், திருவையாறு, திருவாரூர் ஆகிய மூன்று தலங்களில் முதல், மூன்றாவது தலங்களில் இரு பதிகங்களும், இரண்டாவது தலத்தில் ஒரு பதிகமும் கொண்டு திகழும் இப் பதிகங்களில் மூன்றாவது பதிகம் தவிர ஏனையவற்றில் ஒவ்வொன்றிலும் 10 பாக்களும், மூன்றாவது பதிகத்தில் 11 பாக்களும் கொண்டு ஆக 51 பாக்களை உடையனவாகத் திகழ்கின்றன. தலப் பெயர்களே பதிகங்களுக்கும் பெயரிடப்பட்டுள்ளன. முதல் நான்கு பதிகங்களில் இறுதி அடி ஒரே அமைப்பில் பாடப்பெற்றிருப்பதைக் காண முடிகின்றன. அஃதாவது, 'அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே', 'அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை', 'கண்டேனவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்', 'ஆரூர் அமர்ந்த அம்மானே'

---

1. தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு 13, 14, 15 ஆம் நூற்றாண்டு, ப.66.
2. ஏகாம்பரநாதருலா, கண்ணி 78.

ஆகிய அடிகள் இவ்வாறு பாக்கள்தோறும் அமைந்துள்ளன. இறுதிப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியில ஏதாவ தொரு பழமொழி அமைந்திருப்பதனால் இப் பதிகத்தைப் 'பழ மொழிப் பதிகம்' என்றும் ஆன்றோர் அழைக்கின்றனர்.

பதிகந்தோறும் இராவணன் தொடர்பான செய்திகள் காணப்பெறுகின்றன. இராவணனுக்கு இறைவன் அருள் புரிந்த செய்தியைக் கூறிப் பதிகத்தை அப்பர் முடிக்கின்றார். எனவே இராவணன் பாடலை 'முடிக்கும் பாடல்' எனக் கூற-லாம் 3.4 ஆவது பதிகம் தவிர ஏனைய மூன்று பதிகங்களிலும் இறுதிப் பாடலில் இராவணன் இடம் பெற்றுள்ளான்.

முதற்பதிகச் சிறப்பு

அப்பருக்கு ஏற்பட்ட சூலைநோயானது அவரை எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தியது என்பதனை அவரருளிய முதற்பதிகத்தின் மூலம் நாம் அறியமுடிகிறது. சூலைநோயின் கொடுமைகளைப் பறித்தல், புரட்டல், அறுத்தல், ஈர்த்தல் முதலான சொற்கள் மூலம் கூறியுள்ளார். மேலும் சூலைநோய், ''கூற்றுவனைப் போல் வருத்துகின்றது; வயிற்றினுள்ளே குட ரோடு சுற்றி முறுக்கி நிற்கிறது; கொடிய விடம்போலத் தோன்றி வருத்துகின்றது; உயிரைக் கொள்ளை கொண்டு உண்ணுகின்றது'' என்று சூலையின் கொடுமைகளை இப்பதி-கம் முழுவதும் கூறிச் செல்கின்றார். இறுதியாக இறைவனிடம், ''தம்மை அடைக்கலம் புகுந்தவர்களது வினைகளை ஒழித்து அருளுகின்ற தன்மை பெரியார்களுக்கு உண்டு எனில் நான் உன் அடியேன் ஆதலால் எனக்குண்டான வருத்துகின்ற இச் சூலை நோயை விலக்கி அருளுவது உன் கடமையாகும்'' என்று வேண்டுகின்றார்.

இறைவன் இயல்பு

இறைவன் இயல்புகளை முதல் ஐந்து பதிகங்களில் கூறியதைப் பின்வருமாறு கூறலாம்

இறந்தவர்களது சாம்பலைத் திருமேனியில் பூசிக் கொள்வன்; இறந்தவரது தலையோட்டில் பிச்சை ஏற்றுத் திரிவன்; இடபத்தை ஊர்தியாக விரும்பி ஏற்றுக் கொள்ளு-வன்; தலைமாலையைத் திருமேனி முழுவதும் அணிந்து

கொள்ளுவன்; மெலிந்த பிறையை அணிந்தவன்; யானைத்-தோல், புலித்தோல் முதலியவற்றை அணிந்தவன்; சுடு-காட்டை நடன அரங்கமாகக் கொண்டு நடனமாடுபவன்; மழுக்கொடியினை உடையவன்; உடுக்கையின் ஒலி, பதினெண் கணத்தார் பயிலாத அரிய பாடல் முதலியவற்றோடு கூத்தினை நிகழ்த்துகின்றான்; மரவுரி உடையவன்; நரியைக் குதிரையாகவும், நரகரைத் தேவராகவும், வித்து இன்றி நாற்றாகவும் செய்ய வல்லவன்; நினைக்கின்றவர்களின் நெஞ்சில் இருப்பவன்; மணம் வீசும் கரந்தைப் பூச்சூடியவன்; நால்வகை வேதங்களை உடையவன்; கங்கையாற்றைத் தலையில் மறைத்தவன்; மன்மதனைத் தன் புன்முறுவலால் அழித்தவன்; மும்மதில்களை அழித்தவன்! காலங்கடந்தவன்; தன்னை விரும்புவாரது உச்சியிலுள்ளவன்; அடியார்கள் தொழ நின்றவன்; சக்கரமும் சங்கும் கையிலேந்தித் திருமால் வடிவு போன்ற திருவுருவோடிருந்து உலகைக் காப்பவன்; சீர்தரு பாடலில் உள்ளவன; உமையொருபாகன்; ஆதிரை நாளைத் தனக்கு விருப்பமாகக் கொண்டவன்; திருமாலின் உள்ளத்தில் தங்கியவன்; தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன்; வணங்கினவர்களின் பாவங்களைப் போக்குபவன்; இராவணனை அடர்த்து அருளியவன்; யானையினால் வரும் துன்பத்தை நீக்குபவன்; கெடிலநதி மூழ்குகின்றவர்களின் கழுவாய் இல்லாத தீவினைகளைத் தீர்த்தருளுபவன்; முத்திப்பேற்றினை அளிப்பவன்.

இறைவன் தோற்றப் பொலிவு

சடையினில் கங்கையையும், நெற்றியில் திருவெண்ணீற்றையும், ஒரு காதில் பொற்றோட்டையும் மறுகாதில் சங்கக் குழையையும், மார்பினில் பாம்பு, மணம் வீசும் கொன்றை மாலையையும், கைகளில் மூவிலை வேல், தீ, மழு, பாம்பு, வீணை, ஆண்மான் ஆகியவற்றையும், தன்னுடம்பின் ஒரு பாகத்தில் உமையவளையும், இடப்பக்கத்தில் திருமால், கண்டிகையையும், வலப்பக்கத்தில் முத்துவடத்தையும், தலையினில் பறையையும் கொண்டு திகழும் சிவபிரான் பன்றிப்பல், முதிர்ந்த ஆமையோடு, வெண்ணூல், கொக்கிறகு ஆகியவற்றை அணிகலன்களாக அணிந்து காட்சி அளிக்கின்றவன்.

"பொன் போல மிளிர்கின்ற திருமேனி உடையவன்; குந்தமத்தின் மேனி அவன் நிறம்; பவளம் போன்ற நிறம் உடைவன்; முறுக்குண்ட பொற் சடையினை உடையவன்;

சிவந்த வாயினை உடையவன்; பாம்பினைத் தோளில் வடம் போலவும், யோகபட்டம் எனும் உருத்திர பட்டத்தையும் உடையவன்; மேற்றிசைப் பெருமலையை ஒத்த திண்ணிய தோள் உடையவன்; இருள் போக்கும் ஞாயிறையும் திங்களையும் இரு கண்களாகக் கொள்பவன்; தாமரை மலர்கள் போன்ற திருவடிகளை உடையவன்; பொன் மலைகள் போன்ற ஆயிரம் தோள்களை உடையவன்; ஞாயிறு போன்ற ஆயிரம் நீண்ட முடிகளை உடையவன்; ஆயிரம் திருப்பெயர்களை உடையவன்'' என்று அப்பர் கூறுகின்றார்.

இறைவி

''மலைமகள் நங்கை, பூந்துகிலாள், ஏந்திழையாள், பெய்வளையாள், தையல் நல்லாள், காரிகையாள், மெல்லியலாள், மொய் குழலாள், வார்தரு பூங்குழலாள்' முதலான சொற்கள் மூலம் இறைவியைப் பற்றி அறிய முடிகிறது. மேலும், ''யாழ் போன்ற மொழியினை உடையவள்; தேன் போல இனிமையாகப் பேசுபவள்; நீண்ட கூந்தலினை உடையவள்; வாள் போன்ற கண்களை உடையவள்'' என்றும் குறிப்பிடுகின்றார்.

தன்னிலை

அப்பரின் வாழ்வில் நிகழ்ந்த செயல்கள் பலவற்றைத் தாம் அருளிய பாக்களில் இயம்பியுள்ளார். முதற்பதிகத்தில் தமக்கு ஏற்பட்ட சூலைநோயைப்பற்றிக் கூறியுள்ளார். அடுத்துச் சைவ சமயத்தைத் துறந்து பிற சமயமான சமணத்திற்குச் சென்று மீண்ட நிலையைக் கூறி வருந்துவதனைப் பலபாக்களில் காணலாம். 'கொடுமைகள் பல செய்தேன்; இரவும் பகலும் எப்பொழுதும் இடைவிடாது வணங்குவேன்; நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; ஒருபொழுதும் உன்னை நினையாமல் இருந்திருக்க மாட்டேன்; சலம் பூவோடு தூபம் இடுவதை மறந்து அறியேன்; நலம் தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்; உன் திருப்பெயரை என் நாவில் மறந்து அறியேன்'' போன்ற தொடர்கள் அப்பரைப்பற்றிக் கூறுவனவாக வருகின்றன. அப்பரின் வாழ்க்கை நிகழ்ச்சியை,

''காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்வி

நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே''[3]

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். அப்பர் சைவ சமயத்தை விட்டு அமண் சமயம் சென்றதனை நினைந்து பாடியது.

இயற்கைக் காட்சிகள்

அப்பர் தேவாரத்தில் காணப்படும் இயற்கைக் காட்சிகள் மிகக்குறைவே. இவர் பாக்களில் பொழிலின் அழகையும், சோலையின் அழகையும் கூறக் காண்கிறோம். ஆரூரின் பெருமையைக் கூறவந்த அப்பருக்கு அவ்வூரின் சோலைக் காட்சி தென்படுகிறது. அச்சோலையிலே குயில் கூவுகிறது. அதற்குத் தகுந்தவாறு மயில் ஆடுகிறது. இதனைக் 'கொய்யுலா மலர்ச் சோலைக் குயில் கூவ மயில் ஆலும் ஆரூர்''[4] என்றியம்பக் காண்கிறோம்.

அப்பர் கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் காண்கிறார். இறைவன் உமையம்மையுடன் சேர்ந்து காட்சி கொடுத்தமையைக் கண்ட அப்பர் 11 பாக்களில் அழகுற இயம்பியுள்ளார். அம்மையப்பராகக் கண்ட இத்தெய்வ அருட்காட்சியை உலகியலில் காணப்படும் இயற்கைக் காட்சிகளுடன் இணைத்துப் பாடியுள்ளதனைக் காணமுடிகிறது. 'ஆண் யானை, தன் பெண் யானையுடன் சேர்ந்து வருவன கண்டேன். வரிக்குயில் தன் பேடையோடு ஆடி வருவன கண்டேன்; சேவல் தன் பேடையுடன் சேர்ந்து வருவன கண்டேன்; ஆண் மயில் தன் பெண் மயிலுடன் சேர்ந்து ஆடி வருவதனைக் கண்டேன்; இணை பிரியாத அன்றிற் பறவை ஆடி வருவன கண்டேன்; இடிபோன்ற குரலினை உடைய ஏனம் இசைந்து வருவன கண்டேன்; கருமை நிறங்கொண்ட ஆண் குரங்கு தன் பெண் குரங்குடன் சேர்ந்து ஆடி வருவன கண்டேன்; நாரை தன் இனிய துணைப் பேடையுடன் சேர்ந்து ஆடி வருவன கண்-

3. அப்பர் தேவாரம் 4.1.4.
4. மேலது 4.5.1.

டேன்; பைங்கிளி தன் இனிய துணையுடன் ஆடிப் பறந்து வருவன கண்டேன்; ஆண் எருது தன் பெடையைத் தழுவி வருவன கண்டேன்.''

புராண மரபுச் செய்திகள்

அப்பர் தேவாரத்தில் பதிகத்தின் இறுதிப் பாடலில் இராவணன் தொடர்பான செய்தியைக் காணமுடிகிறது. அப்பர் அருளிய முதல் ஐந்து பதிகங்களைப் பார்க்கும் பொழுது. சிவபிரானின் முடியைக் காண்பதற்காக நான்முகன் அன்ன வடிவெடுத்து வானத்தில் சென்றதை மட்டும் கூறியுள்ளார். ஆனால் திருமால் அடி தேடிய வரலாற்றைக் கூறவில்லை. ஒருபாடலில் நான்முகனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைச் சிவபிரான் அறுத்த செய்தியைக் கூறியுள்ளார்

வெண்மதி சூடிய வரலாறு[5], பலி தேர்ந்த வரலாறு,[6] கங்கையைச் சடையில் தரித்த வரலாறு,[7] முப்புரம் அழித்த வரலாறு,[8] பிரமகபாலம் ஏந்திய வரலாறு,[9] உமையொரு பாகனான வரலாறு,[10] புலித் தோலுடுத்திய வரலாறு,[11] அனலினைக் கையிலேந்திய வரலாறு,[12] இராவணனை அடர்த்த வரலாறு,[13] யானைத் தோலுடுத்திய வரலாறு,[14] கடல் நஞ்சுண்ட வரலாறு,[15] காமனை எரித்த வரலாறு,[16] இருநிலனேற்ற சுவட்டின் வரலாறு,[17] காலனை உதைத்த வரலாறு[18] ஆகிய புராண வரலாற்றுச் செய்திகள் இம் முதல் ஐந்து பதிகங்களில் இடம்பெற்றுள்ளன.

5. அப்பர் தேவாரம் 4,1.9, 4.2.1, 4.3.1,11, 4.4.1,
6 மேலது 4.1.3. 4.1 6,
7. மேலது 4.4.3,7.
8. மேலது 4 4.4. 4.5.9.
9 மேலது 4.2.7, 4.5.10.
10 மேலது 4 4.1, 4.4.6.
11. மேலது 4.4.7
12. மேலது 4.2.7
13. மேலது 4.1.10. 4.2.10. 4-5.10.
14 மேலது 4.1.10, 4 2.1, 4.2.9, 4.4.4.
15. மேலது 4.2.7, 4.5.10,
16. மேலது 4 4.4, 4.5.9.
17. மேலது 4.2.4 7.
18. மேலது 4.5.9

தத்துவக் கருத்துக்கள்

அப்பர் தேவாரத்தில் பொதுவாகத் தத்துவக் கருத்துக்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளதனைக் காண்கிறோம். இவ்வாறு காணப்படுவதற்கு அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தாம் என்பதனைக் கூறவும் வேண்டுமோ? பிறசமயம் சென்ற அப்பருக்கு இறைவன் சூலைநோய் கொடுத்து மீண்டும் சைவ சமயத்திற்கு வரும்படிச் செய்தான். இதனைக் கூறவந்த அப்பர் 'என்னுள்ளத்தின் உள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி அருகுவித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு பிணி தீர்த்த ஆரூரர்' என்பார். இங்குப் பிணி என்பது மும்மலமாகும். மும்மலங்களையும் 'கயிறு' என்று கூறக் காண்கிறோம். 'முற்பிறைக் கண்ணியினானை மொய் குழலாளொடும் பாடிப் பற்றிக் கயிறு அறுக்ககில்லேன்' என்பதே அப்பாடல் வரிகள். சிவதீக்கையைப் பற்றிப் 'பண்டமாப்படுத்து என்னைப் பால் தலையில்தெளித்துத் தன் பாதம் காட்டி' என்று கூறுகின்றார் பிறிதோரிடத்தில் இருபத்தைந்து தத்துவங்களையும் கடந்து நிற்பவன் இறைவன் என்பதனைப்

''பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந்தார்க்
கருள்செய்யும்
ஐயஞ்சி னப்புறத்தானும் ஆரூர்அமர்ந்த அம்மானே''[19]

என்று கூறுகின்றார்.

அப்பர் பாடியருளிய 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் முதற்பதிகத்தைச் சிவஞானபோதத்திலுள்ள பன்னிரு சூத்திரங்களுள்,

''அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே''[20]

என்னும் சூத்திரத்தோடு ஒப்பிட்டுக் காண்பது பொருத்தமுடைய ஒன்றாகும்.

---

19. அப்பர் தேவாரம் 4.4.10.
20. மெய்கண்டதேவர், சிவஞான போதம், நூற்பா 4.

பழமொழிகள்

அப்பர் காலத்தில் வழக்கிலிருந்த பழமொழிகளைத் தாம் அருளிய பல பதிகங்களில் எடுத்து மொழிந்துள்ளதனைக் காண முடிகிறது. திருவாரூர்ப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி வந்துள்ளது அதனால்தான் இப் பதிகத்தைப் 'பழமொழிப் பதிகம்' எனும் பெயராலும் ஆன்றோர் அழைத்தனர் போலும்! சைவசமயத்தை விட்டுப் புறச்சமயமான சமண சமயத்திற்குச்சென்று உழன்றதை நினைத்துப் பார்க்கிறார்; வருந்துகிறார்; அதனையே இப்பதிகத்தின் பழமொழிகளின் மூலம் எடுத்து விளக்குகின்றார்; அதனைப் பின்கண்ட அட்டவணை தெளிவுறுத்தும்

| வ.எ. | பழமொழிகள் | ஒப்புமை | |
|---|---|---|---|
| | | சைவம் | சமணம் |
| 1 | கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேனே | கனி | காய் |
| 2 | முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே | முயல் | காக்கை |
| 3 | அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே | அறம் | மறம் |
| 4 | பனிநீரால் பரவை செயப் பாவித் தேனே | பரவை-கடல்,வீடு பேறு | பனிநீர் |
| 5 | ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே | — | — |
| 6 | இருட்டறையின் மலடு கறந்து எய்த்தவாறே | — | இருட்டறை |
| 7 | விளக்கிருக்க மின்மினித் தீக் காய்ந்தவாறே | விளக்கு | மின்மினி |
| 8 | பாழூரில் பயிக்கம்புக்கு எய்த்த வாறே | பயிக்கம்-வீடுபேறு | பாழூர் |
| 9 | தவம் இருக்க அவம் செய்து தருக்கினேனே | தவம் | அவம் |
| 10 | கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தவாறே | கரும்பு | இரும்பு |

அப்பரடிகள் கைத்திருத்தொண்டினாலேயே உலகை நல்வழிப்படுத்த வந்த ஞானியாவார். உலக மக்கள் எல்லாம் செய்ய வேண்டிய தொண்டினைத் தாம் ஒருவராகவே செய்து திருத்தொண்டுக்கு ஆணியாக நின்றவர். சேக்கிழார், சம்பந்தர் அப்பர் ஆகிய இருவரையும் சைவத்தின் இரு புண்ணியக் கண்களாகப் போற்றிப் பரவுகின்றார். அப்பரை அடியாராகக் கொண்டு இறைவன் அருள் புரிந்தான் இதனால்தானோ என்னவோ அப்பர் பெரும்பாலும் இறைவனைப் போற்றிப் பாடியருளியதை அவர் பாக்களில் காணமுடிகின்றன எனவே தான் 'நாவரசன் என்னைப் பாடினான்' என்று சிவபிரான் சொன்னதாக ஒரு பழமொழி எழுந்தது போலும்! அப்பர் அருளிய 312 பதிகங்களில் முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெற்ற இலக்கியக் கூறுகள் இக்கட்டுரையில் இதுவரை ஆய்வு செய்யப்பெற்றன.

# 4. திருப்பாட்டு

மூவரருளியதேவாரத்துள் சுந்தரர் அருளிய பாக்கள் 'திருப்பாட்டு' என்றும், 'யௌவன தேவாரம்' என்றும் அழைக்கப்பெறும். இவர் பாக்கள் ஏழாம் திருமுறையாக வகுக்கப் பெற்றுள்ளன. இத் திருமுறையில் அமைந்துள்ள முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெறும் இலக்கியக் கூறு-களை இக் கட்டுரை ஆராய்கிறது.

பதிக அமைப்பு

திருவெண்ணெய் நல்லூர், திருப்பரங்குன்றம், திரு-நெல்வாயில் அரத்துறை, திருவஞ்சைக்களம், திருவோணகாந் தன்றளி எனும் ஐந்து பதிகங்களும் இறைவனை விளித்துப் பாடப்பெற்றுள்ளன. தலப்பெயர்களே பதிகத்திற்கும் கொடுக்-கப்பட்டுள்ளன. 1,5 ஆகிய பதிகங்கள் தம் வாழ்வில் தொடர் புடன் பாடியவையாகும். 2,5 ஆகியன இறைவனைப் பழிப்பது போலப் பாடப்பட்டுள்ளன. 3ஆவது பதிகத்தில் நிலையாமை கண்டு இரங்கி இறைவனடி வேண்டுபவையாகப் பாடப்பட்-டுள்ளன. ஐந்து பதிகங்களிலும் இறுதிப் பாடலான திருக்-கடைக்காப்புப் பாடலைத் தவிர ஏனைய பாக்களின் இறுதி அடிகள் ஒரே அமைப்பில் அமைந்துள்ளன. இரண்டாவது பதிகம் மட்டும் 11 பாக்களைக் கொண்டும் ஏனைய பதிகங்கள் 10 பாக்களைக் கொண்டும் ஆக 51 பாக்களை உடையன-வாகத் திகழ்கின்றன.

சுந்தரர் பாக்கள் சந்தமிகு பாக்களாகும். இதனை அவரே 'சந்தமிகு இத்தண் தமிழ் மாலைகள்'[1] என்று கூறுவ-தனால் அறியலாம். பதிகங்களைத் 'தமிழ் மாலை' என்ற பெயரால் குறிப்பிடுவர். இவர் பாக்களில் பதிகப்பலனைக் காணலாம் முதல் ஐந்து பதிகங்களில் முதற் பதிகம் தவிர ஏனைய நான்கு பதிகங்களிலும் அப் பதிகங்களை ஓதுவார்க்கு உளவாம் பயன்களைப் பல்வேறு வகையில் இறுதிப் பாடலில் கூறியுள்ளார். இப் பதிகப்பலனால் சுந்தரரைப்பற்றி நாமறிவன:

---

1. சுந்தரர் தேவாரம் 7.4.10.

இவர் ஊர் திருநாவலூராரும். இவர் பெயர் ஆரூரன், நாவலர்கோன் என்பன.

முதற் பதிகச் சிறப்பு

கிழவேதியர் உருவில் வந்த இறைவனால் ஆவணம் காட்டி ஆட் கொள்ளபபெற்ற பின் சுந்தரர் முதன் முதலில் பாடிய பதிகமே 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கும் திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகமாகும். இப் பதிகத்தில் சுந்தரர் தமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகக் கூறியுள்ளார். தன் அறியாமையையும் இறைவனது முற்றறிவு உடைமையையும் காட்டுகின்றார். இறைவன் தொழிலை எடுத்துக்காட்டித் தன் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகின்றார். அத்தன், ஆயன், அடிகள், ஆதி, அண்ணல், அழகன் ஆகிய சொற்களால் இறைவனை விளித்துத் தமக்கும் அவனுக்குமுள்ள தொடர்பைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இறைவன் இயல்பு

முதல் ஐந்து பதிகங்களிலும் காணப்பெறும் இயல்பு களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். "பித்துத் தன்மை உடையவன்; இடபத்தை ஊர்தியாகக் கொண்டவன்; 'ஊனாய் உயிரானாய், உடலானாய் உலகானாய் வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்' என்று இறைவனின் எல்லாமாந் தன்மையைக் கூறியுள்ளார்: நான்மறைகளை அருளியவன்; நால்வேதங்களைப் பாடுபவன்; இறைவனைத் தொழுகின்றவர்களின் துன்பங்களைத் தீர்த்து அருளுபவன்; தேவர்கள் 'சோத்தம்' என்று சொல்லி வணங்க நின்றவன்; மலையையும், சுரத்தையும் கோயிலாகக் கொண்டவன்; சுடுகாட்டை உறைவிடமாகவும், நடன அரங்கமாகவும் கொண்டவன்; அறியாமை உடைய முயலகன், பாம்பு, புலால் நாற்றம் எடுக்கும் வெண்தலை, பேய், பூதம், பாய்கின்ற புலியின் தோல் இவைகளை வைத்துள்ளான்; மூன்று கண்களை உடையவன்; சிங்கத்தைக் கொன்று அதன் தோலைப் போர்த்தியவன்; நினைக்கின்ற அடியார்களின் நெஞ்சில் வாழ்பவன்; எழுத்துக் கெல்லாம் முதல் எழுத்தாய் நிற்கும் அகரம் போல எல்லாப் பொருள்களுக்கும் முதற்பொருளாகி நிற்பவன்."

இறைவன் தோற்றப் பொலிவு

சடையினில் கங்கையையும், மார்பினில் தலையோடு, கொன்றைமலர், எருக்கம்பூ ஆகியவற்றையும், இடுப்பினில் பாம்பு, கோவணத்தோடு ஒரு தோலையும் சுற்றியுள்ளான். தன்னுடம்பின் இடப்பக்கத்தில் உமையவளைக் கொண்ட சிவபிரான் கையினில் மழுப்படை, பாம்பு ஆகியவற்றையும், தலையினில் பிறையையும், கழுத்தினில் பாம்பையும் கொண்டவனாகத் திகழ்கின்றான். நெருப்புப் போன்ற திருமேனியை உடையவன்; செவ்வானத்தின் நிறம் போன்றவன்; உடல் முழுவதும் சாம்பலைப் பூசியுள்ளான்; தலைக்கு அணிகலமாகத் தலைமாலையை அணிந்துள்ளான்.

இறைவி

இறைவி உமையவளைப் பற்றியும் தாம் பாடியருளிய பாக்களில் போற்றிக் கூறியுள்ளார். சிவபிரானின் திருமேனியின் இடப்பக்கத்தில் இருப்பவள்; துகில் சூழ்ந்த புறத்தினையும், பெருத்த ஊற்றினிமை பொருந்திய தனங்களையும் உடையவள்; இசைப்பண் போன்ற மொழி பேசுபவள்; மூங்கில் போன்ற தோள்களை உடையவள்; வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலை உடையவள்; வாள் போன்ற நெடிய கண்களை உடையவள்.

தன்னிலை

சுந்தரர் தம்மைப் பற்றிப் பல பாக்களில் கூறியனவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். என் நெஞ்சில் உன்னை அகலாது வைத்து அருளினாய்: நாயேன்; ஏழையேன்; அறிவிலேன்; பேய் போல அலைந்து இளைத்தேன்; என் மனத்தில் உன்னை ஒருபோதும் மறவாமலே நினைப்பேன்; பல பொய்களையே உரைக்கின்ற கொடியவன் நான்; இரவும் பகலும் கவலைப்படுகின்றேன். முன்பு ஒருநாள் கல்லால நிழலில் ஆசிரியக் கோலத்தில் உன்னைக் கண்டேன்; மற்றொரு நாள் கடம்பூர்க்கரக் கோயிலில் இலிங்க மூர்த்தியாகக் கண்டேன்; ஐம்பொறிகளை வென்று உன் திருவடி சேர்வதற்குரிய

ஒருவழியினை எனக்குச் சொல்லியருள்! நான் ஒரு கண் இல்லாதவனாய் இருக்கின்றேன்.

அகச்சான்று

இறைவனால் ஆவணத்தின் மூலம் தடுத்தாட்கொண்டதனைச் சுந்தரர், 'ஆவணம் செய்து ஆளும் கொண்டவரை'[2] எனும் தொடரில் கூறுவார்.

சுந்தரர் சேரனுடன் மதுரைக்குச் சென்றார். அங்கிருந்த பாண்டியன், சோழன் ஆகிய இரு வேந்தர்களும் போற்ற ஏற்றுப் பின் அவர்களுடன் பல திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டார். இதனை

''முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்த ஆறும் ஓர்நான்கும் ஓர்ஒன்றினையும்''[3]

எனும் தொடர் உறுதிப்படுத்துகின்றது.

திருவஞ்சைக்களத்திற்குச் சென்ற சுந்தரர் மனைவாழ்க்கையை வெறுத்து இறைவனை ஆட்கொள்ளுமாறு வேண்டினர். இதனை,

''வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்''[4]
எனவரும் பகுதி விளக்கும்.

இயற்கைக் காட்சிகள்

சுந்தரர் செல்லுமிடமெல்லாம் செல்வம் கொழிக்க வைக்கும் ஆறுகளைப் பார்க்கிறார் அதனை அப்படியே பாவாக இயற்றித் தந்து படிப்பவரையும் களிபேருவகை அடையச் செய்கிறார்.

பெண்ணை யாறானது மூங்கில், பொன், மணி, வைரம் முதலியவற்றைத் தாங்கி வருகிறது. தன் கரையின் இருமருங்கிலுமுள்ள மரங்களில் இருந்து உதிரும் மலர்களை ஏற்று வருகிறது. இதனால் இது புனல் ஆறு அன்று; பூம்புனல் ஆறு எனத் தோற்றமளிக்கிறது. அம் மலர்களைச் சுமந்து வருவதன்

2. சுந்தரர் தேவாரம் 7.5.10
3. மேலது 7.2.11.
4. மேலது 7.4.8.

வாயிலாக அம் மலர்களிலுள்ள தேன் முழுவதும் அந்நீரில் கலந்து விடுதலினால் 'தேனார் பெண்ணை' எனச் சிறப்பிக்கும் பெருமை வாய்ந்தது. மேகத்திலிருந்து பொழியும் நீரைக் கொண்டு இரு கரைகளையும் தன் திரைகளாகிய கைகளால் பொருது பல மணிகளையும் வாரிக்கொண்டு வருதலின் ஊரிலுள்ளார் பலரும் போற்றப்பெறும் சிறப்புடையது.

நிவா நதிக் கரையில் திருநெல்வாயிலரத்துறைத் தலம் அமைந்துள்ளது. இந் நதியானது மலையிலிருந்து அகில், மாணிக்கங்களை உந்திக் கொண்டு வருகின்றது. நீர்ப்பெருக்கு உடையதாதலின் இரு கரைகளிலுமுள்ள கோங்கு, வேங்கை ஆகிய மரங்களிலுள்ள மலர்களையும் அடித்துக் கொண்டு வருகின்றது. மிளகு, வலிய மரங்கள் ஆகியவற்றையும் உந்திக்கொண்டு வருகின்றது. மலையில் மழை பொழிவதனால் அந்நீர் திரண்டு நிவாவாக உருப்பெறுகின்றது. இலவங்கம், ஏலம் ஆகிய மரங்களையும் ஏற்று வருகின்றது.

புராண மரபுச் செய்திகள்

வெண்மதி சூடிய வரலாறு,[5] பலி தேர்ந்த வரலாறு,[6] கங்கையைச் சடையில் தரித்த வரலாறு,[7] முப்புரம் அழித்த வரலாறு,[8] பிரமகபாலம் ஏந்திய வரலாறு,[9] உமையொரு பாகனான வரலாறு,[10] மழுவேந்திய வரலாறு,[11] புலித்தோலுடுத்திய வரலாறு,[12] முயலகனை ஏந்திய வரலாறு,[13] இராவணனை அடர்த்த வரலாறு,[14] அடிமுடி தேடிய வரலாறு,[15] யானைத் தோலுடுத்திய வரலாறு,[16] கடல் நஞ்சுண்ட வரலாறு,[17] காமனை எரித்த வரலாறு,[18] சிங்கத்து உரி போர்த்திய வரலாறு,[19] திருமால் மண்ணளந்த வரலாறு[20]

---

5. சுந்தரர் தேவாரம் 7.1 1,6. 7.3.1 7 4.2,7.5 2.
6. மேலது 7 5 4 7. மேலது 7.1 8, 7 2.7,
8. மேலது 7.1.6,8, 7.4.9 7.4 1, 7.4.5,
9. மேலது 7 4.8 7.5.2, 7.5 9.
10. மேலது 7.1.9, 7.2 4,6,9. 11. மேலது 7.1.9. 7.3.3,9 7.4 5.
12. மேலது 7.2 3
13. மேலது 7.4 1. 14. மேலது 7.2 10,7.4.8.
15. மேலது 7 3.9. 16. மேலது 7.2.9
17. மேலது 7 2.2,4. 7.4 8. 18. மேலது 7.2.9,
19. மேலது 7.2 7. 20. மேலது 7 3.9,

ஆகிய புராண வரலாற்று நிகழ்ச்சிகள் இவர்தம் பாக்களில் சிவபிரான் புகழைப் போற்றும் விதத்தில் அமைந்துள்ளன.

தத்துவக் கருத்துக்கள்

இறைவன் உலகெலாம் ஆகி நிற்கும் திறத்தை அப்பெருமான் எண்வகை வடிவில் நிற்பதனை,

''ஊனாய்உயிரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நில வானாய்கட லானாய்மலை யானாய்''[21]

எனவும்,

''பாரொடுவிண்ணும் பகலுமாகிப்பணிமால் வரையாகிப் பரவையாகி
நீரொடுதீயும் நெடுங்காற்றுமாகி நெடுவெள்ளிடை நிலனுமாகி''[22]

எனவும் சுந்தரர் குறித்துப் போற்றுவர்.

சிவபெருமான் ஒருவனே உயிர்களுக்கெல்லாம் தலைவனாவன். உயிர்கள் அவனுடைய அடிமையாகும். இதனை,

''அத்தா உனக்காளாய்இனி அல்லேன் எனலாமே''[23] எனும் வரியில் தாம் இறைவனுக்கு அடிமை என்பதனைக் கூறுவதன் வாயிலாக உயிர்கள் அனைத்தும் என்றும் இறைவனுக்கு அடிமை என்பதையும் கூறியுள்ளார்.

வினை என்பது உயிர்களால் ஈட்டப்படுவதாகும். அவ்வினைக்கு ஏற்பவே அவரவர்க்கு நன்மையும் தீமையும் கிட்டும், எனவே நாம் நுகரும் இன்ப துன்பத்திற்குக் காரணம் நாமே அன்றிப் பிறரன்று. உயிர்கள் செய்த இவ்வினையைப் பழவினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்துவம்), ஏறும் வினை (ஆகாமியம்) என்று மூன்று வகையாகப் பிரிப்பர் ஆன்றோர். இதனையும் நல்வினை, தீவினை என இருவகையாகப் பிரிப்பதுண்டு. இவை உயிரைப் பிணித்து ஈர்க்கும் தன்மை உடையனவாதலின். 'பிணி வண்ணத்த வல்வினை''[24] என்று கூறினார் சுந்தரர்.

---

21. சுந்தரர் தேவாரம் 7.1.7
22. மேலது 7 2.10.
23. மேலது 7.1.1.
24. மேலது 7 2.8.

ஐம்புலன்களைப் பற்றியும் அதனை வெல்லும் கருத்-தாய்த் தம் மூன்றாம் பதிகத்தினுள்,

''வறிதேநிலையா தவிம்மண்ணுலகின்
னரணாகவகுத் தனைநானிலையேன்
பொறிவாயிலிவ் வைந் தினையும்மவியப்
பொருதுன்னடியே புகுஞ்சூழல்சொல்லே''[5]

என்று கூறுவார்.

'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கும் பதிகத்தை உடைய ஏழாம் திருமுறையைச் சிவஞான போதத்தின்,

'யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர் ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா''[26]

எனும் ஏழாம் சூத்திரத்தோடு ஒப்பிட்டுக் காண்பது பொருத்த முடையதாகும்

நிலையாமைக் கருத்துக்கள்

சுந்தரர் தேவாரத்திலேயே நிலையாமைக் கருத்துக்கள் அதிகமாக இருப்பதனைக் காணமுடிகின்றது. இவ்வைந்து பதிகத்தில் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியவற்றை 'ஓடுபுனற் கரையாம் இளமை; உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி'[27] என்று கூறுவார். உயிர்கள் பலவும் பயனேதுமின்றி இவ்வுலகில் பிறந்து இறக்கின்றன[28] எனவே இப்பிறவியின் பயனைப் பெற்றுக் கடைத்தேறுவதற்கு ஒரு வழியினை எனக்குச் சொல் என்று ஒருபாடலில்[29] இறைவ-னிடமே வேண்டுகிறார். உடம்பினது இழிவினை 'ஒருநெல் வாலூன்ற வருந்தும் உடம்பு[30] என்றும், உடம்பானது மிக-விரைவில் அழியும் என்பதனை 'மணக்கோலமதே பிணக்கோல மதாம் பிறவி இது தான்'[31] என்றும் கூறக் காணலாம்.

25. சுந்தரர் தேவாரம் 7 3.2.
26 மெய்கண்டதேவர், சிவஞானபோதம், நூற்பா 7.
27. சுந்தரர் தேவாரம் 7.3 4
28. மேலது 7.3.2.
29. மேலது 7.3.1.
30. மேலது 7 3 6.
31. மேலது 7.3.7.

ஐம்புலன்கள்

ஐம்புலன்களின் கொடுமையைப்பற்றி.

''பொறிவாயிலின்வைந் தினையும்மவியப்
பொருதுன்னடியே புகுஞ்சூழல் சொல்லே''[32]

என்றும்,

''ஐவர்கொண் டிங் காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்து வேற்கு
உய்யுமாறொன் றருளிச்செய்யீ ரோணகாந்தன் றளியுளீரே''[33]

என்றும் கூறுகின்றார். மற்றோரிடத்தில்,

''புலனைந்துமயங்கி யகங்குழையப்
பொருவே லொர் நமன் றமர்தாநலிய
அலமந்துமயங் கியயர்வ தன்முன்
னடியேனுய்யப்போ வதொர்சூழல்சொல்லே''[34]

என்று கூறியுள்ளார். புலன்களாலுண்டாகும் குற்றங்களைக்,

''கலையமைத்த காமச்செற்றக் குரோதலோப மதவ ருடை
உலையமைத்திங் கொன்றமாட்டே னோணகாந்தன் றளியுளீரே''[35]

என்று மொழியக் காண்கிறோம்.

பழிப்பது போலப் புகழ்தல்

இறைவனிடம் தோழமை நெறியில் பாடியவர் சுந்தரர். அதனால் இரு பதிகங்களில் இறைவனைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருப்பரங்குன்றப் பதிகத்தில் இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள பெருமை சிறுமைகளை உணர்த்துதற்பொருட்டு, இறைவனை உள்ளுறைச் சிறப்பு வகையால் பழிப்பதுபோலப் புகழ்ந்து பாடியுள்ளார். திருவோணகாந்தன் தனிப்பதிகத்தில் இறைவன், தன்னடியார்களிடத்து வைத்துள்ள பேரருட் பெருக்குக்குக் காரணமாக, அவர்கட்கு அவன்மாட்டு உளதாகும்

32. சுந்தரர் தேவாரம் 7.3 2. 33. மேலது 7.5.1.
34. மேலது 7.3.5. 35. 7 5.8.

உரிமை புலப்படுமாறு பழிப்பது போலப் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருக்குறளும் சுந்தரரும்

திருக்குறளில் சுந்தரர் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் என்பதனை அவரருளிய திருமுறையால் அறியமுடிகின்றது. திருக்குறளின் கருத்துக்களை ஏற்ற இடங்களில் கூறியுள்ளார். சிலவிடங்களில் குறட் சொற்களையும் சொற்றொடர்களையும் அப்படியே எடுத்துப் போற்றியும் உள்ளார்.

திருநெல்வாயில் அரத்துறையில் எழுந்தருளியுள்ள இறைவனைப் போற்ற வந்த சுந்தரர், மாசற்றவனே! காதில் மகரக் குண்டலத்தை அணிந்தவனே! எழுத்துக்களுக்கெல்லாம் அகரமே முதல் எழுத்துப் போன்றது; அதுபோல எல்லாப் பொருள்களுக்கும் முதற் பொருளாகி நிற்பவனே!' எனப் போற்றுகின்றார். இக்கருத்தமைந்த 'அகரம் முதலினெழுத்தாகி நின்றாய்'[36] எனும் தொடர்,

> ''அகர முதல வெழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு''[37]

எனும் குறளோடு ஒத்து விளங்குவதைக் காணலாம்.

நெறித்த நீண்டு வளர்ந்த கூந்தலை உடைய மகளிர்பிறர் அனைவரும் விரும்பிக்காணத்தக்க நடனத்தைப்புரிகின்றவனே! இம் மண்ணுலகில்உயிர்கள் பலவும் பயனேதுமின்றிப் பிறந்து இறக்கின்றன. அத்தகைய உலகத்தில் என்னையும் ஒரு மனிதனாகப் பிறப்பித்தாய். நான் இறவாது இரேன். எனவே 'பொறி' எனப்படுகின்ற ஆவாவின் வாயில்களாகிய இவ்வைந்தினையும் அடங்குமாறு வென்று உன் திருவடிக்கண் புகுவதற்குரிய ஒரு வழியினை எனக்குச் சொல்லி அருள். இவ்வாறு இறைவனிடம் வேண்டுவதாக இடம்பெற்ற பாடலில் 'பொறி வாயில் இவ் ஐந்தினையும் அவிய' எனும் தொடரானது,

> ''பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்''[38]

எனும் குறளோடு ஒத்து விளங்குகிறது.

---

36. சுந்தரர் தேவாரம் 7 3.7.
37. திருக்குறள் 1.
38. மேலது 6

திருவொற்றியூரில் சங்கிலியாரிடம் செய்த சூள் பிழைத்தமையால் சுந்தரர் அவ்வூர் எல்லையைக் கடந்தபோது கண்களை இழந்தார். பின்னர்க் காஞ்சிபுரத்தில் இறைவனிடம் தன் பிழையை எண்ணி இரங்கிக் கூறி ஒரு கண் பெற்றார். தன்னுடைய மற்றொரு கண்ணைப் பெறாத நிலையில் நெல்வாயிலிலுள்ள அரத்துறை இறைவனைப் புற்றில் வாழுகின்ற பாம்பை விரும்பி ஆடுகின்ற பாம்பைப் பெருவிருப்பத்துடன் இடுப்பில் கட்டியவனே! தூய்மையானவனே! பேர் செய்கின்ற வெண்மையான இடப ஊர்தியை உடையவனே! எம்பெருமானே! வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தலை உடைய உமையவளை ஒரு பக்கத்தில் கொண்டவனே! மாசற்றவனே! நான் ஒரு கண் இல்லாதவனாய் இருக்கின்றேன்; இஃது என்னே! மற்றும் உன்னைத் தவிர வேறொரு பற்றுக்கோடு இல்லேன்; எனவே, நான், இறப்புப் பொருந்திய பிறவிக்கடலைக் கடந்து கரையேறிப் பிழைப்பதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள் என்று வேண்டுகின்றார். இப் பாடலில் இடம்பெற்ற 'பிறவிக்கடல் நீந்தியேறி' எனும் தொடர்,

> ''பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
> ரிறைவ னடிசேரா தார்''[39]

எனும் குறளின் அடிகளை ஒத்து விளங்குகிறது.

'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பேரறிவுடையாரை, அவர் மகிழ்வன அறிந்து செய்து, தமக்குச் சிறந்த துணையாளராகக் கொள்வது, அரசர்க்குக் கிடைத்தற்கரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிதானது என்று கூறிய கருத்தைக் கொண்ட குறள் வருமாறு:

> ''அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
> பேணித் தமராக் கொளல்''[40]

இக் குறட்கருத்தைக் சுந்தரர் திருப்பரங்குன்றப் பதிகத்தின் ஒரு பாடலில்[41] இறைவனைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடியுள்ளார். "இறைவனே! 'பெரியவர்களுடன் நட்புக் கொள்வது மகிழ்ச்சியைத் தரும்' என்று அடியவர்களாகிய நாங்கள் கருதுகின்றோம். ஆனால் உன்னிடம் தொடர்பு

---

39 திருக்குறள் 10.
40. மேலது 443.
41. சுந்தரர் தேவாரம் 7.2.2.

கொள்வதற்குத் தயங்குகின்றோம். ஏனெனில், இறந்தவர்களின் தலையோட்டை மாலையாக அணிந்துள்ளாய்: இறந்தவர்கள் வாழும் சுடுகாட்டை உறைவிடமாகக் கொண்டுள்ளாய்; அங்குள்ள சாம்பலை உடல் முழுவதும் பூசுகின்றாய்: கொடிய நஞ்சுள்ள பாம்பைக் கழுத்திலும், தோளிலும் கட்டி வைத்திருக்கின்றாய்; தேவர்கள், பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டு வந்து கொடுத்த கொடிய விடத்தினை எளிதாக உண்டாய்; இவ்வண்டத்தைக் கடந்து, அதற்கு மேலுள்ள அண்டத்துக்கும் அப்பால் இருக்கின்றாய்; அதனால், ஊனினது திரட்சியாகிய இவ்வுடம்பைச் சுமந்து கொண்டு உம்மோடு தொடர்பு கொள்ள வல்லவர்கள் அல்லோம் நாங்கள்; ஆதலின், உன்னை அணுகி நின்று உனக்குப்பணி செய்வதற்கு அஞ்சுவோம்''.

திருநாவலூரார், நம்பியாரூரார், வன்தொண்டர், தம்பிரான் தோழர் ஆகிய பெயர்களால் சுட்டப்பெறும் சுந்தரர் அருளிய 100 பதிகங்களில் முதல் ஐந்து பதிகங்களில் காணப்பெற்ற இலக்கியக்கூறுகள் இதுவரை ஆராயப் பெற்றன.

# 5. தேவாரத்தில் திருமால் அவதாரங்கள்

கண்ணுநுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழ் மொழியில் வையத்தின் பழநிலவாக, வாழ்வுக்கோர் புத்துணர்வாக, ஐயத்திற்கோர் அறிவொளியாக விளங்குவது பத்திப் பனுவல்கள். மக்களாய்ப் பிறந்த நாம் இவ்வுலகில் எத்துணைக் காலம் வாழ்வோம் என்று கூறவியலாது. இறைவனது படைப்பில் எண்ணிலாப் பிறவிகள் உள்ளன இவற்றுள் விழுமியது மனிதப் பிறவியே! 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'[1] என்பர் அப்பர் அடிகளார் இப்பிறவிக்கு உற்ற துணையாக, எழுமையும் உதவத்தக்கதாக உள்ளவை திருமுறைகளாகும். இவற்றுள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கலாம்; இயற்கையைக் கண்டு களிக்கலாம்; பரம்பொருளை உருகிப் பருகலாம். இப்படிப் பல்வேறு சுவைகளை வெளிப்படுத்துகின்ற திருமுறைகளில் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் அருளிய பாக்களிலும், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே'[2] என்று வாழ்ந்து காட்டிய அப்பர் அருளிய பாக்களிலும் திருமால் எடுத்த அவதாரங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

திருமால் அவதாரங்கள்

உலகத்து வாழும் உயிர்கள் உய்தி பெறுவதற்காகத் திருமால் மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமன அவதாரம், கிருட்டிண அவதாரம், பலராம அவதாரம், பரசுராம அவதாரம், இராமாவதாரம், கல்கி அவதாரம் என்று பத்து அவதாரங்களை எடுத்தார்.

## சம்பந்தர் தேவாரம்

வராக அவதாரம்

இரணியனது உடன் பிறந்தவனான இரணியாக்கன் என்னும் அரக்கன் தன் வலிமையால் பூமியைப் பாயாகச்

---

1. அப்பர் தேவாரம் 4.81.4.
2. மேலது, 5.19 9.

சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றுவிடு கிறான். தேவர்களின் வேண்டுகோட்கேற்பத் திருமால் வராக வடிவமாக அவதரித்துக் கடலினுள் செல்கின்றார். அவ்வரக்கனைக் கண்டு அவனுடன் போர் செய்து அவனைக் கொன்று, பாதாள உலகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினால் குத்தி அங்கு நின்று எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்து அருளுகின்றார்.

இவ் அவதாரத்தைச் சம்பந்தர்,

"கதமிகுகருவுரு வொடுகிரிடவட வரைகணகணவென
மதமிகு நெடுமுக னமர்வ ளைபதிதிக ழெயிறதனு
திமிசை
இதமமர்புவியது நிறுவியவெழிலரி வழிபடவருள்
செய்த
பதமுடையவனமர் சிவபுரநினைபவர் நிலவுவர்
படியிலே"[3]

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார். அஃதாவது, அழகிய நிறங்கொண்ட திருமால் வெள்ளைப் பன்றி உருவத்துடன் கடலினுள் செல்கின்றார். கோபம் மிகுந்து கறுத்த மேனி யோடு நகங்களைப் பறிக்க வந்த இரணியாக்கனைக் கொல் கின்றார். மதம் மிக்க நீளமான முகத்திலே இருக்கின்ற பிறைமதியை ஒத்த கோரைப்பல்லின் நுனியில் இன்பத்தோடு இருக்கின்ற பூமியைப் பழையபடி நிறுத்துகின்றார். அதன் பின்னர் அப்பன்றி உருவத்துடன் சிவபெருமான் திருவடி யை வழிபடுகின்றார் திருமால் வெள்ளைப் பன்றியாய்ச் சிவபெருமானை வழிபட்ட பெருமையை உடைய சிவபுரம் என்னும் தலத்தை நினைப்பவர்கள் எப்பொழுதும் எவ்விதத் துயரமும் இல்லாமல் இருப்பர்.

ஆதிசேடனாகிய பாம்பின்மேல் பள்ளிகொண்ட திரு மால், வெள்ளைப்பன்றி வடிவெடுத்து இரணியாக்களை அழித்த பின்னர்ச் சிவபெருமானை வழிபட்ட செய்தியைப்பல பாக்களில் சம்பந்தர் குறிப்பிட்டிருக்கின்றார்.[4]

---

3 சம்பந்தர் தேவாரம் 1.21.7.

4 சம்பந்தர் தேவாரம் 1.9.9, 1.11.9, 1.18.9, 1.4.29, 1.51.9, 1.53.9, 1.66.9, 2.83.9, 3.17.9, 3.67.6, 1.109.1.

வாமன அவதாரம்

மகாபலி அரக்கன் தன் ஆற்றலால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று மூன்று உலகங்களையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து ஆண்டு வருகிறான் அரசு இழந்த தேவர்கள் திருமாலைச் சரணம் அடைந்து வேண்டுகின்றனர். அவர்கட்காகத் திருமால் குள்ள வடிவமாகி ஒரு பிராமணப் பிரமசாரியாகி மகாபலியைக் காண வருகின்றார். அப்பொழுது மகாபலி ஒரு வேள்வி இயற்றியாவர்க்கும் வேண்டிய அனைத்தையும் கொடுத்து வருகிறான். அவனிடம் சென்ற பிரமச்சாரியான திருமால் தவம் செய்வதற்குத் தன் காலடியால் மூவடிமண் வேண்டுமெனக் கேட்கிறார். மகாபலியும் அதனைக் கொடுப்பதற்கு இசைகிறான். அவ்வாறே அவன் தாரை வார்த்துத் தத்தம் செய்த நீரைக் கையிலேற்ற உடனேயே அப்பிரமச்சாரி திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியால் பூவுலகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து, தானமாகப் பெற்ற மூன்றாவது அடி நிலத்திற்கு இடமின்றாகவே அதற்காக அவன் வேண்டுகோளின்படி அவனது முடியில் தம் அடியை வைத்து அவனைப் பாதாளத்தில் அழுத்தி அடக்குகின்றார். இவ் அவதார நிகழ்ச்சியை,

''மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா மளவிட்ட
குறுமாணுருவன் றற்குறியாகக் கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார் கோயிலே''[5]

என்ற பாடலில் கூறுகின்றார். குற்றம் பொருந்திய பெரிய வடிவமாய் மற்றவர்களுக்கு இணையில்லை என்று செருக்குற்று வானோரைத் துன்புறுத்திய மாவலியைக் குறுகிய பிரம்மச்சாரி வடிவத்துடன் சென்று மூவுலகையும் அளந்த திருமால் வழிபட்ட இறைவன் எழுந்தருளியுள்ள இடம் கண்ணார் கோயிலாகும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

திருமால் பன்றி உருவமெடுத்துச் சிவபெருமானின் திருவடியையும் நான்முகன் அன்ன வடிவமெடுத்துத் திருமுடியையும் காணப் புறப்பட்ட நிகழ்ச்சியைச் சம்பந்தர் தாம் பாடி-

5. சமபந்தர் தேவாரம் 1.101.5.

யருளிய பதிகங்கள்தோறும் ஒன்பதாவது பாடலில் குறிப்பிடுவது வழக்கம் அவ்வாறு கூறிய சில பதிகங்களின் பாக்களில் திருமால் வாமன அவதாரமெடுத்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து

'பொற்பமர் வாமனன்'[6]

'தரணியளந்த வாமனன்'[7]

'மாணாய் உலகம் கொண்ட மால்'[8]

'குறிய மாணுருவாகிக் குவலயம் அளந்தவன்'[9]

என்கின்றார்.

மாவலி தாரை வார்த்துத் தத்தம் செய்த நீரைக் கையி-லேற்றார் வாமன வடிவங்கொண்ட மால். இதனை 'அரிய வேதங்களில் சிறந்த நான்முகனும் அகன்ற இடத்தையுடைய இப்பூமியை நீரினால் மாவலியினிடம் யாசித்த திருமாலும் ஆகிய இருவரும் அளவிடற்கரிய அழல் வடிவமாய் நீண்ட சிவபெருமான்'[10] எனக் குறிப்பிடுகின்றார்.

மண் இரந்ததை

'மண்ணினைமுன் சென்றிரந்த மால்'[11]

என்றும் தாவி உலகளந்ததை

'முன்னந்தாவி யடிமூன் றளந்தவன்'[12]

'விண்முடியாப்படிமூ வடியாலுலக முழுதுந்தாவிய நெடியான்'[13]

'தரணி யளந்தான்'[14]

என்றும் குறிப்பிடுகின்றார்.

கிருட்டிண அவதாரம்

கம்சனைக் கொல்வதற்காகத் திருமால் இவ் அவதாரத்தை எடுக்கிறார். இந்த அவதாரத்தில் பல திருவிளையாடல்களை

---

6. சம்பந்தர் தேவாரம் 3 21 9
7. மேலது 3 60.9
8 மேலது 2.59 9.
9. மேலது 2.95 9.
10 மேலது 3.66 9
11. மேலது 2.45 9.
12. மேலது 2 121.9.
13. மேலது 1.67.9.
14. மேலது 3.103.9.

மாயோன் செய்திருக்கிறார். அவற்றுள் சிலவற்றை ஆளுடைய பிள்ளை தம் பாக்களில் ஏற்றவிடங்களில் எடுத்தியம்பியிருக்கிறார்.

குறுந்தொசித்தது :- கண்ணனைக் கொல்வதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட அரக்கர்களில் ஒருவன் குருந்த மரத்தில் இருக்கிறான். மலர் கொய்வதற்காக அங்கு வந்த கண்ணன் அரக்கன் இருப்பதனை அறிந்து அம் மரத்தைப் பிடித்துத் தன் வலிமை கொண்டு முறித்து அழித்து விடுகிறான். இந் நிகழ்ச்சியை மனத்துட் கொண்டு 'குறுந்தொசி பெருந்தகை'[15] என்று குறிப்பிடுகின்றார்.

புள்வாய் கீண்டது :- பகாசுரன் என்னும் அசுரன் கொக்கு வடிவங் கொண்டு கண்ணனைக் கொல்வதற்கு வருகிறான். இதனையறிந்த கண்ணன் அப்பறவையின் வாயலகுகளை இருகையாலும் பிடித்துக் கிழித்து அதனை அழித்து விடுகிறான். இதனைப்

''புள்வாய்போழ்ந்து மாநிலங்கீண்ட
பாருகடல்வண்ணன்''[16]

என்கின்றார். இப்பாடலில் திருமால் வராக அவதாரம் எடுத்ததையும் குறிப்பிட்டிருக்கின்றார். கொக்குருவம் கொண்ட பகாசுரன் என்பவனின் வாயைப் பிளந்து கொன்றதைப் 'புள்வாய் போழ்ந்து' என்கின்றார்.

மருதிடைத் தவழ்ந்தது:-

கண்ணன் குழந்தைப் பருவத்தில் பல குறும்புகளைச் செய்ததைக் கண்டு கோபங்கொண்ட யசோதை, ஒருநாள் கண்ணனைக் கயிற்றினால் கட்டி ஓருரலில் பிணித்து விடுகிறாள். கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவில் சென்றபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம் மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்து விடுகின்றன. முன் பொரு காலத்தில் குபேரனின் மகன்களான நளகூபரன், மணிக்கிரீவன் ஆகிய இருவரும் பல தெய்வ மகளிருடனே ஆடை-

15. சம்பந்தர் தேவாரம் 2.30 3.
16. மேலது 1 42.9.

யில்லாமல் நீர்விளையாட்டுச் (சலக்கிரீடை) செய்து கொண்டிருக்கையில், நாரதர் அவ்விடத்திற்கு வருகிறார். மங்கையரனைவரும் நாணங் கொண்டு ஆடையை எடுத்து உடுத்தி அவ்விடத்தைவிட்டு நீங்குகின்றனர். ஆனால் குபேரன் மகன்கள் இருவரும் மதுமயக்கத்தினால் ஆடையில்லாமலேயே இருக்கின்றனர். இதைக்கண்ட நாரதர் கோபங்கொண்டு 'மரங்கள் போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபித்து விடுகிறார். உடனே அவர்கள் தங்கள் நிலைமையை அறிந்து மிகவும் மனம் வருந்தி நாரதரிடம் வேண்டிக் கொண்டதற்கிரங்கி 'நெடுங்காலம் சென்ற பின்பு திருமால் உங்களை அடையும் நேரத்தில் இவ்வடிவமொழிந்து முன்னைய வடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடையும் கூறுகிறார் இவ்வாறு நாரதர் சாபத்தால் மரங்களாக இருந்த நளகூபரனும் மணிக்கிரீவனும் கண்ணன் விளையாட்டால் சாபந்தீர்ந்து பழைய வடிவம் பெற்று விடுகின்றனர். இந் நிகழ்ச்சியைச் சம்பந்தர் 'மருதிடை நடவிய மணிவணர்' என்று குறிப்பிடுகின்றார். மருத மரங்களிடையே கட்டிய உரலோடு புகுந்த கண்ணனும் நான்முகனும் சிவபெருமானின் திருவடியையும் திருமுடியையும் தேடிக் காணப் புறப்பட்டனர் என்கின்றார்.

மலையைக் குடையாய்ப் பிடித்ததும் மழையைத் தடுத்ததும் :- ஒரு சமயம் கண்ணன்மீது கோபங்கொண்ட இந்திரன் பல மேகங்களை ஏவி மழை பொழியச் செய்கிறான். கண்ணன் விரும்பி மேய்க்கின்ற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் இடையர், இடைச்சியர்களுக்கும் தீங்கு தரும்படி அம்மழையானது ஏழு நாட்கள் கற்களுடன் இடைவிடாது பெய்கிறது. அப்பொழுது கண்ணன் கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லா உயிர்களையும் காத்து அருள்கின்றான்.

இவ்வாறு மலையைக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து நிறுத்திய இரு செயல்களையும்

'விலங்கலொன் றேந்தியன் மழைதடுத்தோன்'[18]

'கற்குன்றமொன் றேந்தி மழைதடுத்த
கடல்வண்ணன்'[19]

---

17. சம்பந்தர் தேவாரம் 1.121.9 18. மேலது 1.79 9
19. மேலது 2.39.9

'வரைகுடை யாமழை தாங்கினான்' [20]

என்ற பாடல்களில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

மலையைக் குடையாகப் பிடித்துக் காத்தமையை,

'கறிவளர்குன்ற மெடுத்தவன்' [21]

'திசைமேலளந்த கருவரையேந்திய மால்' [22]

'அருவரை யேந்திய மால்' [23]

'அருவரை பொறுத்த லாற்றலி னான்' [24]

எனும் பாடல்களில் கூறியிருக்கின்றார். திக்குகள் அனைத்தையும் அளந்த மால் உயிர்களைக் காத்தற் பொருட்டுக் கோவர்த்தனகிரி எனும் மலைக்குன்றை எடுத்துக் குடையாகப் பிடித்திருக்கிறார்; இந்திரனால் ஏவப்பட்ட மழையைத் தடுத்ததைக் 'கிளர்மழை தாங்கினான்' [25] என்கின்றார்.

யானையின் கொம்பை ஒடித்தது :- கண்ணனும் பலராமனும் கம்சன் மாளிகைக்குச் செல்கின்றனர். அவன் மாளிகை வாயிலில் கண்ணனைக் கொல்வதற்காகக் குவலயாபீடமென்னும் மதயானையைக் கம்சன் ஏவி விட்டதை அறிந்த கண்ணன் தம்மை எதிர்த்து வந்த அந்த யானையின் தந்தங்கள் இரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பது போல எளிதில் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அவற்றால் அடித்து அவ் யானையின் உயிரைக் கொன்று விடுகிறான். இவ்வாறு கம்சனால் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும் பட்டத்து யானையின் கொம்பை ஒடித்ததை 'வேழவெண்கொம் பொசித்தமால்' [26] என்கின்றார்.

கன்றால் விளவெறிந்தது :- கம்சனால் ஏவப்பட்ட அசுரர்களில் கபித்தாசுரன் விளா மரமாகவும் வத்சாசுரன் கன்றின் வடிவமாகவும் இருக்கின்றனர். இதனை அறிந்த கண்ணன் தன்னை முட்டிக் கொல்லவந்த கன்றுருவம் கொண்ட அரக்கனின் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி

20. சம்பந்தர் தேவாரம் 3.8..9
21. மேலது 1.39.6.
22. மேலது 1.39.9
23. மேலது 3.105.9
24. 3.118 9.
25. மேலது 1.76.9.
2.. மேலது 1.52.9.

விளா மரத்தினுருவம் கொண்ட அரக்கன் மீது எறிய இருவரும் சிதைந்து தமது அசுர வடிவத்துடனே விழுந்து இறந்து விடுகின்றனர். இவ்வாறு விளா மரமாய் நின்ற கபித்தன் அழியக் கொன்றதை 'விளவார்கனி பட நூறிய கடல்வண்ணன்'[27] என்று கூறிய சம்பந்தர் ஒரு கையில் கன்றைப் பிடித்து விளாமரத்தின் மீது எறிந்து இரு அரக்கர்களையும் ஒருசேர அழித்தமையை

''கன்றொருக்கையி லேந்திநல்விள வின் கனி பட நூறியுஞ்
சென்றொருக்கிய மாமறைப்பொரு டேர்ந்தசெம்மல ரோனுமாய்
அன்றரக்கனைச் செற்றவன்னடி யும்முடியவை காண்கிலார்
பின்றருக்கிய தண்பொழிற்பிர மாபுரத்தரன் பெற்றியே''[28]

எனும் பாடலிலும் குறிப்பிடுகின்றார்.

இராமர் அவதாரம்

கயிலை மலையைப் பெயர்த்த இராவணன் சிவபெருமானருளால் வரங்கள் பல பெற்று இலங்கையை ஆட்சிபுரிந்து செருக்குற்றுத் தேவர்களுக்குத் துன்பம் விளைவிக்கிறான். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இராமன் என்ற பெயருடன் அயோத்தி மன்னன் தசரதன் திருமகனாய்த் திருமால் அவதரித்துக் காட்டில் வசித்து வந்தபொழுது இராவணன் இராமனின் மனைவி சீதையைக் கவர்ந்து சென்று விடுகிறான். அதனால் சினங்கொண்ட இராமன், சுக்கிரீவன் முதலான வானர சேனைகளுடன் சேதுபந்தனம் செய்து இலங்கையை அடைந்து போரிட்டு இராவணனைக் கொன்று விடுகிறான். சிறந்த சிவபக்தனாக விளங்கிய இராவணனைப் போரில் கொன்ற சிவபாவத்தைப் போக்குவதற்காக இராமேசுவரத்தில் சிவலிங்கம் ஒன்று செய்து சுக்கிரீவன், அனுமான் முதலானோருடன் இராமர் வழிபடுகின்றார். இவ்வரலாற்றை,

''நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அது மான்றொழக்

27. சம்பந்தர் தேவாரம் 1.10.9
28. மேலது 3 37.8.

காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே'[29]

எனும் பாடலில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

திருக்கோகரணத்தில் வாழ்கின்ற இளமகளிர் தம் கூந்தலில் இருந்து வெளிவரும் நறுமண வாசனையை நுகர்ந்த-வாறே இளங்குறவர் தினைப்புனங்களைக் காவல் காத்து வருகின்றனர். வில்லாற்றலில் சிறந்த இராவணனை அழித்த இராமனும் (திருமாலும்) நான்முகனும் தம்முள் மாறுபட்டு இல்லை என்றும் உள்ளது என்றும் அறியமுடியாதவாறு தேட நெருப்பு வடிவமாகி ஓங்கிய கடவுள் சிவபெருமான். இத்தகைய வளம் பொருந்திய திருக்கோகரணத்தில் உறைகின்றான். இக் கருத்தைக் கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

''வில்லிமையி னால்விற லரக்கனுயிர்
செற்றவனும் வேதமுதலோன்
இல்லையுள தென்றிகலி நேடவெரி
யாகியுயர் கின்றபரனூர்
எல்லையில் வரைத்தகடல் வட்டமு
மிறைஞ்சிநிறை வாசமுருவன்
கொல்லையி ளங்குறவர் தம்மயிர்
புலர்த்திவளர் கோகரணமே'[30]

கோபங்கொண்டு வந்த கங்கையைச் சிறிதும் முழுகாமல் மணம் கமழ்கின்ற தம் சடைமேல் தடுத்தவன் சிவபெருமா-னாவர். அதேபோன்று தம்மீது சீறிப் பாய்ந்து வந்த இலங்கை நகரின் தலைவன் இராவணனைப் போரில் புடைத்து அழித்த-வன் இராமபிரானாவர். அத்தகைய பெருமை பெற்ற இராமன் வணங்குகின்ற பெருமான் புள்ளிருக்கு வேளூரில்[31] இனிதாக உறைகின்றான். இதனைச் சம்பந்தர்,

''கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவரெம் பெருமகனார் தாமினிதா யுறையுமிடம்

29. சம்பந்தர் தேவாரம் 3.33.1.
30. மேலது 3.79.9.
31. இராமனுக்காக அவ்விராவணனை அடித்து அவனது வலிமையை அழித்துச் சடாயு பூசித்துப் பேறு பெற்ற புள்ளிருக்கு வேளூர் என்னும் உரை கருதத்தக்கது.

விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே"[32]

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

## அப்பர் தேவாரம்

நரசிம்ம அவதாரம்

பல வரங்களைப் பெற்ற இரணியன் செருக்குற்றுத் தேவர்களுக்குக் கொடுமைகள் பலவற்றைச் செய்து வருகிறான். தன்னைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது என்று கட்டளை பிறப்பித்து விடுகிறான். ஆனால் இரணியனின் மகன் பிரகலாதன் தன் தந்தைக்கு மாறாகத் திருமாலை வழிபட்டு வருகிறான். இதையறிந்த இரணியன் தன் மகன் என்றும் பாராமல் பிரகலாதனைப் பலவாறாகத் துன்பப்படுத்துகிறான். அனைத்தையும் மாலினருளால் பிரகலாதன் வென்று விடுகிறான். இறுதியில் இரணியன் தன் மகனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணன் எங்குளன்? காட்டு' என்கிறான். அதற்குப் பிரகலாதன் ''தூணிலும் உளன், துரும்பிலும் உளன்' என்கிறான். உடனே இரணியன் 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரிலிருந்து தூணைப் புடைத்து விடுகிறான். அத்தூணிலிருந்து திருமால், மனித வடிவமும் சிங்க வடிவமும் கலந்த நரசிங்கமாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தம் மடியின் மீது வைத்துக் கொண்டு தமது நகங்களால் அவன் மார்பைப் பிளந்து அழித்து விடுகிறார். இந் நிகழ்ச்சியைத்,

''துங்க நகத்தால் அன்றித் தொலையா வென்றித்
தொகுதிறத்தால் அவ்விரணியனை ஆகம் கீண்ட
அங்கணகத் திருமாலும் அயனும் தேடும்
ஆரழலை அநங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தாள்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேல் மன்னி நின்ற
செங்கனகத் திரள்தோள் எம்செல்வன் தன்னைச்
செங்காட்டாங் குடியதனில் கண்டேன் நானே''[33]

32. சம்பந்தர் தேவாரம் 2.43.10.
33. அப்பர் தேவாரம் 6.84.2

என்று குறித்துப் போற்றுகிறார் அப்பர். "நகத்தாலன்றிப் பிற கருவிகளால் அழியாத வரம் பெற்றவனாகிய இரணியனின் மார்பைப் பிளப்பதற்காக அழகிய கற்றூணில் தோன்றிச் சிரித்த நரசிங்கமாகிய திருமாலும் நான்முகனும் தேடிக் காணமுடியாத பெருமானைச் செங்காட்டங்குடியில் நான் கண்டேன்" என்பது இப் பாடலின் பொருளாகும்

வாமனாவதாரம்

இவ் வாமன அவதாரத்தை, "மண்ணும் மேலை விண்ணும் அடங்கிய எழுலகும் உண்டு குறள் வடிவாய் ஓர் ஆலிலைமேல் பாலனாய்ப் பள்ளிகொண்ட திருமால்"[34] என்று மாலின் வடிவத்தைக் கூறிய அப்பர், பிறிதோரிடத்தில்,

"மாணிக்கு உயிர்பெறக் கூற்றை உதைத்தன மாவலிபால்
காணிக்கு இரந்தவன் காண்டற்கு அரியன கண்ட தொண்டர்
பேணிக் கிடந்து பரவப் படுவன பேர்த்தும் அஃதே
மாணிக்க மாவன மாற்பேறு உடையான் மலரடியே"[35]

என்று மாவலி மன்னனிடம் மண் இரந்ததனையும் கூறியிருக்கின்றார்.

கிருட்டிண அவதாரம்

குருந்தொசித்தது :- கண்ணனைக் கொல்வதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட அரக்கர்களில் ஒருவன் குருந்த மரத்தில் இருக்கிறான். மலர் கொய்ய அந்த வந்த கண்ணன் அரக்கன் இருப்பதை அறிந்து அம்மரத்தைப் பிடித்துத் தன் வலிமை கொண்டு முறித்து அழித்ததைத்,

"தொல்லைவான் சூழ்வினைகள் சூழப் போந்து
தூற்றியே னாற்றியேன் சுடராய் நின்று
வல்லையே இடர்தீர்த்து இங்குஅடிமை கொண்ட
வானவர்க்கும் தானவர்க்கும் பெருமான் தன்னைக்

34. அப்பர் தேவாரம் 4 14-3
35. மேலது 4-108-1.

கொல்லைவாய்க் குருந்தொசித்துக் குழலும் ஊதும்
கோவலனும் நான்முகனும் கூடி எங்கும்
எல்லைகாண் பரியானை எம்மான் தன்னை
ஏழையேன் நான்பண்டு இகழ்ந்த வாறே''[36]

என்று பரவிப் போற்றுகிறார். இப் பாடலில் திருமால் ஆயர் குலத்தில் பிறந்தமையையும் குழல் ஊதியமையையும் கூறியிருக்கின்றார்.

பேய் முலையுண்டது :- கம்சனால் ஏவப்பட்ட பூதனை என்னும்அரக்கி ஒரு நல்ல பெண்ணுருவத்தில் திருவாய்ப்பாடிக்கு இரவில் வருகிறாள். அங்குத் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனாகிய குழந்தையை எடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயல்கிறாள். ஆனால் கண்ணன அவ்வரக்கியை இறுகப் பிடித்துப் பால் உண்ணுகிற பாவனையில் அவள் உயிரையும் உறிஞ்சி இறக்கும்படிச் செய்கிறான். இதனைத்,

''தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பர்
ஆய உள்ளத்து அமுதருந்கப் பெறார்
பேயர் பேய்முலை உண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே''[37]

என்று நாவரசர் மொழிகிறார். "பேய்ப் பெண்ணினது பேய் முலைப் பாலை உண்டு அவள் உயிர் போகச் செய்த கண்ணனுடைய மாயத்துப் பொருந்திய மனத்தை உடையவர்கள் தாயினும் நல்லவனாகிய சங்கரனுக்கு அன்பர்கள் ஆகிய உள்ளத்து அமுது அருந்தப்பெறா இயல்பினராவர்'' என்பது இப்பாடலுக்குக் கூறப்பெறும் பொருளாகும்.

மலையைக் குடையாகப் பிடித்தது :- கண்ணன் மீது கோபங் கொண்ட இந்திரன் பல மேகங்களை ஏவிப் பெருமழை பொழியச் செய்தபொழுது, கண்ணன் கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்துப் பல உயிர்களை அம் மழையினின்றும் காத்தருளியமையை,

36. அப்பர் தேவாரம் 6.3 10.
37. மேலது 5.100.9.

''அருவரை தாங்கினானும் அருமறை ஆதியானும்
இருவரும் அறியமாட்டா(ர்) ஈசனார் இலங்கை வேந்தன்
கருவரை எடுத்த ஞான்று கண்வழி குருதிசோரத்
திருவிரல் சிறிதுவைத்தார் திருப்புகலூரனாரே''[38]

எனும் பாடலில் கூறுகிறார். பெரும்பாலும் அப்பர் தேவாரத்தில் இராவணன் கயிலை மலையை எடுத்த நிகழ்ச்சியை ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப்பாடலிலும் 'முடிக்கும் பாடலாகக் கூறுவதைக் காண முடிகின்றது. அதன்படி இப்பதிகத்தின் இறுதிப் பாடலாக அமைந்த இதில் கோவர்த்தன மலையைக் கண்ணன் குடையாகப் பிடித்தது. திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடியது, இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தது ஆகிய மூன்று வரலாற்றுச் செய்திகளையும் அப்பர் கூறியிருப்பது சிறப்புடைய ஒன்றாகும். 'பிறரால் எடுத்துக் குடையாகக் கவித்துப் பிடித்தற்கு அரிய கோவர்த்தனகிரி எனும் மலையை ஆக்களைக் காத்தற்பொருட்டுக் குடையாகப் பிடித்த கண்ணனாகிய திருமாலும் சற்றும் கேட்டுப் உணர்தற்கரிய வேதத்தை அறிந்த படைத்தல் தொழிலை மேற்கொண்ட நான்முகனும் ஆகிய இருவரும் சிவபெருமானின் அடியையும் முடியையும் தேடியும் காண முடியவில்லை. இலங்கை வேந்தன் இராவணன் இமயமலையைப் பெயர்த்தெடுத்த பொழுது அவனுடைய இருபது கண்களின் வழியிலும் செந்நீர் ஒழுகச் சிறிது திருக்காற் பெருவிரலை ஊன்றினார் திருப்புகலூரனார்'' என்பது இப்பாடலின் பொருள்.

தாண்டக வேந்தர் பிறிதோரிடத்தில் 'மாக்குன்று எடுத்தோன்'[39] என்று மலையைக் கண்ணன் எடுத்ததைக் குறிப்பிடுகிறார்.

குதிரை அரக்கன் வாய் பிளந்தது :- கம்சனால் ஏவப்பட்ட கேசி என்னும் அரக்கன் குதிரை வடிவில் ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படிக் கனைத்துத் துரத்திக் கொண்டு கண்ணனைக் கொல்வதற்காக அவன் மேல் பாய்ந்து விடுகிறான், அவ்வரக்கனின் வாயில் தன் கையைக் கொடுத்துத் தாக்கிப் பற்களை உதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும்

38. அப்பர் தேவாரம் 4.54.10.
39. மேலது 6.35.10.

இரு பிளவாக வகிர்ந்து கொன்றதை, 'மாவாய்ப் பிளந்து கந்தமால்'[40] என்கிறார் நாவரசர்.

மால் மண்ணை உண்டது:- யசோதை ஒருமுறை கண்ணனை அடித்து விடுகிறாள். அப்பொழுது கண்ணன் வாய் திறந்து அழுகிறான் அழும் பொழுது அவன் வாயைப் பார்த்த யசோதைக்கு அண்ட உலகங்களும் தெரிகிறது. யசோதை இதைக் கண்டு வியந்து விடுகிறாள். மண்ணாகிய உலகத்தைக் கண்ணன் உண்டதை அப்பர் பெருமான். 'மண்ணை உண்ட மால்'[41] என்று கூறிப் போற்றுகிறார்.

இராமர் அவதாரம்

இராமராக அவதரித்த திருமால், சுக்கிரீவன் முதலிய வானர சேனைகளுடன் 'சேதுபந்தனம்' செய்து இலங்கையை அடைந்து போரிட்டு இராவணனைக் கொன்ற நிகழ்ச்சியைச்.

"செங்கண்மால் சிலைபிடித்துச் சேனை யோடும்
சேதுபந் தனம் செய்து சென்று புக்கும்
பொங்குபோர் பலசெய்து புகலால் வென்ற
போரரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ
அங்கொருதன் திருவிரலால் இறையே ஊன்றி
அடர்த்தவற்கே அருள்புரிந்த அடிகள் இந்நாள்
வங்கமலி கடல்புடைசூழ் மாட வீதி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே"[42]

எனும் பாடலில் பரவிப் போற்றுகின்றார்.

யாவராலும் வெல்ல முடியாத இராவணனைத் திருமால், சுக்கிரீவன், வீடணன் முதலானவர்களின் துணைகொண்டு இலங்கையை அடைந்து போர் செய்து அவனைக் கொன்று விடுகிறார் ஆனால் இத்தகைய பேராற்றல் உடைய இராவணனைச் சிவபெருமான் தம் காற்பெருவிரலால் சிறிதே ஊன்றி அடர்த்துப் பின்பு அவ்விராவணனுக்கு அருளும் புரிகின்றார்.

40. அப்பர் தேவாரம் 6.82.6.
41. மேலது 5.15.5.
42. மேலது 6.58.10

திருவலம்புரப் பெருமான் திருவீதியுலா வந்தபொழுது அவரைக் கண்டு காதல் கொண்டு பின்தொடர்ந்து சென்று அவரை அணுக இயலாது வருந்தும் தலைவி கூற்றாக இப்பாடல் அமைந்திருக்கிறது. ஆண்மை மிகுதியையும் அருள் மிகுதியையும் உடைய தலைவனை நினைந்து நினைந்து ஒருகாலைக்கொருகால் காதல் மீதூரப் பெறுவது மகளிர்க்கு இயல்பு என்ற கருத்தை அப்பர் அருளியிருக்கின்றார். பொதுவாக ஆண்மையும் அருளும் உடைய ஆடவரிடத்தில் மகளிர்க்குக் காதல் பிறக்கும் என்பதைக்,

> ''கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
> புல்லாளே ஆயர் மகள்''[43]

எனும் பாடலிலும்,

> ''பொருளே காதலர் காதல்
> அருளே காதல ரென்றி நீயே''[44]

என்ற பாடலிலும் சங்கச் சான்றோர் குறித்திருப்பது இவண் நினைவுகூரத்தக்கன.

சம்பந்தர் தேவாரத்தில் பெரும்பாலும் பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் திருமால் அவதாரக் குறிப்புகள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. ஒருசில பதிகங்களில் வேறு பாக்களில் இடம்பெற்றிருக்கின்றன சம்பந்தர் பாடியருளிய பதிகங்களில் ஒன்பதாவது பாடல்தோறும் திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடிய வரலாற்று நிகழ்ச்சி இடம்பெற்றிருப்பது மரபு. இந்த நிகழ்ச்சியைக் கூறவந்த சம்பந்தர் திருமால் பற்றிக் கூறுகின்றபோது அவர் எடுத்த அவதார நிகழ்ச்சிகளில் சிலவற்றைக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. ஒவ்வொரு அவதார நிகழ்ச்சி எடுத்து முடித்த பின்னர்த் திருமால் அவ் அவதார வடிவத்துடனேயே சிவபெருமானை வணங்குவதையும் சம்பந்தர் குறிப்பிட்டிருக்கின்றார். அப்பர் பாடியருளிய தேவாரத்தில் பெரும்பாலும் அடிமுடி தேடிய வரலாற்றில் திருமால் பற்றிக் கூறுகின்ற பகுதிகளில் அவரெடுத்த அவதார நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன சிலவிடங்களில் இராவணன் பற்றிக் கூறுகின்ற பாடல்களிலும் திருமால் அவதாரங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

43 கலித்தொகை 103
44. அகநானூறு 53.

# 6. திருமுறைகளில் ஓவியக் காட்சிகள்

ஓவியம், சிற்பம், இசை, நாடகம் நாட்டியம், கட்டிடம் போன்ற கலைகள் நுண்கலைகளாகும் அழகியல் அனுபவத்தின் புதுவடிவமாகத் திகழும் இத்தகைய கலைகள் மனிதப் பண்பாட்டின் அடையாள முத்திரைகளாகத் திகழ்கின்றன; மனித நாகரிக வளர்ச்சிக்கு மிகுந்த பயனளிக்கின்றன. நுண் கலைகளில் ஓவியக்கலையே அடிப்படைக் கலையாகத் திகழ் கிறது எனலாம். இசைக்கலை தவிர ஏனைய நுண்கலைகள் பார்வைக் கலைகளாகத் திகழ்கின்றன இசைக்கலை காதுக்கு இனிமை தரும் ஒன்றாகத் திகழ்கிறது. பல்வேறு கலைகளைப் பற்றிய குறிப்புகளை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தாங்கள் படைத்த இலக்கியங்களில் கூறிச் சென்றிருப்பதைக் காணமுடிகின்றது. அதே போன்று திருமுறைகளை அருளிய அருளாளர்களும் தங்கள் இலக்கியங்களில் பல அரிய கலைக்கருவூலங்களைக் கூறியிருக்கின்றமையைக் காண்கிறோம். அவற்றுள் ஓவியக்கலைக் காட்சிகள்பற்றி அவர்கள் கூறியமையைக் காண்பது இக் கட்டுரையின் நோக்கம்.

ஓவியனின் செயல்

ஒரு ஓவியத்தை வரைய முற்படும் ஓவியக் கலைஞன் தான் எந்த ஓவியத்தை வரைய நினைக்கின்றானோ அதனை முதலில் தன் உள்ளத்தில் வரைந்து பார்த்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர்த் தூரிகையைக் கையில் எடுத்து வரைய வேண்டும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித் தலங்கள் தோறும் சென்று உழவாரப்பணி புரிந்து இறைபுகழை ஏத்தி வந்த அப்பரடிகள் திருவாரூருக்கு வருகின்றார். சோலைக் குயிலினங்கள் கூவ அதற்குத் தக்கபடி மயில் இனங்கள் தம் அழகிய தோகையை விரித்தாடி அப்பரை வரவேற்கின்றன. திருவாரூர்ப் பெருமானாகிய தியாகேசரோ தம் திருமேனி முழுவதும் திருவெண்ணீறு பூசப்பெற்றுத் திகழ்கின்றான். இத்தகைய இயற்கையோடு இயைந்த காட்சியைக் கண்ட அப்பர் ஓரிடத்தில் ஓவியனின் செயலை நினைந்து,

"உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி"[1]

என்று இறைவனைப் போற்றிப் பாடுமிடத்தில் கூறுகின்றார்.

ஓவிய வளையல்

சிவபெருமானின் தன்மைகளைக் கூறுவது அவ்வளவு எளிதான செயல் அன்று; அவன் மெய்யடியார்களுக்கு மெய்ப்பொருளாய் விளங்குபவன்; பரஞ்சோதி வடிவினன்; இவ்வுலகில் பிச்சை எடுத்து உண்டு சுடுகாட்டையே கோயிலாகக் கொண்டு உறைபவன்; உயிர்க்கு உயிராய்க் கலந்திருந்தும் பொய்நெறியாளர்க்குத் தம் உண்மையை உணரக் காட்டாதவன்; இத்தன்மையன்; இன்ன வடிவினன் என்று சொல்லத் தக்க அளவில் இல்லாதவன்; எழுத்துக்கெல்லாம் முதலெழுத்தாய் நிற்கும் அகரம் போல எல்லாப் பொருள்களுக்கும் முதற்பொருளாகி நிற்பவன். இத்தகைய சிறப்புப் பெற்ற பெருமானின் உடம்பில் ஒரு பாதியைத் தமதாகக் கொண்ட உமையவளின் இயல்புகளும் அளவிடற்கரியன. மான் போன்ற விழியினையும் மயிற் சாயலினையும் அன்னநடையினையும் கொண்ட இம் மெல்லியலாளின் அழகிய திருக்கைகளில் ஓவியம் தீட்டிய வரிகளை உடைய திரண்ட வளையல்களை அணிவித்து மகிழ்கிறார் கருவூர்த்தேவர் (ஒன்பதாம் திருமுறையில்).

ஓவியக் கூடம்

ஓவியங்கள் கொண்ட கலைக்கூடங்கள் பல அந்நாளில் இருந்திருக்கின்றன. இக்கூடங்களை 'எழுதெழில் அம்பலம்' என்றும் 'சித்திர மண்டபம்' என்றும் 'சித்திரக் கூடம்' என்றும் இலக்கியங்களில் கூறுவதைக் காணமுடிகின்றது. கருவூர்த் தேவர் தம் காலத்தில் ஓவியங்கள் இருந்த கலைக்கூடத்தை 'எழுநிலை மாடம்'[2] என்று திருவிசைப்பாவில் குறிப்பிடுகின்றார்.

சுவரோவியம்

ஓவியம் தீட்டும் கலைஞர்கள் துணி, பலகை, கண்ணாடி போன்ற பல பொருள்களில் ஓவியம் தீட்டுவதைக் காணமுடிகிறது. மேலும் அக்கலைஞர்கள் கோயில்கள், அரண்மனைகள்,

1. அப்பர் தேவாரம் 6.25.1.
2. கருவூர்த்தேவர், திருவிசைப்பா 9.9 2

பெரிய மாளிகைகள் போன்றவற்றின் சுவர்களில் பல வண்ண ஓவியங்களைத் தீட்டி அவற்றைக் கலைக் கூடங்களாக மாற்றிய பெருமைக்குரியவர்களாகத் திகழ்கின்றனர். அதனால்தான் 'சுவரை வைத்தன்றோ சித்திரம் வரைய வேண்டும்' என்ற பழமொழியும் எழுந்தது போலும்! பெரிய மாளிகைகளின் சுவர்களில் இருந்த ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பலவாறாகக் கூறப்பட்டிருக்கின்றன. சான்றுக்கு மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியில்,

''கயம் கண்டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து''[3]

எனவரும் பகுதியை இவண் சுட்டலாம்.

உலகக் காட்சியை மறந்து கடவுட் காட்சி அடைந்த ஞானநிலைக்குச் சுவரோவியத்தை உவமையாகக் காட்டுகின்றார் பட்டினத்துப் பிள்ளையார்

''ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராகித் தோன்றும் துணிவுபோன் றனவே''[4]

எனும் இப்பாடல் வரிகள் திருக்கழுமல மும்மணிக் கோவையில் வருகின்றன.

''சுவரில் சிற்பநூல் வல்ல ஓவியன் தன் திறமையை எல்லாம் வெளிப்படுத்திப் பல்வேறு வண்ணங்களில் ஓவியங்களைத் தீட்டியிருக்கின்றான். குருடன் ஒருவனுக்குத் தன் எதிரில் இருப்பது கறுப்பா, சிவப்பா என்று எதுவும் தெரியாது. அதுபோலவே ஓவியன் தன் திறமை முழுவதையும் வெளிப்படுத்திச் சுவரில் தீட்டி இருந்தாலும் அக்குருடனால் அச்சுவரைத் தடவிப் பார்த்தாலும் அது ஓவியமாகத் தெரியாது; மாறாக அது சுவராகவே தெரியும்'' எனக் கூறும் இப்பகுதியில் சுவரோவியம் பற்றிய குறிப்பையும் ஓவியனைப் புலவன் என அழைக்கும் பாங்கையும் காணலாம்.

3. மதுரைக்காஞ்சி 516-517
4. பதினோராந் திருமுறை 11-10:31-34.

பெரியபுராணக் காட்சி ஓவியம்

சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் தோன்றித் தத்தமது சமயங்களைப் பரப்பினர். இவ் அருளாளர்கள் தாங்கள் பாடியருளிய பாக்களில் இறைவனின் பெருமைக்குச் சிறப்பிடம் கொடுத்தனர். தாங்கள் சென்ற தலங்களில் பண்ணிசையுடன் இறைபுகழைப் பத்திப் பரவசத்துடன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடினர். இயற்கையோடு இயைந்த இறைவனை இசை வடிவமாகவே கண்டு போற்றினர். 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'[5] என்று அப்பர் பாடுவார். இதனால்தான் நுண்கலைகளில் இசைக்கலை தவிர்த்த ஏனைய கலைகளுக்கு அருளாளர்கள் சிறப்பிடம் கொடுக்காமல் இருந்திருக்கக்கூடும். ஒருசில இடங்களில் ஓவியத்தைப் பற்றிய குறிப்புகள் இருந்தாலும் அவை எட்டளவிலேயே இருப்பதைத்தான் நம்மால் காணமுடிகின்றது.

சேக்கிழார் நாயன்மார்களின் வரலாற்றைக் காவியமாகப் பாடிய பாக்கள் பன்னிரண்டாம் திருமுறையாக ஆன்றோரால் வகுக்கப் பெற்றிருக்கின்றன. சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற இப்புராணத்தில் சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட வரலாறு முதல் அவர் திருக்கயிலாயம் சென்றது வரையுள்ள நிகழ்ச்சிகள் பாடப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

எட்டளவில் இருந்த இவ்வரலாற்று நிகழ்ச்சிகளைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறையை ஒட்டியுள்ள உள் திருச்சுற்றில் பல வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். இவ்வோவியங்கள் சோழர் காலத்தில் வரையப் பெற்றனவாக அறிஞர் பெருமக்களால் கூறப் படுகின்றன.

கோயிலில் மேற்குச் சுவரிலுள்ள காட்சிகளில் சிவபெருமான் முதியவர் கோலத்தில் அந்தணர் பலர் கூடியுள்ள திருமண மண்டபத்தில் ஒரு கையில் தாழங்குடை கொண்டு மற்றொரு கையில் பனை ஓலையை அவையோருக்குக் காட்டியவண்ணம் நின்று கொண்டிருக்கின்றனர். வலப்புறத்தில் திருவருட்டுறை கோயில் இருக்கின்றது. பணமகன்

5. அப்பர் தேவாரம் 4 1.6.

கோலத்திலிருக்கின்ற சுந்தரர் தமது மணத்தைத் தடுக்க வந்த முதியவரை வியப்போடு பார்த்துக் கொண்டு இருக்கிறார். அங்குக் கூடியிருக்கின்ற மக்களின் முகங்களில் அச்சம், வியப்பு, ஐயம் ஆகிய மாறுபட்ட உணர்ச்சிகளை ஓவியர் மிக அழகுறத் தீட்டியிருக்கின்றார்.

மற்றொரு புறத்தில் சுந்தரர் கயிலைக்குச் செல்லும் காட்சி தீட்டப்பட்டிருக்கிறது. சுந்தரர் கைகளில் தாளம் கொண்டு வெள்ளை யானை மீது அமர்ந்து கயிலைக்குச் செல்கின்றார். சேரமான் பெருமாள் நாயனார் நன்கு அலங் கரிக்கப்பட்ட குதிரைமீது அமர்ந்து அவரும் கயிலைக்குச் செல்கின்றார். யானை மீதுள்ள அணி, அலங்காரங்களும் சுந்தரர் தலை மூடியும் தாடியும் சிறப்பாக ஓவியரால் வரையப்பட்டிருக்கின்றன. மேலே வானவீதியில் தேவர்கள் ஆடியும் பாடியும் இவர்களை வரவேற்கின்றனர். கீழே மீன்கள் நிரம்பிய அலைகடல் காட்சியளிக்கிறது.

சிற்பம் செதுக்குகின்ற சிற்பிக்கு ஓவியமும் தெரிந்திருத்தல் வேண்டும். தாராசுரம் ஐராவதேசுவரர் கோயிலில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் சிற்பங்கள் காணப்பெறுகின்றன. பெரியபுராணத்தில் கூறப்பெற்றதன்படி இந் நாயன்மார் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பது இவண் குறிக்கத்தக்கது. இச் சிற்பிகள் முதலில் அருளாளர்களின் திருஉருவப்படத்தை ஓவியமாக வரைந்திருத்தல் வேண்டும்.

ஓவியம் வரையும் முறை பற்றியும் ஓவியம் தீட்டிய வனை அணிந்தமை பற்றியும் ஓவியக்கூடம் பற்றியும் அக்காலச் சமுதாய நிலைகளைப் பற்றியும் அருளாளர்கள் பாடிய பாக்களில் தெரிகின்றன. மேலும் பலவகையான மெய்ப்பாட்டு உணர்ச்சிகளை ஓவியத்தில் தீட்டி அவ்வோவியத்தைப் பார்க்கின்றவர்களும் அதே வகையான உணர்ச்சியை அடைய முடியும் என்பதை ஓவியர்கள் திறம்படக் காட்டியிருப்பதையும் காணமுடிகின்றது.

# 7. திருமுறைகளில் அந்தாதி இலக்கியங்கள்

தெய்வமணங் கமழும் திருமுறைகள் 'சிவத்தின் மேல் தெய்வம் வேறில்லை' என்ற உண்மையை விளக்கி நிற்கும். சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகத் திகழும் 'அந்தாதி' எனும் இலக்கியம் தனியொரு சிற்றிலக்கிய வகையாக உருப்பெறு தற்கு அடிகோலியவர் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்காலம்மையாராவர். திருமுறைகளுள் இடம்பெற்றுள்ள அந்தாதி இலக்கியங்களைப்பற்றி இக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

அந்தாதி-விளக்கம்

அந்தம், ஆதி என்ற இரு சொற்களின் கூட்டு உருவம் 'அந்தாதி' யாகும். முடிவில் முதல், அந்தத்தில் ஆதி என்ற முறையில் நினைவு கொள்வதற்கும் தொடர்ந்து மாலையாக அமைவதற்கும் ஏற்ற கருவியாக அமைக்கப்பட்ட பாவின் வகையாகும்.

''அவன் அவள் அதுஎனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்''[1]

எனவரும் சிவஞானபோத நூற்பாவின் இறுதி அடியில் 'அந்தம் ஆதி' என்ற சொற்கள் பயின்று வந்திருக்கின்றன. ''அதற்கு (உலகத் தொகுதி) ஒடுக்கமாய் முடிவைச் செய்யும் அந்தமாகிய கடவுளே ஆதியுமாகின்றான் எனத் தருக்க நூலறிந்தோர் கூறுவர்''[2] என்று கா. சுப்பிரமணியபிள்ளை விளக்கம் கூறுவது இவண் நினைக்கத்தகும்.

அந்தாதி என்பது, நூலின் ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகிய இவற்றுள் யாதானும் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடி, இறுதிப் பாடலின் முடிவும் முதற் பாடலின் தொடக்கமும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து, மாலை

---

1. சிவஞானபோதம் நூ 1.
2. மேலது விளக்கவுரை

போலத் தொடுத்துப் பாடப்பெறும் யாப்பு வகையிலமைந்த ஒருவகைச் சிற்றிலக்கியமாகும். பாக்களை மறந்துவிடாமல் நினைவில் வைத்துக் கொள்வதற்கு இவ் அந்தாதி முறை மிகவும் உதவும்.

> "Poem in which the last letter, syllable or
> foot, of the last line of one stanza, is
> Identical with the first letter, syllable,
> or foot of the succeeding stanza, the
> sequence being kept on, between the last
> and the first stanza of the poem as well"[3]

என்று தமிழ்ப் பேரகராதி அந்தாதிக்கு விளக்கம் கூறுகிறது.

அந்தாதி தனியொரு சிற்றிலக்கியமாக உருப்பெறுவதற்கு முன்னர்த் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் அந்தாதி அமைப்பில் பாடப்பெற்ற பல பாக்கள் இருப்பதைக் காணமுடிகின்றன.

தொல்காப்பியம்

அந்தாதிக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியத்தில் காண இயலவில்லை. ஆயின் தொடர்நிலைச் செய்யுளுக்குரிய வனப்பு எட்டினைக் கூறவந்த தொல்காப்பியர்,

> ''விருந்தே தானும்,
> புதுவது கிளந்த யாப்பின் மேற்றே''[4]

என்கிறார். இந்நூற்பாவுக்கு உரையெழுதிய பேராசிரியர் ''புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்றது என்னையெனில் புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரச்செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க, கலம்பகம் முதலாயினவும் சொல்லுப'' என்கின்றார். எனவே இவ்விருந்தெனும் வனப்பினுள் அந்தாதியைப் பேராசிரியர் அடக்குவதைக் காணமுடிகின்றது.

3. Tamil Lexicon, Vol.I, University of Madras, 1982, p.82.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் நூ. 237.

சங்க இலக்கியங்கள்

''குன்றகத் ததுவே குறும்பொறைச் சீறூர்
சீறூ ராளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவே பிறர்''[5]

எனும் நற்றிணைப் பாடலில் முதலடியின் இறுதிச்சீர் அடுத்த அடியின் முதற் சீராகவும் இரண்டாமடியின் இறுதிச்சீர் அதற்கடுத்த அடியின் முதற்சீராகவும் அமைந்திருக்கின்றன. இதுவே அந்தாதி அமைப்பாகும். புறநானூறு,[6] சிறுபாணாற்றுப்படை,[7] பதிற்றுப்பத்து,[8] ஐங்குறுநூறு[9] ஆகிய பிற சங்க இலக்கியப் பாக்கள் சிலவற்றில் அந்தாதிப் போக்கு அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

சிலப்பதிகாரம்

''திங்கண் மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி''[10]

என்னும் இப்பாடலில் இரண்டாமடியில் வந்த சீர்கள் மீண்டும் மூன்றாம் அடியின் சீர்களாகத் தொடுத்து அமைந்திருக்கின்றன. இதே அமைப்பிலேயே இக் கானல்வரியில் பல பாக்கள் இடம்பெற்றிருக்கின்றன. பாமர மக்களின் வரிப்பாடல்களாக இருந்து பின்னர் இலக்கியத் தகுதி பெற்ற இக் கானல்வரியில் அமைந்துள்ள இப்போக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும். எளிதில் நினைவில் வைத்துக் கொள்வதற்கு இவ்வமைப்பு மிகவும் பயன்படுவதையே இத்தகைய பாக்கள் காட்டுகின்றன.

5. நற்றிணை 95.
6. புறநானூறு 2.
7. சிறுபாணாற்றுப்படை 14-28
8. பதிற்றுப்பத்து நான்காம்பத்து
9. ஐங்குறுநூறு தொண்டிப்பத்து.
10. சிலப்பதிகாரம் கானல்வரி 2.

## திருமுறைகள்

கி பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய காரைக்காலம்மையார் பாடிய ''அற்புதத் திருவந்தாதி' எனும் நூலே அந்தாதி நூல்களுள் காலத்தால் முந்தையது. பன்னிரு திருமுறைகளுள் சம்பந்தர், மாணிக்கவாசகர், திருமூலர் ஆகியோர் அருளிய பாக்களில் அந்தாதிப் போக்கினைக் காணமுடிகின்றன. காலத்தால் முற்பட்ட அம்மையார் பாடியருளிய பாக்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. பாக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அம்மையார் நூல்கள் இத் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கலாம். மேலும் இப் பதினோராம் திருமுறையில் மொத்தம் எட்டு அந்தாதி இலக்கியங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். திருமுறை அமைப்பிற் கேற்ப அந்தாதி இலக்கியங்கள் இப்பகுதியில் ஆய்வு செய்யப் படுகின்றன.

### சம்பந்தர் தேவாரம்

முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தர் அருளியனவாகும். இவர் அருளியனவற்றுள் 'ஏகபாதம்' எனும் பெயரில் பாடியுள்ள திருப்பிரமபுரப் பதிகம்[12] அந்தாதி யாப்பில் அமைந்திருக்கிறது.

''பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்''[13]

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ள பன்னிரண்டு பாடல்களும் அதே அமைப்பிலேயே இருக்கின்றன.

11. சிலப்பதிகாரம் கானல்வரி 3, 4, 9-13, 20-23, 25 27, 34, 36, 43-46, 48.
12. சம்பந்தர் தேவாரம் 1.127.1-12.
13. மேலது 1.127.1

ஏகம்-ஒன்று. பாதம்-அடி. ஏகபாதம்-ஓரடி. ஓரடியே பொருள் வேறுபட நான்கு முறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைந்திருப்பதனால் ஏகபாதமாயிற்று. இத் திருப்பதிகப் பாக்களுள் 1 முதல் 10 வரையுள்ள பாடல்களும் 12ஆம் பாடலும் நாற்சீரடிகளாலும் 11ஆம் பாடல் ஐஞ்சீரடிகளாலும் இயன்று சீர்கள் வேறுபட்டு வந்திருக்கின்றன. இப்பதிகப்பாக்களில் வந்த சொல்லும் தொடரும் மீண்டும் மீண்டும் வந்த பொருள் அடி தோறும் வேறுபட்டு அமைந்திருக்கின்றன. இதுவே பிற்காலத்தில் 'யமக அந்தாதி' எனும் ஒரு வகையைத் தோற்றுவிக்கக் கருவாய் அமைந்திருக்கிறது.

'திருவியமகம்' எனும் பெயரில் நான்கு பதிகங்கள்[14] மூன்றாம் திருமுறையில் இடம்பெற்றிருக்கின்றன. இப் பதிகங்களில் ஓரடியில் முன் வந்த சொல் அல்லது தொடர் வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வந்திருக்கின்றது.

திருவாசகம்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கிறது. இதில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம் கோயில் திருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, யாத்திரைப்பத்து ஆகியவை அந்தாதிப் போக்கில் அமைந்திருக்கின்றன.

திருச்சதகம்

மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆத்தும சுத்தி, கைம்மாறு கொடுத்தல், அநுபோகசுத்தி, காருணியத்திரங்கல், ஆனந்தத்தழுந்தல் ஆனந்தபரவசம், ஆனந்தாதீதம் எனும் பத்துத் தலைப்புகளைக் கொண்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு பாக்களால் இச் சதகம் அமைந்திருக்கிறது கட்டளைக் கலித்துறை, நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா, எண்சீர், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலிநிலைத்துறை ஆகிய யாப்பு விகற்பங்களைப் பெற்றமைந்த இப்பாக்கள், ஒரு

14. சம்பந்தர் தேவாரம் 3.113.1-12; 3.114.1-11; 3.115.1-11; 3.116.1-11.

பாடலின் ஈறு அடுத்த பாடலின் முதலாக அந்தாதிப் போக்கில் அமைந்திருக்கின்றன 'மெய்தானரும்பி' என்று முதற்பாடல் தொடங்குகிறது. 'மெய்யர் மெய்யனே' என்று நூறாவது பாடல் முடிகிறது. முதற்பாடலின் சொல்லோடு பொருந்தும் முறையில் நூறாவது பாடல் முடிந்திருப்பது இவண் குறிக்கத்தக்கது இவ்வமைப்பு முறையினை அடியொற்றிய பிற்காலத்தில் தோன்றியதே 'பதிற்றுப்பத்தந்தாதி' எனும் சிற்றிலக்கிய வகையாகும்.

நீத்தல் விண்ணப்பம்

"உத்தரகோச மங்கைக்கரசே! உன்னால் ஆட்கொள்ளப் பட்ட என்னைத் தாங்கிக் கொள்; விட்டில் பூச்சியானது விளக்கினைக் கண்டு அதனொளியில் மயங்கி அணுகிச்சென்று அவ்வெப்பத்தால் தாக்குண்டு முடிவில் இறந்துவிடும் அது போல இவ்வுலகப் பற்றை நாடிச் செல்கின்ற என்னைத் தடுத்து ஆட்கொ"; புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து இவ்வுலகப் பொய்நெறியிற் செல்லாமல் தடுத்து ஆட்கொள்" என்று திருவுத்தரகோசமங்கைத் தலத்துப் பெருமானிடம் மாணிக்கவாசகர் தம்மைக் கைவிட்டு விடுதலாகாது என்று விண்ணப்பிக்கிறார். உலகப்பற்றை நீக்குவதற்கு அருள் புரிய வேண்டுமென்று விண்ணப்பித்த மாணிக்கவாசகர் 'கடையவனேனை' என்று முதற்பாடலில் தொடங்கி அமுதுண்ணக் கடையவனே' என்று ஐம்பதாவது பாடலில் மண்டலித்து முடித்திருக்கிறார். கட்டளைக் கலித்துறையிலமைந்த இந் நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாக்களைக் கொண்டு அந்தாதிப் போக்கில் அமைந்திருக்கிறது.

கோயில் மூத்த திருப்பதிகம்

தில்லையில் அருளப்பெற்ற இப்பதிகத்தில் பத்துப் பாக்கள் இருக்கிறது. 'உடையாள் உன்றன் நடுவிருக்கும்' என முதற்பாடலில் தொடங்கி 'அருளாய் என்னை உடையானே' என்று பத்தாவது பாடலில் மண்டலித்து அந்தாதியாக முடித்திருக்கிறார். நான்காவது பாடல் ஐஞ்சீரடி மயங்கிய விருத்தத்திலும் ஏனைய பாக்கள் அறுசீரடி ஆசிரிய விருத்தத்திலும் அமைந்திருக்கின்றன. எல்லை அறியவொண்ணாத தொல்லை நாள் தொட்டு இறைவன் உள்பொருளாகிய உலகுயிர்களைச் செயற்படுத்தி அருளும் முறைமையினை அறிவுறுத்தும் நிலையில் இப் பதிகப்பாக்கள் அமைந்திருக்கின்றன.

கோயில் திருப்பதிகம்

'மாறிநின்றென்னை மயக்கிடும்' எனத் தொடங்கி 'ஓர் 'கைம்மாறே' என்று பத்தாவது பாடலில் மண்டலித்துத் தொடர்ச்சியாக அந்தாதிப் போக்கில் இப் பதிகம் அமைந்-திருக்கின்றது. பொதுவாகக் 'கோயில்' என்பது சிதம்பரத்-தைக் குறிக்கும். இப் பதிகத்தின் எல்லாப் பாக்களிலும் 'திருப் பெருந்துறையுறை சிவனே' என்று இடம்பெற்றிருப்பதைச் சுட்டிக் காட்டிக் 'கோயில் என்பது திருப்பெருந்துறையே' என்றும் சிலர் கூறுகின்றனர். இதற்குச் சான்றாக மாணிக்க வாசகர் பிறிதோரிடத்துச்

> ''செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
> திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி''[15]

என்று கூறியிருப்பதைக் காட்டுகின்றனர். திருப்பெருந்துறை யில் இறைவன் குருந்தமர நிழலில் எழுந்தருளியிருந்து அடிகட்குக் காட்சி வழங்கியருளினார். எனவேதான் 'திருப் பெருந்துறைக் கோயில்' என்று கூறாமல் 'திருப்பெருந்-துறையுறைக் கோயில்' என்றார். இக் கோயில் திருப்பதிகம் எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தத்தில் அமைந்திருக்கிறது.

பிரார்த்தனைப்பத்து

திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்ட பல பதிகங் களுள் இதுவும் ஒன்று. 'கலந்து நின்னடியாரோடு' என்று முதற் பாடல் தொடங்கப்பட்டுப் பதினோராவது பாடலில் 'அதுவேயாக அருள்கலந்தே' என்று மண்டலித்து அந்தாதி யாக முற்றுப்பெற்றிருக்கிறது. எல்லாப் பாக்களும் அறுசீரடி விருத்தத்தாலமைந்திருக்கின்றன மாணிக்கவாசகர் தம்மை ஆட்கொண்டருளிய இறைவனைப் போற்றிப் பணிந்து ''நின் னை விட்டு நீங்காவண்ணம் அடியேனை நின் திருவருள் வெள்ளத்தில் ஆழ்த்தியருள்வாய்; அடியேனுடைய கடுவினை-யைக் களைந்து உன் கருணைக்கடல் பொங்க அடியேன் உள்ளத்தே ஒளிதுருக அருள்வாய்; எனைக்கண்டார் வெருவா வண்ணம் மெய்யன்பை நான் பெறவேண்டும்'' என்று வேண்டு-கின்றார்.

15. திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி 8.

குழைத்தபத்து

திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்ட பல பதிகங்களுள் இதுவும் ஒன்று அறுசீரடி விருத்தத்தாலான இப்பதிகப் பாக்களில் ''குழைத்தாற்பண்டைக் கொடுவினைநோய்' என்று முதற்பாடல் தொடங்குகிறது 'குழகா கோல மறையோனே கோனே என்னைக் குழைத்தாயே' என்று பத்தாவது பாடல் முடிகிறது. முதற்பாடலிலும் இறுதிப்பாடலும் 'குழைத்தல்' எனும் சொல் அந்தாதியாய் மண்டலித்து முடிந்திருக்கிறது. பண்டைக் கொடுவினை நோய்கள் தம்மைத் தொடர்ந்து வருந்தும் இன்னலுக்கு ஆற்றாது வருந்திய அடிகள், அத்துன்பங்களுக்குக் காரணமாகத் தாம் செய்த பிழைகளை நினைந்திரங்கி இறைவனது கருணைத் திறத்தினையே தாம் உய்தி பெறுவதற்குரியர் சாபாகக் கொண்டு இறைவனை நோக்கி மனம் நைந்து அரற்றிக் கூறும் முறையீடாக இப் பதிகப்பாக்கள் அமைந்திருக்கின்றன.

யாத்திரைப்பத்து

தில்லையில் அருளிச்செய்யப்பட்ட இப் பதிகம் அறுசீரடி விருத்தத்தால் பத்துப் பாக்களாலானது 'பூவார் சென்னி' எனத் தொடங்கிய முதற்பாடல் அந்தாதியாக அமைந்து 'அந்தோ! அந்தோ! அந்தோவே!' என்று பத்தாவது பாடல் முடிந்திருக்கிறது. இப் பதிகப்பாக்களில் பாகோறும் இறைவனைப் 'புயங்கன்' என்று குறிப்பிட்டிருக்கிறார். உலகப் பந்த பாசத்திலிருந்து விடுபட்டுப் பேரின்ப வாழ்வாகிய வீடு பேற்றைத் தருகின்ற சிவ பிரான் உறையும் உலகிற்குச் செல்லும் நோக்குடன் அன்புடைய அடியார்களை அழைக்கும் நிலையில் ''பொய்யாகிய இவ்வுலகைவிட்டு இறைவன் கழல் புகுவதற்குரிய காலம் வந்தது! காண்! போவோம்! உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு உடன் போனதற்கே ஒருப்படுமின்! எல்லா அல்லலையும் இடையூறு அடையாமே சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கி நெஞ்சமுருகி நிற்போமே!'' என்றிவ்வாறு இப் பதிகத்துள் மாணிக்கவாசகர் அருளியிருக்கின்றார்.

பத்தாந்திருமுறை

திருமூலர் அருளிய திருமந்திரப் பாக்கள் பத்தாந் திருமுறையாகும். ஒன்பது தந்திரங்களாக அமைந்த இம் மந்திரத்

தில் நான்காம் தந்திரத்தில் பல பாக்கள் அந்தாதியாக அமைந்திருக்கிறது. இதில் சிவம் முதலான பல்வேறு தெய்வங்களுக்குரிய மந்திரங்கள், இயந்திரங்கள், உபாசிக்கும் முறை, பயன் ஆகியன இடம்பெற்றிருக்கின்றன. மந்திரங்கள் கணிக்கின்றவர்கள் மறந்து விடாமல் நினைவில் வைத்துக் கொள்வதற்கு எளிமையும் இனிமையும் மிகவும் முக்கியமாகும். அதனாலேயே இந் நான்காம் தந்திரத்தில் அமைந்த பல பாக்கள் அந்தாதிப் போக்கில் அமைந்திருக்கின்றன.

பதினோராந்திருமுறை

பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய நாற்பது நூல்களுள் எட்டு அந்தாதி நூல்கள் இத் திருமுறையில் இருக்கின்றன அவை வருமாறு :

1. அற்புதத் திருவந்தாதி — காரைக்காலம்மையார்
2. பொன்வண்ணத் திருவந்தாதி — சேரமான் பெருமாள் நாயனார்
3. கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி — நக்கீரதேவ நாயனார்
4. சிவபெருமான் திருவந்தாதி — கபிலதேவ நாயனார்
5. சிவபெருமான் திருவந்தாதி — பரணதேவ நாயனார்
6. திருவேகம்பமுடையார் திருவந்தாதி — பட்டினத்தடிகள்
7. திருத்தொண்டர் திருவந்தாதி — நம்பியாண்டார் நம்பி
8. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி — நம்பியாண்டார் நம்பி

திருமுறைகளுள் இப் பதினோராந் திருமுறையிலேயே 'அந்தாதி' என்ற பெயரிலமைந்த எட்டு நூல்கள் இருக்கிறது. ஏனைய திருமுறைகளில் அந்தாதி அமைப்பில் அமைந்த பாக்கள் பற்றிய விவரங்கள் ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கின்றன. இனி இத் திருமுறையில் அமைந்த அந்தாதி இலக்கியங்களின் அமைப்பு முறையினை இப்பகுதி ஆராய்கிறது

அற்புதத் திருவந்தாதி

101 பாக்களைக் கொண்ட இவ்வந்தாதி ஓதுவதற்கு எளிமையும் இனிமையும் உடையது. இறைவனின் அற்புதங்களையும அருட்கோலங்களையும் திருவருட் செயல்களையும் அமைவுற எடுத்துக் காட்டுவனவாகவும் அமைந்திருக்கின்றன. ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்துகளைக் கொண்ட இப்பனுவல் சிவபிரானை முன்னிலைப்படுத்தி அழைத்து உரையாடி மகிழும் நிலையில் அமைந்திருக்கிறது.

கருவிலே திருவுடைய அம்மையார். சிவனுக்கு ஆளாகிப் பணி செய்வதே தாம் பிறந்த பிறப்பின் சிறப்பும் பயனும் ஆகும் என்கிறார்.[16] இறைவனை உள்ளத்தில் அடைத்து வைத்தால் அங்கே தங்கி இறுதியில் சேமநிதியாக நமக்குப் பயன்படுவான் என்பதை,

> ''எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
> மனக்கினிய வைப்பாக வைத்தேன்'' [17]

என்கின்றார்.

அம்மையார் முதன்முதல் பாடியருளிய இவ் வந்தாதியில் இறைவனிடம் பேயுருவை வேண்டிப் பெற்றதைப்.

> ''பெறினும் பிறதியானும் வேண்டேம் நமக்கீ
> துறினும் உருதொழியு மேனுஞ் - சிறிதுணர்த்தி
> மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
> நற்கணத்தி லொன்றாய நாம்''[18].

எனும் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இறைவன் எல்லாமாய், எப்பொருளுமாய், எல்லாவிடத்தும் நீக்கமற நிறைந்திருக்கும் பான்மையினையும் அவனை மனம், மொழி. மெய்களால் வழிபட வேண்டுமென்பதையும் நயத்தோடு பல பாக்களில் அம்மையார் எடுத்துரைக்கின்றார்

பொன்வண்ணத் திருவந்தாதி

100 பாக்களைக் கொண்ட இவ்வந்தாதியைச் சேரமான் பெருமான் நாயனார் பாடியருளியிருக்கிறார். 'பொன்வண்ணம்

16. அற்புதத் திருவந்தாதி 1.
17. மேலது 10. 18. மேலது 86.

எவ்வண்ணம்' என்று முதற்பாடல் தொடங்குகிறது. 'காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே' என்று இறுதிப் பாடல் முடிகிறது. கட்டளைக் கலித்துறையிலமைந்த இப்பனுவல், சேரமான் பெருமாள் தில்லைச் சிற்றம்பலத்தை இறைஞ்சித் தில்லைப் பெருமானது அருட்கூத்தினைக் கண்டு மகிழ்ந்த நிலையில் பாடியதாகும் என்று சேக்கிழார் கூறுகின்றார்.[19]

இந்நூலில் அகத்துறைப் பாக்களும் இறைவனுக்குத் தொண்டுபடும் முறைப் பாக்களும் அவ்வாறு தொண்டுபட்ட மெய்யடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாக்களும் அமைந்திருக்கின்றன.

கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி

100 பாடல்களைக் கொண்ட இவ்வந்தாதியை நக்கீர தேவ நாயனார் பாடியிருக்கின்றார். 'சொல்லும் பொருளுமே' என்று தொடங்கி 'எப்பொழுதுஞ் சொல்' என்று மண்டலித்து அந்தாதியாக முடிந்திருக்கிறது. இவ் வந்தாதி வெண்பாவாலானது. ஒற்றைப்படை எண்களிலமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக்கயிலையைப் போற்றுகின்றன; இரட்டைப்படை எண்களிலமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக்காளத்தியைப் போற்றுகின்றன. இரண்டும் அடுத்தடுத்து அமைந்திருந்தமையினால் கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி என்று பெயர் பெறுவதாயிற்று.

இறைவன் திருவருட் கோலங்கள், திருவருட்செயல்கள், அவனை வழிபடுவதன் நோக்கம், தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தியமை போன்றவற்றை வெளிப்படுத்தும் பாக்களும் இறைவனை நோக்கி உரையாடும் நிலையில் பாடிய பாக்களும் இறைவனைக் காதலித்த தலைவியின் ஆற்றாமையினையும் பேரன்பின் திறத்தையும் புலப்படுத்தும் நிலையில் பாடிய பாக்களும் இப்பனுவலில் அமைந்திருக்கின்றன.

சிவபெருமான் திருவந்தாதி

கபிலதேவ நாயனாரும் பரணதேவ நாயனாரும் பாடிய இரு நூல்களுக்கும் 'சிவபெருமான் திருவந்தாதி' என்றே பெயரிடப்பட்டிருக்கிறது. இரு நூல்களும் வெண்பாவாலானது. 'ஒன்று முதலாக நூறளவும்' என்று தொடங்கிய கபிலதேவ நாயனார் 'வெள்ளே

19. சேக்கிழார், பெரியபுராணம் 55-56.

றுடையானைப் பாடலால் ஒன்று' என்று நூறாவது பாடலோடு முடிந்திருக்கிறார். 'ஒன்றுரைப்பீர்' என்று தொடங்கிய பரண தேவ நாயனார் 'ஓரைந்துரைக்க வல்லார்க் கொன்று' என்று நூறாவது பாடலோடு முடித்திருக்கிறார். ஆயின் பரணதேவ நாயனார் நூற்பலன் கூறும் பாடல் ஒன்றையும் இறுதியில் பாடியிருக்கின்றார். இந் நூல்களிலும் சிவபெருமான் உறையும் சில தலங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

காஞ்சியிலுள்ள திருவேகம்பம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் புகழ்ந்து கட்டளைக் கலித்துறையில் பட்டினத்துப் பிள்ளையார் பாடியிருக்கின்றார். 'மெய்த்தொண்டர் செல்லும்நெறி' என்று முதற்பாடல் தொடங்குகிறது. 'எனக்கொள்வர் மெய்த்தொண்டரே' என்று நூறாவது பாடல் முடிகிறது. ''திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளிய பெருமானே! மெய்யறிவினால் உன்னை வழிபட்டொழுகும் மெய்யன்பர்கள் செல்லும் ஞானநெறி இதுவென உணர்ந்திலேன்; சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டதன் பயன் அவன் அடியார்களுக்குப் பணி செய்து ஒழுகுதலேயாம்; அடியார்களது திருவடித் தூளியைத் தலைமேற் கொள்வார் உள்ளம் தெளிவுபெறுயாதலால் அவர்கள் சிவனருள் பெறுதல் ஒருதலை; சிவபெருமான் திருவடியை வணங்குதற்கே தம் தலையினைப் பயன்படுத்தும் பெருவேட்கையுடைய மெய்யடியார்களோடு இணங்கிப் பழகுவதன்றி ஏனையரோடு தாம் நெருங்கிப் பழகுவதில்லை'' என்பது போன்ற பாடல்கள் இவ்வந்தாதியில் இடம்பெற்றிருக்கின்றன. தவிர, திருவேகம்பப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு குடும்ப வாழ்வில் தலைவன் தலைவி ஆகியவர்களின் அன்பின் திறத்தை வெளிப்படுத்துகின்ற அகத்துறைப் பாக்களும் இப் பனுவலில் இருக்கின்றன. பல்வேறு பாடல் பெற்ற தலங்கள, வைப்புத் தலங்கள் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே இப் பனுவலில் இடம் பெற்றிருக்கின்றன.

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பியாண்டார் நம்பி பாடியருளிய பத்து நூல்களுள் இரு அந்தாதி நூல்கள் அடங்கும். அவற்றுள் இவ்வந்தாதி சுந்தரர் அருளிய 'திருத்தொண்டத்தொகைக்கு வகையாக

அமைந்திருக்கிறது. சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு இவ்வந்தாதி பெரிதும் ஆதாரமாக வழிநூலாக விளங்கியிருக்கிறது. நூலின் தொடக்கத்தில் 'பொன்னி வடகரை' எனத் தொடங்கும் காப்புச் செய்யுள் இடம்பெற்றிருக்கிறது. அடுத்துச் 'செப்பத்தகு புகழ்த்தில்லை' என்று முதற்பாடல் தொடங்குகிறது. நூலினிறுதிப் பாடல் 'செல்வப் பெரும் புகழந்தாதி செப்பிடவே' என்று முடிகிறது. இவ்விறுதிப் பாடல் நூற்பயன் நுவலுகிறது. இவ்வந்தாதி எண்பத்தொன்பது கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டதாக விளங்குகிறது.

இப் பனுவலில் தனியடியார் அறுபதின்மரும் ஒன்பது திருக்கூட்டத்தாரும் ஆகிய திருத்தொண்டர்களுக்குரிய ஊர், நாடு, மரபு, செயல் போன்றவைகளும் அவர்கள் பெற்ற பேறும் கூறப்பட்டிருக்கின்றன. புராணச் செய்திகளும் அருஞ்சொல் வழக்குகளும் ஆங்காங்கே இடம்பெற்றிருக்கின்றன.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி

நம்பி பாடியருளிய இப்பனுவல் திருஞானசம்பந்தரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு நூறு கட்டளைக் கலித்துறைகளால் இயன்றதாகும். 'பார்மண்டலத்தினில்' எனத் தொடங்கிய இவ்வந்தாதி 'பன்னிருநாமமிப் பாரகத்தே' என்று மண்டலித்து முடிந்திருக்கிறது. சம்பந்தருக்கு வழங்கப் பெறும் பல்வேறு சிறப்புப் பெயர்கள், சம்பந்தர் நிகழ்த்திய அற்புதச் செயல்கள், சம்பந்தர் அருளிய பதிகங்களின் பொருள் நலங்கள், அகப்பொருள் நலம் சார்ந்தவை முதலானவற்றை இந்நூல் கூறுகிறது.

நானிலத்தில் தமிழ் வாழ, நற்சைவநெறி தழைத்தோங்க அருளாளர்கள் அருளிய தெய்வத்தமிழ்த் திருமுறைகளில் 'அந்தாதி' எனும் இலக்கியம் தனியொரு சிற்றிலக்கியப் பனுவலாக உருவாவதற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையாராவர். சைவ உலகில் தாயாகப் போற்றப்பெறும் இவ்வம்மையார் பாடி அருள்வதற்கு முன்னர்ச் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் அந்தாதியின் போக்கு அமைந்திருப்பதை மேலே கண்ட கூற்றுக்கள் மெய்ப்பிக்கின்றன. யமக அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய அந்தாதி வகைகளைச் சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய இருவரும் தோற்றுவிப்பதற்கு அடிகோலியவர்களாவர். சம்பந்தர், மாணிக்கவாசகர், திருமூலர் ஆகியோர் பாக்களில் அந்தாதிப்போக்கு அமைந்திருக்கிறது.

# 8. திருமுறைகளில் மும்மணிக்கோவை இலக்கியங்கள்

தமிழில் அமைந்த பல்வகைச் சிற்றிலக்கிய வகைகளுள் 'மும்மணிக் கோவை'யும் ஒன்றாகும். இறைவனைப் போற்றி வழிபடும் துதிப்பொருண்மையைக் கருவாகக் கொண்டு தோன்றிய மாலை, பத்து போன்ற வகைகளுள் இம் மும்மணிக்கோவையும் அடங்கும். பதினோராம் திருமுறையில் அமைந்த நாற்பது சிற்றிலக்கியங்களுள் ஏழு நூல்கள் மும்மணிக்கோவையாகும். இம்மும்மணிக்கோவை இலக்கியங்களைப்பற்றி இக் கட்டுரை ஆராய்கிறது.

மும்மணிக்கோவை - விளக்கம்

மும்மணிக்கோவைக்குரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. மும்மணிக்கோவை என்பது வேறுவேறு நிறமுடைய மூவகை மணிகளால் கோக்கப்பெற்ற மாலை போன்று ஆசிரியம், வெண்பா, கட்டளைக்கலித்துறை எனும் மூவகைச் செய்யுள்களால் அந்தாதித் தொடை அமையப் பாடப்படுவதாகும். இவ்விலக்கியம் முப்பது பாக்களால் நிறைவு பெறுதல் வேண்டும்.

வெண்பா, ஆசிரியம், கலித்துறை என்றும், ஆசிரியம், வெண்பா, கலித்துறை என்றும் பயின்று வரும் பா வகைகளின் முறைவைப்பில் சில பாட்டியல் நூல்கள் மாற்றத்தைச் சுட்டுகின்றன.

> ''வெள்ளையும் அகவலும் நேரிசையாகக்
> கலித்துறை வர அந்தாதியாகி
> முறைமையின் இயல்வது மும்மணிக்கோவை''[1]

என்பது பன்னிருபாட்டியல். அஃதாவது, வெண்பாவும் அகவலும் நேரிசை வெண்பா நேரிசை ஆசிரியமாய் இருத்தல் வேண்டும் என்று இந்நூல் குறிப்பிடுகிறது.

---

1. பன்னிரு பாட்டியல், நூ. 72.

திருமுறைகளில் மும்மணிக்கோவை

பன்னிரு திருமுறைகளுள் பதினோராம் திருமுறையிலே யே மும்மணிக் கோவை நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அந்நூல்கள வருமாறு :-

1. திருவாரூர் மும்மணிக்கோவை — சேரமான் பெருமாள் நாயனார்

2. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை — நக்கீரதேவநாயனார்

3. சிவபெருமான் திரு மும்மணிக் கோவை — இளம்பெருமானடிகள்

4. மூத்தபிள்ளையார் மும்மணிக் கோவை — அதிராவடிகள்

5. திருக்கழுமல மும்மணிக் கோவை — பட்டினத்துப்பிள்ளை யார்

6. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை — ,,

7. ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை — நம்பியாண்டார் நம்பி

இவற்றுள் கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார் அருளிய 'திருவாரூர் மும்மணிக் கோவை' நூலே மும்மணிக்கோவையின் முதல் சிற்றிலக்கிய நூலாகும்.

ஏழு நூல்களும் சிவபெருமானின் புகழ் பரப்புவனவாக அமைந்துள்ளன. ஒன்று மூத்த பிள்ளையாரைப் பற்றியும் மற்றொன்று ஆளுடைய பிள்ளையாரைப் பற்றியும் போற்றிப் பரவுவனவாகும். ஏழில் நான்கு நூல்கள் தலப்பெயரில் அமைந்துள்ளன.

திருவாரூர் மும்மணிக்கோவை

சேரமான் பெருமான் நாயனார் திருவாரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானைப்போற்றிப் பாடிய-தாதலின் 'திருவாரூர் மும்மணிக்கோவை' என்று பெயர் பெற்றது. சேரமான் திருவாரூரை அடைந்து நம்பியாரூரரைத் தோழராகப் பெற்று அவருடன் பூங்கோயில் அமர்ந்த பெரு-

மானைக் கண்டு பணிந்து வழிபட்டுப் போற்றிப் பாடியருளிய இம் மும்மணிக்கோவையை நம்பியாரூரர் கேட்க இறைவன் திருமுன்பு சேரமான் பெருமாள் அரங்கேற்றம் செய்தார் என்பது வரலாறு. இதனைச் சேக்கிழாரும் 'திரு மும்மணிக் கோவை நாவலூரர் தம்முன்பு நம்மை விளங்கக் கேட்பித்தார்'[2] என்று கூறுகின்றார்.

முப்பது பாக்களைக் கொண்ட இம் மும்மணிக்கோவை அன்பின் ஐந்திணையாகிய அகத்திணையைப் பொருளாகக் கொண்டு பாடப் பெற்றதாகும். அகப்பொருண்மையைத் தழுவி இறைவனிடம் காதல் கொண்ட பெண்ணாகத் தம்மைப் பாவித்து அகப்பொருள் ஒழுகலாற்றுடன் சார்த்திப் பாடிய பாடல்களாக அமைந்திருக்கின்றன. இதனைக் கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமாக ஆன்றோர் குறிப்பர்.

கூடாது இருக்கும் தலைவியின் விரகவேதனையைச் சுட்டும் குறிப்புகள இறைவனைச் சாரவிரும்பும் அடியவரின் உளப்பாங்கையும் நிலையையும் குறிப்பாக வெளிப்படுத்து-கின்றன.

"கலைபிணை திரியக் கையற வெய்தி
மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து
அல்லியங் கோதை அழலுற் றாஅங்கு
எல்லையி லிருந்துயர் எய்தினள்"[3]

எனவரும் பாடற்பகுதியில் அணிந்த உடை கட்டவிழ, தனது மெல்லிய விரல்களை நெரித்து, ஏங்கி, நெடிய பெருமூச்சிட்டு பூமாலை ஒன்று தீயில் வாடுதல் போலத் துயருற்றாள் எனத் தலைவியின் துயரம் நிறைந்த மனநிலை விளக்கப்படுகிறது. இந்நிலை, இறைவனைக் கூடவிரும்பும் அடியவருக்கும் அமைதல் வேண்டும் என்பதை விளக்குவதாகக் கொள்ளலாம்.

இப்பனுவலில் இடம் பெற்ற பல பாக்கள் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் கருத்துக்கள் பலவற்றை உட்கொண்டிருக்கின்றன. தவிர இந்நூலில்

---

2. சேக்கிழார், பெரியபுராணம், கழறிற்றறிவார் நாயனார் புராணம் 69.
3. திருவாரூர் மும்மணிக்கோவை 7:9-12.
4. மேலது 19:1-5 : குறுந்தொகை 85; திருவாரூர் மும்மணிக் கோவை 16:1-4 : அகநானூறு 131.

இடம் பெற்றுள்ள பல்வேறு செய்திகளுள் சிலவற்றைப் பின்வருமாறு கூறலாம் :

1. திருவாரூர் எல்லையில் சிறு தெய்வங்களுக்கு உணவு படைத்தற்குரிய பலிபீடக்கல் அமைக்கப்பட்டிருந்தது (17).

2. தேவர்கள் சிவபெருமானை வழிபடுதற் பொருட்டு நள்ளிரவில் இவ்வுலகத்திற்கு வருகின்றனர் (9).

3. பகைவரோடு பொருது இறந்துபட்ட வீரருடைய பெயரும் அவர்கள் போர்க்களத்தில் காட்டிய பேராற்றலுமாகியவற்றைக் கல்லில் பொறித்து அக்கல்லைத் தெய்வமாக நட்டு வழிபடும் வழக்கம் இருந்தது (16).

4. திருவாரூர்க் கடைவீதியில் கண்ணாடியில் பதுமை நிழல் படியப் பாவைக்கூத்து நிகழ்ந்திருக்கிறது (19)

5. திருவாரூரில் திண்ணிதின் அமைந்த கரைகளையுடைய பெருங்குளம் இருந்தது (22).

6. திருவாரூரில் பெருவிழவின் ஆரவாரம் இருந்தது (25).

சிவபெருமானின் பெருமையைப் பின்வருமாறு சேரமான் பெருமான் குறிப்பிடுகின்றார்

1. கங்கைப் பெருவெள்ளத்தை அடக்கி அதனைத் தம் சடையில் சேர்த்து முடிந்திருக்கிறார் (1, 9).

2. அருச்சுனனுக்கு அருள் செய்தது (4).

3 முப்புரத்தை எரித்தது (7).

4. உமையொரு பாகரானது (7, 28).

5. களிற்றினை உரித்துப் போர்த்தியது (8, 28).

6. தக்கன் வேள்வியை அழித்தது (12).

7. கலைமானை ஏந்தியது (16).

8. அடிமுடி தேடியது (19).

9. சுடுபொடி யணிந்தது (22).

10 பூதங்களுக்குத் தலைவன் (28).

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

நக்கீரதேவ நாயனார் பாடியருளிய பல நூல்களுள் இத் திருவலஞ்சுழி மும்மணிக்கோவையும் ஒன்றாகும். திருவலஞ்சுழி என்பது கும்பகோணத்திற்கு மேற்கே 6 கி.மீ தொலைவிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். இவ்வூர் காவிரியாறு வலமாகச் சூழ்ந்து செல்லுமிடத்தில் அமைந்திருப்பதனால் 'வலஞ்சுழி' என்று பெயர் பெற்றது.

ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய மும்மணிகளால் அந்தாதித் தொடை அமையப் பாடப்பெற்ற இக் கோவையில் பதினைந்து பாடல்களே இருக்கின்றன. ஆயினும் இது 'வணங்குதும் வாழி நெஞ்சே' என்று தொடங்கி, 'வலஞ்சுழியானை ... .. வணங்குதுமே' என்று முடிந்து நிரல் பட அந்தாதித் தொடையில் அமைந்திருக்கிறது ஒருவேளை இவர் காலத்தில் முப்பது பாடல்கள் பாடவேண்டுமென்ற வரையறை இல்லாமல் இருந்திருக்கலாம் அல்லது எஞ்சிய பதினைந்து பாடல்கள் கிடைக்காமல் போயிருந்திருக்கலாம். இது மேலும் ஆய்வுக்குரியது.

திருவலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் கண்டு அவ்விறைவனது பேரழகில் ஈடுபட்டுக் காதல் கொண்டு வருந்தும் தலைவியின் நீங்கா அன்பின் திறத்தைப் புலப்படுத்தும் நிலையில் சில பாடல்கள் இருக்கின்றன

திருவலஞ்சுழி இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு போற்றும் அகத்துறைப் பாக்களும் இப் பனுவலில் இடம்பெற்றிருக்கின்றன.

இறைவன் பேரழகில் ஈடுபட்ட பெண்ணொருத்தி. அவன் விரைந்து மறைந்ததைக் காணப்பெறாது தன் கை-வளைகள் கழல வருத்தமுறுகின்றாள்.

தோழிக்கு உரைப்பதாக அமைந்த அப்பாடலில் "நல்ல பொருளமைதி உடையவரே! சிலவாகிய பொருளை இரந்து பெறுதற்பொருட்டுப் பிக்சைக் கோலத்துடன் என் இல்லத்தில்

5. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 8.

நீர் புகுந்தீர்; எல்லாச் செல்வங்களுக்கும் காரணமாகிய பெருந்திருவுடன் வியக்கத்தக்க தோற்றம் உடையவராக இருக்கின்ற உம் ஊர் யாது? என்று வினவினேன். அதைக் கேட்ட அவர், மருளத்தக்கவாறு பெரிய மறைக்காட்டில் உள்ளோம்; நாம் விரும்பி வாழும் பதி வலஞ்சுழி என்று கூறி விரைந்து மறைந்தார். நான் அணிந்துள்ள கை வளையல் களைக் காணேனாயினேன்'' என்று தலைவி தன் உடல் மெலிவிற்குரிய காரணத்தையும் கூறுகின்றாள்.

தவிரப் பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தணிவிக்க வேண்டிப் பாணனைத் தூதாக அனுப்பியதையும் விறலியொடு கூடி வாயிலாக வந்த பாணனை நோக்கித் தலைவி கூறுவதாக அமைந்த பாடலையும் இந் நூலில் காணமுடிகின்றன.

மேலும் சிவபெருமானின் பெருமையை உலகவர்க்கு விளக்கு முகத்தான் பிறை சூடியது, பலி ஏற்றது, வெள்ளேற்றை ஊர்தியாகக் கொண்டது, கங்கையைச் சூடியது, உமையொரு பாகரானது ஆகிய புராண வரலாறுகளையும்[6] நூலில் ஏற்றவிடங்களில் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

சிவபெருமான் திருமும்மணிக்கோவை

இளம்பெருமானடிகள், சிவபெருமானுக்கு அழகிய மணி மகுடமாக அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய மும்மணிகளால் போற்றிப் பாடிய பனுவல் 'சிவபெருமான் திருமும்மணிக்கோவை'யாகும். இந்நூல் முப்பது பாக்களைக் கொண்டுள்ளது இக் கோவைப் பாடல்கள் யாவும் சொற்செறிவும் பொருட்செறிவும் உடையனவாகத் திகழ்கின்றன. மிகுதியான இலக்கியப் பயிற்சி உடையவர்கட்கே இப்பாக்களின் பொருள் இனிது விளங்கும் இறைவனை முன்னிலைப் படுத்தி உரையாடி மகிழும் நிலையில் பாடிய பாக்களும், இறைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவியின் துயர் ளைந்துரைக்கும் அகத்துறைப்பாக்களும் இம் மும்மணிக்கோவையில் இடம்பெற்றுள்ளன.

''உமையவளைத் தம் திருமேனியில் கொண்ட பெருமானே! கடல் முகடும் விசும்பும் ஒன்றாய்க் கலந்த ஊழிக்-

6. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 5, 8, 10, 12, 12.

காலப் பெருவெள்ளத்தில் உலகெல்லாம் மறைய நீ ஒருவனே தனித்து நின்றனை என்பர். அத்தகைய பெருவெள்ளப் பெருக்கினை இப்பொழுது எங்கே மறைத்து வைத்துள்ளாய்? அதனை எங்களுக்குச் சிறிது சொல்வாயாக'' என்று இறைவனை நோக்கி வினவுகின்றார்.[7]

சிவபெருமான் ஆடையாக இடுப்பில் அணிந்த புலித்தோலைப் பார்த்த இளம்பெருமானடிகள்,

''இதுநீர் ஒழிமின் இடைகந் துமையிமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத ளேயுடை பொங்குகங்கை
முதுநீர் கொழித்த இளமணல் முன்றில்மென்
நோட்டதிங்கள்
செதுநீர் கொழித்த திவளஞ்செய் செஞ்சடைத்
தீவண்ணரே''[8]

எனும் பாடலில் இறைவனை நோக்கி வினவும் நிலையில் பாடியிருக்கின்றார். உமையவளைத் திருமணம் செய்கின்ற காலத்தில்கூட உமக்கு இப் புலித்தோல் தானா கிடைத்தது என்ற கருத்தில் இப் பாடல் அமைந்திருக்கிறது.

இந்நூலிலும் சிவபெருமான் பெருமையைப் புலப்படுத்தும் பாங்கில் கங்கையைச் சூடியது, திங்களை அணிந்தது, நஞ்சுண்டது, உமையொரு பாகரானது, பார்வதியை மணந்தது, பலியிட்டது, திருமாலை விடையாகக் கொண்டது, மான் கைக்கொண்டது போன்ற பல்வேறு புராண வரலாறுகளை[9] ஆசிரியர் கையாண்டிருக்கிறார்.

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

அதிராவடிகள் பாடியருளிய இக் கோவையில் முதல் 23 பாக்களே கிடைத்திருக்கின்றன. இறுதி 7 பாடல்கள் கிடைக்கவில்லை. கிடைத்த பாக்களிலும் சில தொடர்கள்

7. சிவபெருமான் திருமும்மணிக்கோவை 5.
8. மேலது 6.
9. மேலது 2:2, 2:5, 4:2,5, 6,7:20, 16, 18:21, 23.

பொருள் விளங்காத நிலையில் சிதைந்து காணப்படு-கின்றன. மூத்தபிள்ளையார் என்று விநாயகர் அழைக்கப் பெறுகின்றார். இவர், தம்மை அன்போடு வழிபடுகின்ற மெய்யடியார்களின் பிறவிப் பிணியைப் போக்கி அருள் நல்கு வார்; அவருடைய திருவடியைச் சிந்தித்து வாழ்கின்றவர் களின் மனக்கவலையை மாற்றுவார் என்பது போன்ற பல்வேறு கருத்துகளைத் தம் அனுபவத்தோடு பிணைத்துக் கூறியிருக்கின்றார் ஆசிரியர்.

உமையவள் பெற்றெடுத்த வேழக்கன்று, சிலம்பின் மகள் பெற்றெடுத்த பிள்ளை, படைத்தற் கடவுள் நான் முகனைச் சினந்த பேராற்றல் பெற்ற சிவபெருமானின் மகன், காமனை எரித்த சிவபிரான் ஈன்றெடுத்த மணி என்று மூத்த பிள்ளையாரின் தாய் தந்தையரைப்பற்றி ஆசிரியர் குறிப்-பிட்டிருக்கின்றார்.[10]

தம்மை உள்ளன்போடு வழிபட்ட மெய்யடியார் வியாச-ருக்காக அவர் சொல்லிய மகாபாரதக் கதையினை மேருமலையில் எழுதியருளினார் விநாயகர். சிவபெருமான் முப்புரத்தை அழிக்கச் சென்றபொழுது விநாயகர் தம் தந்தை-யாருக்குத் துணைபுரிகின்றார்.

சிவபெருமான் தம்மிடமுள்ள மாங்கனியை மூவுலகங்-களையும் விரைவில் சுற்றி வருகின்றவர்க்குத் தருவதாகக் கூறிய புராண வரலாற்றினை இந் நூலாசிரியர்,

''சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேல்
சேய்மூ வுலகம் வலம்வர வேய
கொன்றையம் படலத் துன்றுசடைக் கடந்த
ஒங்கிருந் தாதையை வளாய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருத்திய
வள்ளற் கிங்கென் மங்கனித் திடுமே''[11]

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

சிவபெருமானும் அவர் பெற்றருளிய மூத்தபிள்ளை-யாரும் பொருளால் ஒருவரேயாதலேயன்றிப் பண்பு உறுப்பு

10. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை 6, 15, 7, 2.
11. மேலது 13.

செயல் என்பவற்றாலும் ஒருவராயுள்ள இயைபினை இரு பாடல்களில்[12] ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

திருக்கழுமல மும்மணிக்கோவை

திருவெண்காடர் என அழைக்கப்பெறும் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய பல நூல்களுள் இந்நூலும் ஒன்று. சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் 'கழுமலம்' என்பது மொன்று. திருஞானசம்பந்தர் பிறந்தருளிய இத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளிய இறைவன்மீது அகவல், வெண்பா. கலித்துறை எனும் மூவகைப் பாக்களால் போற்றிப் பரவிப் பாடியதாதலின் 'திருக்கழுமல மும்மணிக்கோவை' எனும் பெயர்த்தாயிற்று.

இந்நூலில் தற்பொழுது முதல் பன்னிரண்டு பாக்களே கிடைத்திருக்கின்றன. ஆயின் சில பதிப்புக்களில் முப்பது பாக்கள் அச்சிடப்பட்டிருப்பதையும் காணமுடிகின்றன. இறுதியில் சேர்க்கப்பெற்ற பதினெட்டுப் பாக்கள் பிற்காலத்துப் புலவரொருவரால் பாடப்பெற்றுச் சேர்த்திருக்கலாம். இது ஆய்வுக்குரியது.

இப்பனுவலில் திருத்தோணியப்பரின் பெருமைகள் பல பாக்களில் எடுத்தியம்பப்பட்டிருக்கின்றன சீர்காழிப் பெரும் பதியின்கண் எழுந்தருளியிருக்கின்ற முதல்வன், நான்மறைக்கும் அப்பாற்பட்டவன்; எல்லா உலகங்களுக்கும் வினைமுதற் காரணனாய் உள்ளவன்; அகக்கலன்கள் எனப்படும் அந்தக் கரணங்கட்கும் எட்டாதவன்: யாவற்றிற்கும் மூலமுதல்வனாயுள்ளவன். இடத்திருக்கையில் மான் கன்றையும், வலத்திருக்கையில் மழுப்படையையும் திருமிடற்றில் நஞ்சு அடக்கிய நீலவண்ணத்தையும், திருமுடியின்கண் ஆருயிரின் அடையாளமாகிய இளம் பிறையையும் தாங்கியவன். யோகவடிவினன் மூன்று திருக்கண்களை உடையவன், அறத்திற்குப் பகையாம் தீயோரை வருத்தும் அறத்தின் வடிவான ஆனேற்றினை உடையவன்[13] இத்தகைய பெருமை பெற்ற சிவபெருமான் வீற்றிருந்தவனும் திருக்கழுமலத்தைக் கைகூப்பித் தொழாதவர் மெய்யுணர்வு உடையவராகார்; அவர் கடல்போன்ற பேராக்

12. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை 8,10.
13. திருக்கழுமல மும்மணிக்கோவை 3,5,7,8,10.

காமத்தே அழுந்தி மீளார். அதனால் பிறவித் துன்பம் நீங்காது வந்து வருத்தும்; அதனை நீக்கிக் கொள்ளும் வழிவகைகளும் அறியார்; பிறவிக்கு வித்தான ஆணவமலத்தைப் போக்கிக் கொள்ளவும் மாட்டார்[14] என்றுரைக்கின்றார் பட்டினத்தடிகள்.

பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானாகிய இறைவன் உமையவளுடன் தோணிமீது வீற்றிருந்தவளும் திருக்கோலத்தை அழகிய சொல்லோவியமாகப் புனைந்து பாடிய இப் பனுவலின் முதற்பாடலில் இத்தலத்தில் பிறந்தருளிய திருஞானசம்பந்தர் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

சிவபாதவிருதயர் பெற்ற தளர்நடைப் பருவத்து இளங் குழந்தை ஞானசம்பந்தர் தம் தந்தையாருடன் பிரமதீர்த்தக் குளத்திற்கு வந்தார். இத்தீர்த்தத்துள் முழுகி மந்திரம் செபிக்கும் தம் தந்தையைக் காணாது பசியால் வருந்தி 'அம்மே!அப்பா!' என அழைத்து அழுத ஓசையைக் கேட்டுத் தோணிபுரத்தில் எழுந்தருளிய பெருமான் உமையம்மையாருடன் விடையின் மீதெழுந்தருளிப் பிரமதீர்த்தக் கரையை அடைந்து 'அங்கு நின்று அழுது கொண்டிருந்த பிள்ளைக்கு ஞானப் பாலடிசிலைக் குழைத்து ஊட்டியருளினார். குளத்தில் தம் கடமைகளை முடித்து வெளிவந்த தந்தையார் குழந்தையைப் பார்த்து. எச்சில் மயங்கிட உனக்கு இதனைக் கொடுத்தவர் யார் என வெகுண்டுரைக்கிறார். தம் தந்தையை நோக்கி 'எம்மை யிதுசெய்தபிரான் இவனே' எனக் கையால் சுட்டிக் காட்டித் 'தோடுடைய செவியன்' என்னும் திருநெறிய தமிழால் அடையாளங்களுடன் வெளியிட்டருளினார். இவற்றைத்.

''தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் நின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திறளை யவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோடு உடைய செவியன் என்றும்

14. திருக்கழுமல மும்மணிக்கோவை 8.

பீடு உடைய பெம்மான் என்றுங்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே''[15]

என்று பட்டினத்தடிகள் உளங்குழைந்து போற்றியிருக்கின்றார்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

இக்கோவையைப் பாடியருளியவரும் பட்டினத்துப் பிள்ளையாரேயாவர். திருவிடைமருதூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மகாலிங்கேசுரர் மீது அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறை என்னும் மூன்றுவகைப் பாடல்களால் இயற்றப்பட்ட நூலாதலின் இது 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை' என்று பெயர் பெற்றது. முப்பது பாக்களைக் கொண்டது. இத்தலத்தில் பட்டினத்தடிகள் கிழக்கு வாயிலில் இருந்ததற்கு அடையாளமாக அவரின் திருவுருவச்சிலை இப்பொழுது இருக்கிறது.

இப் பனுவலின் பல்வேறு பாக்களில் முழுமுதல்வனாம் சிவபெருமானின் புகழ் போற்றிப் பரவியுள்ளமையைக் காண முடிகிறது. பட்டினத்தடிகள் அவ்வாறு போற்றிப் பரவிய பாக்களின் கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

''திருவிடைமருதூரென்னும் திருப்பதியினைத் திரு இடமாகக் கொண்டு எழுந்தருளியவன்; மிகப் பழமையானவன்; சுடரொளி போன்றவன்; யோகவடிவுடன் காட்சியளிக்கும் முதல்வன்; நஞ்சு நிறைந்த பையோடு கூடிய நீண்ட பற்களை உடைய பாம்பினை அணியாகக் கொண்டவன்; நஞ்சுண்டகண்டன்; நெற்றிக்கண்ணை உடையவன்; எழுத்துகளில் முதன்மையானவன்.''[16]

வேதங்களும் தொடர்ந்து அறியாத மறைமுதல்வன்; மெய்யடியார்கட்கு இளைத்த காலத்து உதவத் தொகுத்து வைக்கப்பட்டுள்ள வைப்புப் போன்று உற்றுழி உதவும் ஒருவன்; வீடு பேற்றினை நல்கும் திருவடியை உடையவன்; முழுமுதல்வன்.[17]

15. திருக்கழுமல மும்மணிக்கோவை 1:23-33.
16. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 4,5.
17. மேலது 7.

இறைவன் முறை நிறுத்துவான் வேண்டிக் கோவணத்-தோடமைந்த அழகிய பலிக்கோலம் பூண்டு திருவிடைமரு-தூரில் எழுந்தருளியிருக்கிறான். திருவெண்ணீற்றினைத் திரு மேனியில் பூசியவன். எட்டுத் திருத்தோள்களை உடையவன்; உமையின் கணவன்; விநாயகரின் தந்தையானவன்; குமரக் கடவுளின் தந்தையானவன்.[18]

புண்ணிய வடிவினனாகிய கடவுள். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய முன்னோன். திருக்-கயிலைக்குத் தலைவன். அனைத்துயிர்கட்கும் தலைவன். விடையில் ஊர்ந்தருளுபவன் தேவர்களுக்குத் தலைவன். வீடுபேற்றிற்கு முதல்வன் பொன்போல் விரிந்த கொன்றை மாலையணிந்தவன்.[19]

குறைவு படாத பேரின்பப் பெருஞ்செல்வமுடையவன். முதலும், நடுவும், கடையும் இல்லாத, இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலங்களையும் கடந்த தனிப்பெருங் கடவுள். விரிந்த சடையினன். மாணிக்கமாகிய செம்மணியின் ஒளி போன்றவன். இறைவன் திருவடி ஒன்றே பிறவிப் பெரும் பிணிக்கு நல்ல சிறந்த மருந்து.[20]

மூவா முதல்வன், முக்கட் செல்வன், உமை தலைவன், வெள்ளி மலையினை உறைவிடமாகக் கொண்டவன்.[21]

உமையவள், மூத்தபிள்ளையார், குமரவேள், திருமால், நான்முகன், காளி, கலைமகள், திருமகள், கோடி உருத்திரர், இந்திரன், ஐராவதயானை, பன்னிரு பகலோன், நிலவோன், தீக்கடவுள், நிருதி, மழைக்கடவுள், காற்றுக் கடவுள், இரு-நிதிக்கிழவன், எட்டு நாகங்கள், எட்டு வசுக்கள் போன்றவர்கள் சிவபெருமானைப் போற்றி வணங்கிப் பல வரங்களைப் பெற்-றவர்களாகப் பட்டினத்தடிகள் குறிப்பிடுகின்றார்.[22]

அதேபோன்று முழுமுதல்வனாம் சிவபெருமானைப் போற்றிப் பாடிய அருளாளர்களாக, மூன்றுகோடி முனிவர்கள் வசிட்டர், கபிலன், அகத்திய முனிவன், தும்புரு, நாரதர், ஆளுடையபிள்ளையார், ஆளுடையஅரசர், ஆளுடையநம்பி,

18. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 16.
19. மேலது 21.     20. மேலது 22.
21. மேலது 28.     22. மேலது 28.

பெருந்துறைப்பிள்ளை (மாணிக்கவாசகர்), சிவவாக்கியதேவர் ஆகியோரையும் குறிப்பிடுகின்றார்.[23]

இறைவனின் பெருமையை உலகவர்க்கு விளக்குகின்ற விதத்தில் அடிமுடி தேடியது, உமையொரு பாகனானது, நஞ்சுண்டது பலிக்கோலம் பூண்டது, முப்புரத்தை எரித்தது, காமனை எரித்தது, காலனை உதைத்தது, திருமாலை விடையாகக் கொண்டது, இராவணனை அடர்த்தது, தக்கன் தலையைக் கொய்தது, யானையின் தோலைப் போர்த்தியது ஆகிய புராண வரலாறுகளை ஏற்ற விடங்களில் எடுத்தியம்புகின்றார்.[24]

> "மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
> பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு நீரைப்பாய்ச்சித்
> தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
> செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே"[25]

எனும் அப்பர் அருளிய பாடலுக்கு விளக்கவுரை போன்று பட்டினத்தடிகள் அருளிய இக் கோவையின் பத்தாவது பாடல் அமைந்து விளக்குகிறது.

மனமாகிய பெருங்காட்டில் முளைத்துள்ள வஞ்சகம் எனும் பெரிய நச்சு மரத்தை வேருடன் அப்புறப்படுத்த வேண்டும். நல்லமரம் முளைத்தற்குரியதாக அந் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். அன்பு என்கிற பாத்தியை அமைத்து, உண்மை எனப்படும் எருவை நன்றாகப் பரப்பி, காதல் எனப்படும் பத்தியாகிய விதையை விதைத்து, நாள்தோறும் காலம் தவறாது ஆர்வம் எனப்படும் நீரைப் பாய்ச்சி, பெருந்துன்பம் செய்கின்ற ஐம்பொறிகளாகிய பட்டி மாடுகள் உள்ளே நுழையாதபடி அமைதி எனப்படும் பொறுமை வேலியை அமைத்துக் காக்க வேண்டும். இவ்வாறு செய்தால் ஞானமெனும் முளை பழுதில்லாமல் முளைத்தெழும்; அரு-

23. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28.
24. மேலது 13:20, 20:19 20; 1:66, 13:28, 23: 13:19, 11; 13:15, 16:1-2, 19:12; 13:16,18 13:21, 15:28; 15:6; 18; 18; 20.
25. அப்பர் தேவாரம் 4.76.2.

ளெனும் பசுந்தளிர்கள் தளிர்க்கும். அதன் பிறகு எடுக்குந்தோறும் கெடாத காமம், வெகுளி எனும களைகளைக் களைந்தெறிய வேண்டும். இவ்வாறு நிலத்தைப் பண்படுத்திச் செய்துவரின் அப் பயிர் செம்மையாக வளர்ந்து மெய்மயிர் முகிழ்த்துக் கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து, திருவைந்தெழுத்து எனும் காய் தோன்றி, நீலகண்டமும் முக்கண்ணும் எண்தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம் போலும் செந்நிறமுடையதாய் வெள்ளை நீறுபூசி அறுசுவை அதனினும் மிக்க சுவையுடைய மருத மாணிக்கமெனும் இனிய கனியாகிய சிவபோகம் கிடைக்கும்.

வரகுணபாண்டியன் ஓர் அந்தணனைக் கொலை செய்த குற்றத்தைப் போக்குவதற்காகப் பல அறச்செயல்களைச் செய்கிறான். இருப்பினும் எவற்றாலும் அக்குற்றம் நீங்கவில்லை இறுதியில் இத் திருவிடைமருதூர்த் தீர்த்தத்தில் மூழ்கித் தான் செய்த குற்றத்தைப் போக்கி நலமடைகின்றான். இம்மன்னன் வரலாற்றைக் 'கொண்டலின் இருண்டகண்டம்'[26] எனத் தொடங்கும் பாடலில் விரிவாகப் பட்டினத்தடிகள் குறிப்பிடுகின்றார்.

## ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை

சைவ சமய அருளாளர்கள் பாடிய திருப்பதிகங்களைத் தொகுத்து இசை வகைக்கேற்பத் திருமுறைகளாக வகுத்த பெருமை பெற்ற நம்பியாண்டார் நம்பி அருளிய பத்துப் பனுவல்களில் 'ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை'யும் ஒன்றாகும். வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கச் சீகாழிப் பதியில் அவதரித்த ஞானசம்பந்தப்பிள்ளையின்மீது நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்ற ஆறு பனுவல்களைப் பாடியிருக்கின்றார்

ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை என்பது அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறை எனும் மூவகைப் பாக்களால் இயன்றது இப் பனுவலில் முப்பது பாக்கள் உள்ளன.

26. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28:34-55.

ஆளுடைய பிள்ளையாரை இப் பனுவலில் ஞானசம்பந்தன், காழிநாடன், கழுமலநாடன், காழிப்பிள்ளை, கவுணியன், கவுணியர்தலைவன், மலைமகள்புதல்வன், தண்டமிழ்விரகன், நறறமிழ்விரகன், வண்டமிழ்விரகன், சைவசிகாமணி, தெய்வநாயகன் எனும் பெயர்களால் பல்வேறு பாக்களில்[27] குறிப்பிட்டிருக்கின்றார்.

செந்தழலாய் நின்றவன், அடியவர் உள்ளத்தில் இருப்பவன், மழுப்படையைக் கையிலேந்தியவன்[28] என்று சிவபெருமானைப் போற்றிய நம்பியாண்டார் நம்பி, அடிமுடி தேடிய வரலாற்றையும், யானைத்தோல் போர்த்திய வரலாற்றையும்[29] குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆளுடையபிள்ளையாரின் புகழ் பாடவந்த இப்பனுவலில் பிள்ளையாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் போற்றும் பாக்களும், அவர் திருவாய் மலர்ந்தருளிய ஞானத் தமிழ்ப் பதிகங்களின் சிறப்பினை விரித்துரைக்கும் பாக்களும் பிள்ளையாரைக் காதலித்த தலைமகளது துயர் கிளந்துரைக்கும் அகத்துறைப் பாக்களும், அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமைந்த அகத்துறைப் பாக்களும் இடம்பெற்றிருக்கின்றன.

'அடுசினக்கடகரி' எனத் தொடங்கும் பாடலில்[30] ஞானசம்பந்தர் சிவனருளால் இவ்வுலகில் திருவவதாரம் செய்தருளிய திருக்கழுமலத் தலத்திலிருந்து அவர் வரலாற்றுத் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைத்திருக்கின்றார். மலையரசன மகள் உமையவள் அளித்த ஞானப்பாலுண்டு இறைவனைப் போற்றிப் பாடுகின்றார். திருக்கோலக்காவில் செம்பொற்றாளம் பெற்றது, திருமருகலில் வருந்தமுற்ற பெண்ணொருத்தியின் துயர்கேட்டு இரக்கங் கொண்டு அரவின் நஞ்சேறிய அவள் கணவனை உயிர்ப்பித்தது, திருமறைக்காட்டில் திருநாவுக்கரசருடன் சேர்ந்து திருக்கதவினைத் திறக்கவும்

27. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை 2, 1:10; 13;13;26; 3, 1:10, 10:4; 1, 11, 10:6; 1:9, 16:14; 10:5, 19:12; 25:7; 13:15; 22:9
28. மேலது 2, 3, 6.
29 மேலது 2, 4:17.
30 மேலது 4

ாடவும் செய்தது. திருவாத்துறையில் இறையருளால் முத்துச் சிவிகை பெற்றது. திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண் பனையாக மாற்றியது. திருவாவடுதுறையில் ஆயிரம் பொன் நிறைந்த பொற்கிழி பெற்றது. உறியையும் பீலியையும் கையில் கொண்ட சமணர்கள் கழுவேறிய துன்பக்காட்சியைக் கண்டது, திருக்கொள்ளம்பூதூரில் ஆற்றின் இக்கரையில் நின்ற ஓடக்காரன் இல்லாமல் இறையருளால் அக்கரை செல்லச் செய்தது, வைகையாற்றில் வெள்ளத்தை எதிர்த்து ஏடு சென்றது போன்ற பல்வேறு அற்புத நிகழ்ச்சிகள் இப் பாடலில் கூறப்பட்டிருக்கின்றன. முதற்பாடலிலேயே,

> ''ஏழிசை யாழை யெண்டிசை யறியத்
> துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்''[31]

என்று சம்பந்தர், யாழ்முரி பாடியதைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிற்காலத்தில் பல்வேறு சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகுவதற்குரிய மூலங்களை அருளாளர்கள் தாங்கள் பாடிய பாக்களில் எடுத்தியம்பி இருக்கின்றனர். சில சிற்றிலக்கியங்களையும் புதிதாகத் தோற்றுவித்த பெருமையும் அவர்களுக்குண்டு. சேரமான் பெருமாள் நாயனார் அருளிய 'திருவாரூர் மும்மணிக்கோவை' எனும் நூல் மும்மணிக்கோவைச் சிற்றிலக்கியங்களில் முதல் பனுவலாகத் திகழ்கிறது. இதைத் தொடர்ந்து பலர் மும்மணிக்கோவை நூல்களைப் படைத்திருக்கின்றனர். இவற்றுள் பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்ற ஏழு மும்மணிக்கோவை நூல்களைப் பற்றி இக் கட்டுரையில் ஆராயப்பெற்றன.

31. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை 1 : 8 - 9.

# 9. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

தமிழில் பிற்காலத்தில் பூத்துக் குலுங்கித் தழைத்த சிற்றிலக்கியச் செல்வத்துள் பிள்ளைத்தமிழும் ஒன்று. வழிபடு-கடவுளையோ, தனிப்பெருந் தலைவனையோ, குழந்தையாகக் கருதிப் பருவம் ஒன்றிற்குப் பத்துப் பாக்கள் வீதம் பத்துப் பருவங்களாக ஒருநூறு பாக்களில் பாடுவது பிள்ளைத்தமிழாகும். இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பத்துப் பருவங்களைக் கூறுவது ஆண்பாற் பிள்ளைத்தமிழ். இப்பத்தில், இறுதி மூன்று நீக்கி, அவற்றிற்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவைகளை இணைத்துப் பாடுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும்.

தொட்டிக்கலை எனும் ஊரில் எழுந்தருளியுள்ள விநாயகர்மீது பாடிய ஆண்பாற் பிள்ளைத்தமிழும், குளத்தூரில் எழுந்தருளியுள்ள அமுதாம்பிகை மீது பாடிய பெண்பாற் பிள்ளைத் தமிழும் சிவஞான சுவாமிகள் பாடிய பிள்ளைத் தமிழ் நூல்களாகும்.

பொதுவாகப் பிள்ளைத்தமிழ் பெற்ற கடவுளர்களுள் முருகனுக்கும், உமையம்மைக்கும் எழுந்த இலக்கியங்களே அதிகமாகக் காணப்பெறுகின்றன. ஆயின் விநாயகப் பெருமான் மீது பாடிய பிள்ளைத்தமிழ் நூல்கள் இதுவரை இரண்டுதான் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று சுவாமிகள் அருளிய 'திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், ஆகும். மற்றொன்று, சுவாமிகளின் மாணாக்கராகிய கச்சியப்ப முனிவர் இயற்றிய 'சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ்' ஆகும்.

நூலாசிரியர்

இந்நூலை இயற்றியவர் மாதவச் சிவஞான முனிவராவர். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

நெல்லை மாவட்டத்தில் பொதியமலைச்சாரலில் அமைந்துள்ள விக்கிரமசிங்கபுரத்தில் உயர் சைவ வேளாளர் மரபில் ஆனந்தக்கூத்தருக்கும், மயிலம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார் முக்களாலிங்கர் என்று பிள்ளைத் திருப்பெயர் சூட்டப் பெற்று விளங்கினார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப இளமைப் பருவத்திலேயே சிவபெருமானிடத்துப் பத்திமையும், சிவனடியார்களிடத்துப் பற்றும் மதிப்பும் கொண்டு விளங்கினார்.

இவர் மாணவப் பருவத்தில் விக்கிரமசிங்கபுரத்திற்குத் திருவாவடுதுறைத் திருமடத்திலிருந்து சில முனிவர்கள் எழுந்தருளினர். அவர்களைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று திருவமுது செய்வித்துப் பின்னர் அவர்களுடனேயே திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்றார். அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீன இளவரசு சுவாமிகளாய் எழுந்தருளியிருந்த பின்வேலப்ப தேசிகரால் சமய தீக்கை, விசேட தீக்கை முதலியன செய்விக்கப் பெற்றுச் 'சிவஞானம்' என்ற தீக்கைப் பெயரும் பெற்றார்.

சிவநெறி விளக்கும் செந்தமிழ் நூல்கள், வடமொழி நூல்கள் முதலான பல கலைச்செல்வங்களையும் ஐயம் திரிபறக் கற்றுத் தெளிந்தார். இவரது பேராற்றலைக் கண்ட அறிஞர் உலகம், இவரை 'வடமொழிக் கடலும் தென்தமிழ்க் கடலும் நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான முனிவர்' என்று பாராட்டிப் போற்றியது. கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் முதலிய பன்னிரு மாணவர்களின் மெய்யாசிரியராக விளங்கினார்.

தமிழ் இலக்கணக் கடலைக் கரை கண்டுணர்ந்தவர் என்பதனைத் தொல்காப்பியப் பாயிரச் சூத்திர விருத்தி உரையும், சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் உரைத் திருத்தமும், இலக்கண விளக்கச் சூறாவளியும் இனிது விளக்கும்.

காஞ்சிப்புராணம் முதற்காண்டம், சோமேசர் முதுமொழி வெண்பா, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயில் அந்தாதி, கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கச்சியானந்த ருத்திரேசர் பதிகம், செப்பறைப்

பதி அகிலாண்டேசுவரி பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, திருத்தொண்டர் திருநாமக் கோவை, பஞ்சாக்கரதேசிகர் மாலை, கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தி ஆகிய பதினைந்து இலக்கிய நூல்கள் இவர் ஒரு பெருங் கவிஞர் என்பதை எடுத்துக் காட்டும்.

தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயம் என்னும் தருக்க நூல் அளவை நூல்களில் இவர் பெற்றிருக்கும் ஆழ்ந்த திறமையை உணர்த்தும்.

சிவஞான மாபாடியம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கவுரை, 'என்னை யிப்பவத்தில்' என்னும் செய்யுட் சிவசமவாதவுரை மறுப்பு, 'எடுத்து' என்னும் சொல்லுக்கு இட்ட வைரக்குப்பாயம், சித்தாந்த மரபு கண்டன கண்டனம் ஆகிய சமய நூல்கள் இவர் சிறப்பினைக் குன்றி லிட்ட கோல விளக்குப் போலத் திசை எட்டும் புகழ்க்கதிர் பரப்பி நிற்கின்றன.

சித்தாந்தப் பிரகாசிகை எனும் நூல் இவர் உரைநடைத் திறனைக் காட்டும்.

சுலோக பஞ்சகம், சிவதத்துவ விவேகம் எனும் நூல்கள் இவரது மொழிபெயர்ப்புத் திறனையும் இவர் சைவத்தின்மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றையும் எடுத்துக்காட்டும்.

சுவாமிகளின் தோற்றப் பொலிவு கண்டாரை வயப்படுத்தும் கருணைத் தோற்றமாகும். புண்ணியத்தின் பொலிவாகவும், அற்புதக் கோலக் கொழுந்தாகவும் விளங்கினார். இவரது அருட்டிரு வடிவத்திலும், ஞானத் திருவிலும், தோய்ந்து மகிழ்ந்த இவர் மாணவரான தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இவரைப் போற்றிப் பாடிய தனிப் பாடல்களுள் ஒன்று பின்வருவது :

''கருணைபொழி திருமுகத்தில் திருநீற்று நுதலும்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு துறவோடு பொறையுளத்தில்
பொறுத்தே
பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத மனமும்
மருவினர்கள் அகலாத ஞானமே வடிவாம
வளர்துறைசைச் சிவஞான மாமுனிவன்
மலர்க்கரனை

ஒருபொழுதும் நீங்காமல் எமதுளத்தில் சிரத்தில்
ஓதிடுநா வினிலென்றும் உன்னிவைத்தே
உரைப்பாம்''

தமிழ் இலக்கண இலக்கியத்தில் சிறந்த புலவராகவும், சைவ உலகில் ஒளிவிளக்காகவும், திருவாவடுதுறை ஆதீனக் குலதெய்வமாகவும் திகழ்ந்த சுவாமிகள் திருவாவடுதுறையில் விசுவாவசு ஆண்டு, சித்திரைத் திங்கள் ஆயிலிய நன்னாளில் (கி பி. 1785 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்) நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடி நீழலை அடைந்தார்.

கலைசைத்தலம்

இத்தலம்[1] சென்னை மாநகரிலுள்ள ஆவடிக்கு அருகில் உள்ளது. கலைசை, கலைசாபுரி, கோவிருந்தபுரம் என்னும் பெயர்களால் வழங்கப்பெறும். இங்கே பண்டைக்காலத்தில் பசுக்கொட்டில்கள் மிகுதியாக இருந்த காரணத்தினால் 'தொட்டிக்கலை' என்னும் பெயர் உண்டாயிற்று என்று ஆன்றோர் கூறுவர் தொட்டி-பசுத்தொழுவில் உள்ள கழுநீர்த் தொட்டி. இங்கே இருந்த பழைய கோயிலானது கேசவ முதலியார், வேதாசல முதலியார் என்பவர்களுடைய முன்னோர்களால் மிகப் பெரிதாக அமைக்கப்பெற்று நித்திய நைமித்-தியங்கள் சிறப்புற நடத்தப்பெற்று வாலாயின. இக்காலத்தும் அவர்களுடைய பரம்பரையினரது மேற்பார்வையில் இக் கோயில் இருந்து வருகின்றது.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர் திருப்பெயர் செங்கழுநீர் விநாயகர்; சிவபெருமான் திருப்பெயர் சிதம்பரேசர்; அம்மையின் திருப்பெயர் சிவகாமி என்பதாகும். இங்கே தியாகேசப் பெருமானின் சன்னிதியும் உண்டு. இத்தலத்தில் நான்முகன் சிவபெருமானை வழிபட்டு அமிர்தகலசத்தைப் பெற்றதாகக் கூறுவர். அதனால் அப்பெருமானுக்குக் கலசத்தியாகர் என்னும் திருப்பெயரும் வழங்கலாயிற்று.

1. உ. வே. சா., கலைசைக்கோவை, முன்னுரையில் எழுதியுள்ள குறிப்புகளை அடியொற்றித் தலம் தொடர்பான செய்திகள் கூறப்படுகின்றன. (மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1935).

சிவபெருமான் ஒருசமயம் இங்கே நடனம் செய்தருளியதாக ஒரு வழக்கும் உண்டு. சிவகங்கை என்னும் தீர்த்தம் ஒன்றும் திருவொற்றியூரில் உள்ளதைப் போன்று நந்தியோடை என்னும் நீர்நிலை ஒன்றும் இங்கே உள்ளன. திருவொற்றியூர்த் தியாகேசப் பெருமானுக்கும் செய்யப்படும் சிறப்புக்கள் போன்றே இத்தலத்திலுள்ள பெருமானுக்குச் செய்யப்பட்டுவருவது குறிக்கத்தக்கது. வசந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இத்தலத்தைப் பற்றிய செய்திகள் கர்ண பரம்பரையில் வந்தனவாகத் தெரிகின்றன.

சுவாமிகள் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள செங்கழுநீர் மீது 'பிள்ளைத்தமிழ்' ஒன்றையும், சிதம்பரேசர் மீது 'பதிற்றுப்பத்தந்தாதி' ஒன்றையும் பாடியிருக்கின்றார்.

நூலமைப்பு

திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் நூல் தொடக்கத்தில் விநாயகக் கடவுள், ஆசிரியர் கருத்துப் பற்றிய இரண்டு விருத்தங்கள் இருக்கின்றன. அடுத்துக் காப்புப் பருவம் தொடங்கிச் சிறுபறைப் பருவம் ஈறாக ஒன்பது பருவங்களிலும் பருவத்திற்கு ஐந்து பாடல்கள் வீதம் நாற்பத்தைந்து ஆசிரிய விருத்தங்கள் இருக்கின்றன பத்தாவதாகிய சிறுதேர்ப் பருவத்தில் ஆறு பாடல்கள் இருக்கின்றன ஆக மொத்தம் 53 பாக்களை இப் பிள்ளைத்தமிழ் கொண்டிருக்கின்றது.

நூற்கருத்து

நூலின் தொடக்கத்தில் 'ஆசிரியர் கருத்'தில் இப் பிள்ளைத்தமிழ் பாடிய தம் உள்ளக்கருத்தை ஆசிரியர் வெளியிடுகின்றார். இறைவன் அடியவர்களை ஆட்கொள்வதற்காகவே அருளுருக் கொள்கின்றனன். அந்த உருவத்தின் இளமைப் பருவத்தைக் காப்புப் பருவம் தொடங்கிச் சிறுதேர்ப் பருவம் ஈறாகப் பத்துப் பிரிவுகளாகப் பிரித்துப் பெண்மக்கள் சொல்வது போலத் தொட்டிக்கலையில் உள்ள செங்கழுநீர்ப் பிள்ளையார் மேல் இந்நூலை இயற்றி இருக்கின்றார். பெண்ணாக இருந்து பிள்ளைமேல் அன்பு காட்டினால் இயற்கை அன்பு பிறக்கும். ஆனால் தாய் ஆணாக ஆனமையினால் பெண்ணாகத் தம்மைக் கருதி அன்பு காட்டுகின்றார். இஃது எப்படி இருக்கிறதென்றால், ஓரிடத்தில் நடைபெறுகின்றதொரு கூத்தில் ஒருவன்

வேறொருவன் உருவம் தாங்கி நடிக்கும்பொழுது அவ்வுருவத்துக்கு உரியவனைக் காட்டிலும் அவ்வுருவம் தாங்கி வந்தவன் போல் தமது நிலை இருக்கிறது என்கிறார். அவ்வாறு வேற்றுருவம் தாங்கி வந்தவனுக்கு மக்கள் பெருமதிப்புக் கொடுப்பதோடமையாமல் பெருஞ்செல்வமும் கொடுப்பர். அதுபோலப் பிள்ளையாரும் மெய்யாகவே துதித்துத் தொண்டு புரிகின்ற பெண்களைக் காட்டிலும் பெண்ணாக எண்ணி அன்பு காட்டி நடித்துத் தொண்டு புரிகின்ற தமக்கு நிறைய அருள் வழங்குவார் என்று எண்ணிப் பாடுகின்றார்.

காப்புப் பருவம் :- விநாயகச் சிறு குழந்தைக்கு எவ்வித இடையூறும் வாராமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் எழுச்சியில் விளைந்ததே இக் காப்புப் பருவம். பிள்ளைத்தமிழில் முதலாவதாக இடம்பெறும் இக் காப்புப் பருவத்தில் திருமால் முதலாக முப்பத்து முக்கோடித் தேவர் ஈறாகப் பதினொருவர் அல்லது பன்னிருவர் காப்பு வேண்டிப் பாடுவது மரபு. இந்நூலாசிரியர் அத்துணைப் பேருக்கும் ஐந்து பாக்களிலேயே காப்புக் கூறியிருக்கின்றார்.

உலகம் முழுவதும் சென்று உலாவி அடியவர்களுக்கு அருளுவதற்காகவே கலைசைப்பதியில் அமர்ந்திருக்கின்ற விநாயகரை, பெருங்கடலையே படுக்கை இடமாகக் கொண்ட 'புருடோத்தமன்' எனும் திருப்பெயரை உடைய திருமால் காத்தருள வேண்டுகிறார். சிதம்பரேசரும், சிவகாமியம்மையும் காத்தருள வேண்டுகிறார். அடுத்து மூத்த பிள்ளையாரைக் காக்கும்வண்ணம் இளைய பிள்ளையாரை வேண்டுகின்றார். இறுதியாக வைரவக் கடவுள், நான்முகன், இந்திரன், இலக்குமி, கலைமகள், துர்க்கை, சத்தமாதர், முப்பத்து முக்கோடித் தேவர் ஆகியோர் கலைசை விநாயகப் பிள்ளையாருக்கு எவ்வித இடையூறும் வராமல் இருக்கும் பொருட்டுக் காத்தருள வேண்டுகின்றார்.

செங்கீரைப் பருவம் :- ஐந்தாம் திங்களில் நடைபெறும் இப்பருவத்தில், குழந்தை ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்து முகம் அசைய ஆடுவதாகும். பிள்ளையார் ஆனைமுகம் உடையவராதலின் அவர் முகத்தில் முளைத்து அரும்பிய இரு வெண்-

கொப்புகளில் தங்கத்தாலான பூண் பொருந்தி இருக்கின்றது. பிள்ளையார் முகத்தை அசைக்கின்றபொழுது கொம்பும் அசைகின்றது ஆசிரியர் இப் பருவத்தில் பலவகையான கற்பனைகளைச் சுவைநயத்துடன் தோய்ந்துக் குழைத்துத் தருகின்றார்

தாலப் பருவம்:- (தால்-நா) நாவை அசைத்து எழுப்பும் ஒலியையும். அதனைத் தொடர்ந்து வரும் இன்னிசையையும் கேட்டுக் குழந்தை களிக்கும் பருவமாகும். இஃது ஏழாவது திங்களில் நடைபெறும். தாலாட்டைக் கேட்டால் மனம் ஒன்றும்; கண் குவியும்; குழந்தை உறங்கத் தொடங்கும். இப்பருவத்தில் குழந்தையின் பண்பு நலன்கள் பாராட்டப் பெறும்

''மலை மடந்தை அருள்பாலா தாலோ தாலேலோ
மதமிருந்து இழி கபோலா தாலோ தாலேலோ
அலகில் அன்பர் பணி காலா தாலோ தாலேலோ
அருள் சுரந்திடும் விசாலா தாலோ தாலேலோ
இலகுகின்ற பணி மார்பா தாலோ தாலேலோ
இனிய மந்திர சொரூபா தாலோ தாலேலோ
பொலிபெருங் கருணையாளா தாலோ தாலேலோ
புகழ்பெறும் கலைசைவாணா தாலோ தாலே-
லோ''(16)

என்று ஆசிரியர் பிள்ளையாரைப் பாராட்டித் தாலாட்டு கின்றார்.

சப்பாணிப்பருவம் :- இரு கைகளையும் ஒருங்கு சேர்த்துக் கொட்டும் பருவம். இஃது ஒன்பதாம் திங்களில் நடைபெறும். பிள்ளையார் கைகளின் பெருமை இப் பருவத்தில் ஆசிரியரால் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

முத்தப்பருவம் :- குழந்தையின் பதினொன்றாம் திங்களில் முத்தம் தருமாறு தாய் தந்தை போன்றோர் வேண்டும் பருவம். அன்புள்ளத்தைப் பிணைக்கும் இச்செயலில் வாய் முத்தம், கை முத்தம், உச்சி முத்தம், கால் முத்தம் இவற்றைப் பொதுவாகக் குழந்தைகளிடம் நாம்

எதிர்பார்க்கிறோம். பலவகை முத்தங்களுள் 'வாய் முத்தமே'' சிறந்தது ஆதலின் 'செழுங்கனி வாய்முத்தம் தருக முத்தமே' (21) என்றும், 'முத்துப் போன்ற பற்களைப் பொருந்திய கனிவாயால் முத்தம் தருக முத்தமே'[1] என்றும் கூறுகின்றார் ஆசிரியர்.

வருகைப் பருவம் :- இஃது ஓராண்டில் நடக்கத் தொடங்கும் குழந்தையைத் தம்மிடம் வருமாறு பெற்றோரும், மற்றோரும் அழைக்கும் பருவம். பிள்ளையார் நடந்து வருகின்ற அழகே அழகு! தாதியர் நடந்து வருகின்ற குழந்தையைக் காண்கின்றனர். வெண்ணிறங்கொண்ட தந்தங்களை உடைய யானைதான் நடந்து வருகின்றது என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் நன்றாக உற்றுப் பார்த்து 'அன்று அன்று. வேழம் அன்று; தவழ்ந்து விளையாடும் நம் விநாயகன்தான்; அவனுடைய விளையாட்டுத்தான் இது' என்கின்றனர். இருகை ஊன்றித் தவழ்ந்து விளையாடும் இப்பிள்ளையின் நடை மிக்க இன்பத்தைத் தருகின்றது. சிவஞான சுவாமிகள் தம்மைப் பெண்ணாகக் கருதிப் பிள்ளையாரை 'வருக வருகவே' என அழைக்கின்றார் அவர் அழைக்கின்ற அழகினைப் பின்வரும் பாடல் காட்டும்.

''உருகும் அடியார் அள்ளூற
உள்ளே ஊறும் தேன்வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன்வழிபோய்த்
திருகும் உளத்தார் நினைவினுக்கும்
சேயாய் வருக எமைஆண்ட
செல்வா வருக உமைஈன்ற
சிறுவா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருக உயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருக நறும்
பாகே வருக வரைகிழித்த
முருக வேட்கு முன் உதித்த
முதல்வா வருக வருகவே

1. திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் 22, 23, 24

மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே'' (50)

அம்புலிப் பருவம் :- ஓரளவு அறிவு முதிர்ந்த அஃதானது குழந்தையின் பதினெட்டாம் திங்களில் நடைபெறும் பருவத்தில் வானிலுள்ள நிலவைக் குழந்தையுடன் விளையாடுவதற்குச் செவிலித்தாயர் முதலியோர் அழைக்கின்ற பருவம். பிள்ளைத்தமிழில் இப் பருவப் பகுதி சுவை மிகுந்த ஒன்றாகும். இன்சொல், வேறுபாடு, கொடை, ஒறுப்பு(சாம, பேத, தான, தண்டம்) எனும் இந்நான்கு வழிகளில் அம்புலியை அழைப்பதாகப் பாடப்பெறுவது இப்பருவமாகும். ஏனைப் பருவங்கள் பாடுவதைவிட இப்பருவம் பாடுவது அரிது. இதனைப் 'பிள்ளைக் கவிக்கு அம்புலி புலியாம்' எனும் ஆன்றோர் வாக்கால் அறியலாம்.

சிற்றிற் பருவம் :- மூன்றாம் அகவையில் நிகழும் இப் பருவத்தில் சிறுமியர் சிறு வீடு கட்டி விளையாடுகின்ற பொழுது அதனைச் சிறுவர் தம் காலால் அழித்துக் கெடுதலைக் கூறுகின்ற இப்பருவத்தில் சிறுமியர் 'எம் வீட்டை அழிக்கவேண்டா' என்று வேண்டுவதாகக் கொண்டு அமைத்துக் கூறுவதாகும்.

சிறுபறைப் பருவம் :- இப் பருவத்தில் விநாயகப்பிள்ளையார் தம் மூன்றாம் வயதில் சிறுபறை கொட்டி விளையாடுகின்ற காட்சியைக் கூறுகிறார்.

சிறுதேர்ப் பருவம் :- விநாயகக் குழந்தை சிறுதேர் உருட்டி விளையாடி அருள் நல்குவதனைத் தெரிவிக்கும் பருவம். இஃது நான்காம் ஆண்டில் நடைபெறும்.

விநாயகர் பெருமை

விநாயகப் பெருமானைக் குழந்தையாக்கிப் பாட நினைந்த ஆசிரியர் இப்பிள்ளைத்தமிழில் அவரின் பெருமைகளைப் பலபடப் புனைந்து போற்றுகின்றார்.

பிள்ளையார் தம் தந்தையைப் போலச் சடையில் பிறை சூடியவர்; பாம்பை அணிகலனாக அணிந்தவர் (15) ஐந்து; கைகளும் குறுகிய கால்களும் கொண்டவர்; பெருத்த வயிற்றினர் (40) ; திங்களைப் பிளந்தாற் போன்று விளங்கும் ஒற்றைக்கொம்பினர்; இவர் தம்மைப் பிணிப்பாரும் செலுத்துவாரும் இல்லை என்பதற்கு அறிகுறியாகவும், உலகச் சூழலில் சிக்கித்

தம்மை மதியாது திரியும் உயிரினங்களாகிய யானைகளைப் பிணித்தற்கும் குறும்பு தணித்தற்கும் அறிகுறியாகவும் கயிறும், அங்குசமும் கைகளில் தாங்கியவர்; உண்மை அறிவு மகிழ்ச்சி இன்பம் என்னும் இவைகளையே உருவமாகக் கொண்டவர்; திருமகள் முதலான பொன்னுலக மாதர்கள் பிள்ளையாரின் திருவடிகளைத் தம் தலைமேல் தாங்கிக் கூப்பிய கைகளுடன் விநாயகர் திருவுள்ளம் மகிழுமாறு பணிபுரிவர். இளமை பொருந்திய அழகிய மலர்க் கைகளை உடையவர் (18) ; மதநீர் மிகுந்து ஒழுகும் கன்னத்தை உடையவர் (15) ; உமையவள் பெற்ற பாலர் (15) ; நான்கு மறைகளும் நினைத்ததற்கு அரிய பரம்பொருள் (39) ; இனிய மந்திரங்களை உடையவர் (15) ; தம்மை நினைந்து நினைந்து உருகும் அடியவர் உள்ளத்தில் வலிதில் புகுந்து இன்பவூற்று ஊறச் செய்பவர் ; மேலும் அடியவர்கள் உள்ளமாகிய திருக்கோயிலில் சென்று விளை-யாடுபவர் (42).

''மலைவுஅற முப்பொருள் இயல்பு தெளித்தருள்
ஒரு முதலே
மலையென முற்படு வினைகள் அறச்செயும்
எம துயிரே
அலையும் மனத்தையும் நிலையில் நிறுத்திடும்
அருளுருவே
அமிழ்தின் இனித்துடல் இடனும் முகிழ்த்தொளிர்
சிவ விளைவே
உலைவறு கற்பகம் எனவருள் கொட்டிய
மழ களிறே
உலகம் அனைத்துநின் உடலில் அடக்கிய
நிறை பொருளே
கலைசையின் உற்பல இறைவ முழக்குக
சிறு பறையே
கடலொலி பிற்பட இனிது முழக்குக
சிறு பறையே'' (45)

கலைசையில் வீற்றிருக்கும் விநாயகப் பெருமானின் பெருமைதனை நாள் முழுவதும் புகழ்ந்து கொண்டே இருக்க-லாம்.

பிற கடவுளர் பெருமை

இப் பிள்ளைத்தமிழில் விநாயகரின் பெருமை தவிர, சிவபெருமான், உமையவள் ஆகியோரைப் பற்றியும், இளவல்

முருகப் பெருமானைப்பற்றியும், திருமால், நான்முகன், துர்க்கை, வீரபத்திரர், இந்திரன், இலக்குமி, கலைமகள் முதலானோரின் பெருமைகளையும் ஆசிரியர் போற்றியிருக்கின்றார்.

விநாயகரின் தந்தை சிவபெருமானும், தாய் உமையாளும் ஆவர் (14). திங்களைச் சடையினில் அணிந்தவன் (13); அழகிய திருமேனியினன் (41); அழகிய கைகளைக் குவித்து வணங்கி இமையோர் கூத்தாடும் பெருமான் (44) என்று சிவபெருமானைப் பற்றியும், நறுமணம் வீசும் நீண்ட குழலினள் (2); கொடிய பாம்பு சூழ்ந்த இமயமலை அரசன் மகள் (9, 14) என்று உமையவளைப் பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார்.

''புருடோத்தமன் எனும் பெயரினன். அப்பெயருக்கேற்ப ஆடவர் யாவரினும் சிறந்தவன். பாற்கடல் கடைந்த பொழுது அக்கடல் முதலில் அலையாகிய கடலால் கொடிய நஞ்சை எடுத்துக் கொடுத்தது. அதன் பிறகே திருமகள், சுவை, அமுது, கதிர், மணி ஆகியவற்றைத் தமக்குத் தந்தது. இந்த நன்றியைப் பெரிதாக மதித்துப் பாராட்டியதுடன் நஞ்சு தந்த பெரும் பிழையை மன்னித்து அப்பெருங்கடலையே படுக்கை இடமாகக் கொண்டவன்'' என்று திருமாலின் பெருமைதனைக் கூறுகின்றார் (2). மேலும், கவுத்துவமணி விளங்குகின்ற மார்பினன்; இலக்குமியின் நாயகன்; பசுந்துழாய் மாலையினன் (51); முகுந்தன் (5) எனும் பெயரினன் என்று மாலின் புகழைப் போற்றிப் பாடுகின்றார்.

நான்முகன், தேவேந்திரன், இலக்குமி, வெண்மை நிறங்கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகள், துர்க்கை ஆகியோர் விநாயகரைக் காத்தல் வேண்டுமென்கின்றார்.

கற்பனை வளம்

சிவஞான முனிவரின் கற்பனைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன. சிறு குழந்தைகள் இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கை கொட்டி விளையாடுவர். பெற்றோர்களும் 'கண்ணே மணியே கை கொட்டு' என்றும், 'கை வீசம்மா கை வீசு' என்றும் கூறிக் குழந்தைகளைக் கை கொட்டச் செய்வது வழக்கம். குழந்தைகளும் 'சப்' என்று கைகொட்டி விளையாடுகின்ற இப் பருவத்தைச் 'சப்பாணிப் பருவம்' என்றனர் ஆன்றோர்.

விநாயகரின் வலப்பக்கத்துக் கை மேல் நோக்கி உயர்ந்தும், இடப்பக்கத்துக் கை கீழ்நோக்கித் தாழ்ந்தும் இருக்கின்றன. மேல் நோக்கிய கை காக்குங்கை; உயிர்களில் பிறப்பறுக்குநிலை முற்றிச் சிவபுண்ணியம் நிரம்பி மூவகைக் குற்ற நீக்க நிலை எய்தி இருவினைப்பயன் துய்க்கும்பொழுது இன்ப துன்பங்களை ஒப்பக் கருதும் தகுதி அடைந்துள்ளவர்களின் கட்டுகளை ஒழிக்கின்ற கையாக மேல் நோக்கிய கை விளங்கும். கீழ்நோக்கிய கை அவ்வடியார்களின் அகப்பற்றுக்கும் புறப்பற்றுக்கும் உரிய உயிரும், உடலும், பொருளுமாகியவற்றை ஏற்றுச் சுமைகளைப் பற்றி எண்ணாமல் இருக்கும் பொருட்டுத் தேறுதல் கூறும். இத்தகைய இக் கைகள் இரண்டும் சேர்ந்து கொட்டினால் என்னவாகும் என்று கற்பனை செய்த ஆசிரியர், ''இரண்டு கைகளும் சேர்ந்து தொடர்ந்து கொட்டுதல் ஈதலும் ஏற்றலுமாகிய கொள்கை வேறுபாடுடைய இக்கைகளுக்குள் பகைமை முதிர்ந்து இவற்றைத் தடுத்து நிறுத்தி அமைதிப்படுத்து மிக்கவர் எவரும் இல்லாமையால் சலியாமல் ஒன்றையொன்று சாடுதலை ஒத்திருக்கும்'' என்று கூறுகின்றார் (16).

இயற்கையிலேயே சிவந்த கையினை உடையவரான பிள்ளையார் தம்மை நாடி வந்தோர்க்கு இல்லை என்று சொல்லாமல் பரிசுப் பொருள்களை வாரி வாரிக் கொடுத்ததனால் மேலும் சிவந்து காணப்படுகின்றது. கையிலுள்ள விரல்களில் ஒளி வீசும் மணி பதித்த ஆழிகள் அணியப்பெற்றிருக்கின்றன. இத்தகைய கைகள் சப்பாணி கொட்டுவதனைக் கற்பனை செய்கிறார் சுவாமிகள். விநாயகர் முகத்தில் கன்னத்தில் மதநீர் ஒழுகுவதனால் மணம் பரப்பிக் கொண்டு இருக்கின்றன. அதனால் தும்பி, வண்டு, மிளிறு, சுரும்பு எனும் வண்டினங்கள் முழு மதியத்திலுள்ள புத்தமுதத்தை அள்ளியள்ளிப் பருகுவதற்காக அவுணர்கள் கூட்டங் கூட்டமாக வருவதைப் போல அடுத்தடுத்து உண்ண வந்து கொண்டே இருக்கின்றன. அந்தவேளை கை தட்டிக் கொண்டிருப்பது அவ்வண்டுகளை ஓட்டுவதற்குக் கொட்டுவது போல இருக்கின்றன என்கின்றார் (17).

உலகிலுள்ள யானைகள் வரம்புமீறிச் செல்லும்பொழுது பாகர்கள் அங்குசத்தால் குத்திக் கயிற்றால் பிணிப்பர். ஆனால் யானைமுகம் கொண்ட பிள்ளையாரோ தம் கைகளில் அங்குசமும் கயிறும் கொண்டு உலாவுவார். இச்சிறப்பைக் கருதா-

மல் முக ஒற்றுமையை மட்டும் கொண்டு உயிர்களாகிய யானைகள் விநாயகரைப் பின்தொடர்கின்றன. பிள்ளையார் அந்த யானைகளின் அறியாமைக்கு இரங்கி ஏளனமாகச் சப்பாணி கொட்டுவது போல இருக்கிறதாம். மேலும் பெற்றோர்களாகிய சிவனாரும் உமையாரும் வட்டிலில் உணவு படைத்து உண்ணும்பொழுது பிள்ளையார் அருகில் ஊர்ந்து போய், அந்த உணவில் கை வைத்துப் பிசைந்து, அவ்விருவர் அடி முதல் முடிவரை அவ்வுணவைத் தூவி, அதே நிலையில் தெருவிற்கு வந்து சிறுவர்கள் திரட்டி வைத்திருக்கும் புழுதிக் குவியலைக் காலால் எற்றிக் கையால் அள்ளுகின்றார். அந்நிலையில் கைகளைக் கொட்டுவது அவற்றில் ஒட்டியிருக்கின்ற பருக்கைகளையும் புழுதியையும் போக்குவதற்குத் தட்டுவது போல இருக்கின்றது. இவ்வாறு பிள்ளையார் சப்பாணி கொட்டுகின்ற காட்சியைப் புலவர் கற்பனை செய்து கூறுகின்றார் (19).

இதேபோன்று சிறுமியர் சிறு வீடு கட்டி விளையாடுகின்றனர். அங்குப் பிள்ளையார் குழந்தையாகி ஊர்ந்து வருகின்றார். அவர் வருகையைக் கண்ட சிறுமியர் தம் சிறு வீடுகளைப் பாழாக்கி விடுவாரோ என அஞ்சி அவரைப் பல படியாக வணங்கி வேண்டுகின்றனர். இக்காட்சியை மிக அழகாகச் சிவஞான சுவாமிகள் கற்பனை நயந்தோன்றக் கூறுகின்றார்.

வளைவு மிகுந்த வடிவத்தை உடைய வில் போன்ற நெற்றியை உடைய உன் தாயாகிய உமையவள் பார்த்து மகிழும் வண்ணம் பலப்பல விளையாட்டுக்கள் விளையாடி அருள் மலர்ந்து இங்கும் வருகின்றாய். சிறியவர்களாகிய நாங்கள் சிறுவீடு கட்டத் தொடங்கும் பொழுது உன்னைப் போற்ற மறந்தோம். அதனால் நீ கோபம் கொண்டு உன் செயலைக் காட்டுவது பொருந்தாது.

நாங்கள் அறியாது செய்த இக்குற்றம் நீங்குவதற்காகச் சிறு சோறு உனக்குத் தருவோம் (36). நாங்கள் உன்னை விருந்தினனாக அழைத்து வரலாமென எண்ணியிருந்தபொழுது நீயே வலிய விரும்பி வந்தாய். இதனை நினைத்துப் பெரு மகிழ்ச்சி கொண்டதனால் சிவந்த எம் வாயிற் பற்கள் வெளியே தெரியுமாறு புன்முறுவல் பூத்தோம். இதுதான் உண்மையேதவிர உன் யானை முகத்தைப் போல் முகமும்,

பூதவயிறு போல் பருத்த வயிறும், வளைந்த குறுகிய கால்களும், ஏனத்துக்குரிய நடையும் ஆகிய இவை உனக்கு அமைந்திருந்தல் பற்றிச் சிரித்திடவில்லை (37). வளைந்த வெண்மை நிறமுள்ள கொம்புகளுக்கும் அவற்றுக்கிடையே உள்ள துதிக்கைக்கும் எதிராக இளங்கொங்கைகளையும்; அவற்றுக்கிடையே மயிர் ஒழுங்கினையும் உடைய பவளம் பழுத்த சிவந்த இதழ்களை உடைய மகளிர் வாழும் பேரில்லங்கள்தாம் உன் சினத்துக்கு ஆளாக வேண்டியவை. உனக்கு எதிர்ப்பாக ஒன்றையும் பெறாத எம் சிறிய இல்லங்கள் உனக்கு ஆகாதனவல்லவே (38). நேற்று உன்னை விருந்துக்கு அழைக்க எண்ணியிருந்தோம். உன் மத ஆற்றின் பெருக்கம் எம் சிறு வீடுகளை அழிக்கக்கூடும் என்று கருதியே உன்னை அழையாமல் இருந்து விட்டோம். நினைத்தற்கரிய பரம்பொருளே! உன்னை அழையாதிருந்தது எம் அச்சத்தாலே அன்றிப் புறக்கணிப்பால் அன்று. உண்மையை அறியாமல் சினம் மிகுந்து எமக்குத் துன்பம் நேருமாறு பல குறும்புகள் புரிகின்றாய். இது உனது பெருந்தகைமைக்கு ஒவ்வாது (39). பருத்த வயிறு துருத்தித் தெரிய, உள்ளங்கையில் பணிகாரம் தாங்கி நீ எங்களை நோக்கி வந்தாய். நாங்கள் உன் வருகையைக் கண்டு, நீ உண்டது போக எஞ்சி இருக்கின்ற பணிகாரத்தைத் தருவதற்காக வருகின்றாய் என்று நினைத்தோம். ஆனால் அந்நினைப்புப் பாழாகுமாறு நீ எங்கள் இல்லங்களை எல்லாம் சிதைக்க முற்படுகிறாய்? கண்ணின் மணியே! நான்கு மறைகளும் கதறித் திரிந்தும் கண்டறியா கதியே! கலைசைச் செங்கழுநீர்ச் சிறுவா! இவ்வாறு நீ செய்வது முறையா? விக்கினங்களைச் செய்யும் ஈசுவரன் விக்கினேசுவரன் என்றும் நின் பெயர் விளக்கம் சிறியேமாகிய எம்மிடமோ தெரிவிப்பதற்குரியது? இதனால் உனக்குப் புகழா கிடைக்கும்?

இவ்வாறு சிவஞான சுவாமிகள் பருவந்தோறும் கூறுகின்ற கற்பனைகளைப் படிக்குந்தோறும் வனப்புத் தோன்றிச் சிறந்து விளங்குகின்றன.

அம்புலிப் பருவ அழகு

பிள்ளைத்தமிழில் சுவை மிகுந்த பருவமாகத் திகழ்வது அம்புலிப் பருவமாகும். பிள்ளைத்தமிழுக்கு 'அம்புலி-புலி' என்று ஆன்றோர் கூறுவர். சிவஞான சுவாமிகள் புலி என்னும் கிலி இன்றி அம்புலிப் பருவத்தை நடத்திச் செல்லும் பாங்கை இப்பகுதி ஆராய்கிறது

வானிலுள்ள நிலவைக் குழந்தையுடன் விளையாடுவதற்குச் செவிலித் தாயர் முதலியோர் அழைக்கின்றபொழுது இன்சொல், வேறுபாடு, கொடை (சாம, பேத, தான தண்டம்) எனும் நான்கு வகையால் அழைத்தல் மரபு

திங்களே! எம் மகன் வானிலுறையும் தேவர்களும், நான்மறைகளும் ஓலமிட உள்ளவன். குளிர்ந்த முத்துக்கள் உண்டாகப் பெற்று விளங்கும் நீண்ட கொம்பினை உடைய அழகு பெற்ற வானிலுள்ள யானை தரவந்து, தேவர்களும் நீங்காமல் வழிபட்டு மகிழ்ச்சி அடையுமாறு தொட்டிக்கலையில் தங்கி அருளாகிய அமிழ்தத்தைக் கொட்டி எங்களை ஆளுகின்ற முக்கண்களை உடைய சிவபெருமான் பெற்றுள்ள பல பண்புகளில் உலகம் காக்கும் பண்பே உருவாகத் தோன்றியவன். காண்பவர் வியப்புறும் வண்ணம் அழகிய சிவந்த மணி போல ஒளி வீசும் திருமேனியினன். நீ வெண்திங்கள் என்று வியந்து கூறப்பட்டாலும் உன் நிறமும் சிவப்புக் கலந்ததேயாகும். அதனால் இவன் உன்னை ஒத்திருக்க நீ இவனை ஒத்திருக்கிறாய். இத்தொடர்பால்,

''அண்டரும் பழமறையும் ஓலமிட நின்றவனோடு
அம்புலீ ஆடவாவே
அருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறொடு
அம்புலீ ஆடவாவே'' (31)

என்று முதலில் இனிய மொழிகள் கூறிக் கனிவொடு நிலவை விளையாட அழைக்கின்றார்.

இன்சொல் பல கூறி அழைத்தும் திங்களஞ் செல்வன் விளையாட வராமல் இருக்கின்றான். அடுத்து இருவர்க்குமிடையே காணப்பெறும் வேறுபாட்டைக் கூறி விளையாட அழைக்கின்றார்.

மதியமே! உன்னை எம் மகனோடு ஒப்பாகக் கூறினமையால் நீ செருக்குற்றிருக்கின்றாய். நிறத்தில் நீங்கள் இருவரும் ஒத்திருக்கின்றீர்கள். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் இருவர்க்கும் இடையில் காணப்படும் வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளதாகவன்றோ இருக்கின்றது. எங்ஙனம்? என்று நீ கேட்பாய். இதோ நான் ஒவ்வொன்றாகச் சொல்கிறேன். கேள்.

நீ ஒளி வீசி வெளி வருகின்றாய். பாதி உடம்பை உடைய பாம்பொன்று உன்னை உண்டு உமிழ்கிறது இது சிலவேளை நிகழ்வது. ஆனால் அப் பாம்பு விழுங்க வந்து விடுமோ என்று எப்பொழுதும் அஞ்சி அஞ்சி அலைந்து திரிகி-றாய். இவனோ உலகம் யாவையும் ஒருசேர அஞ்சத்தக்க வகையில் நஞ்சு பொருந்திய துளை பொருந்திய வெள்ளிய பற்களைக் கொண்டனவும், புள்ளிகள் நிறைந்த படத்தைப் பெற்றனவும் ஆகிய பாம்பின் கூட்டங்களை எல்லாம் உடம்-பிலுள்ள கை, கால், கழுத்து, தோள், விரல்கள் ஆகியவற்-றில் அணிகலன்களாக அணிந்திருக்கின்றான். மேலும் நீ வெண்மை (வெள்ளை, அறியாமை) மிகுந்து யாவரும் இகழும் வண்ணம் தேயும் உடல் உடையாய்; அவ்வுடலில் களங்க-மும் பெற்றிருக்கின்றாய். இவனோ செம்மை (சிவப்பு, நேர்மை) அமைந்து எப்பொழுதும் தேயாமல் ஒரே நிலையிலுள்ள திருமேனி கொண்டு களங்கம் இல்லாமல் இருக்கின்றான் (32). இவ்வளவு வேற்றுமை இருந்தாலும் உன்மீது கருணை கொண்டு தன்னுடன் விளையாட அழைக்கின்றதைப் பொருட்-படுத்தாமல் இன்னும் வராமல் இருக்கின்றாய்.

அம்புலியே! கரும்பை நெருக்கி அரைத்துச் சாறு வேறு சக்கை வேறாக ஆக்கும் ஆலை போலத் தேவர்கள் அனை-வரையும் கயமுகன் துன்புறுத்தி வந்தான். அவ்வாறு துன்புற்-றவர்களில் நீயும் ஒருவன் அன்றோ? உன்னை உள்ளிட்ட தேவர்கள் அனைவரையும் காப்பதற்காகக் கயமுகனைத் தாக்கி அழித்தவன் இவன் அன்றோ? உனக்கும் செய்த அந்த நன்மையை இவ்வளவு விரைவில் மறந்து விட்டாயே? இது உனக்குத் தகுமா? மேலும் தன்னை நினைத்து இடையூறு தீர்த்து உதவவேண்டும் என்று விண்ணப்பித்துத் தொழில் தொடங்குகின்ற யாவர்க்கும் முன்னின்று தடைகளைத் தவிர்த்து முடித்து வைப்பவன் இவன் ஒருவனைத் தவிர வேறு எவரும் இலர் இவன் பெருமையைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இப்போது நீ இங்கு இவனுடன் விளையாட வந்தால் உன்னை விழுங்குவதற்காகப் பின் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்ற பாம்பினைத் தன் திருமேனியில் அணிகலனாக உள்ள மற்ற பாம்புகளுடன் இதனையும் சேர்த்து அணிந்து கொள்வான். அத்துடன் உனக்கு இருந்த பாம்புத் தொல்லையும் நீங்கி நீ பயமின்றி எங்கும் செல்லலாம் (33).

இன்னமும் தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட தேவர்கள் பலரையும் சிதைத்துப் பலர் தலையைப் பாழ்படுத்தி உன்னையும் தேய்த்த வெற்றி வீரன் வீரபத்திரன் இவனா தம்பி என்பதை மறவாமல் இரு. ஒருசமயம் தன்னை மதியாமல் இருந்த திருமாலின் ஆழிப்படையை எடுத்து விழுங்கி விட்டான. அதன் பிறகு அவன் கெஞ்சிக் கேட்க அவனைக் கூத்தாடச் செய்து அதன்மேல் அவனுக்கு அதனை இவன் தந்தையும் அறிந்திருப்பாய். இதுமட்டும் அல்ல. தன்முன் நிற்பதற்கு அஞ்சி வெருண்டு ஓடாமல் சீறித் தன்னை எதிர்க்க வந்த அரக்கன் ஒருவனை வானத்தில் பந்து போல வீசியெறிந்து விளையாடியதையும் தெரிந்திருப்பாய். அதனால் நீ இவனைப் பகைத்துக் கொள்ளாமல் உடனே விளையாட வந்தால் உனக்கு நல்லது (34).

திங்களே! உலகோர் போற்றப்பெறும் இயல்புள்ள என் மகனின் சிறப்புக்களை யெல்லாம் இவ்வளவு நேரம் பொறுமையாகச் சொல்லியும் நீ கேட்கவில்லை என் மகனின் பரு வயிற்றையும், யானை முகத்தையும் பார்த்து முன் பொருமை எள்ளி நகையாடினாய். அதனால் கடுஞ்சினம் கொண்ட இவன் பலரும் கண்டு நகைக்கும்படியான இழி நிலையை உன்னை எய்தச் செய்தான். இஃது உன் வாழ்க்கையில் முன்னர் நிகழ்ந்தது. நான்முகன் முதலானோர் உனக்காக மனமிரங்கி வேண்டிக் கொண்டதற்கேற்பத் திருவருள் பெற்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாய். அதனை நினைத்தாவது காலதாமதம் செய்யாமல் உடனே வரவேண்டும். வானிலுள்ள நமக்குக் கலைசையிலுள்ள இவனால என்ன செய்துவிட முடியும் என்று நினைக்காதே. இவன் அங்கு வந்து உன்னை வதைக்க வேண்டுமென்பதில்லை. இங்கு இருந்தபடியே உன்னை வதைக்க அவனால் இயலும். நீ துருவமீன் பிணைப்பில் உள்ளாய். மாலை போலப் பல விண்மீன்களுக்கிடையில் அமைந்து ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு வீழாத நிலை உனக்கு இருக்கலாம். இதனால் எல்லாம் நீ செருக்குற்று இவனுடன் விளையாட வராமல் இருக்கலாம். இவன் கை நீண்ட துதிக்கை இங்கிருந்து கொண்டே தன் துதிக்கையை வானோக்கி உயர்த்தி உன்னைப் பற்றி எறிந்தால் நீ சிதைந்து மாள்வது உறுதி. இவை எல்லாவற்றையும்விட உன்னைக் கொல்வதற்கு எளிய வழி ஒன்றும் உள்ளது. அஃதாவது உனக்கும்

பாம்புக்கும் எப்பொழுதும் தீராப்பகை இருந்து கொண்டே இருக்கிறது. பாம்பைக் கண்டதும் நீ நடுக்கம் அடைவாய். இவனிடம் பாம்புகளுக்கோ குறைவில்லை. நீ விளையாட வராததை ஒரு பாம்பு உணர்ந்து கொண்டால் போதும். அத்துடன் உன் வாழ்க்கை முடிந்துவிடும். அதனால் உன் நன்மையைக் கருதியே சொல்லுகிறோம். இவன்,

''வெகுளுமுனம்
அம்புலீ ஆட வாவே'' (35)

என்று கூறி அம்புலியை அழைக்கின்றார்.

பிள்ளையாரின் குறும்பு விளையாடல்

குழந்தைகள் சிறு வயதில் செய்யும் குறும்பு விளையாடல்கள் பலவாகும். இங்குப் பிள்ளையாக உள்ளவர் கடவுட் பிள்ளை. இவர் குறும்புச் செயல்கள் வரம்பிலாற்றலுடைமையை விளக்குவனவாகும். யானை முகமும், தாழி வயிறும், குறுங்காலும் கொண்ட பிள்ளையார் குறுகுறுவென நடந்து தம் தந்தையாரை அடைந்து அவர் திருமேனியைக் கைகளால் பற்றி மேலேறுகின்றார். தம் கொம்பைச் சடைத்தொகுதிக்குள் நுழைத்து நிமிர்ந்து அதனை உதறுகின்றார். அங்குள்ள கங்கை நீரைக் கையால் அள்ளிச் சிதறுகின்றார். அதன்பின் திருமேனியிலுள்ள பாம்புகளையும், தலை மாலையையும், எலும்பையும், யானைத் தோல், புலித்தோல்களையும் எடுத்தெடுத்துத் தம் தந்தையார் கையிலுள்ள நெருப்பில் இடுகின்றார். சடையிலுள்ள பிறைத் திங்களைத் திருமேனியிலுள்ள பன்றிக் கொம்புடன் இணைத்துப் பொருத்தி முழுமதியாக்கி வானத்தில் செலுத்துகின்றார். அங்குள்ள கற்பக முதலான மரங்கள் தரும் நல்ல அணிகலன்களை எடுத்து, அத்திருமேனி முழுவதும் பூட்டி அழகுபடுத்தி இனிச் சிறுமைக்கு இடமில்லை என்று சொல்லித் திருக்கையை அசைக்கின்றார் (41).

சில வேலைகளில் தம் தந்தையார் திருமேனி மார்பிலும் சடையிலும் உள்ள பன்றிக் கொம்பையும் பிறைத் திங்களையும் பறித்து இரு கைகளிலும் குறுந்தடியாகப் பிடித்துக் கொண்டு அவர் திருக்கையிலுள்ள உடுக்கையை அடித்து ஓசை எழுப்புகின்றார். போர்வையாக உள்ள யானைத் தோலோடு கூடிய கொம்பைப் பிடுங்கிப் பறை முழக்குகின்றார். கொற்றவையின் காலின்கீழ் மிதித்துள்ள எருமைத் தலையின் தோலை உரித்தும்

திருமால் தம் இனிய வாத்தியத்தால் மகிழ்ச்சி உண்டாக அதற்கேற்பத் தொடர்ந்து ஆட்டம் ஆடியும் விளையாடுகின்றார் (44).

இயற்கை வளம்

கலைசை எனும் தொட்டிக்கலை நீர்வளம், நிலவளம் நிரம்பியது. இவ்வூரில் பொய்கைகள் பல உண்டு. அவற்றில் தாமரை, அல்லி, குவளை ஆகிய மலர்கள் மலர்ந்துள்ளன. பல்வகை மலர்களின் மணம் எங்கும் பரவிக் கொண்டிருக்கின்றன. வண்டினங்கள் பகலிலும் இரவிலும் வந்து வந்து தேன் உண்டு செல்கின்றன. இவ்வூரில் வாழ்கின்ற மக்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்குகின்றனர். இவ்வூரின் இயற்கைக் காட்சியுடன் விருந்தோம்பலையும் இணைத்துச் போற்றுகின்றார் ஆசிரியர். ஏழை மக்களை வரவேற்று இரவு பகல் என்று பாராமல் உண்ண உணவு தந்து மகிழ்வர். இச் செய்தியானது மூவுலகங்களிலும் வாழ்கின்றவர்களுக்கும் கேட்குமாதலால், ஏழைகள் அப் புகழ் மொழி வழியே செல்வர்களைத் தேடி வருகின்றனர். இதனைச் செல்வர்கள் புகழாகிய தூதுவரை விடுத்து ஏழைகளை வருவித்து உதவுகின்றனர் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இதற்கொப்பப் பொய்கைகளில் உள்ள மலர்கள் மணத்தை எங்கும் பரப்பி அதன் வழியாக வண்டினங்களை வருவிக்கின்றன. பகற்பொழுதில் தாமரையில் ஊறும் தேனை அவற்றுக்குத் தந்தும், இரவில் குமுதம் போன்றவற்றில் ஊறும் தேனை அவற்றுக்குத் தந்தும் உண்பிக்கின்றதாம். கலைசைப்பதி வாழ்கின்ற மக்கள் விருந்தோம்பலில் சிறந்திருக்கின்ற காட்சியுடன் இயற்கைக் காட்சியையும் இணைத்துப் பாடிய பாடலைக் காண்போம்.

''புதிய வாசந் தனைப் பரப்பிப்
புறத்தே எங்கும் திரிந்துஅயரும்
பொறிவண் டினங்கள் தமையழைத்துஅம்
புயத்தேன் ஊட்டிப் பகலோம்பி

முதிய நிசிவந் திடும்போது
முகை விண்டு அலர்ந்த நறுங்குமுதம்
ஊறிச் செழுந்தேன் முகந்துஊட்டி
முழுதும் சாத்துக் கடல்வரைப்பின்

வதியும் இரவோர் தமைக் கீர்த்தி
மகளாம் தூதின் வரக்கூவி

மகிழ்ந்து எப்போதும் எவ்வாறும்
வழங்கிக் காக்கும் பெருங்கொடையோர்

கதிய தடம்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ" (11)

அவ்வூரிலுள்ள பொய்கைகளில் கூரிய கூந்தலினை உடைய பெண்கள் நீராடச் செல்கின்றனர். அவர்கள் அப் பொய்கைக்குள் 'துடும்' எனப் பாய்கின்றனர் அதனால் எழுந்த ஓசையால் அங்கிருந்த வாளை மீன்கள் 'துண்' என்று மேலெழும். அதனைச் சூழ்ந்திருக்கின்ற மரங்களின் கிளைகள் தடுப்பதனால் அம் மீன்கள் அக் கிளைகளில் உள்ள காய் கனிகளை உதிர்த்துக் கொண்டு மேல் நோக்கிச் சென்று கிளை நுனியில் உள்ள தேன் கூட்டில் பாய்ந்து ஊடுருவி நிற்கின்றன (12).

நீரலைகள் முரசு போல ஒலிக்கின்றன. வண்டுகள் இசை பாடுகின்றன. துள்ளுகின்ற வரால் மீன்கள் தாவிக் குதித்தோடுகின்றன. இதனால் சங்கினங்கள் முத்துக்களை ஈனுகின்றன. இத்தகைய நீர்த்தடாகம் சூழ்ந்தது ஊரே கலைசைப் பதியாகும் (21).

கொத்துக்கள் நிறைந்த மலர்ச் சோலைகளில் குயில்கள் கூவிக் கொண்டிருக்கின்றன (2) தும்பி, வண்டு, மிஞிறு, சுரும்பு எனும் நால்வகை வண்டினங்கள் இசைமழை பொழிந்து கொண்டிருக்கின்றன (17) வாவிதொறும் தேன் பாய்கின்றது (36). பொழில்களும், சோலைகளும் சூழ்ந்திருக்கின்ற கலைசைப் பதியில் இயற்கைக் காட்சிகளைச் சுவாமிகள் இங்ஙனம் போற்றிப் பரவுகின்றார்.

அணிநலம்

பல்வேறு உவமைகளை ஆசிரியர் இந்நூலில் கையாண்டிருக்கின்றார். செந்நிறம் கலந்த இளந்தளிரானது ஒரு நிலையின்றி அசைவது போலக் குழந்தை ஐந்தாம் திங்களில் அசைகின்ற செங்கீரைப் பருவத்தில் பல உவமைகளை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

பிள்ளையாரின் முகம் தாமரை போன்றிருக்கின்றது. அதில் தோன்றும் சிறு வெண்கொம்பு பிள்ளைச் சிறுமதியம் போன்றிருக்கின்றது. அவனயை என்பவள் தன்னிடம் வந்து திருமால் முதலான மூன்று தேவர்களையும் சிறு குழந்தைகள் ஆக்கினதைப் போலத் தாமரையாகிய பெண் தன் தலைவனாகிய கதிரோனைக் கண்டு முகம் மலர்ந்து அவன் அல்லாத முழுமதி வந்தபோது அதனைச் சிறுபிள்ளையாக்கியதைப் போன்று பிள்ளையாரின் சிறு வெண்கொம்பு இருக்கிறது.(6)

விநாயகப் பெருமான் முகமசைத்து ஆடுகின்றபொழுது கருமை நிறம் பொருந்திய குடுமியில் கட்டியுள்ள மலர் மாலை கழுத்தருகில் தொங்குகின்றன. காதின் பக்கத்திலிருந்து கருமை நிறம் பொருந்திய மதநீர் சொரிகின்றன. வெண்மை நிறமாக இருந்த அந்த மாலை மதநீரில் நனைந்து கருமை நிறமாக மாறுகின்றன காதின் பக்கமிருந்து நீங்குவதனாலும் அசைவதனாலும் மாலையில் உள்ள மதநீர் சிந்துகின்றன. அதனால் மீளவும் மாலை வெண்மை நிறம் பெறுகின்ற காட்சியானது எப்படி இருக்கின்றதென்றால், மேகம் முதலில் வெண்மை நிறத்தோடு கடலுக்குப் போய், அக்கடல் குழியும்படி நீரைப்பருகி அதனால் கருமை நிறம் பெற்று, இடத்துக்கு இடம் போய் மழைநீரைக் கொட்டி மீளவும் வெண்மை நிறமாகத் திகழ்வதை ஒத்திருக்கும்படிச் செங்கீரை ஆடுக என்று கூறுகின்றார் ஆசிரியர் (7).

''மும்மல மாமத முற்றுப் போத
முழுத்தறி வுறவீசி
முகிழ்த்தலர் அன்பின் சங்கிலி உதறி
முதிர்ந்து அருட்கூடத்து

இம்மென நீங்கி வெளிக்கொடு புவன
மெனுங் கடுவனம் ஒடி
யெப்பாகர்க்கும் அடங்கலவாகி
இயங்கும் உயிர்க்கரிகள்

தம்மை விடாது தொடர்ந்து பிணிப்பத்
தரும் அங்குச பாசம்
தாங்குதல் கண்டும் தம்போல் எண்ணிச்
சார்பவை தமைநகையாக்

கொம்மை மலர்க்கைகள் கொட்டுவது எய்ப்பக்
கொட்டுக சப்பாணி

குலைகெழு தடநிறை கலைசை நகர்க்கிறை
கொட்டுக சப்பாணி'' (18)

எனும் இப்பாடல் உருவகமும், தற்குறிப்பும் அமையுமாறு ஆசிரியர் பாடியுள்ளார்.

இப்பாடலில் பிள்ளையார் தம் கைகளில் கயிறையும் அங்குசத்தையும் தாங்கி இருக்கின்றதற்கு விளக்கம் கூறுகின்றார். உயிர்களின் இயல்பு, இறைவனின் பேரருட்டிறம் ஆகியவற்றையும் இப்பாடல் கூறுகின்றது உலகிலுள்ள யானைகள் மும்மதமும் அழிந்ததும் தம் அறிவை இழந்து கட்டுத்தறியைச் சிதைத்து, சங்கிலியை வீசியெறிந்து, கூடத்திலிருந்து வெளியேறி, காட்டிற்குச் செல்லும்; பாகர்களை மதிக்காமல் திரியும்; பாகர்களோ தம் கைகளில் அங்குசத்தையும் கயிறையும் கொண்டு யானைகளைப் பிடிப்பதற்குத் தேடி அலைவர் இது போன்றே உயிர்களும் ஆணவம், கன்மம், மாயை எனும் முக்குற்றமும் கொண்டு மெய்யுணர்வை இழந்து, அன்பைக் கைவிட்டு, அருளை நீங்கி, உலகியலில் ஈடுபடும்.

மலமுதிர்ச்சியால் அறிவும், அன்பும், அருளும் இழந்து ஆசான்வழி நில்லாது, உலகியலில் ஈடுபட்டு இறைவனை மறக்கின்ற இயல்பு உயிர் இனங்களுக்கு உண்டு. அதனால் அவற்றை மதமுயற்சியால் தறியை வீசிச் சங்கிலியைச் சிதைத்துக் கூடத்தினின்று நீங்கிப் பாகரை மீறிக் காடு நோக்கிச் சென்று பாழ்படுத்தும் யானைகளாக உருவகப் படுத்தினார்.

புராணமரபுக் கதைகள்

இப் பிள்ளைத்தமிழில் பல புராணக் கதைகளை ஏற்ற இடங்களில் ஆசிரியர் கையாண்டிருக்கின்றார். அக் கதைகளைப் பின்வருமாறு பிரித்துக்காணலாம்.

1. சிவபெருமான் தொடர்பான கதைகள்
2. திருமால தொடர்பான கதைகள்
3. விநாயகர் தொடர்பான கதைகள்
4. பிற கதைகள்

திருமாலுக்குச் சக்கரம் அளித்தது (34); மன்மதனை எரித்தது(2,3); மார்க்கண்டேயனுக்காகக் காலனை உதைத்தது

தது (2); முப்புரத்தை எரித்தது (2, 49); நஞ்சுண்டது (2); சரப வடிவானது (3); சிதம்பர வடிவானது (2); நரசிங்கத்தை அட்டது (3, 5); நான்முகன் தலையைக் கொய்தது (2); சடையில் பிறை அணிந்தது (44); புலியைக் கொன்றது (3); யானையைக் கொன்றது (3) ஆகிய புராணக் கதைகள் சிவபிரான் நிகழ்த்தியனவாகக் கூறப்படுகின்றன.

அடுத்துத் திருமால் பன்றிக் கொம்பை அணிந்தது (44); சிவபிரான் திருவடியைத் தேடியது (46) ஆகிய கதைகள் திருமால் தொடர்பாக இந்நூலில் இடம்பெறுகின்றன.

கயமுகாசுரனைக் கொன்றது (33, 43); பஞ்சபூதங்களைத் தன் உருவத்தில் நிறுத்தியது (25); பார்வதியின் திருமுலைப்பால் உண்டது (9); பிறை சூடியது (50); இராவணனைப் பந்தாடியது (34); விகட சக்கர விநாயகர் ஆனது (34); சந்திரனைச் சபித்தது (35) ஆகிய கதைகள் விநாயகர் நிகழ்த்தியனவாகக் கூறப்படுகின்றன.

கற்புக்கரசி அனசூயையிடம் சென்ற அயன், அரி, அரன் ஆகிய முத்தேவர்களையும் அவள் தன் கற்புத்திறத்தால் அவர்களைக் குழந்தைகள் ஆக்கியமையையும் (6); சிவபெருமான் நடனமாட, நந்தி முழவம் இசைக்க, திருமால் மத்தளம் கொட்டியமையையும் (44); ஆதிசேடன் உலகைச் சுமந்ததையும் (46); துர்க்கை மகிடாசுரனை அழித்ததையும் (5, 44); முருகன் கிரவுஞ்சத்தை அட்டதையும் (4); வீரபத்திரன் சந்திரனைத் தேய்த்ததையும் (34); தக்கன் யாகத்தை அழித்ததையும் (34) இப் பிள்ளைத்தமிழில் ஆசிரியர் கூறுகின்றார்.

இக் கதைகள் எல்லாம் இறைவனின் பேரருள் திறத்தை வெளிப்படுத்துவனவேயாகும்.

தூய ஒளி வடிவினனும் அறிவுமயமானவனும், மலமாயை தொடர்பில்லாதவனும், அடியார்களுக்கு அருள் புரிவதற்காகவே திருக்கலைசைச் செங்கழுநீர்த் தலத்தில் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கின்றவனுமாகிய விநாயகப் பெருமானின் திருமலர்ப் பாதங்களை வணங்கி இடையூறு நீங்கிப் பிறவி ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வு வாழ நாம் முயல்வோம்!

# 10. திருக்கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி

முன் நின்ற செய்யுளின் இறுதி எழுத்தாயினும், அசை-யாயினும் சீராயினும், அடியாயினும் பின்வரும் செய்யுளின் முதலாக வர, ஈறும் முதலும் மண்டலித்து முடியப் பாடும் ஒருவகைச் சிற்றிலக்கியமே 'அந்தாதி' எனப்படும். எனவே இந்நூலில் வந்துள்ள பாக்கள் அனைத்தும் அந்தாதியாகத் தொடர அமைந்துள்ளனவாதலின் 'அந்தாதி' என்னும் பெயரை இந்நூல் பெற்றது. அன்றியும், இந்த நூல் சந்த வேறுபாட்டால் அறுசீர் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகக் கலிப்பா, எழுசீர் ஆசிரிய விருத்தம், கலிநிலைத் துறை, எண்சீர் ஆசிரிய விருத்தம் முதலான பத்துவகைச் செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடர அமைந்துள்ளது. அதுபற்றியே 'பதிற்றுப்பத்தந்தாதி' (பத்து+இற்று +பத்து+அந்தம்+ஆதி) எனப்பட்டது. காரைக்காலம்மையார் பாடிய 'அற்புதத் திருவந்தாதி'யே அந்தாதிச் சிற்றிலக்கியங்-களில் முதலாவதாகத் தோன்றிய நூலாகும்

நூலமைப்பும் சிறப்பும்

இவ் அந்தாதி, காப்புச் செய்யுள் ஒன்று நீங்கலாக நூறு செய்யுட்களைக் கொண்டது. 'பருமாலை நிரைவீதித் திருத்-தொட்டிக் கலைப் பதிற்றுப் பத்தந் தாதித் திருமாலை' எனத் தொடங்கும் காப்புச் செய்யுளில் ''பெரிய மாலைகள் வரிசை-யாகத் தொங்கவிடப் பெற்றுள்ள வீதியினை உடைய திருத்-தொட்டிக்கலையில் வீற்றிருக்கும் எமையாளும் சிவபிரான் திருவடியில் பதிற்றுப்பத்தந்தாதியாகிய அழகிய மாலையைச் சேர்க்க, போருக்குரிய வெற்றி மாலையான வாகையைச் சூடிக் கயமுகாசுரனைக் குடல்கள் குழம்பத் துகைத்து உருட்டிப் புரட்டி, நாயினும் சிறியேனாகிய என் பிறவி மயக்கத்தைப் போக்கி அருள் செய்வதற்கு எழுந்தருளிய செங்கழு நீர்ப் பிள்ளையாரை வணங்குவோம்'' என்று கூறியிருக்கின்றார் ஆசிரியர். இதில் அந்தாதியை அழகிய மாலையாகக் கூறு-கின்றார்.

சிவபெருமான் பெருமை

திருக்கலைசையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் இந்நூலின் பாட்டுடைத் தலைவன் ஆவர். நூல் முழுவதும் சிவ-

பிரானின் பெருமை, இயல்பு, வடிவம், வரம்பிலாற்றல் தன்மை, அருள் நல்கும் தன்மை ஆகியனவற்றைக் காண-முடிகிறது.

புதுமைக்குப் புதுமையானவன்; பழைமைக்குப் பழைமை-யானவன்; புறத்தும் அகத்தும் உள்ளவன்; முதுமையும் இளமையும் உள்ளவன்; முதலாகவும் முடிபாகவும் உள்ளவன் (3); தூண்டாத விளக்கின் ஒளியாய் எங்கும் சுடர் பரப்பும் தொல்லோன் (16); தேவர்கள் இருக்கின்ற பதிகளுக்கெல்லாம் பதியாகிய திருக்கலைசையில் உறையும் தலைவன் (19); காமம், வெகுளி, மயக்கம் எனும் முக்குணங்களில் திருவுருவம் தரித்துக் காத்தல் தொழிலை மேற்கொண்ட திருமாலுக்கும், தமோகுணத் தொழிலான அழித்தலைச் செய்து வெண்மை உருவம் தாங்கிய சங்கரனுக்கும், தமோகுணத்து உறாது இராசதத்து உருவம் தாங்கி அக்குணத் தொழிலான படைத்-தலைச் செய்கின்ற நான்முகனுக்கும், தாமத குணத்தினில் தமியனாய்க் கலைசைத் துறையில் எல்லோருக்கும் தலைவ-னாய் வீற்றிருக்கின்றவன் (32).

சத்துவம், இராசதம், தாமதம் எனும் முக்குணங்களுக்-கும் உரிய அயன், அரி, உருத்திரன் ஆகிய மூவரையும் தோற்றுவித்து அம்மூவருக்கும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களை வகுத்தருளி அக்குணங்களை எல்லாம் கடந்து, நிறைந்த அத்துவாக்களையும் கடந்து நிற்கின்றவன் (34).

முதலில் வேதனைப் படைத்து அவனுக்கு எண்ணுதற்கரிய வேத, சாத்திர புராணங்களை ஓதுவித்து, அவனிடத்து இவ்வுலகைக் காத்து, அழித்து, அருளும் கடவுளர்களைத் தந்தவனும் நீயே அன்றோ! (35).

ஓர் ஊழிக்காலத்தில் அரனை (உருத்திரனை) முன் படைக்கிறாய்; வேறோர் ஊழிக்காலத்தில் அரியை (திருமாலை) முன் படைக்கின்றாய்; மற்றோரார் ஊழிக்காலத்தில் அயனை (நான்முகனை) முன் படைக்கின்றாய்; பின்னர் வருகின்ற ஊழிக்காலத்தில் மூவரையும் ஒருசேரப் படைக்கின்றாய்; கலைசை முதல்வனே! இவை எல்லாம் உன் விளையாட்டன்-றோ! இவற்றை எல்லாம் யாரறிந்து எடுத்துச் சொல்ல முடியும் (36); சூரிய சந்திர மண்டலங்களின் தலைவனாக விளங்குகின்றவன் (38); வானிலுள்ள அமரர்களும் நான்மறை

களும் இன்னும் வருந்தித் தேடியும் காணமுடியாத எல்லையை உடையவன் (39); பல சாகைகளை உடைய வேதங்களும் அறிய முடியாத மேம்பட்டவன்; அச்சம் தரத்தக்க பேய்கள் உன்னைக் கண்டு கைகொட்ட நடுவிரவில் தாண்டவம் ஆடுகின்றவன் (44); அற்புதங்கள் பல புரியும் கலைசையில் இருக்கின்ற அங்கணன் (51).

அன்று முதல் இன்று வரை திருவருள் ஞானம் பெற்றவர்களுக்கன்றி ஏனையோரால் பொருள் ஒருமை காண்பதற்கு அருமையாகிய வேதங்கள் நான்கையும் தேடி நின்று அலைந்து ஓலமிட்டும் காண இயலாத நிலைமூர்த்தி (52).

பல்வேறு இயல்புகளைக் கொண்ட சிவபெருமானை,

''உள்நிறை அமுதே என்றும் உயிரினுக்கு உயிரே என்றும்
பண்ணில்நல் இசையே என்றும் பழத்திடைச் சுவையே என்றும்
கண்ணினுள் மணியே என்றும் கலைசைவாழ் சிவமே என்றும்
எண்ணி நெஞ்சுருகி ஏத்தப் பெற்றவாறு எளியனேனே''(58)

என்று போற்றுகின்றார் சுவாமிகள்.

மேலும் சைவத்தில் வந்து சரியை, கிரியை, யோகம் எனும் மூன்றையும் தடையின்றிக் கடந்து, ஆணவ மலத்தை நீக்கி, இருவினையினின்றும் நீங்கி, உண்மையே வடிவமாக உடைய ஞான குருவாகி வந்து வீட்டின்பம் நல்க வல்ல விமலன் (67) என்றும் கூறுகின்றார்.

''ஆயிரம் சிரம் ஆயிரம் முடிகள்
ஆயிரம் செவி ஆயிரம் விழிகள்
ஆயிரம் புயம் ஆயிரம் சரணம்
ஆயிரம் குணம் ஆயிரம் தொழில்கள்
ஆயிரம் பெயருடைய நின் பெருமை'' (33)

இவற்றை எந்த மொழியிலும் அடக்கிக் கூறுதல் இயலாது.

தாயும் இன்றித் தந்தையும் இன்றித் தனியனாய் நிற்பது சிவபெருமானின் சிறப்பு நிலையாகும் உலகத்திலுள்ள எல்லா உயிர்களிலும் உயிராய், அவற்றோடு இரண்டறக் கலந்து

நின்று அவற்றை இயக்கி அருள் புரியும் நிலை பொது எனப்படும். இப் பொது நிலையில் இறைவன் அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் ஒரு வகையால் சுட்டிக்கூற இடமேற்பட்டாலும், அவன் சுட்டிறந்த தொல்லோன். முன்னோனும் அவனே; முழுதுமாயவனும் அவனே. அவன் இன்ன தன்மையினன் என்று யாராலும் சுட்டி அறியவோ, உரைக்கவோ இயலாத நிலையினன். இக்கருத்தினை

''முதல் என்பது இன்றி நடு என்பது இன்றி
முடிவு என்பது இன்றி முழுதாய்
அது என்பது இன்றி அவன் என்பது இன்றி
அவள் என்பது இன்றி அவையாய்
இது என்று எவர்க்கும் அறியப் படாத
இயல்பாகி யுள்ள பொருளாம்
மதிதங்கு சோலை செறிகோ விருந்த
புரம்மன்னும் எங்கள் சிவனே'' (64)

எனும் பாடலில் சுவாமிகள் விளக்குகின்றார்.

''அருவினன், உருவினன், அருவிலன், உருவிலன், இருளினன், ஒளியினன், இருள் இலன், ஒளி இலன், மருவளர் கலைசையின் மகிழ்பவன்'' (81) என்று சிவபிரான் எல்லாமாய் அல்லதுமாய் இருக்கின்ற நிலையைக் கூறுகின்றார்.

சிவபிரான் வடிவது அழகைப் பல பாக்களில் சிவஞான சுவாமிகள் எடுத்தியம்புகின்றார்.

சடை முடியினை உடையவன் (3); அச்சடையினில் நொச்சி, கரந்தையையும், தேன் நிரம்பிய கொன்றை மலர்களையும் சூடி இருக்கின்றவன் (28,39). சடையினில் மலர்களைச் சூடியதோடமையாமல் பாம்புகளையும், கங்கை ஆற்றையும் அணிந்திருக்கின்றவன்.[1] பால் போலும் வெள்ளிய சந்திரனைத் தலையில் அணிந்திருக்கின்றவன்.[2] இறந்தவர்களின் எலும்புகளைத் தலையில் மாலையாகச் சூடியிருக்கின்றவன்.[3] நெற்றிக் கண்ணை உடைய எம்பெருமான் திருநீறு விளங்க இருக்கின்றவன்.[4] கைகளில் அனலையும், மான் மழு ஆகியவற்றையும் தாங்கி இருக்கின்றவன்.[5] சிவந்த மேனி-

1. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 88, 54, 87.
2. மேலது 47,78,92.
3. மேலது 62.
4. மேலது 38,54,
5. மேலது 61,97.

யினனாகத் திகழும்[6] சிவபிரான் கறைமிடற்றினை[7] உடையவனாய் மண்டை ஓட்டைக் கலனாக ஏந்திப் பலிதேர்ந்தவனாகக் காட்சி அளிக்கின்றான்.[8] சிவந்த திருமுடிகளை உடையவன்.[9]

சிவபிரானின் வடிவ அழகினை யாராலும் அறிந்து கூற இயலாது. இன்ன வடிவினன், இன்ன தம்மையன், இன்ன நிறத்தன் என்றும் அறிந்து கொள்ள இயலாது. சிலர் சக்கரப்படை யினை அழகிய கைகளில் உடைய திருமால் என்பர்; வேறு சிலர் நான்முகன் என்பர்; இன்னும் சிலர் தேன் நிரம்பிய கொன்றைப்பூ மாலையினை உடைய ஈசன் என்பர்; மற்றும் சிலர் கொடிய அக்கினித் தேவன் என்பர்; இன்னும் சிலரோ பெரிய ஏழு குதிரைகள் பூட்டிய தேரினை உடைய சூரியன் என்பர்[10]. இதனால் உருத்திரன், திருமால், நான்முகன், அக்கினி, சூரியன் ஆகியோருக்கு வேறானவன் முழு முதல் இறைவன் என்பதை ஆசிரியர் நமக்கு உணர்த்தியுள்ளார். மேலும் திருமால், நான்முகன், உருத்திரன் ஆகிய மூவரையும் தோற்றுவித்து அவர்களுடன் கலந்து ஐந்தொழிலையும் இயற்றி அருள்பவராகச் சிவபிரானைக் காட்டுகின்றார் சுவாமிகள்.[11]

சிவந்த நிறத்தர், கரிய நிறத்தர், வெண்மை நிறத்தர், செழும் பொன் நிறத்தர், பச்சை நிறத்தர், ஒளி வண்ணத்தர்[12] என்று கூறிய ஆசிரியர் பின்வரும் பாடலில் சிவபிரானின் அட்டமூர்த்தங்களைக் கூறி இவைதான் உனது வடிவமாகும், உன்னைத் தவிர வேறு யாரும் இலர் என்று கூறுகின்றார்.

''மண் நீர் விசும்பு கனல் கால் அருக்கன்
மதி ஆவி என்னும் முறையால்
எண்ணீர்மை கொண்ட இவை எட்டும் அன்றி
உலகென்பது இல்லை இவையே

6. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 91.
7. மேலது 75.
8. மேலது 88
9. மேலது 38
10. மேலது 20.
11. மேலது 31,34.
12. மேலது 5.

அண்ணா உனக்கு வடிவாகும் எண்ணின்
அவைதோர் உயிர்க்கு உயிர்தாம்
கண்ணான தெய்வம் எவர் வேறுளார்கள்
கலைசைப் பதிக்கு இறைவனே''[13]

சிவபிரானின் பல திருக்கோலங்களில் சுவாமிகளின் உள்ளத்தில் கொண்டு போற்றிய திருவடிவம் மாதொருபாகத் திருவடிவமேயாகும். இவ் வடிவத்தைப் பல்வேறு கோணங்களில் உள்ளம் உருகப் பாடிப் பரவுவதனைக் காணமுடிகிறது.

''அருள்மடை திறந்த நோக்கமும் வரதா
பயங்களும் அம்புயக் கரமும்
திருமுகப் பொலிவும் குறுநகை அழகும்
செஞ்சுடர் மகுடமும் அரையில்
மருவு தோல் உடையும் சேவடித் துணையும்
மகிழ்சிவ காமிநாயகி சேர்
உருவமாய்க் கலைசைச் சிதம்பரேசுரர்என்
உள்ளகம் கோயில் கொண்டனரே''[14]

என்னும் இப்பாடலில் தம் உள்ளக் கோயிலில் குடிகொண்ட சிவபிரானின் உருவ அழகை ஆசிரியர் தெளிவாகக் காட்டியுள்ளார். மற்றோரிடத்தில் ''எங்குப் பார்த்தாலும் அங்கெல்லாம் எனக்கு இருண்ட கண்டமும், நான்கு தோள்களும், கங்கை வேணியும், முக்கண்களும், சிவகாமி பாகமும், கமல பாதமும், செங்கைமான் மழுப் படையும், நீற்றொளி சிறந்த மார்பும் காண எய்தி நின்று அச்சத்தை நீக்கி அருள் சுரந்திடும் கலைசைவாணன்''[15] என்று போற்றிப் பரவியிருக்கின்றார்.

நல்லாரைக் காத்தற் பொருட்டும், அல்லாரை அழித்தற் பொருட்டும் சிவபிரான் இயற்றும் அருட்செயல்களும் மறச் செயல்களும் அருளின்பாற் பட்டனவே தேவர்கள் என்றும் பாராமல், அடியவர்கள் என்றும் பாராமல், அடியவர்கள் என்றும் பாராமல் தம்மை நாடி வந்தவர்களின் துயரைப் போக்குவதனைக் கடமையாகக் கொண்டிருக்கின்ற எம்பெரு-

13. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 69.
14. மேலது 70.
15. மேலது 93

மானின் தன்மையைப் பல பாக்களில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

''வல்லவர்கள் என்று தம்மைத் தாமே மதித்திருந்த இந்திரன், திருமால், நான்முகன் முதலான தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து அமுதம் எடுத்துப் பருக விரும்பினர். ஆனால் அவர்கள கடைந்தபொழுது அமுதத்திற்குப் பதிலாகக் கொடிய ஆலகால' நஞ்சு வெளிவந்ததைக் கண்ட அவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கிச் சிதறி ஓடினர். எங்களுக்கெல்லாம் 'நீதான் அடைக்கலம்' என்று கூறி உன்னைச் சரணடைந்தனர் 'அஞ்சலீர்' என்று வன்மையுடன் உறுதி கூறி அவர்களைக் காத்தற்பொருட்டு அருள் உள்ளம் கொண்டு அந் நஞ்சை உண்டு காத்தவன்''[16] என்று தேவர்களைக் காத்தமையை முனிவர் கூறுகின்றார்.

பூங்கலைசைத் தலைவனைப் புகழ்ந்து போற்றுகின்ற அடியவர்களுக்கும் அருள் நல்கும் தன்மையினன். தம்மையே நினைந்து போற்றிய அடியவர் துயரம் போக்கக் கருதிய பெருமான் மதுரை மாநகரில் பிட்டுக்கு மண் சுமந்து மன்னனிடம் பிரம்படியும் பட்டவன்.[17] சுந்தரர்க்காக நள்ளிரவில் பரவை நாச்சியாரிடம் தூதும் சென்றனன்[18]. சிவஞானிகளுக்கும் அருள் நல்கும் தன்மையினன்[19]. இழிவாகிய புறச்சமயத்தைச் சார்ந்தவர்கள் எவ்வளவுதான் பழித்துக் கூறினாலும் அவர்களுக்கும் அருள் புரிகின்ற தன்மையினன்[20].

இவ்வாறு செய்கின்ற இறைவனின் விளையாட்டைப் பார்க்கும் பொழுது முன் பிறவியாகிய பெருங்கடலில் மூழ்கி முடிவின்றி வருந்துகின்ற இச்சிறிய உயிர்களின் மேல் அவன் வைத்த அளப்பெரும் கருணைத் திறத்தினால்தான் என்று முனிவர் அறுதியிட்டுப் பின்வரும் பாடலில் கூறுவதனைக் காணமுடிகிறது.

''அற்புதக் கலைசை மேவும் அங்கணன்
அளக்கொணாத
பற்பல விளையாட்டெல்லாம் பரித்திடும் பான்மை
நோக்கில்

16. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 10.15,37,84.
17. மேலது 41.
18. மேலது 43.
19. மேலது 50.
20. மேலது 46.

முற்பவக் கடலின்மூழ்கி முடிவின்றி உழலும் இந்தக்
சிற்றுயிர்களின் மேல் வைத்த கருணையாய்ச்
சிறக்கும் அன்றே''[21]

இந்நூலின் இறுதியிலுள்ள பத்துப் பாடல்களில்[22] பாடலின் முதலடியில் பிறர் கூற்றாக உள்ள இரண்டு போற்றிகள் தவிர ஏனைய பாடல்களில் மொத்தம் 36 போற்றிகள் இடம்பெற்றுள்ளன. மூன்று முறை இதனை ஓதினால் 'அஷ்டோத்திரம்' அஃதாவது 108 போற்றிகள் வருமாறு ஆசிரியர் பாடியுள்ள பாங்கினை எண்ணி மகிழலாம்.

ஏனைய கடவுளர்கள்

இந்நூலில் சிவபிரான் புகழ் தவிரக் கந்தவார் பொழில் சூழ்ந்த கலைசைப் பதியில் வாழ்கின்ற சிவகாமி அம்மையின் புகழினையும் போற்றத் தவறவில்லை ஆசிரியர்.

மலைமகள்[23] என்றும், இவ்வுலகோர் 'தாய்' என்று போற்றி வணங்கும் சிவகாமி அம்மை[24] என்றும் கூறப்பெறும் அன்னை, மயிலின் சாயலினையும்,[25] அன்ன நடையினையும்[26] கொண்டு கூந்தலில் மணம் வீசும் மலர்களைச்சூடி[27]க் கழுத்தில் மாலை அணிந்து,[28] பசு மூங்கிலை ஒத்த தோள் களைக்[29] கொண்டு எப்பொழுதும் புன்னகை தவழும் முகத்தினளாய்[30] இருக்கின்றனள்.

படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில் களைச் செய்கின்றவர்களாக நான்முகன், திருமால், உருத்திரன் ஆகியோர் கூறப்பெற்றுள்ளனர்.[31] மேலும் நான்முகனும், திருமாலும் சிவபிரானின் முடியையும், அடியையும் தேடிச் சென்ற நிகழ்ச்சியையும் ஆசிரியர் சுட்டிக் காண்பிக்கின்றார்.

21 கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 51 2. மேலது 91-100.
23. மேலது 47.
24. மேலது 61. 25. மேலது 83.
26. மேலது 85. 27. மேலது 39.
28. மேலது 45. 29. மேலது 31, 61
30 மேலது 54. 31. மேலது 31, 32, 34.

முனிவரின் நிலை

''போற்றிலேன் பூதி மெய்யில் புனைந்திலேன்
எழுத்துஓர் ஐந்தும்
சாற்றிலேன் அக்கமாலை தரிக்கிலேன் அடியார்
ஏவல்
ஆற்றிலேன் கலைசை வாழும் அண்ணலே தறுகண்
வெள்ளை
ஏற்றனே எளியனேன் அந்தோ எங்ஙனம்
உய்யுமாறே''[32]

என்று தம் நிலையைக் கூறிய ஆசிரியர் பெண்கள் வலையில் விழாமல் தம்மைத் தடுத்து இறைவன் ஆட்கொண்டமையையும் கூறுகின்றார்.[33] மேலும் பலவிடங்களில் இறைவனிடம் முறையிட்டு வேண்டுகின்ற தன்மையையும் காணமுடிகின்றது.

''நாற்றம் எடுக்கும் இந்த உடலைப் பாதுகாத்து யாவரிலும் இழிந்தவனாகத் திரிந்து உழல்கின்ற கடையனேனை முற்றிலும் காப்பது நின் கடமை''[34]

''அடியேனாகிய நான் எவ்வளவு தவறு செய்தாலும் என்னை வெறுத்து ஒதுக்காமல் ஏற்றுக் கொள்வதுதான் முறை''[35].

''தீமையே புரியும் முழுமூடனாகி அறிவு என்பது ஒரு சிறிதும் இன்றி அழிவாய்ப் பாவத்தையே விளைக்கும் உடலைப் பாதுகாத்து எப்பொழுதும் நரகத்தில் வீழ்ந்து வருந்துவேன். சிவமே விளைக்கும் அடியார் கூட்டத்துடன் சேரும் நாளும் உளதோ?''[36]

''விடரொடு தூர்த்தர் பேதையர் கயவர்
வேழம்பர் அனையரோடு உறவாய்
நடைஎலாம் கெடுத்தே இழிதொழில் விரும்பு
நாயினேன் உய்யுமாறு உளதோ''[37]

''பொய் எல்லாவற்றையும் களைந்து மெல்ல மெல்ல வந்து என்னைத் திருத்தி எனக்கு வீட்டின்பம் நல்குதல் வேண்டும்''.[38]

32. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 53.
33. மேலது 12,13,29.
34. மேலது 14.
35. மேலது 16
36. மேலது 66.
37. மேலது 71.
38. மேலது 100.

தம் மனத்தைக் கருங்குரங்கின் செயலுக்கு ஒப்புமைப் படுத்திக் கூறுகின்றார். குரங்கானது ஓரிடத்தில் நில்லாது பல்வேறு மரக்கிளைகளில் தாவித்தாவிச் செல்லும். அது போலத் தம் மனமாகிய கருங்குரங்கு புரியும் செயல்களை நான்கு பாக்களில் தெளிவுறக் காட்டுகின்றார்.

''மனமே! சிவனே! என்று தேறாய்: சிவலோகம் ஏறாய்; இடும்பை எல்லாம் பாராய்; திருவைந்தெழுத்தை விதிப்படிக் கூறாய்; கலைசை ஈசனைப் பணிந்திலாய். அடியவர்களின் கூட்டத்துடன் சேர்ந்து சிவநெறி ஒழுகாமல் இருக்கின்றாய் மாறாக நினைப்பதற்கு முன் மலை, கடல், வான் என்று ஒவ்வொன்றாகத் தாவித் தாவி ஓடுகின்றாய். வறிதே மீள்கின்றாய். எல்லாம் கிடைத்ததாக எண்ணிப் பாவனை செய்கின்றாய். பயன் ஒன்றும் இல்லாததை எண்ணிப் பார்க்காதிருக்கின்றாய்.''[39]

இவ்வாறு இறைவனிடம் முறையிட்ட சுவாமிகள் உயிர் போகும் காலத்திற்கு முன்னரே தமக்கு அருள் தருதல் வேண்டுமென்று பின்வரும் பாடலில் கூறுகின்றார்.

''கொண்டல்போல் முழங்கிக் கூற்றுவன் எதிரே
குறுகிட நாடியும் தளரக்
கண்டவர் இரங்க ஐம்பொறி கலங்கக்
கண்டம் மேலை எழுந்து உந்தி
மண்டிட அறிவு கலங்கும் அந்நாள்உன்
மலரடி வழுத்திட மாட்டேன்
அண்டர்சூழ் கலைசைப் பராபர இன்றே
அடைக்கலம் கண்டுகொண்டு அருளே''[40]

இங்ஙனம் வேண்டிய சுவாமிகள் தமக்குக் கிடைத்த பேரானந்தப் பெருவெள்ளத்தையும், தாம் பெற்ற அருளனு பவத்தையும் கூறுவதற்கும் மறந்தாரிலர்.

''என்னைக் கொண்டாய், உன்னைக் கொடுத்தாய், மலநோய் நீங்கக் கண்டாய், வினைகள் எல்லாவற்றையும் கழித்தாய், உடலின் பாரத்தைத் தீர்த்தாய், பேரானந்தம்

39. கலைசைப் பதிற்றுப்பத்பந்தாதி 5, 73, 74, 75.
40. மேலது 80,

கொடுத்தாய், கலைசை வாழும் தலைவனே! அடியேன் உனக்குச் செய்யும் கைமாறுதான் என்னே''?'[41]

''எளியனேன், அறிவில்லாத ஏழையேன், பெண்களின் விருப்பத்திற்கு எளியேன், உடலையே பாதுகாக்கும் கடையனேன், உலக வாழ்விற்கு ஆசைப்பட்டவன் ஆகிய இக் குணங்களை உடைய என்னையும் புகழ் கொண்ட கலைசைப் பதித்தலைவன் காத்தருளி ஆட்கொண்ட தன்மையினை என்னென்று உரைப்பேன்?''[42]

இறைவனின் பேராற்றலை எண்ணி வியந்த சுவாமிகள்,

''எந்தைநீ எமக்கு அன்னைநீ எமக்கு
இறைவன்நீ எமைஆண்ட நாயன்நீ
சிந்தைநீ செயும்செயலும் நீ பெறும்
செல்வம்நீ தொழும் தெய்வம்நீ கற்கும்
விந்தைநீ எய்ப்பில் வைப்புநீ நசை
வெறுப்புநீ அலால் வேறு கண்டிலேம்
கந்தவார் பொழில் கலைசை வாழ்சிவ
காமிபாக நின்கருணை போற்றியே''[43]

என்று போற்றுகின்றார்.

தொண்டர் பெருமை

''தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்ற அன்னையார் வாய்மொழிக்கிணங்க இந்நூலில் தொண்டர்களின் பெருமைகளைப் பல பாக்களில் காணமுடிகின்றன.

உமையொரு பாகனாகிய கலைசைத் தலைவன் சிதம்பரேசரின் பெருமை அளவிடற்கரியது. உடைந்து நைந்து நெக்கு நெக்கு உள்ளம் குழைந்து அறிவுமயமாகிக் கண்களிலிருந்து நீர் தாரையாகப் பாய்ந்து அன்பாகிய நீர் ஊற்றுப் பாயும் அடியவர்களின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டவன்.[44] அடியவர்களின் மனமாகிய குகையினை உடையவன்.[45] கலைசைப் பதியில் வாழ்கின்ற அடியார்கள் எப்பொழுதும் உண்மையே பேசுகின்றவர்களாவர்.[46]

41. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 55,
42. மேலது 59.  43. மேலது 95.
44. மேலது 21
45. மேலது 38.  46. மேலது 61

இறைபுகழைப் போற்றி வழிபடுகின்ற அடியார்கள் பெறும் பலனையும் பல பாக்களில் கூறுகின்றார் ஆசிரியர்.

மனம் ஒன்றி அவன் திருவடித் தாமரை மலர்களைப் போற்றி ஏத்துகின்ற அடியவர்கள் இடும் கட்டளைப்படித் தேவர்கள் எப்பொழுதும் நடப்பர்.[47] அவர்கள் மிகுந்த செல்வம் உடையவர்களாக வாழ்வர்.[48] கலைசையில் வாழும் சிவபிரானை வாழ்நாளில் ஒருமுறையேனும் சென்று கும்பிட்டால் எப்பொழுதும் இன்பத்தேன் உண்ணலாம்.[49]

இவ்வாறு அடியார்கள் பெறுகின்ற பலனைக் கூறிய சுவாமிகள், உன்னையே கடவுள், இறை என்று நம்பி வழிபடுகின்ற அடியார்களுக்கு என்றும் இறவாத இன்பத்தைக் குறைவின்றி அடியார் கூட்டத்துடன் கூடி வாழ்வதற்கு அருள் தருவாய்[50] என்றும் வேண்டுகின்றார்.

இரத்தல் துன்பம் கொடிது அதனைத் தொலைத்தல் வேண்டும் என்பர் சான்றோர். இரப்போர் நிலையைக் கண்ட சுவாமிகள் அவர்கள் படும் துயரைக் கூறி அவர்களைக் காத்தருள இறைவனிடம் வேண்டுகின்றார்.

முப்பத்திரண்டு பல்லையும் காட்டி வள்ளல் என்றும், பாரி என்றும், மாரி என்றும் வீணாக எள் அளவும் ஈயாதாரைப் போற்றி உரைத்துத் தம் ஆயுளை வீணாளாகத் தள்ளுகின்றார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் அல்லலுறுகின்றார்கள். கலைசை வாழ் சிதம்பரேசனே! நீ தரும் பேரின்பத்தை நினையாமல் உன்னைப் போற்றாமல் ஆயுளை வீணாக்குகின்றனர். அவர்கள் அறியாமையைப் போக்கி அருள் தருதல் வேண்டும்[51]

செல்வம், புகழ், அறிவு, கற்ற கல்வி ஆகிய இவற்றால் யாதொரு பயனும் இல்லை.[52] காடுகள் தோறும் அலைந்து திரிந்து விரதங்கள் பல இருந்து சடை கட்டி வாடினாலும், பெரும் செல்வங்கள் சேர்ந்த உயர்ந்த குலத்தில் பிறந்தாலும், நால்வகை வேதங்களை விதிப்படித் தவறாது ஓதினாலும்,

---

47. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 22. 48. மேலது 23.
49. மேலது 57. 50. மேலது 63.
51. மேலது 26, 27.
52. மேலது 24.

நாள்தோறும் சாத்திரங்கள் பல கற்று வாது செய்வதில் வல்லவராக இருந்தாலும் ஒரு பயனும் இல்லை. கலைசை வாழ் சிவனே! முதலும் முடிவுமான உன்னருளைப் பெறுவதில் இருக்கின்ற பேரின்பத்திற்கு இவையெல்லாம் ஈடாகாது.

இயற்கை வளம்

தொட்டிக்கலைசை நிறைந்த நீர் வளம் மிக்கது;[53] கொத்துக்களையுடைய பூக்கள் நிரம்பிய பொழில்களை உடையது;[54] மீன்கள் நிறைந்த வளமுடைய வயல்களை உடையது;[55] தேன் நிரம்பிய மலர்களை உடைய சோலைகள் சூழ்ந்தது;[56] மேகம் தவழும் மதில்களை உடையது;[57] மடல் அவிழ்ந்த தாமரைக் குளங்கள் தோறும் பெண்கள் புனல் குடைந்தாடும் பல்வளம் மிக்க மாநகராகத் திகழ்கிறது[58].

கலைசைவாழ் சிதம்பரேசர், சிவகாமி அம்மையைக் கூறுகின்ற பொழுதும், அப்பதிவாழ் மகளிரைக் கூறுகின்ற பொழுதும், அவ்வூரின் இயற்கைக் காட்சிகளுடன் இணைத்தே கூறுகின்றார் ஆசிரியர்.

அணிநலம்

இவ்வந்தாதிப் பாக்களில் உவமை அணியும், சொற்பின்வருநிலை அணியும் பயின்று வந்துள்ள பாங்கைக் காண முடிகின்றன.

மான் போன்ற விழிகளையும், மயில் போன்ற சாயலினையும் உடைய பெண்கள் தேன் போல இனிமையாகப் பேசுகின்றனர்.[59] கலைசை இறைவன் அடியார்க்கு அருள் புரிதற்பொருட்டு உமையவளுடன் சூரிய உதயம் போலத் தோன்றினன்.[60] நீருண்ட மேகம் போல முழங்கிக் கூற்றுவன் உயிரைக் கவர்ந்து செல்ல வருகின்றான்.[61]

53. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 7
54. மேலது 12.
55. மேலது 13, 67.
56. மேலது 20, 22, 23,
57. மேலது 49.
58. மேலது 71.
59. மேலது 13.
60. மேலது 34.
61. மேலது 80.

ஒரு சொல்லைப் பல்பொருட் சிறப்புடன் அமைத்துப் பல பாக்களைப் பாடியிருக்கின்றார் ஆசிரியர். இதுவே சொற் பொருட் பின்வருநிலை அணியாகும். 'சிவனே சரணம்' 'பதி', 'தமோகுணம்', 'ஆயிரம்' போன்ற சொற்களைப் பாடலில் ஒவ்வோர் அடியிலும் வருமாறு பாடியிருக்கின்றார். விரிவஞ்சி ஒன்றைமட்டும் இவண் காண்போம்.

''பதிகள்தொறும் சென்றேத்திப் பயில்மூவர் தமிழ்மாலைப்
பதிகம்எலாம் அங்கங்கே பாடி உளம் களிகூரும்
பதிகரோடும் எனைக்கூடப் பணித்து அருளாய் இமையவர்தம்
பதிகளுக்கும் பதியாகிப் பதிக்கலைசைப் பதியானே''[62]

எனும் இப்பாடலில் 'பதி' எனும் சொல்லைப் பல்பொருட் சிறப்புடன் பாடி இருக்கின்றார். தமிழ்ப் பதிகங்களின் சிறப்பையும், அவற்றைச் சிவன் உறையும் தலங்கள் தோறும் சென்று ஓதுகின்றவர்களின் சிறப்பையும், அத்தொண்டு கை வருவதற்கும் இறையருள் வேண்டும் என்ற குறிப்பையும், அவ்வாறு ஓதுகின்றவர் உள்ளம் மகிழ்ச்சி அடையும் என்பதையும், அவர் உள்ளத்தில் கலைசைத் தலைவன் பதிந்து விளங்குவதையும் விளக்குகின்ற ஆசிரியரின் நயம் போற்றத்தக்கதாக அமைகின்றது.

சித்தாந்தக் கருத்துக்கள்

இந்நூலாசிரியர் சிவஞானபோத மாபாடியப் பேராசிரியர் ஆதலின், சித்தாந்தக் கருத்துக்களை நூலின் பலவிடங்களில் மிக எளிய முறையில் அமைத்துப் பாடியுள்ளார்.

வல்லாண்மை செலுத்துகின்ற பெரிய கரிய ஆணவமலத்தின் இயல்பு,[63] மயக்கத்தைச் செய்து பொய்யை மெய்யாக்கிக் காட்டும் மாயையின் தொழில்,[64] ஐம்புலன்கள் புரியும் துன்பச் செயல்,[65] அவத்தையின் நிலை,[66] அத்துவாக்களைக் கடந்து நிற்கும் நிலை,[67] முதற் காரணம் துணைக்காரணங்-

62. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 19.
63. மேலது 1, 4.
64. மேலது 6.
65. மேலது 8.
66. மேலது 11.
67. மேலது 34.

கட்கு வேறாய் நிமித்த காரணனாய் நின்று ஆக்குகின்ற சிவபிரான் நிலை [68] போன்ற பல சவ சைத்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கே கூறிச் செல்கின்றார்.

சங்கிலி போல் தொடர்ந்து வருகின்ற பழைமையான வினைகளைப் பற்றிப் பல பாக்களில் சுவாமிகள் எடுத்தியம்புகின்றார்.

''யான் என்றும் எனது என்றும் இச்செருக்கில்
எழும் வினையால்
ஊன் ஒன்றிப் பொறிவழி போய் உலவாத
யோனிதொறும்
தான் ஒன்றி இதுகாறும் தளர்ந் தொழிந்தேன்'' [69]

என்று வினையினால் உடல் உண்டாகின்ற தன்மையையும், எண்பத்துநான்கு நூறாயிரம் கோடி யோனிபேதம் உடைய அவ்வுடலைப் பற்றியும் இப்பாடலில் ஆசிரியர் கூறியுள்ளார்.

''சைவத்தில் வந்து சரிபாதி மூன்று
தடையின்றி முற்று பருவம்
மைவைத்த தீய மலபாக நோக்கி
வினையொப்பு உறுத்தி வழியான்
மெய்வைத்த ஞான குருவாகி வந்து
கதியுய்க்க வல்ல விமலன்''[70]

எனும் இப்பாடலில் சிவஞான உணர்ச்சி உண்டாவதற்கும் அவ்வுணர்ச்சியால் சிவானுபவம் வருதற்கும் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் இந்நான்கு தவ சாதனங்களைக் கூறுகின்றார்.

புராணமரபுக் கதைகள்

சிவபிரான் புகழ் பாடும் இப்பாமாலை அந்தாதியில் பல புராணக் கதைகளை ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

திருமாலும் நான்முகனும் காணாதவாறு அழலாய் நீண்ட கதையையும்,[71] தேவர்களைக் காப்பதற்காகக் கொடிய ஆலகால நஞ்சினை உண்ட கதையையும்,[72] மூன்று

68. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 50.
69. மேலது 20.
70. மேலது 67.
71. மேலது 1, 16, 41, 65, 86.
72. மேலது 10,31,37 54, 57,84.

கோட்டைகளைச் சிரித்து எரித்த கதையையும்,[73] மன்மதனை நெற்றிக் கண்ணால் விழித்து எரித்த கதையையும்,[74] மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்த கதையையும்,[75] கயிலை மலையைத் தூக்க முயன்ற இராவணனைக் கால்-பெருவிரலால் அழுத்தியதையும்,[76] வாணாசுரனை அழித்ததையும்,[77] கல்லால மரத்தின் நிழலில் அமர்ந்து அறம் உரைத்ததையும்,[78] எலும்பைத் தலைமாலையாகச்சூடியதையும்,[79] ஆமையோட்டை மார்பில் பதக்கமாக அணிந்ததையும்,[80] சந்திரனைச் சடையில் சூடியதையும்.[81] கங்கையாற்றைச் சடைக்கரந்த வரலாற்றையும்,[82] உமையவளைத் தம் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்ட வரலாற்றையும்,[83] தாருகவன முனிவர் மனைவிமார் மனைதொறும் சென்று உண்பலி ஏற்று நின்றதையும்,[84] புலியை உரித்துத் தோலாடையாக அணிந்ததையும்,[85] கைகளில் மான்,[86] அனல்[87] ஏந்தியதையும் கூறியிருக்கின்றார்.

இவை எல்லாவற்றிலும் பொதிந்துள்ள கருத்துக்களில் பல மெய்ப்பொருள் நயங்கள் இருப்பதைக் காணமுடிகின்றன. சான்றுக்கு ஒன்றை மட்டும் இப்பகுதியில் ஆராயப்பெறுகிறது.

உலகுக்கெல்லாம் சிறந்த தலைவனாக விளங்குகின்ற சிவபெருமான் தாருகவன முனிவர் மனைவிமார் இல்லங்களுக்குச் சென்று பிச்சைப் பாத்திரம் ஏந்திச் செல்கின்ற நிகழ்ச்சியில் பொதிந்துள்ள கருத்தாவது : இறைவன் உயிரறிவை இரந்து பெற்றுக் கொண்டு பக்குவம் வாய்ந்த மெய்யன்பர்க்குத் திருவருள் அறிவைக் கொடுக்கும் பெருங்கருணைத் திறத்தைக் காட்டுவதாகும்.

சிவனுக்கும் திருமாலுக்கும் உள்ள மிக நெருங்கிய உறவினை ஒரு பாடலில் நயந்தோன்ற ஆசிரியர் கூறியுள்ளார்.

---

73. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 39, 40, 63. 86, 91, 99.
74. மேலது 22, 40, 83 86
75. மேலது 22, 40, 87, 91.
76. மேலது 40.
77. மேலது 47, 92
78. மேலது 83
79. மேலது 62.
80. மேலது 45
81. மேலது 47, 78, 92
82. மேலது 54, 87, 93.
83. மேலது 2, ,31,39,54,61,79,95
84. மேலது 88.
85. மேலது 40.
86. மேலது 23, 93, 97.
87. மேலது 61.

"மாயனைக் கணையாக ஏவினை
மாயனை விடையாக ஊர்ந்தனை
மாயனைத் திரு மனைவியாக்கி முன்
மணந்து சாத்தனைத் தந்தளித்தனை
மாயனுக்கொரு பாகம் ஈந்தனை
மாயன் உள்ளமே கோயில் கொண்டனை
மாயன் நேத்திரம் மலர்ந்த தாளினா
வரத போற்றி தென்கலைசை ஈசனே"[88]

எனும் இப்பாடலில் திருமாலைப் பற்றிய பல வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி அதேநேரத்தில் தெளிவாகவும் சுவையாகவும் விளக்கியுள்ளார்

முப்புரத்தை அழிக்கப் புறப்பட்ட முதல்வனுக்குத் திருமால் அம்பாகவும், அமர்ந்து செல்லும் விடையாகவும் பயன்பட்டார். தாருகவன முனிவர்களின் செருக்கை அடக்கத் திருமாலைப் பெண்ணுருவம் கொள்ளச் செய்து, பின்னர் அந்நங்கையை மணந்து சாத்தனைத் தந்தார். பின்பொரு காலத்தில் தம் உடம்பில் ஒருபாகத்தைத் திருமாலுக்கும் பகிர்ந்தளித்தார். சிறந்த சிவனடியாராகத் திருமால் தொண்டு செய்ய, அவர் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டார். திருமால் ஆயிரம் மலர்களைக் கொண்டு சிவ வழிபாடு செய்யுங்கால் ஒருமலர் குறையத் தம் கண்ணையே மலராக இட்டு வணங்கினார். அதனைக் கண்டு போற்றிய பெருமான் அவருக்குத் தனிச் சக்கரத்தைக் கொடுத்தருளினார்.

இவ்வாறு திருமால் தொடர்பான பல வரலாறுகளை இந்த ஒரு பாடலில் சுட்டிச் சிவனுக்கும், மாலுக்கும் உள்ள தொடர்பினை விளக்கிக் காட்டிய சுவாமிகளின் திறத்தை என்னென்பது?

இவ்வாறு இறைவன் புரியும் செயல்கள் எல்லாம் அவனுக்குப் புகழையே சேர்க்கின்றன என்று கூறுகின்றார். இதனைப் பின்வரும் பாடல் விளக்கி நிற்கும்.

"சிரித்து எரித்தனைப் புரங்களை விழியைத்
திறத்து எரித்தனை மாரனை உகிரால்
உரித்து உடுத்தனை உழுவையைச் சரணால்
உதைத்து உருட்டினைக் காலனை விரலால்

88. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 99.

நெரித்து அழித்தனை அரக்கனை என்பார்
நின்ற யாவையும் நீங்கும்நாள் ஒருங்கே
பொரித்து எரித்திட வல்லதென் கலைசைப்
புண்ணியா உனக்கு இவையுமோர் புகழோ''[89]

ஒப்புமைக் கூறுகள்

தேவாரம், திருவாசகம், திருக்குறள் போன்ற பல இலக்கிய நூல்களில் ஒன்றித் திளைத்த சுவாமிகள் அந்நூல்களின் கருத்துக்களையும், தொடர்களையும் இவ்வந்தாதியிலும் பயன்படுத்தியுள்ளார்.

உடம்பின் சுமையைச் சுவாமிகள் ஒருபாடலில்[90] கூறி வருந்துகின்றார்.

''மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை'' [91]

என்ற குறளின் கருத்தையே ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார். இதைப்போலவே,

''யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''[92]

என்ற குறளின் கருத்தையே 'யானென்றும் எனதென்றும்' எனத் தொடங்கும் பாடலில்[93] விளக்கியிருக்கின்றார்.

''கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்''[94]

எனும் தேவாரக் கருத்தை அடியொற்றி 'அடியார்கள் சிந்தையையே கோயிலாகக் கொண்டு உறைபவன் சிவபெருமான்' என்று பல இடங்களில் சுவாமிகள் கூறிச் சென்றிருக்கின்றார்.

''புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி

89. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 40.
90. மேலது 7.
91. திருக்குறள் 345.
92. மேலது 346.
93 கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 20.
94 சம்பந்தர் தேவாரம் 2.101.6.

அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான்''[95]

என்ற சம்பந்தர் தேவாரத்தை ஒட்டிச் சுவாமிகளும்,

''கொண்டல்போல் முழங்கிக் கூற்றுவன் எதிரே
குறுகிட நாடியும் தளரக்
கண்டவர் இரங்க ஐம்பொறி கலங்கக்
கண்டமேலை எழுந்துந்தி
மண்டிட அறிவு கலங்கும் அந்நாள்உன்
மலரடி வழுத்திட மாட்டேன்
அண்டர்சூழ் கலைசைப் பராபர இன்றே
அடைக்கலம் கண்டு கொண்டு அருளே''[96]

என்று பாடுகின்றார்.

''முன்னைப் பழம்பொருட்கு
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே''[97]

என்ற மணிவாசகக் கருத்தைப்,

''புதியான் பழையான் புறத்தான் அகத்தான்
முதியான் இளையான் முதலான் முடியான்''[98]

என்று எடுத்தாண்டுள்ளார். அதேபோன்று,

''கொண்டவை என்னை உன்னைக் கொடுத்தனை மலநோய் நீங்கக்
கண்டவை வினைகள் எல்லாம் கழித்தனை உடலின் பாரம்
விண்டனை பரமானந்தம் விளைத்தனை கலைசை வாழும்
அண்டனே உண்டு கொல்லோ அடியனேன் செயும் கைம்மாறே''[99]

எனும் இப்பாடல்,

95. சம்பந்தர் தேவாரம் 1.130.1.
96. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 80.
97 திருவாசகம் திருவெம்பாவை 9.
98. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 3.
99. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 55.

''தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்''[100]

என்ற திருவாசகப் பகுதியை நினைவூட்டுகின்றது.

''என்றுநீ அன்று நான் உன்னடிமை அல்லனோ''[101]

என்ற தாயுமானவர் வாக்கை நினைந்த முனிவர்,

''ஆண்டாய்நீ உனக்கு அடியேன் நான்''[102]

என்றுரைக்கின்றார்.

''அவனை முன்படைத் திடுமொரு கற்பத்து
அரியை முன்படைத்திடுமொரு கற்பத்து
உயர் உருத்திரன் தனைமுனம் படைப்பன்
ஒருகற்பம் மற்றொரு கற்பந் தன்னில்
முயலும் மூவரை ஒருங்குடன் படைப்பன்
முற்பிறந்தவர் மற்றிரு வரையும்
செயலினால் படைக்கவும் அருள் புரிவன்
சிவபிரான் எனில் ஏற்றம் இங்கெவனோ''[103]

என்ற சிவதத்துவ விவேகத்தில் உள்ள பாடலையே சுவாமிகள்,

''ஒருகற் பத்தினில் அரனைமுன் படைப்பாய்
ஒருகற்பத் தினில் அரியைமுன் படைப்பாய்
வருகற்பத்தினில் அயனை முன் படைப்பாய்
மறுகற் பத்தினில் மூவரை ஒருங்கே
தருவை முற்படப் பிறந்தவர் பிறரைத்
தரவும் செய்குவை நின்திரு விளையாட்டு
அருள்பழுத்த தென் கலைசைவாழ் முதலே
யார்அறிந்து எடுத்தோத வல்லவரே''[104]

என்று கூறியுள்ளார்.

100. திருவாசகம் கோயில் திருப்பதிகம் 10.
101. தாயுமானவர் பாடல்கள் சுகவாரி 7.
102. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 16.
103. சிவதத்துவ விவேகம்.
104. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 36.

இவ்வந்தாதிப் பாக்களின் நடை தெளிந்த ஆற்றொழுக்குப் போன்ற ஓட்டம் உடையன. தேவாரம், திருவாசகம் போலத் தோய்வார் உள்ளத்தைப் பற்றி ஈர்த்து உருக்க வல்லன. இப் பாமாலைகளைப் படிப்பவர் கண்கள் புனல் பாயும். கற்ற உள்ளம் களிப்பெய்தும். இறைவன்மீது அளவிலா அன்பை வளர்க்கும். சுவாமிகள் கையாண்டிருக்கும் சொல் நடை எளிமை வாய்ந்தது. எவரொருவர் துணையின்றியும் பாக்களைப் படித்துப் பொருள் உணரும் தன்மையது. திரும்பத் திரும்பப் படிக்கும் ஆவலைத் தூண்டுவனவாக இப்பாக்கள் திகழ்கின்றன 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற அப்பர் அடிகளின் வாக்குக்கேற்பப் பெறுதற்கரிய இம் மனிதப் பிறவியை எடுத்துள்ள நாம் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபிரானை நினைந்து வழிபட்டு அவன் திருவருளைப் பெற முயல்வோம்! அவனும் மெல்ல மெல்ல வந்து நம் உள்ளத்தைத் திருத்தி நமக்கு மேலை வீட்டின்பம் நல்குவான்! இது உறுதி!

# 11. அம்புலிப் பருவத்தில் சந்திரன்

அம்புலிப் பருவம் என்பது, குழந்தை சந்திரனைத் தன்னோடு விளையாட அழைப்பதாக அமைத்துப் பாடும் பருவமாகும். இது குழந்தை பிறந்த பதினெட்டாம் திங்களில் நிகழ்வதாகும். இதனை, 'மதி ஈரொன்பதில் மதியை அழைத்தலும்[1]' என்று பிங்கலந்தை கூறுவதனால் அறியலாம். இப்பருவத்திலே சந்திரனைப் பலபடியாகப் புகழ்ந்தும் பாட்டுடைத் தலைவன் ஆகிய குழந்தைக்கும் அவனுக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளை எடுத்துரைத்தும் பாக்கள் அமைத்தல் வேண்டும். பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் மிகவும் நயம் பெற அமைந்த பகுதி இவ் 'அம்புலிப்பருவ'மாகும். பிள்ளைத்தமிழ் பாடுகின்ற ஒவ்வொரு புலவரும் தமது திறமை முழுவதையும் இப்பருவத்துப் பாக்களில் வெளிப்படுத்துவர். அதனாலேயே 'காசினியில் பிள்ளைக்கவிக் கம்புலி புலியாம்' என்று அவ்வையார் கூறினார் போலும்!

குழந்தையைத் தாய்மார்கள் ஒக்கலையில் வைத்து வானத்தில் தவழ்ந்து செல்லும் சந்திரனைத் தம் குழந்தையுடன் விளையாடுவதற்கு வருமாறு அழைப்பர். இவ்வாறு அழைக்கின்ற தாயர் முதலில் இன்சொல் (சாம உபாயம்) கூறியழைப்பர் அம்புலி வருவதாக இல்லை. அதன்பிறகு வெகுண்டெழுந்த தாயர் வேறுபாடு (பேத உபாயம்) கூறி அழைப்பர். அப்பொழுதும் அம்புலி வந்தானிலன். பிறகு நீ விளையாட வந்தால் உனக்கு இன்னின்ன நன்மைகள் உண்டாவதன் பொருட்டுச் சில கொடைகள் (தான உபாயம்) தரப்படுமென்பர். இதற்கும் வராமல் போன பின்பு இறுதியில், உறுதியாக நீ வராமல் போனால் உனக்கு இன்னின்ன வகையில் ஒறுப்புக் (தண்ட உபாயம்) கிடைக்கும்; அதனால் இன்னும் காலம் தாழ்த்தாமல் விரைந்து வந்து விளையாடு என்றிவ்வாறு நான்கு வகைகளில் சந்திரனைக் குழந்தையுடன் விளையாட வருமாறு அழைப்பர். இவ்வாறு அழைக்குமிடங்களில் சிலேடை முதலிய அணி இலக்கணங்கள் பாங்குற அமைந்து இப்பருவத்திற்கு எழில்நலம் சேர்ப்பதைக் காணலாம்.

---

1. பிங்கலந்தை

சந்திரனைக் குறிக்கின்ற பல பெயர்களுள் அம்புலி, நிலா, சந்திரன், சோமன், களங்கன், பிறை, கலையினன், திங்கள்' மதி, இராக் கதிர், இரவோன், இந்து, தானவன், குமுத நண்பன், சுதாகரன் போன்ற பெயர்களைப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

பொதுவாகப் பிள்ளைத்தமிழ் இலக்கிய அம்புலிப் பருவத்தில் சந்திரன் பிறந்தது, பதினாறு கலைகளுடன் திகழ்வது, இருபத்தேழு மகளிரை மணந்தது, தாமரை மலரைக் குவியச் செய்வது, நோயுடன் இருப்பது போன்ற செய்திகளைப் புலவர்கள் அவரவர்களின் கற்பனை நயத்துடன் எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றன.

சந்திரன் திருப்பாற்கடல் கடைந்தபொழுது அதில் தோன்றினான் என்பது மரபு. இதனை.

''நெடிஅம் பரவைஅல றத்தோன்றியவன்''[2]

என்றும்

'நிணைஈன்ற தொரு பரவை''[3]

என்றும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை கூறுகின்றார். இவன் தோன்றுவதைக் கண்ட கழுநீல மலர்கள் (குவளை மலர்கள்) மலரும்; ஆனால் தாமரை மலர்களோ இவனைக் கண்டவுடன் குவிந்துவிடும். இவற்றைக் கண்ட ஆன்றோர் குவளை மலர்கட்குக் கணவன் சந்திரன் என்றும் தாமரை மலர்களுக்குக் கணவன் சூரியன் என்றும் கூறினர்.

சந்திரன் குளிர்ந்த ஒளியுடையவன். அவனது குளிர்ந்த ஒலியைக் காணும்போது கடல் பொங்கும். இதனைச் சிவப் பிரகாசர் 'தண்க திரால் பொங்கும் கடல்' என்றனர். இவனுடைய ஒலி பயிர் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுகிறது. அதனால்தான்

''இருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தயிவன்
எவ்வுயிரும் வாழச்செய்தான்''[4]

என்று குமரகுருபரரும்

2. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 62.
3. மேலது 67
4. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 64.

"பயிர் கொடிசெடிஎலாம்
பேணும் கருக்கொள்ளநீஉப கரித்தாய்"[5]

என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் குறிப்பிடுகின்றனர்.

சந்திரன் இடப இராசிக்கு உரியவன். அதாவது இந்த இராசியில் சந்திரன் உச்சம் உடையோன் என்பது சோதிட நூல் வல்லார் கருத்தாகும். இவன் பன்னிரண்டு இராசி களிலும் சூரியனுடனும் தங்கித்தங்கி வருபவன். மேலும் அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் ஒன்றுபடுகிறார்கள் என்பதும் சோதிட மரபாகும். சோதிடநூல் கருத்துப்படி பாபக்கிரகங்களாகிய சனி, இராகு, கேது ஆகிய கோள்களுடன் சந்திரன் இருக்க நேரிடுகின்றது. பன்னிரு இராசிகளில் ஒன்பது கிரகங்கள் உலாவி வருகின்றன. அங்ஙனம் உலாவும் போது, சந்திரன் ஒவ்வொரு இராசியிலும் இரண்டேகால் நாள் தங்கிச் செல்கிறான். அங்ஙனம் செல்லும்பொழுது தீய கோள்களாகக் கருதப்படும் சனி, இராகு, கேது ஆகிய கோள்களையும் கூடும் வாய்ப்பு ஒவ்வொரு திங்களும் ஏற்படு கிறது. அதனால் இவனை,

"வெம்மை யுடையவர்களொடு மதிதொறும் மதிதொறும்
விராய் உறவுகொள்ளுவோன்"[6]

என்று கூறினர்.

அமாவாசை அன்று சந்திரன் சூரியனிடம் சென்று தான் இழந்த கலைகளைப் பெறுகிறான் என்பது ஐதிகம்.

"மித்திரன் கலைகொடுத்து
முன் மீளவும் கவர்வோன்"[7]

என்றார் வில்லிபுத்தூரார். இதனைப் பகழிக்கூத்தர் பின்வரும் பாடலில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

"முதிருமிசை வரிவண் டலம்புகம லாலய
முகிழ்க்குமிரு நாலிதழ்க்குண்
முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குண்மலர்
முகமண் டலத்துவெயிலா

5. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 69.
6. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 66
7. வில்லிபுத்தூரார், வில்லிபாரதம்

லெதிருமிரு ளந்தகா ரப்படலை தள்ளிவந்
 தெழுமிரவி மண்டலத்தி
லின்புற்று நீவந் தொளிக்குமிட மந்தவா
 னிரவிமண் டலமுடுக்க ளுதிரும்''[8]

அஃதாவது, "நிறைந்த இனிமையுள்ள இசை பாடும் வரிகளையுடைய வண்டுகள் திரிகின்ற கமலவுருவமாய் அமைந்த மூலாதார நிலையத்திலே தோன்றிய எட்டு இதழ்களுள் அமைந்த முக்கோணத்தின் நடுவிலுள்ள வட்ட உருவமாய்த் தோன்றும் ஒரு சுழிக்குள்ளே தோன்றுகின்ற அக்கினி முகமண்டலத்து ஒளியால் எதிரே தோன்றும் கடுமை மிக்க இருட்கூட்டத்தை அப்புறப்படுத்திக் கொண்டு உதயமாகின்ற சூரிய மண்டலத்திலே மகிழ்ச்சியோடு அமாவாசையன்று நீ வந்து அடங்கியொடுங்கும் இடம் அந்த உயர்வுமிக்க சூரிய மண்டலமும் விண்மீன்களும் உதிரும்'' என்கின்றார்.

சந்திரன் அத்திரி மாமுனிவர் விழியிலிருந்து வந்தவன் என்பது புராணம். இதனை, 'ஓர்அறவர் விழியின்வெளி வந்தொளிருவை'[9] என்ற பாடல்வரி காட்டுகிறது.

சந்திரன் தேவகுருவின் பத்தினி தாரையைப் புணர்ந்து புதன் என்பவனை மகனாகப் பெற்றான். இக்காரணத்தால் குருவின் சாபத்திற்கு ஆளாகி அவரால் வெறுக்கவும் படுகிறான். இதனை,

''வானோர் பேணுகுரவன் பாங்கர் நிக்கிரகமே
 பெற்ற பேதை''[10]

என்ற பாடல்வரி புலப்படுத்தும்.

சந்திரனுக்குள்ள குறை நோயான கயரோகத்தைப் போக்கிக் கொள்ள ஒவ்வொரு புலவரும் தாங்கள் பாடிய பாட்டுடைத்தலைவன் பெருமையைப் புலப்படுத்தும் விதத்தில் பாடிச் சந்திரனை 'அம்புலி ஆட வா' வென அழைக்கின்றனர்.

சந்திரன் தனக்குள்ள நோயைப் போக்கிக் கொள்ளச் சோமேசரை வழிபடுகின்றான். இறைவன் வெளிப்பட்டு

8. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் 65.
9. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 63.
10. மேலது 65.

நோயைப் போக்கி அவனைத் திருமுடிக்கு அணியாகவும் ஏற்றுக் கொண்டனன். இதனை அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்ப் பாடல் வரிகள்[11] புலப்படுத்துகின்றன.

"அம்புலியே! உன்னுடைய கயரோகத்துடன் சேர்ந்திருக்கின்ற முயற்களங்கத்தையும் நீ ஒழித்துக் கொள்ள விரும்பினால் முருகப்பெருமானின் சந்நிதிக்குச் சென்று வெண்ணீற்றை அள்ளித் தரித்துக்கொள், சித்தாமிர்தத் தீர்த்தத்தில் இருந்து ஒரு துளியை அள்ளி உன் உடல் மேல் தெளித்துக்கொள்" எனும் கருத்தில்,

"நின் கயரோக முடன்முயற் கறையுந்
துலைத்திடக் கருதிடுதி"[12]

என்ற பாடலில் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்.

சில பிள்ளைத்தமிழ் நூல்களில் தக்கன் யாகத்திற்குச் சென்றவர்களுள் ஒருவனான சந்திரன் அல்லல்பட்ட நிகழ்ச்சியும் குறிப்பிடப்படுகிறது தவிரச் சந்திரனைக் கன்னிப் பெண்கள் விளக்குகின்ற மரபும் சுட்டப்படுகிறது சந்திரனை வணங்கினால் திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு விரைவில் மணம் நிகழும் என்பது ஒரு நம்பிக்கையாக இருந்து வருவதே இதற்குக் காரணம்.

சிவபிரானின் தலையில் பிறை இருப்பதனைக் கண்ணுற்ற பகழிக் கூத்தர் பின்வருமாறு கூறும் பாடல் இவண் சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது.

"கடியவளி யெறியுந் தழைச்சிறைக் கூருகிர்க்
சுருடவா கனனுமிகல்கூர்
கட்டைமுள் ளரைநாள நெட்டித முடுத்தபொற்
கமலயோ னியுமெழுந்து
கொடியவெங் கொலைபுரி வராகமென வொருவனெழு
குவலய மிடந்துதேடக்
குறித்தொருவ னெகினமா யண்டபகி ரண்டமுங்
கொழுதிக் குடைந்துதேட
முடியவிது காறுமவ ரறிவுறா வகைநின்ற
முழுமுதற் கடவுளடியும்
முடியுநீ கண்டனை"[13]

11. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் 66.
12. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 66.
13. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் 71.

திருவண்ணாமலையில் சிவபிரான் ஒளிப்பிழம்பாய் நிமிர்ந்து நிற்க, திருமால் வராக வடிவமெடுத்துப் பெருமானின் அடியையும் நான்முகன் அன்ன வடிவமெடுத்துப் பெருமானின் முடியையும் காண்பதற்காகப் பல்லாண்டுகள் முயன்று தேடியும் அடிமுடி காணாராயினர். முருகப்பெருமான் புகழ் பாடவந்த இப்பிள்ளைத்தமிழில் சிவபிரானின் தோன்றலாக முருகன் இருப்பதனால் அடிமுடி தேடிய வரலாற்றை இப்பாடலில் புலவர் குறிப்பிடுகின்றார். "சிவபிரானின் திருமுடியில் இருக்கின்ற சந்திரனே! திருமாலும் நான்முகனும் காணாத அடிமுடிகளை நீ கண்டிருக்கிறாய்" என்பதையே இப்பாடல் கூறுகின்றது.

சந்திரனே! நீ எட்டாத உயரத்தில் வானுலகில் திரிவதனால் எங்கள் குழந்தையுடன் விளையாட வருவதற்கு மறுக்கிறாய். உன் புகழையெல்லாம் பாடி அழைத்தாலும் நீ வர மறுக்கிறாய். அவ்வாறு வர மறுப்பதனால் விளையும் தீமைகளை எடுத்துக் கூறினாலும் நீ அசைய மாட்டேன் என்கிறாய். இது உனக்கே நன்றாக இருக்கிறதா? எண்ணிப்பார் நீ இவ்வாறு இருப்பதைக் கண்ணுற்ற இவ் அறிவியல் உலகத்தில் ஆம்ஸ்ட்ராங் என்பவர் நீ இருக்கின்ற இடத்திற்கே வந்து கால் பதித்துக் கொடி நாட்டிவிட்டார். இப்படியிருக்க நீ இன்னும் வராமல் தயக்கம் காட்டுவது சரியன்று. அண்மையில் வெளிவந்த தொரு பிள்ளைத்தமிழில் புலவரொருவர் இவ்வாரு பாடியுள்ளார்.

அம்புலிப் பருவப் பாக்களில் சந்திரனையும் பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியையும் ஒப்பிட்டுப் பாடியுள்ள பாங்கையும் காணமுடிகின்றது. ஆயின் இக்கட்டுரையில் சந்திரன் தொடர்பான செய்திகள் சிலவற்றை மட்டும் ஆராயப்பெற்றுள்ளது.

# 12. சைவ இலக்கியச் சுவடிகள்

தமிழகத்தின் பல்வேறிடங்களில் இருக்கின்ற காகிதச் சுவடிகளில் தமிழ் இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம், நாட்டுப்புறப் பாடல்கள், பல சமய இலக்கியங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேகரிக்கப்பெற்ற சுவடிகளுள் சைவ இலக்கியம் தொடர்பான காகிதக் கையெழுத்துச்சுவடிகளை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

சேரமான் பெருமாள் நாயனார்

சேரமான் பெருமான் நாயனார் அருளிய திருக்கயிலாய ஞான உலா, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகிய இரு நூல்களின் காகிதச் சுவடிகள் நல்ல நிலையில் இருக்கின்றன. ஓலைச்சுவடிகளிலிருந்து படி எடுக்கப்பெற்ற இச் சுவடிகளின் காலம் தெரியவில்லை. தாளின் இரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளன திருக்கயிலை ஞானவுலா நூலின் தொடக்கத்தில் 'சேரமான் பெருமாள் நாயனார் கைலாயத்திலே அருளிய திருஞானவுலா' என்று எழுதப் பட்டிருக்கிறது.

நக்கீரதேவ நாயனார்

இவரருளிய கோபப் பிரசாதம், திருஈங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை ஆகிய நூல்களின் கையெழுத்துச் சுவடிகள் இருக்கின்றன. இச் சுவடிகளின் காலம் தெளிவாகத் தெரியவில்லை. ஓலைச் சுவடிகளிலிருந்து படியெடுக்கப்பெற்ற இச் சுவகளின் தாள்களின் தன்மையைப் பார்க்கும் பொழுது மிகப் பழைமை வாய்ந்ததாகத் தெரிய வருகின்றன. இம் மூன்றில் திருஈங்கோய்மலையெழுபது தவிர ஏனைய இரண்டும் முழுமை உடையனவாக உள்ளன. திருஈங்கோய்மலையெழுபது நூலில் 1 முதல் 47 பாடல்கள் இருக்கின்றன. 48 முதல் 62 வரையுள்ள பாடல்கள் வெற்றிடங்களாக எதுவும் எழுதப்படாமல் உள்ளன. 63 முதல் 70 பாடல்கள் இருக்கின்-றன. இதை வைத்துப் பார்க்கும்பொழுது இச்சவடி மிகப் பழைமை வாய்ந்த சுவடியாகும் என்று துணிந்து கூறலாம். ஏனெனில் பழம் பதிப்புகளில் 48 முதல் 62 வரை உள்ள

பாடல்கள் இறந்தன எனக் காட்டப்பட்டிருப்பதைக் காண-லாம். மு.அருணாசலம் செப்பறை மடத்து ஏடொன்றைப் பரிசோதித்துக் கண்ட பாடல்கள் திருப்பனந்தாள் காசிமடத்-துப் பதிப்பில் (17-10-1972) சேர்க்கப்பட்டிருப்பது இவண் குறிப்பிடத்தக்கது. எனவே இக் காகிதச்சுவடி மிகப் பழைமை வாய்ந்த ஓலைச்சுவடியிலிருந்து படி எடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது.

பரணதேவ நாயனார்

இவரருளிய சிவபெருமான் திருவந்தாதி எனும் நூலின் கையெழுத்துச் சுவடி 'திருவந்தாதி' என்ற பெயரில் உள்ளது. நல்ல நிலையிலுள்ள இச் சுவடி தாளின் இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இச்சுவடியும் ஓலைச் சுவடியிலிருந்து படி எடுக்கப்பெற்றதாகும். நூறு பாடல்களும் முழுமை உடையதாக இருக்கிறது. நூலின் தொடக்கத்தில் 'பரணதேவரருளிச் செய்த திருவந்தாதி' என்று எழுதப்பட்டுள்ளது. ஆயின் நூலின் முடிவில் 'பாணந்தேவர் அந்தாதி முற்றும்' என்று காணப்-படுகிறது. இச்சுவடியின் காலமும் தெளிவாகத் தெரியவில்லை.

பட்டினத்துப்பிள்ளையார்

இவரருளிய 'கோயில் நான்மணிமாலை' எனும் நூலின் காகிதச் சுவடி நல்ல நிலையில் முழுமை பெற்ற சுவடியாக உள்ளது. நூல் தொடக்கத்தில் 'பட்டினத்துப் பிள்ளையாரரு-ளிய கோயில் நான்மணிமாலை' என்று எழுதப்பட்டுள்ளது. இச்சுவடியின் காலமும் தெரியவில்லை.

காளமேகப் புலவர்

இவர் பாடிய 'திருவானைக்காவுலா' நூலின் மூலம் காகிதச் சுவடியாக இருக்கிறது. இச்சுவடியும் படியெடுக்கப்-பட்ட சுவடியாக இருத்தல் கூடும். நல்ல நிலையிலுள்ள இச்சுவடி முழுமை உடையதாக இருக்கிறது. இச் சுவடியின் தொடக்கத்தில் 'திருவானைக்காவுலா மூலம்' என்று மட்டுமே காணப்படுகிறது. ஆயின் நூல் தொடக்கத்திலும் முடிவிலும் நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. சுவடியில் காணப்படும் பாக்களையும் நூலையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் காளமேகப்புலவர் பாடியதாகத் தெரிய வருகிறது.

அருணகிரிநாதர்

இவரருளிய கந்தரந்தாதி உரையுடன் கூடிய காகிதச்சுவடி உள்ளது. பாடலும் அப்பாடலுக்கேற்ற உரையும் உள்ள இச்சுவடி முழுமையாக இல்லை. படியெடுக்கப்பெற்ற இச்சுவடி தாளின் இருபக்கங்களிலும் எழுதப்பட்டு நல்ல நிலையில் காணப்படுகிறது. இச்சுவடியின் காலமும் தெரியவில்லை.

குமரகுருபரர்

இவரருளிய பல நூல்களுள் சிதம்பர மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை ஆகிய இரு நூல்களின் காகிதச் சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இச்சுவடிகளும் படியெடுக்கப்பெற்ற சுவடிகளேயாகும் இவற்றின் காலமும் தெரியவில்லை.

கச்சியப்ப முனிவர்

இவரியற்றிய திருத்தணிகைப் புராணம், காஞ்சிப் புராணம் ஆகிய இரு நூல்களின் காகிதச் சுவடிகள் உள்ளன. முழுமை பெற்ற இவ்விரு சுவடிகளும் சிறிது பழுதடைந்த நிலையில் உள்ளன. திருத்தணிகைப் புராணம் 26•4 1867இல் படியெடுக்கப்பட்டிருக்கிறது. காஞ்சிப் புராணம் 1866இல் படியெடுக்கப்பட்டிருக்கிறது. நூலின் இறுதியில் இக்காலம் குறிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு இச்சுவடிகளின் காலத்தை அறியமுடிகின்றன. சுவடிகளின் எந்த இடத்திலும் ஆசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை

இவரியற்றிய பல நூல்களுள் கோயிலூர்ப் புராணம், திருவாளொளிபுற்றூர்ப் புராணம் ஆகிய இரு நூல்களின் காகிதச் சுவடிகள் உள்ளன 18*6இல் எழுதப்பெற்ற இவ்விரு சுவடிகளும் சிறிது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. நூல் முழுமையும் முற்றுப்பெற்றுள்ள இச்சுவடிகள் தாளின் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. இச்சுவடிகளிலும் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.

சி. தியாகராசச் செட்டியார்

இவரியற்றிய 'அளகாபுரி உமையம்பிகை பிள்ளைத்தமிழ்' நூலின் காகிதச் சுவடி சிறிது பழுதடைந்த நிலையில் முழுவதும்

உள்ளது. இச்சுவடியும் 1866இல் எழுதப்பட்டுள்ளது. இச் சுவடியிலும் ஆசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை.

'சிவக்கவிமணி' சி. கே. சுப்பிரமணிய முதலியார்

பெரியபுராணம் முழுவதற்கும் சிறந்ததொரு உரையெழுதிய 'சிவக்கவிமணி' தம் கைப்பட எழுதிய திருநாவுக்கரசர் அல்லது மெய்யுணர்தல். சேக்கிழார் செம்மணித்திரள் சேக்ழாரும் சேயிழையார்களும் ஆகிய மூன்று நூல்களின் காகிதச் சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

காங்கயம் தெய்வசிகாமணி முதலியார்

இவர் தம் கைப்பட எழுதிய பல நோட்டுக்கள் இருக்கின்றன. இவர் வாழ்ந்த காலம் 1854 - 1944 ஆகும். முருகன் மீது போற்றிப் பாடப்பெற்ற பல பாக்கள் திருப்புகழ்ச் சந்த அமைப்பில் இருக்கின்றன. இப்பாடல்களுக்கு 'நூதனத் திருப்புகழ்ச் சந்தக்கவி' என்று ஆசிரியரே பெயருமிட்டிருக்கிறார். தவிரச் சிவபிரான் மீது பாடிய பல பாடல்கள், கீர்த்தனைகள், காவடிச்சிந்து போன்றவை இந்த நோட்டில் எழுதப்பட்டுள்ளன. சில பாக்கள் பென்சிலில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பகுதிகள் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இவர் பல்வேறு சித்திர கவிகளும் பாடியுள்ளார். இச்சுவடிகளில் எதுவும் இதுவரை அச்சாகவில்லை என்பது இவண் குறிக்கத்தகும்.

த. கனகசுந்தரம்பிள்ளை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மாணிக்க வாசகர் ஆகிய நால்வர் தொடர்பான சரித்திரக் குறிப்புகளைச் சுருங்கிய அளவில் தேவாரப் பாடல்கள் சிலவற்றையும் உரை நடையில் சில விளக்கங்களையும் சேர்த்து இவர் எழுதியிருக்கின்றார். ஆசிரியர் தம் கைப்பட எழுதப் பெற்ற இச்சுவடிகளில் பலவிடங்களில் கூட்டெழுத்துகள் காணப்படுகின்றன.

பிற சுவடிகள்

புள்ளிருக்குவேளூர்ப் புராணம், திருமழுவாடிப் புராணம், பூவாளூர்ப் புராணம், திருநாவலூர்ப் புராணம், திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம், வேதாரணிய புராணம், திருவொற்றியூர்ப் புராணம், அருணகிரிப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், செவ்வந்திப் புராணம், விநாயக புராணம் ஆகிய பதினோரு

புராணங்களுக்கு எழுதப்பெற்ற குறிப்புகள் 'பதினோரு புராணக் குறிப்புகள்' எனும் பெயரிலேயே அமைந்த சுவடி ஒன்றும் உள்ளது. இச்சுவடியின் இறுதியில் 'தருமபுர ஆதீனம் ஸ்ரீ அக்ஷயலிங்கத் தம்பிரான் விருப்பப்படி இயற்றப்பட்டது' என்ற குறிப்பும் 13-11-20இல் எழுதி முடித்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. இச்சுவடி மிகப் பழைமையான சுவடியாக இருக்கிறது. சுவடியின் இறுதியில் எழுதப்பட்ட தேதியைக்கொண்டு 1820ஆம ஆண்டா? அல்லது 1920ஆம் ஆண்டா? என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கிறது.

திருத்தொண்டர் அடிமைத் திருவிருத்தம் எனும் பெயரில் 1982இல் ஓலையிலிருந்து காகிதத்தில் படியெடுக்கப்பட்ட ஒரு சுவடியும் இருக்கிறது

தொட்டிக்கலை சுப்பிரமணிய சுவாமிகள் இயற்றிய 'திருக்கலைசை வெண்பா' எனும் நூலின் காகிதச் சுவடி மிகப் பழைமையானதாகக் காணப்படுகிறது.

நூல் பெயர்

சுவடிகளில் காணப்பெறும் நூல் பெயர்கள் பின்வரும் முறையில் அமைந்திருக்கின்றன:

1) நூல் தொடங்கப்பெறுவதற்கு முன்னர் நூல் பெயர் எழுதப்பட்டிருக்கிறது (எ-டு) காஞ்சிப் புராணம்

2) சிலவற்றில் இன்னார் எழுதிய இன்ன நூல் என்ற குறிப்புக் காணப்படுகிறது. (எ-டு) சேரமான் பெருமான் நாயனாரருளிய திருவாரூர் மும்மணிக்கோவை

3 சிலவற்றில் நூல் முடிந்தவுடன் இன்ன நூல் முற்றுப் பெற்றது என்ற குறிப்புக் காணப்படுகிறது.
(எ-டு) கோயிலூர்ப் புராண முற்றுப்பெற்றது

4) சிலவற்றில் இன்னார் எழுதிய இன்ன நூல் முற்றுப் பெற்றது என்ற குறிப்புக் காணப்படுகிறது.
(எ-டு) பரணதேவர்அந்தாதி முற்றும்

ஆசிரியர் பெயர்

சில சுவடிகளில் மட்டுமே ஆசிரியர் பெயர் குறிக்கப்-பட்டிருக்கிறது. பெரும்பாலானவற்றில் ஆசிரியர் பெயர்

காணப்படவில்லை. ஆசிரியர் பெயர் உள்ள சுவடிகளில் மட்டுமே இன்னார் எழுதிய இன்ன நூல் என்ற குறிப்பு இருக்கிறது. இதை வைத்து ஆசிரியர் பெயரை அறியமுடி-கிறது. ஆசிரியர் பெயர் இல்லாத சுவடிகளில் நூல்பெயர் மட்டுமே காணப்படுகிறது. இத்தகைய சுவடிகளுக்கு அச்சான சுவடியாக இருந்தால் அச்சிடப்பட்ட நூலையும் சுவடியையும் ஒப்புநோக்கி ஆசிரியர் பெயரை ஒருவாறு அறிந்து கொள்ள-லாம்.

அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் சேகரிக்கப்-பெற்ற இச்சுவடிகளின் காலம் கண்டுபிடிப்பதில் பல இடர்ப்-பாடுகள் இருக்கின்றன. ஒருசில சுவடிகளில் மட்டுமே என்-றைக்கு எழுதப்பட்டது என்ற குறிப்புக் காணப்படுகிறது. பெரும்பாலான சுவடிகளில் எழுதப்பட்ட காலம் குறிக்கப்பெற-வில்லை. சில சுவடிகளில் தமிழ் ஆண்டு, மாதம், நாள் குறிக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றில் ஆங்கில ஆண்டு, ஆங்கில மாதம், நாள், (தமிழ் எண்களில்) கொடுக்கப்பட்டு அதன் பின்னர் அதற்கு நேரான தமிழ் ஆண்டு, மாதம், நாள், நட்சத்திரம், நாழிகை முதலானவையும் எழுதப்பட்-டிருப்பதைக் காணமுடிகின்றன. கிடைத்த சுவடிகளுள் பத்-தொன்பதாம் நூற்றாண்டுவரை உள்ளவை பெருப்பாலும் படி எடுக்கப்பெற்ற சுவடிகளாக இருக்கின்றன. பத்தொன்பதின் பிற்பகுதி அல்லது இருபதின் தொடக்கத்தில் எழுதப்பெற்ற நூல்கள் மூலச்சுவடிகளாகவே இருக்கின்றன.

சுவடிகளின் தன்மை

பதினெட்டாம் நூற்றாண்டு வரை கிடைத்த சுவடிகள் மிகப் பழைமை வாய்ந்தனவாக உள்ளன. தாள்களின் தன்மையைப் பொறுத்த அளவில் சுவடியை மிகவும் பாதுகாப்-பாக வைக்கவேண்டிய நிலையில் உள்ளன. ஏனெனில் தாள்-களை மடித்தால் பொடிப்பொடியாகச் சிதறிவிடும் நிலையில் இருப்பதே காரணமாகும். நல்ல நிலையிலுள்ள சுவடிகளில்கூட இடையில் பல்வேறிடங்களில் பூச்சிகள் அரிக்கப்பட்டிருக்கின்-றன. பத்தொன்பது, இருபது நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட சுவடிகள் மிகவும் நல்ல முறையில் உள்ளன.

சுவடிகளில் எழுதப்பட்டுள்ள முறை

பழைய சுவடிகளில் (பதினெட்டாம் நூற்றாண்டு வரை எழுதப் பெற்ற சுவடிகளில்) ஓலைச் சுவடியில் எழுதப்பட்டுள்ள

முறை காணப்படுகிறது. ஓலையிலிருந்து படியெடுக்கும் பொழுது அந்த ஓலையில் எப்படி எழுதியிருக்கிறதோ அதேபோன்று தாள்களில் எழுதியிருப்பது ஒரு காரணமாகும். இத்தகைய சுவடிகளில் எழுதப்பட்டுள்ள முறையினைப் பின்வருமாறு கூறலாம்.

1) சிலவற்றில் புள்ளி இல்லை. மகரம், னகரம், றகரம், டகரம், கால் (r) ஆகியவற்றில் மட்டும் புள்ளிகள் இடப்பட்டுள்ள சில சுவடிகளும் இருக்கின்றன.

2) எல்லாவற்றிலும் பாடல் எண்களுக்குத் தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

3) சிலவற்றில் காணப்படும் பாடல்கள் உரைநடை போலத் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தொடர்ச்சியாக எழுதப் பெற்ற சுவடிகளில் சிறு கோடு (-) போட்டு எழுதும் வழக்கமும் காணப்படுகிறது.

4) கூட்டெழுத்துகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

5) ஒற்றைக் கொம்பினை (ெ) எண் 6 போல (6)வும் ரகரம் காலாக (r) வும் ஊகாரம் 'உள' போலவும் எழுதப்பட்டிருக்கின்றன.

6) சிலவற்றில் ஒவ்வொரு தலைப்பு, பாடல் முடிந்தவுடன் 'உ' என்ற குறியீடு காணப்படுகிறது. (எ-டு) திருநாட்டுச் சிறப்ப உ

7) சிலவற்றில் காணப்படும் பாடல்கள் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன.

''திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்ற
கருமாலுற வழலாய் நின்ற - பெருமா

8) பாடலின் இடையில் விடுபட்ட எழுத்து அல்லது தொடரைச் சேர்க்கும்பொழுது ஙன்'' இக்குறியீடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது

ம்
(எ-டு) வணங்குது வாழி
^

9) நூலைத் தொடங்குவதற்கு முன் பிள்ளையார் சுழி எழுதப்பட்டுத் திருச்சிற்றம்பலம் அல்லது கணபதி துணை அல்லது சிவமயம் அல்லது முருகன் துணை ஆகிய இவற்றுள் ஏதாவது ஒன்று எழுதப்பட்டிருக்கிறது.

(எ-டு) உ

திருச்சிற்றம்பலம்

இதன்பிறகு இன்னார் எழுதிய இன்ன நூல் என்று காணப்படுகிறது.

10) இதேபோன்றே நூலின் முடிவில் அ) திருச்சிற்றம்பலம் முற்றும்
ஆ) முற்றுப்பெற்றது

போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

முடிவுரை

இதுவரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேகரித்துப் பாதுகாக்கப் பெற்ற சுவடிகளில் சைவ சமயம் தொடர்பான சுவடிகள் மட்டுமே இக்கட்டுரையில் ஆய்வுசெய்யப்பெற்றன. ஏதாவதொரு நூலை ஆய்வு முன்னுரையுடன் செம்பதிப்பாகப் பதிப்பிக்கின்ற காலங்களில் அந்நூலின் ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள், அச்சான பிற நூல்கள் போன்றவற்றைச் சரிபார்த்துப் பல பாடபேதங்களுடன் திருந்திய பதிப்பாகக் கொணர்வதற்கு இத்தகைய சுவடிகள் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# 13. போதமும் சுபக்கமும்

''சைவம் என்ற சொல் 'சிவம்' என்ற செந்தமிழ்ச் சொல்லினடியாகப் பிறந்து சிவனோடு தொடர்புடைமை என்னும் பொருளில் வழங்குவது. சிவனைப் பற்றிய நிலையையும், சைவ நூல்களையும், சிவனடி சேர்தற்குரிய நெறியையும் அச்சொல் குறிக்கும். சித்தாந்தம் என்பது சித்த அந்தம் என்ற இரு சொற்களால் ஆகி, முடிபின் முடிபு என்று பொருள் பெறும். சைவ நூல்களில் முடிந்த முடிபைக் கூறும் நூல்களைச் சைவ சித்தாந்தம் என்ப'' என்று கூறுவார் கா.சு பிள்ளை.[1] ஆயின் சித்தாந்த சமயம் என்பது சைவ சமயத்தையே குறிக்கும். உலகின் வழங்கப்படும் அனைத்துத் தெய்வங்களும் சிவத்தில் அடங்கும். அதுபோன்றே எல்லாச் சமயங்களும் சைவத்துள் அடங்கும். உலகின் எத்திசையிலும் பாயும் நதிகளும் ஆறுகளும் இறுதியில் கடல் ஒன்றிலே கலத்தல் போலவே அனைத்துச் சமயங்களும் சைவம் எனும் பெருங் கடலுள் கலக்கும். இதனையை ஜி.யூ.போப்,

> ''The Saiva Siddhanta is the most
> elaborate, influential and un-
> doubtedly the most intrinsically
> valuable of all religions of India''

என்று கூறலாயினர்.[2]

தொண்டை நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் நடுவே இலங்கும் திருமுனைப்பாடி நாட்டிலே திருப்பெண்ணாகடம் எனும் ஊரில் சைவ வேளாளர் மரபில் பிறந்தவர் மெய்கண்டார் ஆவர். இவரருளிய நூல் 'சிவஞான போத' மாகும். நடுநாட்டிலுள்ள திருத்துறையூர் எனும் ஊரில் பிறந்த அருணந்தி, தம் குருநாதரான மெய்கண்டார் அருளிய சிவஞானபோத நூற் பொருளை விரித்துப் பிற்காலத்தார்க்கு இனிது விளங்குமாறு 'சிவஞான சித்தியார்' எனும் நூலைச்

---

1. கா. சுப்பிரமணியபிள்ளை, சைவ சித்தாந்த உண்மை வரலாறு, ப.5.
2. மேற்கோள் : தே.ஆ சீநிவாசாசாரியன், இருபா இருபஃது நூலின் விரிவுக் கட்டுரை-நூல் மாண்பு, ப.4.

செய்தருளினார். மேலும் 'இருபா இருபஃது' எனும் மற்றொரு நூலையும் இவர் எழுதியுள்ளார். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய இரு நூல்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

போதமும் சித்தியும்

அரிய பொருள்களைச் சுருங்கிய எழுத்துக்களால் அமைந்த சிறு வடிவ நூலில் அமைத்துத் தந்த பெருமை மெய்கண்டாருக்கே உரியது. மெய்கண்டார், தம் கருத்தைப் பிற்காலத்தில் வருவோர் பிறழ உணராதிருக்கத் தாமே நூலை அழகுற அமைத்துள்ளார். சூத்திரம், கருத்துரை, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்ற இந்த ஐந்தையும் அவரே அமைத்துள்ளார். சிவபிரானின் திருவருள் ஆற்றல் ஐந்து; அதுபோலவே இப்பாகுபாடும் ஐந்தாக அமைந்துள்ளது. இவற்றுள் சூத்திரமும், எடுத்துக்காட்டும் பாச் செய்யுளாலும், கருத்து, மேற்கோள், ஏது ஆகிய மூன்றும் உரைச் செய்யுளாலும் அமைந்துள்ளன. இவ்வரும்பெரும் நூலுக்கு மாதவச் சிவஞான முனிவர் அரியதொரு பேருரையும் சிற்றுரையும் செய்துள்ளார். இந்நூலின் சிறப்பை,

''வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதுந் தமிழதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்''[3]

என வரும் வெண்பாவால் அறியலாம்.

சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் என இரு பகுதியினை உடையது. ''சிவஞானம் சித்தித்தற் பொருட்டாகச் செய்யப்பட்டமையின் இது சிவஞானசித்தி என்னும் பெயருடைத்தாயிற்று'' என்பர்.[4] போதத்தில் கூறிய கருத்துக்கள் அனைத்துக்கும் விளக்கமாக இஃது அமைந்துள்ளது. இந் நூலுக்கு உரைகண்டார் அறுவராவர். மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாச முனிவர், மாதவச் சிவ

3. மேற்கோள் : மறைமலையடிகள், சிவஞானபோத ஆராய்ச்சி, ப. 16. வேதம் திருக்குறள்; ஆகமம் - திருமந்திரம்; நெய் - வெண்ணெய்
4. சிவஞான சித்தியார் சுபக்கம், (பதிப்பு திருவாவடுதுறை ஆதீனம்), முகவுரை, ப. 2.

ஞான முனிவர், நிரம்பவழகிய தேசிகர், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோராவர். இந்நூலின் பெருமையை,

> ''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
> ஓர்விருத்தப் பாதிபோ தும்''[5]

என்று சிவபோக சாரமும்,

> ''பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
> சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ
> தெந்நாளோ''[6]

என்று தாயுமானவரும் கூறுவதால் அறியலாம். மாதவச் சிவ ஞானிகள் இதனைச் 'சிவாகமார்த்தங்களுக்கெல்லாம் உரையாணி' என்று போற்றுவார்.

> ''சிவத்துக்கு மேல் தெய்வ மில்லை
> சித்திக்குமேல் நூலில்லை''

என்ற பழமொழியினாலும் இந்நூலின் பெருமை உணரலாம்.

நூலமைப்பு

சிவஞான போதமும், சிவஞான சித்தியார் - சுபக்கமும் அமைப்பால் ஒன்றே! அதனைப் பின்வருமாறு காணலாம்.

நூல்

| பொது அதிகாரம் | | சிறப்பு அதிகாரம் | |
|---|---|---|---|
| பிரமாண இயல் | இலக்கண இயல் | சாதன இயல் | பயன் இயல் |
| 1. பதி உண்மை (இறை) | 4. பசு இலக்கணம் (உயிர்) | 7. சாதன இயல்பு | 10. பாசநீக்கம் |
| 2. பாச உண்மை (தடை) | 5. பாசஇலக்கணம் (தடை) | 8. சாதித்துப் பெறுவது | 11. சிவப்பேறு |
| 3. பசு உண்மை (உயிர்) | 6. பதி இலக்கணம் (இறை) | 9. சாதிக்கும் முறை | 12. சீவன் முத்தல் சொல் |

5. சிவபோக சாரம் 23.
6. தாயுமானவர் பாடல்கள், குருமரபின் வணக்கம் 5.

முதல் மூன்று சூத்திரங்களும், பொருள் உண்மைக்கு அளவு கூறுவன ஆகும். பதி. பசு, பாச உண்மைகளை முதல் மூன்று சூத்திரங்களும் உணர்த்தும்.

4,5,6 ஆகிய சூத்திரங்கள் பதி, பசு, பாச இலக்கணங் களைக் கூறும் முதல் மூன்றை நிறுத்த முறையான் கூறிய ஆசிரியர், அடுத்து வரும் 4,5,6,இல் எதிர்நிரனிறையாகப் பொருள் இயைபு கூறினார். நான்கில் பசு, ஐந்தில் பாசம், ஆறில் பதியின் இலக்கணங்கள் கூறப்பட்டன.

முப்பொருள்களைச் சாதித்துப் பெறுவதை அடுத்த இயலில் கூறலானார் உயிர்கள் பாசத்தினை ஒழித்துச் சிவ-பரம்பொருளை அடையும் சாதனம் 7,8,9 இல் முறையே கூறப்பட்டுள்ளன.

அடுத்து அச் சாதனத்தால் பெறப்படும் பாச நீக்கமும் சிவப்பேறுமாகிய பயன் 10,11,12 ஆகியவற்றில் கூறப்பட்-டுள்ளன.

பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல், ஆகிய நான்கு இயல்களில் இப் பன்னிரண்டு சூத்திரங்களும் அடங்கும். முப்பொருள் பொது இலக்கணம் உணர்த்துவதால் முன்னிரண்டும் பொது அதிகாரம்; சிறப்பு இலக்கணம் உணர்த்தும் பின்னிரண்டும் உண்மை அதிகாரம் அல்லது சிறப்பு அதிகாரம்.

சிவஞான போதம்

இந் நூலின் தொடக்கத்தில் மங்கல வாழ்த்து, அவை-யடக்கம் ஆகிய இரண்டும் அமைந்துள்ளன. அடுத்தே சூத்-திரங்கள் தொடங்குகின்றன. சூத்திரங்கள் 12; மொத்தம் 40 வரிகள்; 216 சொற்கள்; 624 எழுத்துக்கள்.

இந்நூலின் கட்டுக்கோப்பு, நூலில் வரும் மங்கல வாழ்த்துச் செய்யுளால் அறியலாம். இதனைச் சிவஞான முனிவர் தாம் அருளிய சிவஞான பாடியத்தில் விளக்கியுள்-ளார். [7]

''கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய

7. மாதவச் சிவஞான யோகிகள், சிவஞான போதமும் சிவஞான பாடியமும். (பதிப்பு) கழகம், பக். 37-39.

பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே''

என்பது மங்கலவாழ்த்துப் பாடல்.

1. இப்பாடல் வஞ்சித்துறை. இது 'கல்' என்பது முதல் 'ஏ' என்பது வரை பன்னிரண்டு சொற்கள்; எனவே இந் நூலும் பன்னிரண்டு சூத்திரங்களாகும்.

2. ஒவ்வோர் அடியிலும் மும்மூன்று சொற்கள் அமைந்துள்ளன. மொத்தம் நான்கு அடி. எனவே நான்கு அடிகள் போல நான்கு இயல்கள்; மும்மூன்று சொற்கள் போல ஒவ்வோர் இயலிலும் மும்மூன்று சூத்திரங்கள்.

3. நான்கு அடியுள் முன் ஈரடியும் ஒரு வினை முடிபாகவும், பின் ஈரடியும் வேறோர் வினைமுடிபாகவும் அமைந்துள்ளன. எனவே முன் ஆறு சூத்திரம் ஒரு அதிகாரம்; பின் ஆறு சூத்திரம் வேறோர் அதிகாரம்.

4. இரண்டாம் ஓத்தின் முதற் சூத்திரம் 'இதுவுமது' என, முதல் ஓத்தின் இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படும் என்பதை உணர்த்த 'மலைவு' என்பது ஈரடியிலும் சார வைக்கப்பட்டுள்ளது.

5. 'கல்லால் நிழல்' என்று முதலடியில் 'இடம்' கூறவே முதல் ஓத்துப் 'பிரமாணம்'. இரண்டாம் அடியில் 'மலைவில்லார் அருளிய' எனச் 'செய்கை' கூறவே இரண்டாம் ஓத்து 'இலக்கணம்'. மூன்றாம் அடியில் 'பொல்லார் இணைமலர்' எனத் 'திருவடி' கூறவே மூன்றாம் ஓத்துச் சாதனம்'. நான்காம் அடியில் 'நல்லார் புனைவரே' எனப் 'பேறு' கூறவே நான்காம் ஓத்துப் 'பயன்'.

இங்ஙனம் நூல் நுவலும் பொருள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது இம் மங்கல வாழ்த்து. இவ்வாறு நால்வகைப்படுத்திக் கூறியது இந்நூல் என்பதனை,

''ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டுஞ் செய்தி
முறைமைகளும் பெத்தமொடு முத்தி யெல்லாம்''[8]

என்று அருணந்தி கூறியவற்றால் அறியலாம்.

8. சிவஞான சித்தியார் பரபக்கம், பாயிரம் 10.

சூத்திரப் பொருளை விளக்குவதற்கு 81 வெண்பாக்கள் ஆசிரியருக்குத் துணை செய்கின்றன. இதனை,

> ''ஐயொருப தேழேழு மாங்கமைந்த நாலாறு
> மையொன்ப தோரெட்டோ டாறாறுந்-துய்யவெட்டோ
> டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
> மன்னருளும் வெண்பா வகை''

எனும் நேரிசை வெண்பாவால் அறியலாம்.

சிவஞான சித்தியார்

இந்நூல் பரபக்கம், சுபக்கம் எனும் இரு பகுதிகளை உடையது. பரபக்கம் 301 செய்யுட்களை உடையது பரபக்கத்தில் சித்தாந்த சைவ நெறியில் நின்று ஆசிரியர் பிற சமயங்களின் உண்மையை எடுத்துக்கூறி மறுக்கின்றார். இந்நூல் 14 பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்தச் சமயத்தின் கொள்கைகள், மறுப்புகள் ஆகியன பற்றிய செய்திகள் உள்ளன. அப் பகுதிகளில் மறுக்கப்படும் சமய பேதங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | உலகாயதன் | 8. | பாட்டாசாரியன் |
| 2. | சௌந்திராந்திகன் | 9. | பிரபாகரன் |
| 3. | யோகாசாரன் | 10. | சத்தப்பிரமவாதி |
| 4. | மாத்தியமிகன் | 11. | மாயாவாதி |
| 5. | வைபாடிகன் | 12. | பாற்கரியன் |
| 6. | நிகண்டவாதி | 13. | நிரீச்சுரசாங்கியன் |
| 7. | ஆசீவகன் | 14. | பாஞ்சராத்திரி |

முதல் நூலாகிய சிவஞான போதத்திற்கு விளக்கமாக அமையும் பகுதியே சித்தியின் சுபக்கமாகும். இப்பகுதி சிவஞான போதத்திற்குச் செய்யுள் நடையில் அமைந்த விளக்க நூலாகும். 328 செய்யுட்களை உடையது முதலில் விநாயகர் வணக்கம், சிவபெருமான் வணக்கம், முதல்நூற் சிறப்பு. நூல் நுதலிய பொருள், அவையடக்கம், ஆசங்கை நீக்கல் ஆகியன அமைந்துள்ளன.

அடுத்து அளவைகளின் இலக்கணம். இதில் அருணந்தி கொண்ட கருத்துக்களை நிரூபிக்கும் வகைக்குத் தக்க சான்றுகளைக் கூறுகின்றார். முப்பொருள் உண்டு என்பதற்கு இவ் அளவைகள் இன்றியமையாதனவாகும். இப்பகுதி முதல்

நூலில் காணாத ஒன்றாகும். அடுத்தே சூத்திரங்கள் தொடங்குகின்றன.

| | | திருவிருத்தம் |
|---|---|---|
| 1. | விநாயகர் வணக்கம் | 1 |
| 2. | மங்கல வாழ்த்து | 5 |
| 3 | அளவை இலக்கணம் | 14 |
| 4. | முதல் சூத்திரம் | 70 |
| 5, | இரண்டாவது சூத்திரம் | 96 |
| 6. | மூன்றாவது சூத்திரம் | 4 |
| 7. | நான்காவது சூத்திரம் | 40 |
| 8. | ஐந்தாவது சூத்திரம் | 9 |
| 9. | ஆறாவது சூத்திரம் | 9 |
| 10. | ஏழாவது சூத்திரம் | 4 |
| 11 | எட்டாவது சூத்திரம் | 39 |
| 12 | ஒன்பதாவது சூத்திரம் | 12 |
| 13 | பத்தாவது சூத்திரம் | 6 |
| 14. | பதினொன்றாவது சூத்திரம் | 12 |
| 15 | பன்னிரண்டாவது சூத்திரம் | 7 |
| | ஆக | 328 |

இனிப் போதம், சுபக்கம் ஆகிய இரண்டு நூல்களிலும் கூறப்பெறும் கருத்துக்கள் ஆராயப்பெறுகின்றன.

முப்பொருள் உண்மை

பதி, பசு, பாசம் என்பது முப்பொருள். இதனை இறை, உயிர், உலகம் என்றும் கூறுவர். இதனையே திருமூலரும்,

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே''[9]

என்று கூறுகின்றார்.

பதி :- பதி என்பது இறைவன். உலகம் ஒடுங்குதற்குக் காரணமான முதல்வனாலேயே உலகம் தோன்றுகிறது.

9. திருமூலர், திருமந்திரம் 115.

அதனால் அழிவைச் செய்யும் கடவுளே தோற்றத்தையும் செய்கின்றான். இவ்வாறு தோன்றி அழிவதற்கு முதற்காரணம் மாயையாகும்.

இக்கருத்தை நிறுவுவதற்கு அருணந்தி, உலோகாயதர், சௌத்திராந்திகர், மீமாஞ்சகர், தார்க்கிகர், பௌத்தர் ஆகியவர்கள் கூறும் கருத்துக்களை முதற்கண் கூறிப் பின்னர் அவற்றை மறுத்துரைக்கின்றார்.[10] பின்னர் இறுதியில் இவ்வுலகத்தைத் தோற்றுவித்து நிலைபெறுத்தி ஒடுக்குவதற்குக் கருத்தா ஒருவன் வேண்டும் என்று கூறுவார்.

இவ்வுலகம் தொழிற்படுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டும்.

1. முதற் காரணம் — மாயை
2. துணைக் காரணம் — சிவசத்தி
3. நிமித்த காரணம் — சிவபிரான்

மாயையானது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என்று மூவகைப்படும். சிவனருளால் சுத்த மாயையிலிருந்து நாதமும், நாதத்திலிருந்து விந்துவும், விந்துவிலிருந்து சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி முதலிய சுத்தப் பிரபஞ்சமும் தோன்றும்; அசுத்த மாயையிலிருந்து காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐவகைத் தத்துவங்களாகிய சுத்தா சுத்தப் பிரபஞ்சம் தோன்றும்; பிரகிருதி மாயையிலிருந்து குணதத்துவம், புத்தி அகங்காரம் மனம் எனும் மூவகை அந்தக்கரணங்கள், ஐவகை ஞானேந்திரியங்கள், ஐவகைக் கன்மேந்திரியங்கள், தன்மாத்திரை ஐந்து, ஐவகைப் பூதம் போன்ற இருபத்துநான்கு அசுத்தப் பிரபஞ்சம் தோன்றும்.

சடப் பொருளானது அப்பொருளை இயக்குபவன் இல்லாதபோது தானாக அசையாது. அதாவது இரும்பையும் காந்தத்தையும் அருகருகே வைத்தால்தான் அது ஒன்றனோடொன்று பற்றும். அவ்வாறு இல்லாதபொழுது காந்தமே சென்று இரும்பை ஈர்ப்பது இல்லை. ஈர்த்ததை அறிவுடைப் பொருள் போல விட்டுவிடுவதில்லை.

10. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் சுபக்கம் 22-37.

மண்ணிலிருந்து குடம் முதலியவைகள் தோன்றுவதற்கு ஒரு குயவன் வேண்டும். அக் குயவனும் தான் விரும்பும் உருவத்தை மண்ணினின்றும் செய்வன். அதுபோலவே முதல்வனும் தான் எண்ணிய உருவத்தை எல்லாம் மாயையிலிருந்து தோற்றுவிப்பன். குயவன் குடத்தை உருவாக்குவதற்குத் திரிகையை (சக்கரத்தை)த் துணைக்காரணமாகக் கொண்டு செய்வன். முதல்வனும் தனது சத்தியைத் துணைக் காரணமாகக் கொள்வன். இதனையே திருமூலரும்,

> ''குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டில்
> அசையில் உலகம் அதுஇது வாமே''[11]

என்று கூறலானார்.

முத்தொழில் :- உயிர்கள் முதல்வனிடத்திலே ஒடுங்கி மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் ஆணவமலமாகும். உயிர்களின் வினையாகிய கர்ம மலத்தைப் பக்குவப்படுத்தவும் அறியாமையாகிய ஆணவமலத்தைப் போக்கவும் முதல்வன் உலகத்தை அழிக்கின்றான்; மீண்டும் படைக்கின்றான். ஆக்கல், அளித்தல், அழித்தல் எனும் இம் முத்தொழிலையும் உயிர்கள் பொருட்டே முதல்வன் செய்கின்றான், இதனையே அப்பரும்.

> ''தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த
> மருந்தவன்காண்''[12]

என்று கூறுவது நோக்கத்தக்கது.

கதிரவனின் கதிரிலிருந்து நெருப்புத் தோன்றும்; தாமரை மலர் மலரும்; நீரும் வற்றும். இம் முச்செயல்களும் நடைபெற்ற போதிலும் கதிரவன் விகாரமின்றியே இருப்பான். இம் முத்தொழிலைச் செய்கின்றவன் சங்கார காரணனாகிய சிவன் ஒருவனே! சிவனின் ஏவலாலேயே அம்மூவரும் அம் முத்தொழில்களைச் செய்கின்றனர்.

இம் மூன்று தொழில்களும் செய்வதற்குரிய காரணங்களைப் பலரும் பலவாறு கூறியுள்ளனர். நாத்திகர், முதல்வன் செய்யும் இத்தொழில் அறம் ஆகாது மறமாய் முடியும் என்பர். வீணதொழில் என்பர் மாயாவாதிகள். இறைவன்

---

11. திருமூலர், திருமந்திரம் 143.
12. அப்பர் தேவாரம் 6.64,2.

செய்யும் தொழில் தன்பொருட்டு என்பர் பரிணாமவாதிகள். ஆயின் மணிவாசகர்.

"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி"[13]

என்பர். அஃதாவது முத்தொழிலுக்குக் காரணம் விளையாட்டு என்பர். உயிர்களுக்குப் போக முத்திகளைக் கொடுத்து, அவைகளை மலங்களிலிருந்து நீக்குதற்கே என்று சுபக்கம் கூறும்.

முதல்வன் உயிர்களிடம் கொண்ட கருணையால் செய்யும் இம் முத்தொழில்கள் பின்னர் ஐந்தாக மாறின. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தே. இவற்றைச் சிவபிரானின் கைகளிலுள்ள படைகளுக்கு ஒப்புமை காட்டலாயினர்.

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந்திரோ தாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே"[14]

என்னும் திருமந்திரமும்.

"தோற்றம் துடியதனில் தோயுந் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதற்தே நாடு[15]

என்னும் உண்மை விளக்கப் பாடலும் இதனையே விளக்குவன

ஆயின் மறைத்தல் தொழில் காத்தலிலும், அருளல் தொழில் சங்காரத்திலும் அடங்கும். இளைப்பாற்றல், மலபரிபாகம் வரச் செய்தல், கன்மங்களை நீக்குதல், இருவினை ஒப்பு வருவித்தல், மலங்களைப் போக்கி முத்தி கொடுத்தல் என்னும் ஐந்தொழில்களும் உயிர்களின் மேல் வைத்த கருணையினால் செய்யப்படுவன; ஆதலில் அருட்செயல்கள் ஆகும் என்று சுபக்கம் கூறும்.[16]

முதல்வனது பொது இலக்கணம் :- அருவம், அருஉருவம், உருவம் ஆகிய மூன்றும் முதல்வரின் தடத்த வடிவங்களாகும்.

---

13. மாணிக்கவாசகர். திருவாசகம், திருவெம்பாவை 12.
14. திருமூலர், திருமந்திரம் 2799.
15. மணவாசகங்கடந்தார், உண்மைவிளக்கம் 35
16. அருணந்திசிவம், சிவஞான சித்தியார் சுபக்கம் 57.

முதல்வன் யோக சித்தரைப் போலத் தான் நினைத்த உருவத்தை எடுத்துக் கொள்வன்; அப்படியெனில் அவன் யோக சித்தரில் ஒருவரை வான் என்று கூறுவர் . ஆனால் அவன் யோகசித்தரல்லன். முதல்வன் அருளினாலேயே யோக சித்தரும் தாம் விரும்பிய வடிவங்களைக் கொள்வர். முதல்வனது வடிவம் சத்திகாரிய வடிவமாகும்.

முதல்வன் அருவனே என்று சிலர் கூறுவர். அருவம் என்று கூறினால் அவன் உலகத்துப் பொருள்களுள் ஒருவனாய் முடிவன்; எனவே அருவமன்று. முதலவன் உலகப் பொருள் களின் இயல்பு உடையவன் அல்லன்; தோற்ற நாசங்கள் இல்லாதவன்; அளந்து அறியப்படாதவன்; இன்ன வடிவினன் என்றும், இன்ன வடிவத்தைக் கொள்பவன் என்றும், இன்ன வடிவத்தைக் கொள்ள மாட்டான் என்றும், அவனைக் கூறுதல் அரிது. அதனால்தான் நாவரசரும்,

''கோவண முடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்
தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்
பூவணக் கிழவனாரைப் புலியுரி யரையனாரை
ஏவணச் சிலையினாரை யாவரே யெழுதுவாரே''[17]

என்று கூறினார் போலும்.

முதல்வன் உருவத் திருமேனி (மகேசுவர வடிவம், மகேசுவர மூர்த்தி) கொண்டு வேதாகமங்களை உபதேசிப்பன். அருவமாக இருந்தால் அங்ஙனம் செய்ய முடியாது. அவனுடைய திருவுரு அருள் வடிவமாகும். அத்திருமேனிகளில் சில போக வடிவமாகவும், சில யோக வடிவமாகவும், சில கோர (வேகி) வடிவமாகவும் இருக்கின்றன.

போக வடிவம் — உமாமகேசுவர மூர்த்தம்
யோக வடிவம் — தட்சிணாமூர்த்தி
வேகி வடிவம் — காமாரி வடிவம்

இவைகள் எல்லாம் உயிர்களுக்குப் போகம் புரிதற்கும், யோக முத்தி உதவுதற்கும், வினையினைக் கெடுத்தற்குமேயாம்,

வேதங்களில் அத்துவாக்கள் ஆறும் முதல்வனது வடிவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் குமரகுருபரரும்,

---

17. அப்பர் தேவாரம் 4.77 2.

''தாங்கரிய
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால்
ஒத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த
கலையே யவயவமாக் கட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்''[18]

என்று கூறியது இவண் நினைவுகூரத்தக்கது.

அத்துவா வடிவங்கள் ஆறாகச் சொல்லப்படும். அவ் ஆறில் மந்திரமே சிறந்ததென்று வேதாகமங்கள் கூறும். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் முதலிய பஞ்சமந்திரங்கள் ஏனைய மந்திரங்களுக்கெல்லாம் முன்னர்த் தோன்றின. ஆதலால் முதல்வனது வடிவமாகச் சொல்லப்பட்டன.

சத்தியின் இலக்கணம் :- சத்தி முதல்வனோடு பிரிவின்றி நின்று அம் முதல்வன் நினைந்தபடிப் போக மோட்சங்களைக் கொடுக்கும். தக்கன் வேள்வியை அழித்தது, காலனை உதைத்தது, நஞ்சுண்டது ஆகிய புராணங்கள் முதல்வன் நினைந்தபடிச் செயலாற்றுவதற்குச் சான்றுகளாகும்.

மறைத்தல் இல்லாத ஞானமே சுத்தஞானம்; அதுவே பராசத்தி ஆகும். அச் சத்தியினாலேயே முதல்வன் உலகத்தைத் தோற்றுவித்து நிறுத்தி அழிப்பன்.

சத்தி, சிவன் என இரு தன்மையாய் முதல்வன் இருப்பதனாலேயே உலகம் முழுவதும் ஆண், பெண் என இருவகையாய் இயங்குகிறது.

முதல்வனின் சிறப்பு இலக்கணம் :- முதல்வனுக்கே உரிய சிறப்பு இலக்கணங்களாகச் சுபக்கம் சிலவற்றைக் கூறுகின்றது

1. பரமசிவன் அருவும், அருவுருவும், உருவும் அல்லாதவன்.
2. சித்தாகிய சத்தி வடிவமும், அசித்தாகிய அத்துவா வடிவ மந்திர வடிவங்களும் அல்லாதவன்.

18. குமரகுருபரர், திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா 60-62.

3. சத்தி வடிவினனாய் நின்று சிருட்டி முதலிய தொழில்கள் ஒன்றும் செய்பவனும் அல்லாதவன்.

4 ஆன்மாக்களுக்குப் புத்தி முத்திகளைக் கொடுக்கும் பொருட்டுத் தவம் முதலாக யோக போக வடிவங்களைக் கொள்பவனும் அல்லாதவன்.

5 தானே தடத்தலக்கணம் முதலாய இவையெல்லாம் உள வாகப் பொருந்தி நிற்பினும் இவற்றில் ஒன்றையும் பொருந்தாத சுத்த சைதன்னிய இலக்கணத்தை உடையவன்

சிவத்தின் இயல்பு :- சிவத்தின் இயல்புகளாகச் சிலவற்றைச் சுபக்கம் கூறுகிறது.

1. சிவம் சத்துச் சித்தாகிய இயல்புடையது; மனம், வாக்கு, காயங்களால் அறியப்படாதது.

2. சிவம் பதி ஞானத்தால் அறியப்படுவதாகும். அஃது அவ் வறிவேயாய், வேறுமாய், உடனுமாய் ஆன்மாவோடு அத்துவிதமாய் நிற்கும் இயல்பு உடையதாம்.

3. பாச ஞானத்தால் சிவம் அறியப்படாது; திருவருளால் பதிஞானம் கைவந்தபோது அறியப்படும்.

4. பகுத்து உணரும் மயக்க அறிவோடு கூடிய பசு ஞானத்தால் சிவம் அறியப்படாது.

5. சிவன் ஆன்மாவிற்கு வேறாய் நின்றும் அறியப்படுவன்; ஆன்மாவோடு கலந்து உடனாயும், பிரிவின்றி ஒற்றித்தும் அத்துவிதமாய் நிற்பன்.

பசு :

பசு என்பது ஆன்மா அல்லது உயிர் எனப்படும். பசு உண்மையைப் போதமும் சுபக்கமும் மூன்றாம் சூத்திரத்தில் கூறலாயின. போதத்தில் பசு உண்மையை நிறுவுவதற்கு

19. அருணந்திசிவம், மு. கா. நூல் 90

எழுவகைக் காரணங்களை ஏழு அதிகாரங்களில் கூறியுள்ளார் சிவஞான முனிவர். இவற்றில் மாத்துமிகராகிய சூனியான்மவாதிகள், உலகாயதராகிய தேகான்மவாதிகள், இந்திரியான்ம வாதிகள், சூக்கும தேகான்மவாதிகள், பிராணான்மவாதிகள், பிரமான்மவாதிகள், சவுத்திராந்திகர், வைபாடிகர் ஆகிய சமூகான்மவாதிகள் ஆகியோர் கூறும் கூற்றுக்களை மறுத்துரைக்கின்றார்.

''உடல் ஆன்மா அன்று, பொறி ஆன்மா அன்று, மனம் ஆன்மா அன்று. என்று இவ்வாறு ஒவ்வொன்றையும் 'அன்று அன்று' எனக்கூறி 'ஆன்மா என்பது சூனியம்' என்று சொல்வதாகிய அறிவு ஒன்று இருத்தலின் அதுவே அவ் ஆன்மாவாம்; இதேபோன்றே என்வீடு, என்சுற்றம், என்மனை, என்கை, என்கால் என்று கூறுவதாகிய ஒன்றே ஆன்மாவாம்; ஐம்புலன்களையும் அறிவது ஒன்று இருத்தலின் அதுவே ஆன்மாவாம்; ஐம்புலனும் ஒடுங்கியபொழுது கனவில் நிகழ்ந்தனவற்றை அறிவது ஒன்று இருத்தலின் அதுவே ஆன்மாவாம்; துயிலும் பொழுது புலன்களால் ஏற்படும் இன்ப துன்பமும் அனுபவமும் இயக்கமும் உடம்பில் இல்லை, துயிலாதபொழுது அவை நிகழும், அந்நிகழ்ச்சிக்குக் காரணமாய் உள்ளது எதுவோ அதுவே ஆன்மாவாம்; முதல்வன் கருவிகள் வாயிலாகப் பொருள்களை உணர்த்த உணர்தலின் அதுவே ஆன்மாவாம்; மாயா காரியங்களால் ஆன சூத்திரப் பாவை போன்ற உடம்பினுள் ஆன்மா உள்ளது.''

இதனையே சுபக்கம் வலியுறுத்திக் கூறுகின்றது.[20]

ஆயின் நாவரசர் தேவாரத்தில் 'ஆன்மா' என்ற சொல் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

''வசிப்பெனும் வாழ்க்கைவேண்டா வானவ ரிறைவனின்று
புசிப்பதோர் பொள்ளலாக்கை யதனொடும் புணர்வு-
வேண்டில்
அசிர்ப்பெனு மருந்தவத்தா லான்மாவி னிடமதாகி
உசிர்ப்பெனு முணர்வுமுள்ளா ரொற்றியூ ருடையகோ-
வே''[21]

மேலும் இப்பாவில் பதி, பசு, பாசமெனும் மூப்பொருள்களும் கூறப்பட்டுள்ளன.

20. அருணந்திசிவம், மு கா. நூல் 187-195.
21. அப்பர் தேவாரம் 4.45.2.

பசுவின் இலக்கணம் :- பசுவின் இலக்கணம் நான்காம் சூத்திரத்தில் கூறப்படுகிறது. ஆன்மாவானது அகக் கருவிகளான மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றுள் ஒன்று அல்ல; அரசனுக்கு அமைச்சன் போல் அவற்றைத் துணையாகக் கொண்டுள்ளது ஆன்மா. அறிவாகிய உயிர் கருவிகளின் உதவியின்றித் தானே பொருள்களை அறியாது. ஆணவ மலம் அதனுடன் சேர்ந்திருப்பதே அதற்குக் காரணம். அதனால்தான் சிவஞான முனிவரும் 'இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வின்று' என்று கூறலானார்.

உயிரின் அறிவிற்கு விளக்கம் போலப் பொருள்களை மாயை காட்டும். அவ்வறிவைத் தடுத்து நிறுத்துவதே ஆணவ மலம். எனவே மாயை வேறு; ஆணவமலம் வேறு. எனவே உயிரின் அறிவு உலகப் பொருள்களில் அழுந்துமிடத்து, உயிரானது இறைவனை அறியாவண்ணம் மறைப்பது ஆணவமாகும். எனவே தான் திருமூலர், 'இந்த ஆணவத்தை விட்டவர் மெய்ஞ்ஞானிகள்''[22] என்கிறார். அப்பர் இவ் ஆவணத்தை 'மூலநோய்'[23] என்கிறார். ஆணவமானது அறியாமையைப் புகுத்தும். இதற்கு மருந்து இறைவனே என்பதை 'மம்மர் அறுக்கும் மருந்து கண்டாய்'[24] என்று நாவரசர் கூறுவதனால் அறியலாம்.

ஐந்து அவத்தைகள் : நனவு, கனவு, துயில், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்பதுவே ஐந்தவத்தைகள். இவையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியாதீதம் என்றும் கூறப்படும். அவத்தை உறுவதற்குக் காரணம், தத்துவங்களின் தொழிற்பாடே. சாக்கிரம் புருவத்திலும், சொப்பனம் கழுத்திலும், சுழுத்தி இதயத்திலும், துரியம் உந்தியிலும், துரியாதீதம் மூலாதாரத்திலும் நிகழும் இவ்அவத்தைகளில் தொழிற்படும் கருவிகள் : சாக்கிரம்-35; சொப்பனம்-25; சுழுத்தி-3; துரியம்-2; துரியாதீதம்-1.

உயிரின் மூன்று நிலைகள் : உயிர் ஆணவ மலத்தோடு மாத்திரம் கலந்து நிற்கும் நிலை கேவலம் எனப்படும். இந் நிலையில் உயிர்கள் ஆணவ மலத்தால் கட்டுப்பட்டு இருக்கும்.

22. திருமூலர், திருமந்திரம் 494
23. அப்பர் தேவாரம்
24. மேலது

இந்நிலையில்தான் ஐந்தவத்தைகள் உண்டு. மாயாகாரியமாகிய கருவிகளோடு கூடிய நிலையே சகலம் எனப்படும். இந்நிலையில் உயிர்கள் உலகத்தை அறியும். மலத்தில் நீங்கிய நிலையே சுத்தம் எனப்படும். இந்நிலையிலேயே உயிர்கள் கடவுளையும் தம்மையும் அறியும். இவற்றை,

> ''அறிவி லாதவெ னைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
> நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானை''[25]

என்று மாணிக்கவாசகர் குறிக்கக் காணலாம்.

பாசம்

''பாசம் என்னும் இச்சொல் 'கட்டு' என்னும் பொருளையுணர்த்தும் 'பச்' என்னும் பகுதியாகப் பிறந்து சீவான்மாவைக் கட்டி நிற்பது'' என்று கூறுவார் மறைமலையடிகள்.[26]

பதி ஒன்று; ஆன்மாக்கள் பல. அகர உயிரெழுத்து மெய்யெழுத்துக்களோடு நிற்பதுபோல முதல்வனும் ஆன்மாக்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நிற்பன்; நின்று, அவ்வுயிர்களைச் செலுத்துவன்.

உயிரானது உடலோடு கலந்து நிற்கும் கலப்பினால் உடல் என்றும், தான் என்றும் வேறுபாடு இல்லாமல் அவ்வுடலாய் நிற்கும். அதுபோன்றே முதல்வனும் உயிரோடு கலந்திருந்தாலும் உயிரென்றும், தானென்றும் வேறுபாடு இல்லாமல் அவ்வுயிரேயாய் நிற்பன்.

கதிரவன் கண்ணோடு கலந்து நிற்பன் ஆயின் கண்ணின் தன்மை வேறு; கதிரவனின் தன்மை வேறு. முதல்வன் உயிரோடு கலந்து நின்றாலும் உயிரின் தன்மைக்கு வேறாகிய தன்மையை உடையவனாதலின் அவ்வுயிருக்கு வேறாகியும் நிற்பன்.

கண்ணாவது ஒளியை உடையதானாலும் ஆன்மாவின் அறிவானது அக் கண்ணொளியோடு கூடி உடனாய் நின்றபொழுது பொருள்களை அறியும். உயிர் அறிவுடையதானாலும் முதல்வனின் பேரறிவு அவ்வுயிரறிவோடு கூடி உடனாய் நின்றபொழுதே பொருள்களை அறியும்.

25. மாணிக்கவாசகர், மு. கா. நூல், திருச்சதகம் 32.
26. மறைமலையடிகள், சிவஞானபோத ஆராய்ச்சி, ப. 25.

முதல்வன் உயிர்களோடு கலந்து நிற்றலை,

''கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றாங் கொட்டி
அவனுளமா கில்லா னுளமவனா மாட்டாது
அவனுளமா யல்லனுமாம் அங்கு''[27]

என்னும் உதாரண வெண்பாவில் விளக்குவர் சிவஞான முனிவர்.

உயிராவது உடம்போடு கலந்து நிற்கிறது. உடலுக்குத் தான் பெயர் இடப்படுகிறது. எனவே உடம்பின் பெயரினாலே ஒருவனை அழைத்த பொழுது உயிர் என்ன என்று வந்து நிற்கிறது. அவ்வுயிரானது உடம்பு வேறு; தான் வேறு இல்லாமல் இருப்பதனாலேயேதான் அவ்வாறு வருகிறது. அது போன்றே முதல்வனும் உயிர் வேறு; தான் வேறு என்றில்லாமல் இருக்கும் பொழுதும் உயிர் உயிரே; உடம்பு உடம்பே; ஆயின் உயிர் உடம்பாக மாட்டாது; உடம்பு உயிராக மாட்டாது ஆனால் உயிர் ஒன்றே உடம்பாயும், உடம்பிற்கு வேறாகியும் நிற்கும். அதுபோன்றே முதல்வன் உயிரோடு கலந்திருந்தாலும் முதல்வன் முதல்வனே; உயிர் உயிரே; முதல்வன் உயிராகமாட்டான்; உயிர் முதல்வனாக மாட்டாது ஆனால் முதல்வன் உயிராயும், உயிருக்கு வேறாயும் நிற்பன்.

**இரு வினைகள் :**

இருவினைகள் என்பது, முற்பிறவிகளில் செய்யப்பட்டு மாயையில் கிடந்த சஞ்சிதமாகிய புண்ணிய பாவங்களாகும். இப்புண்ணிய பாவங்களின் பயனாக இன்ப துன்பங்களைத் தரும்பொழுது அது பிராரத்தம் எனப்படும். புண்ணிய பாவங்களே நல்வினை தீவினையாகும் இவ் இன்ப துன்பங்களுக்குக் காரணம் இருவினையே, முயற்சி அன்று.

இவ் வினைகளைச் செய்பவன் முதல்வன் ஆவன். நெல் தோன்றிய பொழுதே அதனிடத்து உமியும் தோன்றிற்று; செம்பு உண்டானபொழுதே அதனிடத்துக் களிம்பு உண்டாயிற்று. அதுபோலவே உயிர்களுக்கு ஆணவம், மாயை கன்மம் எனும் மும்மலங்களும் அநாதியே உள்ளனவாம். தாமரை மலர்தலும் குளிதலும் கதிரவனால் நிகழும். அதுபோல முதல்வனாலேயே மும்மலங்களும் நிகழும். இதனையே,

27. மெய்கண்டார், சிவஞானபோதம் சூத் 2, 6.

''நெல்லிற் குமியும் நிகழ்செப்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலால் பொன்வாள்
அலர்அசோகம் செய்கைமலத் தாம்''[28]

என்று சிவஞான முனிவர் கூறினார்.

உயிர்கள் வினைப்பயனை அனுபவிப்பதற்குப் பிறந்து இறந்து வரும். மனம், வாக்கு, காயங்களால் நாம் என்னும் முனைப்போடு செய்யும் நல்வினை. தீவினைகள் ஆகாமியம் எனப்படும். உயிர்களுக்கு நன்மை செய்தல் இதம் என்றும், தீமை செய்தல் அகிதம் என்றும் கூறப்படும். இவ்விருவினைகளையும் ஏற்று அவற்றிற்கேற்ற பயனைக் கொடுப்பவன் முதல்வனே! உயிர்கள் மேல் வைத்த கருணையினாலேயே இதனைச் செய்கின்றான்.

(அ) வினைப்பயன் :

தானம், தருமம் முதலிய கருமங்களைச் செய்பவர்களுக்கு அவற்றினால் உண்டாய புண்ணிய பாவங்களை அறிந்து அவற்றின் பயனை முதல்வனே செய்வன்.

சிவனை வழிபடலே சிறந்தது. ஏனெனில் அவனே இருவினைப் பயன்களைத் தருபவன். இருவினைகள் பயன் தருவது செய்பவர் அல்லது செய்த வினைகளின் வன்மை, மென்மை பற்றி அன்று. கொள்பவரது வன்மை. மென்மை பற்றியேயாம். பல வேதங்களைக் கற்றறிந்த தக்கன் ஒரு வேள்வி செய்தான். அவனோ பலரும் அஞ்சும் ஆற்றல் பெற்றவன். ஆனால் வேதத்தின் தலைவனான சிவனை மறந்து வேள்வியைச் செய்தமையால் அவ்வேள்வி அழிக்கப்பட்டது. இதனால் செய்பவனது வன்மைபற்றி இருவினைப் பயன் தருவது அன்று என்பதை அறியலாம். இதேபோன்றே சண்டீச நாயனார் இளம் பருவத்தினர். ஆனால் அவர் செய்தது கொலைப்பாதகம். ஆனால் அவருக்குக் கிடைத்ததோ சண்டீசபதம். இதனால் செய்பவனது மென்மை பற்றி இருவினைப் பயன் கிடைத்தலரிது, கொள்பவனது மென்மைபற்றியே என்பது போதரும்.

28. மெய்கண்டார், மு. கா. நூல் சூத். 2, 12.

அரசன் மக்களை வாழ்வித்தலும், தண்டித்தலும் அவனுடைய அதிகாரத்தினால் செய்வன். அதுபோல முதல்வனும் இன்ப துன்பங்களை அவனுடைய ஆணையினால் செய்வன். முதல்வன் ஒரு மருத்துவனாவான். மருத்துவன் நோய்க்குத் தக்கவாறு மருந்துகளைக் கொடுத்து அந்நோயைத் தீர்ப்பன். அதுபோன்றே முதல்வனும் ஒருவர் செய்த வினைக்கு ஏற்ப இன்ப துன்பமாகிய மருந்தைக் கொடுத்து இருவினை நோயை மாற்றுவன்

உயிர்கள் செய்த வினைப்பயனுக்கு ஏற்பவே மறுபிறவியும் அமையும். அகலிகை கல்லானதும், சிலந்திப்பூச்சி அரசனானதும், எலி மகாபலிச் சக்கரவர்த்தி யானதுமே இதற்குச் சான்றுகளாகும். ஒரு பொன்னிலிருந்து பல ஆபரணங்கள் தோன்றுவதுபோல ஒரு சூக்கும உடம்பு பலவகைத் தூல உடம்புகள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கும். தூல உடம்புகளுக்கு முதற்காரணம் அசுத்த மாயையாகும்.

(ஆ) தத்துவங்கள் :

தத்துவங்கள் முப்பத்தாறு வகைப்படும். இவை சுத்த தத்துவம், அசுத்த தத்துவம், வித்தியா தத்துவம் என்று மூன்று வகையாகப் பிரியும்.

சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசுரம், வித்தை ஆகிய இவ்வைந்தும் சுத்த தத்துவங்கள் அல்லது சிவதத்துவங்கள் என்று பெயர் பெறும். இது சித்து (அறிவுடையது) எனப்படும்.

பூதங்கள் ஐந்து, தன் மாத்திரைகள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து ஆகிய இருபத்து நான்கும் அசுத்த தத்துவங்கள் எனப்படும்.

மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் ஆகிய ஏழும் வித்தியா தத்துவம் எனப்படும்.

இவற்றுள் புருட தத்துவம் சித்த சித்து (சித்தும் அசித்தும்) எனப்படும். எஞ்சிய ஆறும் (வித்தியா தத்துவத்தில்), அசுத்த தத்துவங்கள் இருபத்துநான்கும் அசித்து (அறிவில்லது) எனப்படும்.

மாயை :- மாயையானது (அசுத்த மாயை),

1. நித்தமாய்,
2. உருவம் அற்றதாய்,
3. ஒன்றாய்,
4. உலகம் தோன்றுவதற்கு ஒரு வித்தாய்,
5. சடமாய்,
6. எல்லாவிடத்தும் வியாபகமாய்,
7. முதல்வனுக்கு ஒரு பரிக்கிரக சத்தியாய்,
8. உயிர்கள்பொருட்டு விரிந்ததோர் மலமாய்,
9. விபரீத உணர்வை உண்டாக்குவதாய்

இருக்கும். இம் மாயையிலிருந்து காலம், நியதி, கலை ஆகிய மூன்றும் தோன்றும்.

காலமானது, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்றாய்ப் பிரியும். இக்காலம் உயிர்களுக்குக் காலவரையறை செய்து முதல்வன் ஆணைப்படி இவ்வுலகத்தை நடத்திச் செல்லும்.

நியதியானது. அவரவர் செய்த வினைப்பயனை அவரவரே அனுபவிக்கும்படிச் செய்யும்.

கலையிலிருந்து வித்தை, பிரகிருதி மாயை தோன்றும். இக்கலையானது ஆணவ மலத்தைச் சிறிதேநீக்கி ஆன்மாவின் கிரியா சக்தியை விளக்கி வினைத்கு ஈடாக வரும் போகங்களைப் பொருந்தும்படிச் செய்யும். வித்தையானது ஆன்மாவின் ஞான சக்தியை விளக்கி விடயங்களை அறியச் செய்யும். வித்தையிலிருந்து அராகம் தோன்றி ஆன்மாவின் இச்சா சக்தியை விளக்கிப் போகங்களில் இச்சையை உண்டாக்கும். இவ்வாறு கலையிலிருந்து இச்சா ஞானக் கிரியைகள்தோன்றும். பிரகிருதி என்னும் மூலப் பிரகிருதி மாயையானது சாத்துவிக, இராசத, தாமத குணங்களைத் தோற்றுவிக்கும்.

பிரகிருதியிலிருந்து புத்தி தோன்றும். புத்தியிலிருந்து அகங்காரம் தோன்றும். இவ் அகங்காரம் மூவகைப்படும். அவை தைசதம், வைகாரிகம், பூதாதி. இவ் அகங்காரமானது : ஆன்மாவோடு வேற்றுமையின்றி நிற்கும். ஆன்மாவோடு நின்று செருக்குறுதலையும் அபிமானித்தலையும் (யான் எனது என்னும் தன்மை) செய்யும்.

தைசதத்திலிருந்து மனம், ஞானேந்திரியங்கள் தோன்றும். மனமானது ஒரு பொருளைத் துணிவு பெறாமல் ஐயுறும். வைகாரிகத்திலிருந்து கன்மேந்திரியங்களும், பூதாதியிலிருந்து தன்மாத்திரைகளும் தோன்றும்.

சுரோத்திரம், துவக்கு, சட்சி, சிங்குவை, ஆக்கிராணம் ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்களாகும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகிய ஐந்தும் கன்மேந்திரியங்களாகும் இவை இரண்டும் புறக்கருவிகளாகும்.

சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் ஆகிய இவ்வைந்தும் தன்மாத்திரைகளாகும். தன்மாத்திரைகள் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் எனும் மூன்று அந்தக்கரணங்களும் கூடியதே புரி அட்டக உடம்பாம். தன் மாத்திரைகளிலிருந்தே ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி எனும் பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன. பஞ்சபூதங்கள், அகப்பூதம், அகப்புறப்பூதம், புறப்பூதம் என்று மூவகைப்படும்.

பதியும் உயிரும் :

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும் ஆன்மாவினாலே நிகழ்கின்றன. முதல்வன் அறிவித்தாலன்றிப் பொருளை அறியும் ஆற்றல் உயிருக்கு இல்லை. கதிரவனையும் கதிரவனின் ஒளியையும் எவ்வாறு பிரிக்க முடியாதோ அது போன்றே சிவத்தையும் சக்தியையும் பிரிக்க முடியாது. முதல்வன் தன் அருட்சத்தியினால் மலத்தைப் போக்கி உயிர்களுக்கு முத்தியைக் கொடுப்பன்:

உயிரின் சிறப்பு இலக்கணம் :

உயிரின் சிறப்பு இலக்கணத்தை உணர்த்துவது ஏழாம் சூத்திரமாகும். அசத்திற்கு அறிவு கிடையாது. ஆயின் சத்தாவதும், அசத்தை அறியாது; அசத்தும் சத்தை அறியாது. ஆனால் ஆன்மா ஒன்றே சத்தாகிய சிவத்தையும், அசத்தாகிய பாசத்தையும் அறியும் தன்மை உடையது. மேலும் அறிவிக்க அறிவதாயும் உள்ளது. ஆன்மானானது அறிவிக்கவே அறியும்; முதல்வன் போலத் தானாக அறியும் ஆற்றல் அதற்குக் கிடையாது. கடலில் உப்பானது நீரைப் பற்றும், மாறாக அதற்கு இடம் கொடுக்கும் ஆகாயத்தைப் பற்றாது. அது போன்றே மயக்கமும் உயிரைப் பற்றுமே அன்றி முதல்வனைப் பற்றாது. பாச ஞானம் என்பது, பாசம் வாயிலாக நிகழும் பசு ஞானமாகும்.

பதி ஞானத்தை உயிர் உணர்தல்

முதல்வனது அறிவை உயிர் உணர்வதனைத் தெளிவுறுத்துவதே எட்டாம் சூத்திரம். உயிரானது ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து அதன்படி நடைபெற்றுவரும், ஐம்புலன்களிலிருந்து விடுபட்டால்தான் முதல்வனது திருவடியை உயிர் சேர முடியும்.

''பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தனர் சிந்தையும்
அறிப்பு றுமமு தாயவ னேகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே''[29]

என்றார் நாவரசரும். இவ்வாறு அல்லலுறும் உயிருக்கு முதல்வன் குருவடிவாய்த் தோன்றி, ''நீ நின் பெருந்தகைமை அறியாது மயங்கி இடர்ப்பட்டாய். நின் பெருந்தகைமை இத்தகையது'' என்று அறிவுறுத்துவன். உயிரானது ஐம்புலவேடரின் உறவினைவிட்டு நீங்கி அம்முதல்வனின் திருவடிளைச் சேரும்.

தீக்கைகள் :

உயிரானது விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று மூவகைப்படும். ஆணவமலம் உடையவர் விஞ்ஞானகலர்; ஆணவ கன்ம மலங்களை உடையவர் பிரளயாகலர்; ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர் சகலர். மும்மலங்களை நீக்கி முதல்வனின் திருவடியைச் சேர்வதற்குக் குருவும். சில தீக்கையும் மிகவும இன்றியமையாதனவாகும்.

மும்மலங்களையும் உடையவர் சகலர். எனவே அவருக்குத் தீக்கை செய்தல் வேண்டும். இத் தீக்கை பல வகைப்படும். அவை : திருநோக்கம் (நயனம்), பரிசம், வாக்கு, பாவனை, நூலுபதேசம், யோகம், அவுத்திரி, மற்றும் பல

அவுத்திரி, ஓமத்தோடு கூடியது. இது ஞானவதி, கிரியாவதி என்று இரு வகைப்படும். அகத்தில் ஞானவதியும், புறத்தில் கிரியாவதியும் ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்வதாகும். மேலும் நிர்ப்பீசம், சபீசம் என்று இரண்டாகப் பிரியும்.

29, அப்பர் தேவாரம் 5. 48. 4,

நிர்ப்பீச தீக்கை என்பது ஏழு வயதுக்குட்பட்ட இளஞ்சிறாருக்கும், பதினாறு வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கும், செய்யப்படும் தீக்கையாகும். சிவாகமங்களை ஓதி உணர்ந்து அவைவிதித்தபடி ஒழுகும் உத்தமர்களுக்குச் செய்யும் தீக்கை சபீசதீக்கை எனப்படும்.

வினை மூவகைப்படும். அவை: சஞ்சிதவினை, ஆகாமியவினை, பிராரத்தவினை. உயிரானது பக்குவம் அடைந்தபொழுது முதல்வன் குருவடிவாய் வருவன்; அத்துவ சுத்தியினால் அலிவுயிர்களின் சங்சிதவினையையும், ஞானத்தால் ஆகாமிய வினையையும் ஆணவ மலத்தையும் ஒழிப்பன். பிராரத்த வினையானது அனுபவத்தால் ஒழியும்,

சைவத் திறம் :

சைவத்திறத்திற்கு ஒழுக்க நெறி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் ஆகிய நான்குமே ஒழுக்க நெறியாகும்,

புராணங்கள் பல வகைப்படும். இப்புராணங்கள் பழைய சமய சரித்திரங்களைக் கூறுவனவாகும். பழங்கதைகளின் தொகுதியே புராணங்களாகும். இப்புராணங்கள் உலகத் தோற்றம், ஒடுக்கம், மநுவந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர் சரிதம் ஆகிய ஐந்திலக்கணங்களை விரித்துரைக்கின்றன என்று சுபக்கம் கூறுகின்றது.[30]

இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கும் வேதங்கள் ஆகும். சிவபிரான் திருவடியை அடைபவை வேத ஆகமங்கள்; எனவே சைவ சித்தாந்தமே உண்மைச் சமயமாகும். அச்சமயப் பொருளை விளக்கும் நூல்களே வேதாகமங்கள்.

முதல் நூல் — வேதம் 4, ஆகமங்கள் 28.
வழி நூல் — மிருதி, புராணம் 18, உபாகமம் 207.
சார்புநூல் — ஆகமாங்கங்கள் 4, வேதாங்கங்கள் 6.
ஏனைய நூல்கள் பூருவ பக்க நூல்களாகும்.

30. சிவஞான சித்தியார் சுபக்கம் 263.

சமய நூல்களாக வேதம், சிவாகமம் ஆகிய இரண்டும் கருதப் பெறுகின்றன. உலகத்தவர்க்குக் கூறப்படுகின்ற வேதம் பொது நூலாகும். சத்திநிபாதர்க்குக் கூறப்படுகின்ற சிவாகமம் சிறப்பு நூலாகும். சிவாகமம், வேதத்தில் கூறாது ஒழிந்த பொருளையும், உபநிடதத்து உண்மைப் பொருளையும் இனிது விளக்கும். இதனையே திருமூலரும்,

''வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே''[31]

என்று கூறினார்.

சமயப்படிகள் :

வாழ்க்கையில் ஒவ்வொரு படியையும் கடந்த பின்னரே மேல் நிலைக்குச் செல்ல முடியும். அதுபோன்றே சமயத்துறையிலும் படிகள் உண்டு. ஊனில் அரும்பி, உணர்வு நிலையில் சாய்த்து, உயிரில் கலந்து நிற்கும் சமயமானது படிப்படியாக அமைக்கப்பட்ட ஒன்று. சரியை. கிரியை, யோகம். ஞானம் என்னும் நான்கும் சமயப்படிகளாகும். வாழ்க்கைப்படிக்கும், சமயப் படிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. வாழ்க்கையில் ஒவ்வொரு படியாகவே கடந்து சென்று மேல்நிலைக்குச் செல்ல முடியும். ஆயின் சமயத்தில் ஒவ்வொரு படியாகக் கடந்து சென்றும் மேல்நிலை அடையலாம். தனித்தனி ஒவ்வொரு படியில் இருந்தேயும் மேல்நிலை (வீட்டுநிலை) அடையலாம். இதனைத்தான் தாயுமானவரும்,

''விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''[32]

என்று கூறினார். அரும்பு நிலையில் சரியை, மலர் நிலையில் கிரியை, காய நிலையில் யோகம், கனி நிலையில் ஞானம் ஆகிய இம்முறையில் வீட்டுநிலையை அடையலாம்.

இந்நெறிகளே தாத மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சன்மார்க்கம் என்றும் கூறப்படும். தாத மார்க்கம் புறத்-

31. திருமூலர், திருமந்திரம் 2397.
32. தாயுமானவர், திருப்பாடல்கள், பராபரக்கண்ணி 157.

தொழிலாய் சிவபிரானின் உருவத் திருமேனியை வழிபடுவ-தாகும். சற்புத்திர மார்க்கம் அகப்புறத் தொழிலாய் சிவபிரா-னின் அருவுருவத் திருமேனியை வழிபடுவதாகும். சகமார்க்கம் அகத்தொழிலாய் சிவபிரானின் அருவத் திருமேனியை வழி-படுவதாகும். சன்மார்க்கம் அகம் புறம் இன்றி சிவபிரானின் உருவம் அருவுருவம் அருவம் என்னும் முத்திறத் திருமேனியைக் கடந்து செய்யும் வழிபாடாகும். பிரிப்பற்று உடனாய அத்துவித நிலையில் தலைவி தலைவனை அடையுமாறு போன்று ஆன்மா பதியை அடையும் மார்க்கமே சன்மார்க்கமாகும்.

இந் நான்கும் 'உபாயச் சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்றும் 'உண்மைச்சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்றுமாக இருவகைப்படும். புகழ் முதலிய உலகப்பயன் கருதிச் செய்யும் சிவ புண்ணியமே உபாயச் சரியை முதலியன. பத்தி காரணமாகச் செய்யும் சிவ புண்ணியமே உண்மைச் சரியை முதலியன.

இவ்வொவ்வொன்றும் நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்படும். இந்நான்கு நெறிகளின் பயன்கள் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகள்ஆகும். முன்னைய மூன்றும் பத முத்திகள்; பின்னையது பரமுத்தி.

சரியை : சமயப்படிகளில் முதலாவதானதும், எளிமை-யானதுமான நிலையே சரியை ஆகும் மெய்த்தொண்டு புரி-வதே சரியை நெறியாகும். அஃதாவது திருக்கோயில் அலகிடல், மெழுகுதல், பூமாலை தொடுத்தல், சிவபிரானைப் புகழ்ந்து பாடுதல், தீபமிடுதல், நந்தவனம் உண்டுபண்ணுதல். சிவனடி-யார்கட்குப் பணிவிடை செய்தல் முதலியன. இந்நெறியைச் செய்கின்றவர் அடையும் முத்திப்பேறு சாலோக பதமாகும். 'நடையறாப் பெருந்துறவு பூண்ட' அப்பர் இந்நெறியினின்று ஒழுகிக் காட்டினார். இந்நெறியில் ஒழுகிய அவர் இந்நெறி-யைப் பற்றிப் பலவிடங்களில் கூறிச் செல்கின்றார். சான்றுக்-குச் சிலவற்றினைக் காண்போம்.

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புகுப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்

33. அப்பர் தேவாரம் 6 31.3.

அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''[33]

என்றும்,

''பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள்கொண்டாங் கார்வத்தை யுள்ளேவைத்து
விரும்புநல் விளக்குத்தூபம் விதியினா லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனாரே''[34]

என்றும்,

''விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகடா மருளுமாறே''[35]

என்றும்,

''எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே''[36]

என்றும் இந்நெறியைப் போற்றுகின்றார்.

கிரியை :- சமயப்படியின் இரண்டாவது நெறியே கிரியை. மெய்த்தொண்டு செய்வதுடன் வழிபாடும் செய்வ· தாகும். முதல்வனை அகத்தும் புறத்தும் வழிபடவேண்டும். நம் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் முதல்வனை வழி படற்கே உரியன; இதனை நாவரசர் ஒரு பதிகம் முழுவதும் நவில்கின்றார்.

34. அப்பர் தேவாரம் 4.31.4.
35. மேலது 4.77.3. 36. மேலது 6.61.3.

''தலையே நீவணங்காய்
கண்காள் காண்மின்களோ
செவிகாள் கேண்மின்களோ
மூக்கே நீமுரலாய்
வாயே வாழ்த்துகண்டாய்
நெஞ்சே நீநினையாய்
கைகாள் கூப்பித்தொழீர்''[37]

என்பது திருவங்கமாலைத் திருப்பதிகமாகும்.

இக் கிரியை நெறியைப்பற்றிச் சுபக்கம் கூறுவதாவது: ''புதிய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய அமைத்துப் பஞ்ச சுத்திகளும் செய்து ஆசனம் இட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனை பண்ணி ஆவாகித்து மெய்யன்போடும் அர்ச்சித்துத் துதித்து வழிபட்டு அக்கினி காரியமும் செய்யலாம்'' என்பதாகும். இவ்வாறு செய்கின்றவர் அடையும் பேறு சாமீப பதமாகும். இந்நெறியில் ஒழுகியவர் கவுணியர் குலத் தோன்றல் ஆளுடையபிள்ளையாராகிய சம்பந்தர் ஆவர். அவர் இந்நெறியைப் பற்றிப் பலவிடங்களில் போற்றிக் கூறியுள்ளார்.

''நறைமலி தருமள றொடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடுமடியவர்
குறைவில பதமனை தரவருள் குணமுறை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமக டலைவரே''[38]

என்றும்,

''செம்பொன்செய் மாலையும் வாசிகையுந்
திருந்துபு கையும அவியும்பாட்டும்
நம்பும் பெருமைநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
உம்பரு நாகரு லகந்தானு
மொலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்

37. அப்பர் தேவாரம் 4.9.1-7.
38 சம்பந்தர் தேவாரம் 1.21 4.

அம்புத நால்களா னீடுங்கூட
லாலவா யின்க ணமர்ந்தவாறே''[39]

என்றும்,

''காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிப்பொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம்''[40]

என்றும்,

''தோத்திரமா மணலிலிங்கந் தொடங்கியவா
னிரையிற்பால்
பாத்திரமா வாட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தமங்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே''[41]

என்றும் புகழ்ந்துரைத்துள்ளார்.

யோகம் :மூன்றாவது நெறியாகிய இவ் யோக நெறியை, ''விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானித்துப் பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது. தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப்பெறல்'' என்று ஆறுமுகநாவலர் விளக்குவர்[42]

ஆயின், சுபகத்தில் இந்நிலை பின்வருமாறு கூறப் பட்டுள்ளது.''ஐம்பொறிகளையும் ஒடுக்க வேண்டும்;சுவாசத்தை நிலையில் நிறுத்தி மனத்தை ஒருவழிப் படுத்த வேண்டும்; உடம்பினுள் ஆறு ஆதாரங்களை வழிபட வேண்டும். ஆன்மாவானது அந்த ஆறு ஆதாரங்களுக்கும் மேலே சென்று பிரமரந்திரத்தில் ஒழுகும் அமிர்ததாரை ஒழுக்கால் உடம்பு நிலைத்திருக்கத்தான் சிவசோதியைக் காணும்''. இவ்வாறு செய்கின்ற இவ் யோகநெறியானது சிவசோதியைக் காணும்''. இவ்வாறு செய்கின்ற இவ் யோகநெறியானது உடம்பிலுள்ள எட்டு உறுப்புக்களின் வழியே செய்யப் பெறுவதாகும். இதனையே 'அட்டாங்க யோகம்' என்று கூறுவதுமுண்டு. இந்நெறியில் ஒழுகியவர் பெறுகின்ற பேறு சாரூபமுத்தியாகும். இந்நிலையை,

39. சமபந்தர் தேவாரம் 1.7.5.
40. மேலது 1.116.2.
41. மேலது 3.66.3.
42. ஆறுமுகநாவலர், சைவ வினாவிடை

''உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரர வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி''[43]

என்று ஆளுடைய அரசு காட்டுவார். ஆயின் இந்நெறியில் ஒழுகியவர் தம்பிரான் தோழராகிய நம்பியாரூரராகிய சுந்தர ராவர். அவர் இந்நெறியைப்பற்றித்,

''தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள்
நாள்தொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் மடிகளே''[44]

என்றும்,

''வழித்த லைப்படு வான்முயல் கின்றேன்
உன்னைப் போல்என்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச்
சுழல்கின்றேன் சுழல்கின்றதென் னுள்ளம்
சுழித்த லைப்பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற விழுக்கை
ஒழித்து நீஅரு ளாயின செய்யாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வாளே''[45]

என்றும்,

''வானுடை யான்பெரியான் மனத்தாலும் நினைப்பரியான்
ஆனிடை ஐந்தமர்ந்தான் அணுவாகியோர் தீயுருக்கொண்
டூனுடை இவ்வுடலம் ஒடுக்கிப்புகுந் தான்பரந்தான்
நானுடை மாடெம்பிரான் நண்ணும்ஊர்நனி பள்ளியதே''[46]

என்றும் கூறியுள்ளார்.

ஞானம் : இறுதியாக நிற்பது ஞான நெறியாகும். ஞானம் என்பது அறிவு. ''பசு பதி பாசம் என்னும் முப்பொருள்களின்

43. அப்பர் தேவாரம் 6- 25. 1.
44 சுந்தரர் தேவரரம் 7 45. 6.
45. மேலது 7. 54. 5.
46. மேலது 7, 97. 3.

இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூற்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல்'' என்று இதனை ஆறுமுகநாவலர் விளக்குவார்.[47] 'ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்''[48] என்று இந்நிலையில் நிற்போரைக் கூறு வார் அப்பர்.

''கலைஞானம் முதலிய யாவற்றையும் கற்று அறிய வேண்டும்; மற்றும் சமய நூற்பொருள்கள் யாவற்றையும் பூருவபக்கமாகக் காணவேண்டும்; பதி பசு பாச இலக்கணம் கூறும் சிவாகம நெறியே சித்தாந்தம் எனத் தெளியவேண்டும். பின்னர்க் காண்பான் (ஞாதிரு), காட்சி (ஞானம்), காட்சிப் பொருள் (ஞேயம்) என்று பிரித்து அறியும் அறிவொழிய அத்துவித முறையில் சிவனுடன் கலந்து நிற்றல் வேண்டும்'' என்று இந்நெறிக்குச் சுபக்கம் விளக்கம் கூறும். இந்நெறியில் ஒழுகுகின்றவர் சாயுச்சிய முத்தியை அடைவர். இந்நெறியில் ஒழுகிய மாணிக்கவாசகர்,

''சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி முந்தி லேன்என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம்
எய்த லுற்றி ருப்பனே''[49]

எனவும்,

''உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கொடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டா
மோ''[50]

எனவும்,

47. ஆறுமுகநாவலர், மு.கா.நூல் ப.13.
48 அப்பர் தேவாரம்
49. மாணிக்கவாசகர், திருவாசகம் திருச்சதகம் 79.
50. மாணிக்கவாசகர், திருவாசகம் திருத்தெள்ளேணம் 17.

''முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்
வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்-
சோவே''[51]

எனவும் இந்நெறியைப் புகழ்ந்துள்ளார்.

சிவபிரானை வழிபடும் முறைகளாகக் கன்ம, தவ, செப, தியான, ஞான வேள்விகள் என்ற இவ்ஐந்தும் கூறப்படும். இவற்றுள் ஞானமே மேலான முத்தியைக் கொடுக்கும் இந்த ஞானம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்று நான்குவகைப்படும் நிட்டைகைவரப்பெற்றவர்கள்பரமுத்தியை அடைவர். நிட்டை கைவரப் பெறாதவர்கள் மேலான புவனங்களுக்குத் தலைவராகி, மீண்டும் இவ்வுலகில் பிறந்து பின்னர்க் குரு அருளால் நிட்டை கைவரப்பெற்றுத் திருவடி அடைவர்.

முதல்வன் குருவடிவாய்த் தோன்றல்

உயிருடன் ஒன்றாய்க் கலந்துள்ள முதல்வன், பக்குவம் பெற்ற உயிருக்கு அவன் குருவடிவாய்த் தோன்றி ஞானத்தை உணர்த்துவான். இதனைப்,

''பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு''[52]

எனக் கூறுவார் குமரகுருபரர்.

''அருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையை''[53]

மணிவாசகம் கூறும்.

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் முற்றிய நிலையில் மலத்திற்குத் துணையாய் நின்று உயிர்களை நடத்திச் சென்ற மறைப்புச் சத்தியானது பராசத்தி வடிவாய்த் தோன்றி உயிரின்கண் பதியும். இதுவே சத்திநிபாதம் எனப்படும். இதனையே,

51. மாணிக்கவாசகர் , திருவாசகம் அச்சோப்பதிகம் 1.
52. குமரகுருபரர், திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா 24.
53. மாணிக்கவாசகர், திருவாசகம் போற்றித்திருவகவல் 75-66.

''நால்வகையாம்
சத்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப் பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி''[54]

என்றார் குமரகுருபரர்

''வினையொத்த பின்
கணக்கில்திருக் கோலநீ வந்து காட்டினாய் கழுக்
குன்றிலே''[55]

என்றார் மாணிக்கவாசகரும்.

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகிய மூவருக்கும் முதல்வன் எங்ஙனம் குருவாய்த் தோன்றி ஞானத்தை அளிப்பன் என்பதனை,

''மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்''[56]

என்ற வெண்பாவில் விளக்குவார் சிவஞானமுனிவர்.

ஒரு தாய்க்குத் தன் குழந்தையைக் காணாதபொழுது பாலானது சுரக்காது; கண்ணீரும் குழந்தையைக் கண்டவுடனே தோன்றுகின்றது. அவ்வாறே நீரில் மறைந்த நிழல்போல உயிர்களோடு ஒன்றாய்க் கலந்து புலப்படாது நின்ற முதல்வன் குருவடிவாய்த் தோன்றி வந்தாலன்றி அவனை யார்தான் அறியமுடியும்.

''இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா
லல்லா யுளவாமா வீர்நிழல்போ-லில்லா
வருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லுற்று''[57]

என்பது போத வெண்பா.

54. குமரகுருபரர், மு.கா நூல் 21 22.
55. மாணிக்கவாசகர், திருவாசகம்.
56. சிவஞானமுனிவர், மு.கா.நூல், சூ 8.46.
57. சிவஞான முனிவர், மு. கா. நூல். சூ.8-48.

இவ்வுயிரானது ஐயுணர்வுகளில் மயங்கி இருக்கும். முதல்வன் உணர்த்தாமல் உயிர்கள் தம்மை உணரமாட்டா. பளிங்கானது தன்னால் சாரப்பட்ட பல நிறங்களையை காட்டியே நிற்கும். அதுபோலவே ஐம்புலன்களும் நிற்கும். தவம் முற்றிய உயிர், தன்னை ஐம்பொறிகளுக்கு வேறாக உணர்ந்த பின்னர்த் தமது தலைவனாகிய முதல்வனின் திருவடியை அடையும். இதனை வலியுறுத்த எண்ணிய மெய்கண்டார் ''இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே, தமது முதல் சீபாதத்தை அணையும்' என்ற பிரமாணத்தையும். ''ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந் துணையான்'' என்ற ஏதுவையும் கூறினார்.

திருவைந்தெழுத்து

முதல்வனை ஞானக்கண்ணால் கண்ட பின்னர் திருவைந்தெழுத்தை உச்சரிக்க வேண்டும். அதனால்தான் மெய்கண்டாரும் 'பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க' என்ற ஏதுவைக் கூறலானார்.

திருவைந்தெழுத்தின் பொருளைக் குருவின் மூலம் தெரிந்துகொள்ளுதல் வேண்டும் என்பது மரபு. 'சிவாயநம' அவ்வைந்தெழுத்து. இவ்வைந்தெழுத்து ஓதும்முறையில் ஐந்து வகையாகக் கூறப்பட்டுள்ளன. அவை :

1. தூய பஞ்சாக்கரம் — ந ம சி வா ய
2. சூக்கும பஞ்சாக்ரெம் — சி வா ய ந ம
3. காரண பஞ்சாக்கரம் — சி வா ய சி வ
4. மகாகாரண பஞ்சாக்கரம் — சி வ
5. மகாமனு பஞ்சாக்கரம் — சி

இப்பஞ்சாக்கரம் வீடு பேற்றுக்கு உரிய சாதனமாகும். கட்டு நிலையை நமசிவாய என்பதும், வீட்டுநிலையைச் சிவாயநம என்பதும் குறிக்கின்றது. இம்மந்திரத்தில் 'நம' என்பது பசுவையும், 'சி' என்பது பதியையும், 'வய' என்பது பாசத்தையும் குறிக்கும். 'சிவாய நம' என்பதற்குப் பொருள் :

| | | |
|---|---|---|
| சிகாரம் | — | சிவம் |
| வகாரம் | — | அருள் |
| யகாரம் | — | ஆன்மா |
| நகாரம் | — | திரோதம் |
| மகாரம் | — | மலம் |

இதனை,

> ''உற்ற குறிஅழியும் ஓதுங்கால் பாடைகளில்
> சற்றும் பொருள்தான் சலியாது - மற்றதுகேள்
> ஈசனருள்ஆவி எழிலார் திரோதமலம்
> ஆசில்எழுத் தஞ்சின்அடை வாம்''[58]

என்னும் உண்மைவிளக்கத்தால் அறியலாம்.

திருவைந்தெழுத்தை ஓதும் முறையையும் போதமும் சுபக்கமும் கூறுகின்றன. குருவின் மூலம் முதற்கண் பொருளைத் தெரிந்து கொள்ளவேண்டும். குருஅருள் பெற்றவுடன் நாள் தோறும் நன்றாகக் குளித்துவிட்டுச் சிவ சின்னம் அணிய வேண்டும். பின்னர்க் கிழக்கு அல்லது வடக்குத் திக்கைப் பார்த்து, மூன்று முறை மூச்சை இழுதது நிறுத்த வேண்டும். முதல்வன் திருமேனியில் எண் மலர்களைத் தூவி வழிபட வேண்டும். குண்டலித் தானமாகிய உந்தியிலே ஞான அனலை எழுப்பி, அதன்கண் ஓமம் செய்து, புருவ நடுவில் ஐந்தெழுத்தில் சிகர யகர வகரங்கள் நிற்கும் முறையை நினைத்துச் சிவபிரானை வழிபட்டுப் பின்னர்த் திருவைந்தெழுத்தை ஓதவேண்டும் இவ்வாறு செய்துவரின் இறைவன் விளங்கித் தோன்றுவன். உயிரும் அவனுக்கு அடிமையாய் விளங்கும். இதனையே,

> ''அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
> பஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி-லஞ்செழுத்தாற்
> குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
> லண்டனாஞ் சேடனா மங்கு''[59]

எனும் வெண்பாவில் கூறினார் மெய்கண்டார்.

இம்மந்திரத்தை முறையாகவும், சிரத்தையுடனும், தெளிவுடனும் ஓதப் பழகினால் உடல், உள்ளப் பிணிகள் நீங்கும். 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளுமில்லை' என்பதும் ஈண்டு நினைவுகூர்தல் பொருந்தும்.

> ''ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
> ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்

58. உண்மைவிளக்கம் 40
59. மெய்கண்டார், மு. கா. நூல் சூ. 9-59.

தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே''[60]

என்று சம்பந்தரும்,

''வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயமே''[61]

என்று அப்பரும்,

''விரும்பி நிம்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே''[62]

என்று சுந்தரரும் திருவைந்தெழுத்தின் பெருமைதனைக் கூறக் காணலாம்.

மேலும் பாசி படர்ந்த குளத்தில் கல்லை விட்டெறியும் பொழுது விட்டு நீங்கும்; பின்னர் ஒட்டியும் படரும் பாசி போன்று, ஐந்தெழுத்தை ஓதும்பொழுது மலமாயா கன்மங்கள் நீங்கும்; பின்னர் மறந்த பொழுது ஒட்டிமூடும். எனவே மறவாமல் திருவைந்ததழுத்தை ஓத வேண்டும்.

இறைபணி நிற்றல்

ஐந்தெழுத்தை நினைந்து இறைவனை வழிபடுவதனால் யான் எனது என்னும் செருக்கு நீங்கும். இறைபணியில் நிற்பதனால் பிராரத்தம் நுகருமிடத்து, ஆகாமியம் ஏறுவதில்லை.

இறைபணி நிற்றல் என்பது சீவன் முத்தர்கள் தங்கள் மலவாதனை நீங்க நிற்கும் நெறியாகும். சுபக்கத்தில் அருணந்தி, 'மலவாதனையையே நீக்கவல்ல இது மலத்தை

60. சம்பந்தர் தேவாரம் 3 22. 3.
61. அப்பர் தேவாரம் 4. 11. 7.
62. சுந்தரர் தேவாரம் 7. 48. 7,

நீக்கும்' என்று கூறுகின்றார். ''அரசன் கொடுத்த ஆணையால், ஊர்க்காவலர்கள் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பர். அரசன் ஆணை இன்றி அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. இவ்வுண்மையை உணர்ந்து, அரசனின் கருத்துப்படி நடந்தால் ஊர்க்காவலர்களிடம் தண்டனை பெற வேண்டி இருக்காது. அதுபோல, இறைவன் (அரசன்) ஆணையால் இந்திரியங்கள் என்னைக் கூடி நின்று எனக்குள் அடங்காமல் என்னைத் தம்முள் அடக்கி நிற்கின்றன; அவற்றை நடத்தும் இறைவனைக் கூடப் பெற்றால், அவன் திருவருளால் அவ்விந்திரியங்களை எனது ஆணைப்படி அடக்கி நிறுத்த இயலும்; எனக்கெனச் சுதந்திரம் இல்லை; இந்திரியங்களையும் தன்னையும் கூட்டி வைத்த சிவன் செயலே என அறிந்து இறைவன் தாள்களை வணங்கி அருளினால் மலவாசனையை அறுக்கலாம்'' என்று கூறுவார் அருணந்தி.

''இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தி
  னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னாணைவழி நின்றிடலா லென்றுந்
  தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் றாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி
  வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள்
  மூளாவங் காளாகி மீளா வன்றே''[63]

என்பது சுபக்கம். திருக்கடவூர் உய்ய வந்த தேவரும் தாமருளிய திருக்களிற்றுப்படியாரில்,

''சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும் - சிவனவன (து)
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்''[64]

என்று கூறுகின்றார். அதாவது ''என்இச்சை, செயல், அறிவு யாவும் சிவனது ஞானக்கிரியை அன்றிச் செயல்படாது; எல்லா-வற்றுக்கும் சிவனே முதல்; சிவசைதன்யமே பூரணம்; நம்

63. சிவஞான சித்தியார் சுபக்கம் 306.
64. திருக்களிற்றுப்படியார் 64.

செயல் என்பது ஒன்றுமில்லை'' என உணர்ந்து, சீவன் முத்தர்கள் தாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் தம் செயலாகக் கொள்ள மாட்டார்கள்.

எனவே, இறைபணி நிற்றல் என்பது தன்அறிவு, இச்சை, செயல்கள், எல்லாம் இறைவன் அறிவு, இச்சை, செயல்களே என உணர்ந்து திருவருள் வழி நிற்றலாகும். இது நிட்டை கைவரப்பெற்ற சீவன் முத்தர்கள், தமக்கு ஓரோர் சமயம் உலகக் காட்சி உற்றபோது தம்மைப் பிராரத்த வினை தாக்காமல் இருக்கவும், தமக்கு ஆகாமிய வினை ஏறாமல் இருக்கவும் நிற்கும் உபாயம் எனக் கொள்வர்.

சிவப்பேறு

ஆன்மாவானது பொருள்களை அறியும்பொழுது ஐம்பொறிகள் போல அது அதுவாய்ச் செறிந்து அறியும் தன்மையை உடையது. ஆதலால் ஐம்பொறிகளையும் ஒருங்கே உணராது அவ்வைந்தையும் ஒவ்வொன்றாக அறிந்து அனுபவிக்கும் ஆனால் முதல்வன் உயிரோடு கலந்து நின்று எல்லாப் பொருள்களையும் பொதுவகையாகவும், சிறப்பு வகையாகவும் அறிவான்

கதிரவன், அவனைக் காணாதவர்களுக்கு இரவிலுள்ள இருள் போன்றவன். அதுபோலப் பாசம் உடையவர்களுக்கு முதல்வன் இருளாவான். தாமரை மலரும் பருவம் அடைந்த பொழுது கதிரவன் அம்மலரை மலர்விக்கச்செய்வான். அது போன்று பேரன்பால் முதல்வனை உணர்கின்றவர்களுக்கு அவனது திருவருள் கிடைக்கும்; பாசம் நீங்கும், உயிரிடம கருணை கொண்ட முதல்வன், உயிர்களின் பாசத்தைச் சிறிது சிறிதாக நீக்கித் தனது அருட்சத்தியைப் பதிவிக்கச்செய்வான். பின்னர் மலம் முற்றும் களையப்பெற்று, நீருடன் கரைந்த உப்புப் போன்ற உயிரானது இறைவனின் திருவடியில் கலந்துவிடும்.

சீவன்முத்தன் செயல்

சிவன்மித்தனானவன் மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவுவன்; மலநீக்கம் நீங்கும்பொருட்டுச் சிவனடியார்களின் திருவேடத்தையும், சிவன் கோயிலையும் முதல்வனாகவே கண்டு வழிபடுவன். இதனையே,

''செம்மலர் நோன்தாள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானும் அரனெனத் தொழுமே''[65]

என்று மெய்கண்டார் கூறினார். மேலும் சீவன்முத்தர் செய்யப்படும் செயல்களாகச் சிலவற்றைக் கூறி விளக்குவார்.

முதலாவது, நல்வினை தீவினைகளுக்குக் காரணமான கன்மமலம், அசுத்தமாயை முடிவாகக் காணப்படுகின்ற மாயா மலம், தற்போதத்திற்கு ஏதுவாய் நிற்கும் ஆணவமலம் ஆகிய இம் மும்மலத்தையும் களையவேண்டும்.

இரண்டாவது, சிவபத்தர் அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர்; ஆதலின் சிவபத்தரோடு இணங்க வேண்டும்.

அடுத்து, சிவச்சின்னம் அணிந்த சிவபத்தரையும், சிவன் உறையும் திருக்கோயிலையும் முதல்வன் எனக் கண்டு வழிபட வேண்டும். ஏனெனில் முதல்வன் இவ்விரண்டு இடங்களிலேயே தயிரின் நெய் போல விளங்கி நிற்பன்; மற்றைய இடங்களில் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பன்.

இறுதியாக, எக்காலத்தும் இறைவழிபாடு உயிர்களுக்கு இன்றியமையாதது என்பதனைத்,

''தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது-முன்னவனே
தானேதா னாச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி''[66]

எனும் வெண்பாவில் விளக்கலானார்.

முடிவுரை

அமிழ்திலும் இனிய தமிழ் நூல்களுள் தோத்திரம், சாத்திரம், இலக்கியம் ஆகிய மூன்றும் சிறப்புடையன. பல்லாண்டுகளாக இந்நாட்டின் சைவ சமயம் தழைத்தோங்கியது என்பது வரலாறு காட்டும் உண்மை. சைவ சமயத்தில் முழு முதற் பரம்பொருளாக விளங்கும்

65. மெய்கண்டார், மு. கா. நூல் சூ. 12
66. மெய்கண்டார், மு.கா. நூல் சூ 12 80.

சிவபிரானை உமையொருபாகனாக வழிபட்டு வரும் மரபு தொன்றுதொட்டு வருவது. சைவ சித்தாந்தத்தில் 'சக்தி' வழிபாட்டிற்கு இன்றியமையாத இடமுண்டு. மிகப் பழைய திராவிட நாகரிகம் எனப் போற்றப்படும் சிந்துவெளி நாகரிக காலத்திலேயே சிவ (பசுபதி) வழிபாடு, சக்தி வழிபாடு, இலிங்க வழிபாடு முதலியன இருந்து வந்தன என்பர் வரலாற்றாசிரியர். ''வள்ளுவர், தம் காலத்திலும், தம் காலத்திற்கு முன்னரும் இந்நாட்டில் நிலவிவந்த சைவ சமயக் கோட்பாட்டை உடையவராய்த் தமது முதற் குறளில், உமைபாகனாம் சிவபெருமானையே, ஆதி பகவன் என்ற தொடரால் சுட்டலாயினர் எனலாம். ஆதி என்பது உமையையும். பகவன் என்பது சிவனையும் குறிப்பதாகக் கொள்ளலாம்''[67] என்று அறிஞர் கூறுவதும் இவண் நினைவுகூரத் தக்கது. உலகு, உயிர், இறை எனும் இம்முப்பொருள் உண்மையும், அறிவுடைய நம்மக்கள் இறையருளால் உலகம் நலம் பெற எடுத்துக்கொண்டு ஒழுகியது ஒழுக்க நெறியாகிய வாழ்க்கை முறையைப் பற்றியும் அறிந்து கடைப்பிடித்தற்குரிய சிறந்த உண்மைகள் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளமையை நாம் காணலாம். எனவே சித்தாந்த நூல்களைக் கற்று அதன்படி ஒழுகுவோர் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் எய்துதல் எளிதான காரியமாகும் எனில் மிகையாகாது.

> ''சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்தித்தலால்
> சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர்
> சித்தாந்த வேதாந்தம் செம்பொருளாதலால்
> சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே''[68]

---

67. ச. சாம்பசிவன், வள்ளுவர் கடவுட்கொள்கை, திருக்கோயில் நவம்பர் 1974.

68 திருமூலர், திருமந்திரம் 2394.

# 14. சைவமும் சமணமும்

மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை உள்ளது உடல் வாழ்வாகும். ஒரு மனிதனது வாழ்வு இந்த உடலிலே தொடங்கி உடலோடு முடிவதுதானா? இதற்கு முந்தைய நிலை என்ன? இதற்கு அடுத்த வேறொரு நிலை உண்டா? இருப்பின் அது என்ன? என்று சிந்திக்க முற்பட்டதன் விளைவாகத் தோன்றியதே ஆன்மீகநெறி. இறைவன், உயிர், உலகம் என்ற மூன்று பொருள்களைப் பற்றியும், அவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகள் பற்றியும் இந்தியாவிலுள்ள பற்பல சமயங்களும் சிந்தித்துள்ளன. அவற்றுள் சைவமும் சமணமும் கண்ட பொருள் உண்மைகளை ஒப்பிட்டு ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சைவம்

'சைவ சித்தாந்தம்' என்பது தமிழர்க்கே உரிய நெறியாகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தின் கருத்து, தொல்காப்பியர் காலந்தொட்டு இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது சைவ சித்தாந்தத்தின் முக்கிய தத்துவக் கொள்கையாக 'முப்பொருள் உண்மை' பேசப்படுகிறது.

இறைவன் (பதி)

கடவுளைப்பற்றிச் சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும் கருத்துகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, கடவுள் உண்டு என்பது. இரண்டாவது, கடவுளுக்குரிய குணங்களையும் இயல்புகளையும் கூறுவது. அவையும் சொரூப இலட்சணம், தடத்த இலட்சணம் என்று இருவகையாகக் கூறப்படும்.

இறை, உயிர், உலகம் எனும் முப்பொருள்களுள் உலகம் ஒன்றே காணப்படும் பொருள். அதனைக் கொண்டே மற்ற இரண்டையும் அறிய வேண்டும் என்பது சைவத்தின் கொள்கை.

இவ்வுலகம் தொழிற்படுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டும்.

1. முதற் காரணம் — மாயை
2. துணைக் காரணம் — சிவசத்தி
3. நிமித்த காரணம் — சிவபெருமான்

ஒரு மட்குடத்தைப் பார்த்தால், அதைச் செய்த குயவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பது நம் அறிவிற்குச் சற்றும் ஐயமின்றித் தெரிகிறது. அதைப்போலவே உலகத்தைக் கொண்டு அதனைப் படைத்தவன் ஒருவன் இருந்தேயாக வேண்டும் எனத் துணியலாம். குடம் தன்னைத் தானே ஆக்கிக் கொண்டது என்று கூறுதல் பொருந்தாது. குடத்தை வனையும் குயவன்தான் தான் விரும்பும் உருவத்தை மண்ணினின்றும் செய்வான். அதுபோலவே முதல்வனும் தான் எண்ணிய உருவத்தை எல்லாம் மாயையில் (முதற் காரணம்) இருந்து தோற்றுவிப்பன் குயவன் குடத்தை உருவாக்குதற்குத் திரிகையை (சக்கரத்தை)த் துணைக் காரணமாகக் கொண்டு செய்வது போல முதல்வனும் தனது சத்தியைத் துணை காரணமாகக் கொள்வான். இதனையே திருமூலர்,

> "குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டில்
> அசையில் உலகம் அதுஇது வாமே"[1]

என்றார்.

ஆக்கல், அளித்தல், அழித்தல் எனும் முத்தொழில்களை இறைவன் உயிர்கள் பொருட்டே நிகழ்த்துகின்றனன். உயிர்களிடத்தில் செம்பிற் களிம்பு போல அநாதி காலந்தொட்டுக் கூடி இருக்கும் ஆணவ மலத்தைப் பக்குவப்படுத்தி, அதன் வலியை ஒடுக்கி அவ்வுயிர்களுக்குப் பேரின்பமாகிய வீட்டை அருள்வதற்காகவே முதல்வனால் இம்முத்தொழில்கள் கைக்கொள்ளப்படுகின்றன.

முத்தொழில்களைப் புரியும் இறைவன் எங்கும் நிறைந்துள்ள தன்மையால் உருவம் இன்றி அருவமாய் இருப்பான். உருவமற்ற உயிரானது உருவமுள்ள உடலை இயக்கும். அதுபோல உருவமற்ற கடவுள் உருவமுள்ள பொருள்களிலும்

1. திருமூலர், திருமந்திரம் 143.

ஊடுருவி நிற்பன். வாயைத் திறக்காமல் எழுத்துக்கள் உண்டாகமாட்டா. எனவே வாயைத் திறக்க உண்டாகும் 'அ' என்ற ஒலி இல்லாமல் எழுத்துக்கள் தோன்றமாட்டா. அதுபோலக் கடவுள் இன்றி உலகம் தோன்றமாட்டா. அகரம், எழுத்துக்களுக்கு வினை முதற்காரணம் ஆவதுபோலக் கடவுளும் உலகிற்கு வினைமுதற் காரணம் (நிமித்த காரணம்) ஆகின்றான்.

> "அகர வுயிர்போல் அறிவாகி எங்கும்
> நிகரிலிறை நிற்கும் நிறைந்து"[2]

என்று உமாபதிசிவம், இறைவன் நிற்கும்நிலையைக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் அகரத்தின் சிறப்பியல்பை உவமையில் வைத்து விளக்குகையில்,

> "இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும்
> பலவுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய்
> நிற்கும் தன்மையும் போல"[3]

என்றார்.

இறைவன் தானாய், வேறாய், உடனாகும் தன்மையன். இவ் இறைத்தன்மையை,

> "ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
> மாறாமறை நான்காய்வரு பூதம்மலை யைந்தாய்
> ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
> வேறாயுட னானானிடம் வீழிம்மிழலையே"[4]

எனச் சம்பந்தர் கூறியுள்ளார்.

முதல்வன் உயிர்களிடம் கொண்ட கருணையினால் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களுடன், பின்னர் மறைத்தல், அருளல் ஆகிய இரண்டும் சேர்ந்து ஐந்தாக விரித்துக் கூறப்படும். இவ்வைந்தொழிலியற்றலே நடராச தத்துவம்' என்பதை மணவாசகங்கடந்தார் விளக்குவார்.

2. உமாபதிசிவம், திருவருட்பயன் 1.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம்நச்சினார்க்கினியர் உரை, நூற்பா 8.
4. திருஞானசம்பந்தர் தேவாரம் 1,11.2.

''தோற்றம் துடியதனில் தோயுந் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''[5]

என்பது உண்மை விளக்கம் தரும் செய்தியாகும். இவ்வாறு ஐந்து தொழில்கள் கூறப்படினும் இவை அனைத்திற்கும் அடிப்படை அருளல் ஒன்றே ஆகும்.

அருவமும் இல்லாமல், உருவமும் இல்லாமல் இருக்கின்ற முதல்வன் ஐந்தொழில்களை நடத்துவது எப்படி? என்ற கேள்வி எழும். தீயின் சத்தியானது சுடுதல், அவித்தல், வறுத்தல், பொரித்தல் முதலிய பல தொழில்களைச் செய்தாலும், தான் மாறுதல் அடைவதில்லை. அதுபோலவே முதல்வன் சத்தியும், ஐந்தொழில்களைச் செய்தாலும் மாறுதல் அடையாதவனாயிருக்கிறது. அச்சத்தியோடு முதல்வனும் மாறுதலடையான்.

அருவம், அருஉருவம், உருவம் ஆகிய மூன்றும் முதல்வனின் வடிவங்களாகும். முதல்வன் உலகப் பொருள்களின் இயல்பு உடையவன் அல்லன்; தோற்ற நாசங்கள் இல்லாதவன்; அளந்து அறியப்படாதவன்; இன்ன வடிவினன் என்றும், இன்ன வடிவத்தைக் கொள்ளமாட்டான் என்றும் அவனைக் கூறுதல் அரிது. அதனால்தான் நாவரசரும்,

''கோவண முடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்
தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்
பூவணக் கிழவனாரைப் புலியுரி யரையனாரை
ஏவணச் சிலையினாரை யாவரே யெழுதுவாரே''[6]

எனவும்,

''மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் எண்ணி னல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லனோ ருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்

5. மணவாசகங்கடந்தார், உண்மைவிளக்கம் 35.
6. திருநாவுக்கரசர் தேவாரம் 4.77.2.

இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே''[7]

எனவும் கூறினார்.

சத்தி முதல்வனோடு பிரிவின்றி நின்று அம் முதல்வன் நினைந்தபடிப் போக மோட்சங்களைக் கொடுக்கும். மறைத்தல் இல்லாத ஞானமே சுத்தஞானம்; அதுவே பராசத்தி ஆகும். அச் சத்தியினாலேயே முதல்வன் உலகத்தைத் தோற்றுவித்து நிறுத்தி அழிப்பன்.

சிவன், சத்தி என இரு தன்மையாய் முதல்வன் இருப்பதனாலேயே உலகம் முழுவதும் ஆண், பெண் என இரு வகையாய் இயங்குகிறது.

இறைவன் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை ஆகிய எண் குணங்களை உடையவன். 'சத், சித், ஆனந்தம்' என்ற மூன்று சொற்களுக்குள் இறைவனின் இயல்புகளைச் சுருக்கமாகக் கூறலாம். 'சத்' என்றால் அழிவற்ற உண்மைப் பொருள் என்பது கருத்து. ''தான் பிறிதெதிலும் தங்காததும், தன்னில் ஏனைய யாவும் தங்குவதும் எதுவோ அதுவே உண்மைப் பொருள்''[8] என டெகார்டே என்ற மேனாட்டுத் தத்துவ அறிஞர் கூறுவதும் இவண் குறிப்பிடத்தக்கது.

இறைவனது இயல்புகளைச் சொரூபம், தடத்தம் என்று இரண்டு விதமாகக் கூறுவது மரபு. குணங்குறிகளைக் கடந்த நிலை சொரூபம் எனப்படும். குணங்குறிகளோடு கூடிய நிலை தடத்தம் எனப்படும். இந்த இரு நிலைகளையே,

''பலகலை ஆ கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்

7. திருநாவுக்கரசர் தேவாரம் 6,97,10
8. மேற்கோள் : கி. இலட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம், ப. 375.

நிலவும்அரு உருவின்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே''

எனும் பாடலில் உமாபதி சிவாசாரியார் பதியின் இலக்கண மாகக் கூறியுள்ளார்.

''இறைவனே யாவற்றிலும் மேலான பொருள். அவனுக்கு அருவமும் இல்லை உருவமும் இல்லை. குணமும் இல்லை. குறியும் இல்லை. அவன் அழுக்கு அற்றவன். அவன் ஏகன். அவன் அழிவில்லாதவன். உயிர்களின் அறிவுக்கு அறிவு ஆனவன். சலனம் அற்றவன். எல்லை அற்றவன். ஆனந்தமே உருவானவன். மாறுபட்ட-வர்களுக்கு அரியவன் வழிபடுபவருக்கு எளியவன். சிறிய-வற்றுள் சிறியவன் பெரியவற்றுள் பெரியவன் அறிவுடை யோர் அவனைச் சிவன் என்பர்'' என்பது இப் பாடலின் பொருளாகும்.

உயிர் (பசு)

பசு எனப்படும் உயிர் அல்லது ஆன்மா சைவ சித்தாந்தம் காட்டும் இரண்டாவது உள்பொருளாகும்.

ஆன்மா உண்டு என ஒப்புக் கொள்கின்றவர்களுள் முன்னணியில் நிற்போர் சைவ சித்தாந்திகள். ஆன்மாவின் உண்மையை நிறுவுவதற்கு எழுவகைக் காரணங்களை ஏழு அதிகரணங்களில் சிவஞானமுனிவர் கூறியுள்ளார். அஃதாவது,

''உடல் ஆன்மா அன்று, பொறி ஆன்மா அன்று, மனம் ஆன்மா அன்று என்று இவ்வாறு ஒவ்வொன்றையும் 'அன்று அன்று' எனக்கூறி 'ஆன்மா என்பது சூனியம்' என்று சொல்வதாகிய அறிவு ஒன்றுஇருத்தலின் அதுவே அவ் ஆன்மாவாம்; இதேபோன்று என் வீடு, என் சுற்றம், என் மனை, என் கை, என் கால் என்று

9. உமாபதிசிவம், சிவப்பிரகாசம் 13.

> கூறுவதாகிய ஒன்றே ஆன்மாவாம்; ஐம்புலனும் ஒடுங்கியபொழுது கனவில் நிகழ்ந்தனவற்றை அறிவது ஒன்று இருத்தலின் அதுவே ஆன்மாவாம்; துயிலும் பொழுது புலன்களால் ஏற்படும் இன்ப துன்பமும் அனுபவமும் இயக்கமும் உடம்பில் இல்லை, அந் நிகழ்ச்சிக்குக் காரணமாய் உள்ளது எதுவோ அதுவே ஆன்மாவாம்; முதல்வன் கருவிகள வாயிலாகப் பொருள்களை உணர்த்த உணர்தலின் அதுவே ஆன்மா வாம்; மாயா காரியங்களால் ஆன சூத்திரப் பாவை போன்ற உடம்பினுள் ஆன்மா உள்ளது''[10]

என்பதாகும்.

'ஆன்மாக்கள் படைக்கப்பட்டவை அல்ல; அவை என்றும் உள்ளவை' என்பது சைவ சமயக் கொள்கை. 'என்றுநீ அன்று யான்'[11] என்பார் தாயுமானவர். 'ஆன்மா' என்ற சொல்லுக்குப் பொருள் எங்கும் பரவியுள்ளதாய் (வியாபகமாய்), என்றும் உள்ளதாய் (நித்தமாய்), அறிவுடையதாய் (சித்தாய்) உள்ளது என்பதாகும். இத்தகைய இயல்புகளை உடைய ஆன்மாவைச் செம்பைக் களிம்பு பற்றி இருப்பது போல, ஆணவம் எனும் மலம் அநாதிதொட்டேபற்றி நிற்கின்றது. இதனைஉணர்த்தவே ஆன்மாவைப் 'பசு' என்ற சொல்லால் சைவ சமயத்தவர் குறிப்பிடுகின்றனர். 'பசு' என்றால் 'கட்டுண்டது' என்பது பொருள்.

ஆன்மா ஒருபோதும் தானாகவே தனித்து நிற்பதில்லை. அது எப்பொழுதும் ஏதாவது ஒன்றைச் சார்ந்தே நிற்கும். பெத்த நிலையில், அதாவது கட்டுண்ட நிலையில் ஆணவத்தையும், முத்தி நிலையில், அதாவது தளை நீங்கிய நிலையில் இறைவனையும் சார்ந்து நிற்கும்.

ஆன்மாவின் மற்றொரு சிறப்பியல்பு அது எதைச் சார்கின்றதோ அதன் தன்மையை அடைவதாகும். ஆணவம் அசத்து, ஆணவத்தைச் சாரும் போது ஆன்மா தானும் அசத்தாகி விடுகின்றது. இறைவன் சத்து; இறைவனைச் சாரும்போது ஆன்மா தானும் சத்தாகி விடுகின்றது. இங்ஙனம்

10, மாதவச்சிவஞான யோகிகள், சிவஞான போதமும் சிவ ஞான பாடியமும், சூத்திரம் 3.
11. தாயுமானவர். பாடல்கள் சுகவாரி 7.

ஆன்மா சத்தாகவும் அசத்தாகவும் மாறும் இயல்பை உடைய-தாதலின் 'சத சத்து' என்ற பெயரைப் பெறுகிறது.

உயிருக்கு மூன்று நிலைகள் உண்டு. இந்த நிலை-களை 'அவத்தை' எனக் குறிப்பர். உயிர், ஆணவ மலத்-தோடு மாத்திரம் கலந்து நிற்கும் நிலை 'கேவலம்' எனப்-படும். இந்நிலையில் உயிர்கள் ஆணவ மலத்தால் கட்டுப்பட்-டுத் தன்னையும் தலைவனையும் உணராது நிற்கும். மாயா காரியமாகிய தனுகரணபுவனபோகங்களாகிய கருவிகளோடு கூடிய நிலையே சகலம் எனப்படும். இந்நிலையில் உயிர்கள் உலகத்தை ஓரளவு அறியும். இந்நிலையில் இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்றும் தோன்றும். கேவலத்திலிருந்து சகலத்திற்கும், சகலத்திலிருந்து கேவலத்திற்கும் உயிர்கள் மாறி-மாறிச் சென்று கொண்டிருக்கும். கேவல நிலையில் உயிருக்கு அறிவே கிடையாது சகல நிலையில் தனுகரணங்களின் துணையினால் உயிர் ஒரு சிறிது அறிவைப் பெற்ற போதும் அந்த அறிவு முழுமை பெற்ற அறிவாக இருக்காது. அந்த அறிவால் நிலையற்ற பொருள்களை (அசத்துப் பொருள்களை) மட்டுமே அறியமுடியும். எனவே இது ஒரு மயக்கமான நிலை. கேவல நிலையை இருள்நிலை எனக் கொண்டால், சகல நிலையை மருள்நிலை எனக் கொள்ள-லாம். அடுத்து மூன்றாவது நிலை சுத்தம் எனப்படும். அறியாமையாகிய கேவல நிலை, மயக்க அறிவை உடைய சகலநிலை ஆகிய இந்த இரு நிலைகளும் நீங்கி உயிர் முழுமையான அறிவைப் பெறும் நிலையே சுத்தம் எனப்படும். இதற்கு இறைவனுடைய அருள் வேண்டும் இந்நிலையிலேயே உயிர்கள் கடவுளையும் தம்மையும் அறியும். இவற்றை,

> ''அறிவி லாதனெ னைப்புகுந் தாண்டுகொள்
> டறிவதை யருளிமேல்
> நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்
> பந்தனை யறுப்பானை''[12]

என்று மணிவாசகர் கூறுவார்.

உலகம் (பாசம்)

சைவ சித்தாந்தம் வலியுறுத்தும் மூன்றாவது உள்-பொருள் பாசம் அல்லது தளை ஆகும். இது தவிர்க்கப்பட

12. மாணிக்கவாசகர், திருவாசகம், திருச்சதகம் 32.

வேண்டிய அழுக்காதலின் மலம் என்றும் கூறப்படும். பொதுவாக மும்மலங்கள் என்று கூறப்படினும் ஆணவம் என்பதே. மூலமலம் ஆகும். இதுவும் பதி, பசு என்னும் இரண்டைப் போல அநாதியாகும்.

இவ்வாணவம் செம்பிற் களிம்பு போல உயிர்களைப் பற்றி நிற்கும் இந்நிலை கேவலநிலை எனப்படும் என முன்னர்க் கூறப்பட்டது. இம் மூலமலத்தின் வலியை ஒடுக்குவதற்காகக் கன்மம், மாயை என்னும் வேறு இருமலங்கள் பின்னர்ச் சேர்க்கப்படுதல்பற்றி அவை ஆகந்துக மலங்கள் எனப்படும். மாயையைச் சம்பந்தமலம் என்றும், கன்மத்தை அனுபந்த மலம் என்றும் கூறுவர்.

இவையேயன்றி மாயேயம், திரோதாயி என்னும் இரண்டையும் சேர்த்து மலங்கள் ஐந்து எனவும் கூறுவதுண்டு. 'மலங்கள் ஐந்தாற் கழல்வன் தயிரிற் பொரு மத்துறவே'[13] என வாதவூரடிகள் அருளியது இதுபற்றியே!

இவ்வாணவம் அறிவை மறைந்தலின் இருள் எனப்படும். இது இருளைவிடக் கொடியது. இருளாவது தனனைக் காட்டும். இது பொருளையும் காட்டாததோடு தன்னையும் காட்டாது. இவ்வுண்மைகளைத் திருவருட்பயன்,

''ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது''[14]

எனவும்,

''பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்குஉண்டு என்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு''[15]

எனவும் அறிவுறுத்தும்.

உயிர்கள் அடையும் துன்பங்கள் அனைத்திற்கும் இதுவே மூலகாரணமாகும். இதுவும் உள்பொருளாதலின் என்றுமே அழியாது. உயிரின் முத்தியிலும் இது வலியும் செயலும் ஒடுங்கி வாளா கிடக்கும். ஆனால் அழியாது.

13. மாணிக்கவாசகர், திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் 29.
14 உமாபதிசிவம், திருவருட்பயன் 23.
15. மேலது 25.

ஒரு மலத்தை ஒழிப்பதற்காக அதனுடன் பிற மலங்களைச் சேர்த்தலுக்குத் தத்துவ நூலோர். வண்ணான் ஆடையின் அழுக்கை அகற்ற உவர் மண்ணைச் சேர்த்தலை உவமை ஆக்குவர்.

கன்மம் தன் இயல்பால் நல்வினை, தீவினை என இரண்டாகவும், பயன்தரு முறையால் சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என மூன்றாகவும் பிரித்தோதப்படும். இக்கன்மம் உயிர்களிடத்து இன்ப துன்பங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும். இவ்வினைகளாலேயே பிறப்பும் இறப்பும் மாறிமாறி வருகின்றன

''உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறுஏது என்னின்
விடப்படு முன்உடம்பின் வினைஇந்த உடல்வி ளைக்கும்
தொடர்ச்சியா யொன்றுக் கொன்று தொன்றுதொட் டனாதி வித்தின்
இடத்தினில் மரம்ம ரத்தின் வித்தும்வந்த இயைபு மாபோல்''[16]

என்னும் சித்தித் திருவிருத்தத்தால் இதனைத் தெளிவாக உணரலாம் ஓர் உயிரின் மொத்தத் தொகுப்பு வினைகள் சஞ்சிதம் அல்லது பழவினை எனப்படும். குறிப்பிட்ட ஓர் பிறவியில் துய்த்துக் கழிய வேண்டியவை பிராரப்தம் அல்லது நிகழ்வினை எனப்படும். அப்பிறவியில் ஈட்டப்படும் இருவினைகளை ஆகாமியம் அல்லது எதிர்வினை என்பர். இவற்றுள் பிராரப்தம் அனைவராலும் தவிர்க்க முடியாமல் துய்த்தே தீர்க்கப்படவேண்டும் என்பதும் மற்ற இரண்டும் இறைவனால் அழிக்கப் பெறலாம் என்பதும் சைவர்தம் துணிபு. கன்மம் சுய அறிவற்ற சடப்பொருளே. இறைவன் ஊட்ட இவை உயிரைப்பற்றுகின்றன.

அடுத்து, மாயையைக் காண்போம். இது உயிர்களுக்கு இன்ப துன்பங்கள் தோன்றுவதற்குத் துணைக்காரணமாய்த் தன் காரியமாகிய தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவிக்கிறது. சைவ சாத்திரங்கள் இம்மலத்தை ஒரு விளக்காகக் கூறும். தத்துவ நூல்களில் இம்மலம் பசுவின் பகையாகக் கருதப்படுவதில்லை.

16. அருணந்தி சிவாசாரியார், சிவஞான சித்தியார் சுபக்கம் 100.

''தானுவினோடு ஒத்துச் சரியாய் நடம்புரியும்
வாணுதலார் கூத்து மறைப்பல்ல-ஆணவத்தை
ஒட்டியபேர்க்கு எல்லாம் ஒளிப்பான் அரன்அதனைத்
தெட்டியபேர்க்கு ஆம்ஆம் தெரிவு''[17]

என்பது சித்தாந்த சிகாமணி.

ஓர் உயிர் முத்தியை அடையும்போது முதலில் கன்மவினை ஒழியும்; அடுத்து மாயை அகலும்; இறுதியில் ஆணவம் தன் வலியிழந்து ஒடுங்கும். இந் நிலைகளில் உயிர்கள் முறையே சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என வழங்கப் பெறும்.

இறைவன் காரணம் அற்றதும் தனக்கு இயல்பாக அமைந்ததுமாகிய கருணையால் கேவலநிலையிலுள்ள உயிர்களைச் சகலநிலைக்குக் கொணர்ந்து, சுக துக்கங்களைத் துய்ப்பித்து நல்வினை தீவினைகள் தம்முள் சமமடைதலாகிய இருவினையொப்பு ஏற்பட்ட காலத்தில் ஆணவமலம் ஒடுங்குவதற்கு ஏற்ற நிலையை உண்டாக்குகிறான். இந்நிலை மலபரிபாகம், எனப்படும். இவ்வாறு ஆணவ மலம் ஒடுங்குவதற்கேற்ற சூழ்நிலை ஏற்பட்ட உடனே இறைவனின் திருவருட்சத்தி ஓர் உயிரின்மீது படியும். அது திருவருள் வீழ்ச்சி அல்லது சத்திநிபாதம் எனப்படும். பிறகு அவ்வுயிர் இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய பேரின்பப் பெருவீட்டை அடையும். இதுவே சைவ சித்தாந்தம் காட்டும் முத்தியாகும். இச்செயல் இறைவனின் இயல்பான கருணையாலேயே நடைபெறுகிறது. இதனை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

''பூமேவு கருணையினாற் பல்லுயிர்க்கும் பவம்நல்கிப்
போகம் ஊட்டித்
தாம்மேவு மலம்அகல அறிவுஅறியா
மையினும்அறம் சார ஆற்றித்
தூமேவு சத்திபதித்து ஒழியாமல் ஆனந்தம்
சுரவா நிற்கும்
மாமேவு கதியளிக்கும் தனிமுதலை எஞ்ஞான்றும்
வாழ்த்தி வாழ்வாம்''[18]

எனத் தெளிவாக்குகிறார்.

17. அம்பலவாண தேசிகர், சித்தாந்த சிகாமணி 6.
18. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தியாகராசலீலை, கடவுள் வாழ்த்து 8.

சைவ சித்தாந்தம் காட்டும் இந்த அடிப்படை உண்மைகளை இவ்வளவில் சுருக்கமாக நிறுத்திக்கொண்டு அடுத்துச் சமண சமய உண்மைகளை எடுத்துக் கொள்வோம்.

சமணம்

இந்தியாவில் தோன்றிய பல சமயங்களில் சமணமும் ஒன்று. மிகப் பழைமை வாய்ந்தது தமிழ் இலக்கண இலக்கிய வரலாற்றில் சமணர்கள் ஆற்றிய தொண்டு மறுக்க முடியாத சிறப்பிடம் பெற்றுள்ளது. நாலடியார், பழமொழி, ஏலாதி, சிறுபஞ்சமூலம் முதலான சங்க மருவிய நூல்களையும், சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான காப்பிய நூல்களையும், சூடாமணி நிகண்டு போன்ற நிகண்டுகளையும், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை போன்ற இலக்கண நூல்களையும் உருவாக்கி அளித்த பெருமை சமணர்களையே சாரும்.

சமண சமயத்திற்கு அடிகோலியவர் ஜினர். இடபதேவர் முதல் மகாவீரர் வரை இருபத்துநான்கு தீர்த்தங்கரர் இருந்தனர் என்றும், இனியும் இருபத்துநான்கு பேர் தோன்றுவர் என்றும் நம்புவர். சைனர், ஆருகதர், நிகண்டர், சமணர், அமணர், பிண்டியர் என்று இம்மதத்தினரை அழைப்பது நம்மரபு.

சமணர்கள் உலகத்தைச் சீவன், அசீவன் என்ற இரு தெளிவான பிரிவில் அடக்குவர். இவை முறையே உயிர்ப் பொருள், சடப்பொருள் ஆகும். இந்த இரு பொருள்களுமே அழிவற்ற நித்தியப் பொருள்கள் என்பது அவர் கொள்கை.

சீவன் எனப்படும் ஆன்மா எண்ணிக்கையாற் பலவாகும். இவை அநாதி. அசீவத் தொடர்பு இல்லாமல் இருக்கும்போதுதான் அவற்றின் உண்மை இயல்பு விளங்கும். அந்நிலையில் சீவன் முற்றறிவும் முழுஆற்றலும் உடையவை. அமைதியும் அறிவும் சீவனின் இயல்பான குணங்களாகும். இச் சீவன் சடமான உடலோடு சேர்ந்தமையால்தான் தம் நிலைமாறிச் சிற்றறிவினதாகப் பற்பல துன்பங்களை அடைகிறது. பொறி புலன்களாகிய தளைகளைத் தகர்த்தால் சீவன் முற்றுணர்வுடைய கேவல ஞானம் பெற்ற சைதன்ய வடிவினதாகிவிடும்.

இத்தகைய சீவனுக்குப் பருமனும் அளவும் உண்டு என்பது சமணர்தம் கொள்கை. அதாவது சீவன் எந்த உடலைத் தனக்குப் பற்றிடமாகக் கொள்கிறதோ அவ்வுடலுக்

கேற்பத் தன்னைப் பெருக்கிக் கொள்ளவோ அல்லது சுருக்கிக் கொள்ளவோ வல்லது என்பது அவர்தம் கூற்று. ஒரு ஆடு அடுத்த பிறவியில் யானையாகப் பிறப்பின் சீவன் பருக்கும்; எறும்பானாலோ சுருங்கும் என்பர் அவர்.

நம் புலன்களுக்குப் பொருளாக உள்ளவனாகிய பௌதிகப் பொருள்கள் அனைத்துமே அசீவன் எனப்படும். சமண தத்துவ நூலார் இவற்றைப் 'புற்கலம்' என்பர். புற்கலம் என்ற சொல்லிற்குப் பல மூலப்பொருள்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பொருளாவதும் பின் பிரிந்து பல பொருள்களாக ஆவதும் என்பது புலப்படுகிறது. (சோடியம், குளோரின் ஆகிய இரு பொருள்கள் சேர்ந்து சோடியம் குளோரைடு என்ற மூன்றாவது பொருளாக - இவ்விரண்டின் தொடர்பற்ற வேறொன்றாக-மாறுதலை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இவ்வுவமை எளிதில் புரிந்து கொள்ளமட்டுமே தரப்படுகின்றதேயன்றி ஆழமான சிந்தனைக்காக அன்று). பல பொருள்கள் ஒன்றுகூடி முழுப்பொருளான நிலையில் அவை 'ஸ்கந்தம்' எனப்படும். சமணர்கள் இவ்வுலகையே ஒரு மகாஸ்கந்தம் (மிகப் பெரியதோர் கூட்டுப்பொருள்) எனக் கூறுவர்.

இப் புற்கலங்களையும் அதினின்று பிரிந்த பொருள்களையும் மேலே பிரிபட முடியாத அளவு பிரித்துக்கொண்டே போனால் ஈற்றில் எஞ்சுகின்ற மூலப் பொருள் 'அணு' எனப்படும். இம் மிகமிகச் சிறிய அணுக்களின் சேர்க்கையால்தான் மிகப்பெரிய இவ்வுலகம் தோன்றுகின்றது என்பதுதான் சமணர் கொள்கை இந்த அசீவப் பொருள்களும் சீவப்பொருள்களைப் போலவே பிறரால் தோற்றுவிக்கப்படாததும் அழிவற்றவையுமாயினும் இவற்றிற்குச் சீவன்களைப் போல இரு வினை, பல பிறவிகள், வீடுபேறு என்பன கிடையா.

புற்கலம் பருப்பொருளாதலின் அவற்றிற்குச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய குணங்கள் உண்டு. இப்புற்கலங்களால்தான் சீவன் மனம், சொல், உடல், இன்பம், துன்பம் ஆகியவற்றைப் பெறுகின்றன.

சமணர்கள் வினைகளுக்கு மிக மிக்கியத்துவம் தருவர். இவர்கள் கன்மத்தை ஒரு பௌதிகப் பொருளாகவே கொள்.

கின்றனர் கன்மம் என்பது சமணர்தம் கொள்கைப்படி நுண் அணுக்களாக உள்ளது. அவ்வணுக்கள் பிரபஞ்சம் எங்கும் நிறைந்துள்ளது; அவை சீவன், உடல் இரண்டையும் பற்றும்; சீவனைப பற்றும்போது பாவ கன்மமென்றும், உடலைப்பற்றின் திரவிய கன்மமென்றும் பெயர் பெறும். சீவன் வீடுபேறடையும் வரை கன்மம் அதனோடு சேர்ந்தே இருக்கும்.

உயிரைப் பற்றும் வினைகளைச் சமணர் ஞானவரணீயம், தர்சனாவரணீயம், மோகனீயம், அந்தராயம, ஆயுஷ்கர்மம், நாமகர்மம், கோத்ர கர்மம், வேதனீயகர்மம் என எட்டாகப் பகுப்பர். இவற்றுள் முன்னவை நான்கும் காதி கருமம் (அழிவுந்தும் வினை destructive) என்றும், மற்றவை அகாதி கருமம் (அழிவுந்தா வினை non - destructive) என்றும் பெயர் பெறும்.

இவ் வினைகள் தாமே தமக்குரியவனைச் சென்றடையும். வினைகளை ஊட்டுகின்ற மூன்றாவது ஒரு பொருளுக்குச் சமண சமயத்தில் இடமில்லை. இதனை,

''பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக் கோடலை - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவினை நாடிக் கொளற்கு''[19]

என்றும் நாலடியாரால் உணரலாம்.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''[20]

என்ற குறளிலும் சமணர் 'தான் முந்துறும்' என்பதை மிக அதிகமாக வலியுறுத்துவர்.

ஒரு உயிர் வினைகளினின்று விடுபட்டால்தான் வீடு பேறடையும். இது இருவகைப்படும். ஒன்று, ஏற்கெனவே சேர்ந்துள்ள வினைகளை அழித்தல்; மற்றொன்று, புதிய வினைகள் தோன்றாமல் தடுத்தல். இவ்விரண்டையும் பெறு வதற்குரிய சாதனங்கள் சம்யக் தர்சனம் (சரியான கொள்கை,) சம்யக் ஞானம் (சரியான அறிவு), சம்யக் சாரித்ரம் (சரியான

19. நாலடியார் 101
20. திருவள்ளுவர், திருக்குறள் 380.

ஒழுக்கம்) என்ற மூன்று ஆகும். இவையே சமணர் மிக உயர்வாகக் கூறும் மும்மணிகள் (திரிரத்னம்) ஆகும்.

''மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய
பொருள்கள் தம்மைப்
பொய்வகை யின்றித் தேறல் காட்சி ஐம்பொறியும்
வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம்
மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியு
மென்றான்''[21]

என்ற பாடலில் திருத்தக்கதேவர் வினை நீக்கம் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

சரியான கொள்கையும், சரியான ஞானமும் கைவரப்பெற்றுச் சரியான ஒழுக்கத்தில் ஒழுகிவரின் சீவன் கன்மத் தளையையும் அசீவத் தொடர்பையும் அறவே நீத்து வீடுபேறடையும். அப்போது அச்சீவன் அனந்த ஞானம் (முடிவற்ற அறிவு), அனந்த தரிசனம் (வரம்பற்ற காட்சி), அனந்த சுகம் (பேரின்பம்) என்பனவற்றைப் பெற்றுக் கேவல ஞானமயமாக விளங்கும். இந்நிலை அடைதலே முடிந்த முடிபு.

கடவுட்கொள்கை

சமண சமய தத்துவ நூல்களில் கடவுள் பற்றிக் கூறப்படவில்லை. படைத்துக் காத்து அழிக்கும் கடவுளையோ, நமது வாழ்வுக்கும் தாழ்வுக்கும் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமான ஒரு கடவுளையோ சமணர்கள் கொள்ளவில்லை. ஆனால் நம்மைப் போன்று உலகில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, அறிவுபெற்று, தவம் இயற்றி, அறிவுரை பகர்ந்து, மக்கள் வாழ்க்கைக்குப் பாதை கோலி வீடுபேறு பெற்ற ஆற்றல் மிக்க உயரிய ஒரு ஆன்மாவையே கடவுள் என்கிறது இச்சமயம்.

இவ்வாறு வினையின் நீங்கி விளங்கியோர் அறிவர் என்றும், தீர்த்தங்கர் என்றும் வழங்கப்பட்டனர். அவர்கள் வகுத்த நெறியில் நிற்போர் சமணர் எனலாம். எனவே, கடவுள் தன்மையை - அதாவது குற்றங்குறைகள் ஒரு சிறிதும

21. திருத்தக்கதேவர், சீவக சிந்தாமணி, கேமசரியார் இலம்பகம் 1436.

அற்றுப் பேராற்றல் படைத்த மேலான ஒரு நிலையை மனிதன் அடையலாமென்பது இவர்தம் கொள்கை.

சமணர்கள் உலகத்தைப் படைக்கப்படாத ஒரு நித்தியப் பொருளாகவே கொள்வர். படைத்து, காத்து, அழிக்கும் ஒரு கடவுளை ஏற்காததால் 'நாங்கள் நாத்திகர் அல்லர்' என்பர் சமணர். ஆனால் மக்களுக்கு ஓர் இலட்சியமாய் விளங்கும் முற்றுமுணர்ந்தோன் (வாலறிவன்) ஒருவன் உளன். இதை மனத்திற்கொண்டே, 'சமணமும் ஒருவகையில் கடவுள் நம்பிக்கை கொண்டவரே. புற்கலத்தளை முழுவதும் விடுத்து, தூய்மை, நிறைவு தன்னாட்சி, இன்பம் ததும்பும் ஞான மூலம் ஆகிய சித்துப்பொருளே நம் கடவுள்''[22] என்கின்றனர் நாகரும் கோஷாம்.

'' 'நானே ஒரு தெய்வம் (அருகர்) ஆவேன்' என நான் நம்பும் போது, இன்னொரு தெய்வத்தை நான் ஏன் நேசிக்க வேண்டும்?''[23] என்று கேட்டாராம் ஒரு சமணர்.

தூய ஆன்மாவிற்கு வேறான மற்றொரு கடவுளை ஏற்காத சமணர், இலட்சியக் கடவுளாக அருகதேவரைக் கொள்கின்றனர் மணிமேகலையில்,

''இந்திரர் தொழப்படும் இறைவன் என்இறைவன்''[24] என்று கூறி விளக்கத் தொடங்குகிறான் சமணன்,

''பிண்டியின் நீழற் பெருமானடி வணங்கி''[25]
என்று பழமொழி தொடங்குகின்றது.

''சமணர் வழிபடும் கடவுள் அருகதேவர். இவர் தனக்கென வாழாப் பிறாக்குரியாளர். தோற்ற மிறுதி யில்லாதவர். ஆதியில், உலகின்புறற்பொருட்டு, அநாதியான பன்னிரண்டு வேதங்களையும் பாங்குற வெளியிட்டவர்''[26] என விளக்கம் கூறுவார் வரதராச அய்யர்.

அருக தேவனைக் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமணர்கள் தாங்கள் இயற்றிய நூல்களில் எல்லாம் 'கடவுள் வாழ்த்' தில் அருகனையே போற்றிக் கூறுவர்.

---

22. மேற்கோள் : ஞா. இஞ்ஞாசி, 'சமணம்', நம்நாட்டுச் சமயங்கள், ப. 181
23. Stevenson, The Heart of Jainism, p.128.
24. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை 27:171.
25. பழமொழி நானூறு
26. வரதராச அய்யர், தமிழ் இலக்கிய வரலாறு, ப.10.

> ''மூவா முதலா உலகம்ஒரு மூன்றும் ஏத்தத்
> தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
> ஓவாது நின்ற குணத்து ஒண்ணிதிச் செல்வனென்ப
> தேவாதி தேவனவன் சேவடி சேர்து மன்றே''[27]

எனும் சீவகசிந்தாமணியில் கடவுள் வாழ்த்தில் அருகனைக் கூறியுள்ளார் திருத்தக்க தேவர்.

இவ்வாறு நம் ஒப்பாய்வுக்குத் தேவையான அளவு சுருக்கமாகச் சமண சமயக் கொள்கைகளைப் பார்த்தபிறகு அடுத்துச் சைவ சித்தாந்தம், சமண தத்துவம் ஆகிய இருபெரும் சமயக் கொள்கைகளையும் ஒப்பிட்டு நோக்குவோம்.

உயிர்கள் எண்ணற்றவை என்பதிலும், அநாதியானவை என்பதிலும் அவை உலகியல் நிலையில் கட்டுண்டு உள்ளன என்பதிலும், இத் தளைகளை அறுத்து வீடுபேறு அடைவதே முடிந்த முடிபு என்பதிலும் சைவ சமண சமயங்களில் ஒற்றுமையைக் காணமுடிகிறது. ஆனால் சீவன் இயல்பாகவே முற்றறிவு வாய்ந்தது எனச் சமணர்களால் கூறப்படுவதைச் சைவம் ஏற்பதில்லை. சைவத்தின் பசு சார்ந்ததன்வண்ணம் சாரும் இயல்பினை உடையதாகவும், தானே அறியாது அறிவிக்க உணரும் சதசித்துப் பொருள் என்றும் கூறப்படுகிறது. சைவப் பசு ஆணவத்தோடுயட்டும் பிணிப்புண்டு கிடக்கும் கேவல நிலையிலிருந்து வீடுபேறு பெற்றுவிட்ட சுத்த நிலை வரையில் பதியாகிய இறைவனின் அருளாலேயே இயங்குகிறது. ஆனால் சமண சீவனுக்கு அருள் புரிவார் யாருமில்லை; அதுவே தன் சுயமுயற்சியால் தத்தித்தத்தி வீட்டை எட்டுகிறது.

சமணர்கள் சீவனுக்குப் பருமனும் அளவும் உண்டு எனக் கூறுவதை உலகின் வேறெந்தச் சமய தத்துவ ஆசிரியர்களும் ஏற்றுக் கொள்ளவதாகத் தெரியவில்லை.

சமணர்கள் கூறும் அசீவன் என்பதைச் சைவத்தில் பாசத்தோடு ஒப்பிடலாம். அது உடபொருள், உயிர்களின் அறிவை மயக்கி அவற்றிற்கு மீட்டும் மீட்டும் பிறவியைக் கொடுக்கும். அவற்றின் தளையிலிருந்து விடுபட்டால் தான் உயிர்கள் வீடுபேறடையும் என்பன இருசாராரும் ஒப்ப ஏற்றுக் கொள்வனவே. ஆனால் சைவர் ஆணவமாகிய மூலமலம்

27. திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி, கடவுள் வாழ்த்து

ஒன்றினைமட்டுமே அநாதி நித்தியப் பொருளாகக் கொள்ளச், சமணர் அனைத்தையுமே நித்தியம் என்பர்.

கருமத்தைப்பற்றிய சிந்தனையில் இவ்விரு சாராரின் கொள்கைகளும் அடிப்படையிலேயே மாறுபட்டுள்ளன. சமணர்களுக்கும் கருமம் என்பது அறிவற்ற சடப்பொருள்தான். ஆனால் அது ஒரு பௌதிகப் பொருளாக-அணுக்களாக-உலகெங்கும் வியாபித்திருக்கிறது என்றும். தானே தனக்குரிய சீவனையும் உடலையும் பற்றும் என்றும், உயிரை வீட்டுநிலை அளவும் விடாமற் கூடி இருக்கும் என்றும் கூறுகின்றனர். சைவத்தில் கருமம் சடப்பொருள் ஆதலால் அதனை அதற்குரிய பசுவோடு அறிந்து சேர்ப்பதற்கு ஒரு பதி வேண்டப்படுகிறான். இது.

'செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையா னான்காகும் விரித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார்''[29]

எனும் சேக்கிழார் திருவாக்கால் தெளிவாகத் தெரிகிறது. மேலும் சைவத்தில் கன்மம் உயிரைக் கடைசிவரையில் பற்றி இருப்பதில்லை. ஓர் உயிர் முத்தி நெறியில் காலடி எடுத்து வைக்கும்போதே 'இருவினை ஒப்பு' தான் முதல்படி. மும்மலங்களோடு சகலராக உள்ள ஆன்மா முதலில் கன்மத்தை விட்டு நீங்கிப் பிரளயாகலராக ஆகிறது. பிறகு மாயை நீங்குகிறது. இறுதியில் ஆணவம் ஒடுங்குகிறது. கருமம்பற்றிய இவ் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கனவாம்.

நல்வினை, தீவினை என்னும் இரண்டுமே தளைகள் என்ற அவனில் இரு தத்துவங்களிலும் முழு ஒற்றுமையைக் காண்கிறோம். மேலும் நிர்ச்சரம். சமுவரம் என்ற இரு பிரிவை ஓரளவு சஞ்சிதம். பிராரப்தம், ஆகாமியம் என்ற சைவக் கோட்பாட்டில் அடக்க

28. சேக்கிழார், பெரியபுராணம், சாக்கிய நாயனார் புராணம் 5.

முயலலாம். இக்கருமத்தை நீக்குவதே சமண சீவனின் தலையாய பிரச்சினை. ஆனால் சைவப் பசு ஆணவத்தில் தான் கட்டுண்டிருக்கிறது அந்த முதல் முடிச்சின் வலிமையைக் குறைப்பதற்காகவே கன்மம், மாயை ஆகிய வேறு முடிச்சுகள் போடப்படுகின்றன. சைவப் பசு குருவருளாலும், திருவருளாலும் சமண சீவனைவிட எளிதில் வினைகளை வென்று விடுகிறது எனலாம். சமண சமயத்தில் உள்ள சீவனுக்கு இறைவனைப்பற்றிய சிந்தனையே இல்லாதது போலவே ஆணவத்தைப் பற்றிய அச்சமும் இருப்பதாகத் தெரியவில்லை.

உலக உற்பத்தியைப்பற்றிய கருத்திலும் இவ்விருவரும் மாறுபடுகின்றனர். மிகச்சிறிய அணுக்கள் கூடிப் புற்கலங்களாகவும், ஸ்கந்தங்களாகவும் மகாஸ்கந்தங்களாகவும் தோன்றுகின்றன என்பது சமணர்களின் வாதம். ஆனால் சைவர் இறைவன் மாயையிலிருந்து தனு, கரண, புவன, போகங்களைப் படைக்கிறார் என்பர். சைவ உலகம் சிவபெருமானின் நிர்ஹேதுக காருண்யத்தால் (காரணமற்ற கருணை) ஆன்மாக்களை உய்விக்கவேண்டிப் படைக்கப்படுகிறது; காக்கப்படுகிறது; பின் அழிக்கவும்படுகிறது. சமண உலகம் சுயம்புவாக (தான்தோன்றி) உள்ளது. அதனை உண்டாக்கவோ, காப்பாற்றவோ அல்லது அழிக்கவோ யாரும் இல்லை, அது அழிவதும் இல்லை.

முத்தி சாதனங்கள் என்பனவற்றிலும் ஓரளவு ஒற்றுமை காண முயலலாம். சம்யக் ஞானம், சம்யக் தர்சனம் என்னும் இரண்டையும் பதி ஞானம் அல்லது சிவஞானம் என்பதில் அடக்கிச் சிந்திக்கலாம். சம்யக் சாரித்ரம் எனப்படும் சரியான ஒழுக்கத்தை ஞானத்தின் விளைவாகவே கொள்ளலாம் அல்லவா? அதற்குத்தக நிற்றல்தானே கல்வியின் பயன்? சம்யக் ஞானம் பெற்ற ஓர் உயிர் அதற்கேற்பத்தானே ஒழுகும்? எனவே சம்யக் சாரித்ரத்தை சம்யக் ஞானத்தின் விளைவாகக் கொண்டால்-அதாவது அவற்றிற்குக் காரண காரியத் தொடர்பை ஏற்றுக் கொண்டால் - அதையும் சிவஞானத்தில் அடக்கலாமன்றோ? சமணம் காட்டும் அறவோர் துணையையும் சைவத்தின் குருவருளையும் இணைத்துச் சிந்தித்துப் பார்க்கலாம்.

ஆனால் இங்கோர் பெரிய இடர்ப்பாடு உள்ளது. சைவத்தில் பதியாகிய சிவபெருமானே கண்டக்கறையும் கண்ணுதலும் மறைத்தருளிக் குருநாதராக வருகின்றனன் வேடர்கள் விலங்கைக் காட்டிப் பிற விலங்குகளைப் பிடித்தல் போல இறைவன் மானிடச் சட்டை தாங்கி வந்து உயிர்களைத்

தன்வயப்படுத்துகின்றனன். சைவத்தில் சிவனுக்கும் குருநாதருக்கும் பேதமில்லை. குறைந்தபட்சம் உண்மையாக ஒரு குருவை அடைந்து அவர் மூலமாக முத்தி அடைய விரும்புபவர்கள் மட்டிலாவது இது மறுக்க முடியாததாம் 'குருவே சிவம் எனக் கூறினன் நந்தி'[29] என்பது திருமந்திரம்.

சமண சமயத்தின் அறவோர்களை இப்படிக் கூறமுடியவில்லை. அவர்கள் தம் பெருமுயற்சியால் வினையினின்றும் நீங்கியவர்கள். அவ்வளவே! பேரின்ப வீட்டை நோக்கி அவர் கொண்ட அரிய நெடும் பயணத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் புதிய பயணிகளோடு பகிர்ந்துகொண்டு அவர்கட்கு உதவி செய்யலாம். உயிர்கள் அவர்களால் பெறுவதெல்லாம் கேள்வி ஞானமே சீவன்தான் தன் முயற்சியால் வீடுபேறடைய வேண்டும். சைவ குரு தன் தீட்சையால் உயிர்களுக்கு மல நீக்கம் பெற உதவி செய்வது போல் சமணத்தில் கூறப்பட்டதாகத் தெரியவில்லை உயிரின் முத்திப் பயணத்திற்குக் குருவின் உதவி என்பது இந்த இருபெரு தத்துவங்களுக்கிடையில் உள்ளதோர் முக்கிய வேறுபாடாம.

முத்தி பெற்ற உயிரின் நிலைபற்றிய மற்றுமொரு முக்கியமான ஆனால் நுட்பமாகச் சிந்திக்கவேண்டிய - வித்தியாசத்தையும் இன்றியமையாது இங்குச் சுட்டிக் காட்டவேண்டும். அதைச் சற்று விரிவாகவே காண்போம்.

சைவத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிகளிலிருந்து முத்தி பெற்றவர்கள் முறையே சாலோகம். சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற நிலைகளை அடைவர் எனக் கூறப்பெறுகிறது. இவற்றுள் முதல் மூன்றும் பதமுத்தி என்றும், நான்காவது பரமுத்தி என்றும் கூறப்படுவது உண்மையே. எனினும் இந் நான்கு நிலைகளும் போற்றப்படுவனவே. இவற்றுள் சாரூபம் என்னும் நிலையில் உயிர் சிவசொரூபம் பெறுகிறது. சிவரூபம் என்னும் போது வடிவம் மட்டும் அன்று, சில இயல்புகளையும் அடைகிறது என்றே கொள்ளவேண்டும். இது ஒரு அம்சம்.

சைவம் 'சிவோகம் பாவனை' என்ற ஒன்றைக் கூறுகிறது. மாபாடியம்,

29. திருமூலர், திருமந்திரம் 1581.

"சிவஞானத்தாலே ஆசாரியன் சிவோசயம் எனத் தன்னுள்ளே பாவித்துச் சிவத்வமசி என்று அறிவுரைக்கும் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று சிவோகம் எனப் பாவிப்பானாயின் அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனால் அநாதியே கூடிய பொதுவியல்பையும் அதற்கேதுவாகிய மலமாயா கன்மங்களையும் தான் விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருடத்தியானத்தில் விளங்கும் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு போலாம் என்க"[30]

என்பதோடு,

"கீதை நூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே உலகமெல்லாம் என்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதும், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றதூஉம், அதனை உறுதியாகக் கொண்டேன் என்ற அருச்சுனன் அவன் கூறிய கருத்துணர்ந்து சாங்காறும் சிவபூசை செய்ததூஉம், கண்ணன் மேலிட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉம்"[31]

கண்ணனின் சிவோகம் பாவனையாலேயே என்கிறது. இவற்றால் சிவோகம் பாவனை பெற்ற ஓர் உயிர் ஏறக்குறைய சிவமே ஆகிவிடுகிறது எனலாம். இது இரண்டாம் அம்சம்.

முத்தி நிலையில் சீவன் தன் இயல்பான சீவபோதத்தை முற்றிலும் இழந்து சிவபோதத்தைப் பெற்றுவிடுகிறது

'தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்'[32]

என்ற திருவாசகமே இதற்குச் சான்று. எனவேதான் இந்நிலையடைந்த அடியார்கள் சைவத்தில் அரனாகவே பாவிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய கரணங்கள் சிவகரணங்கள் எனப்படும்.

30. மாதவச் சிவஞான யோகிகள், சிவஞான போதமும் சிவஞான பாடியமும், 9ஆம் சூத்திரம், 2ஆம் அதிகரணம்.
31. மாதவச் சிவஞான யோகிகள், மு கா. நூல். 2ஆம் சூத்திரம் முதல் அதிகரணம்
32. மாணிக்கவாசகர், திருவாசகம் கோயில் திருப்பதிகம் 10.

''பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன்று ஏவிக் கராங்கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்தம்
கரணம்போல் அல்லாமை காண்''[33]

என்பது சாத்திரம். மூவர் முதலிகளின் செயல்களை ஐந்தொழில் இயற்றலாகவே கூறும் சைவ மரபு நாம் அறிந்ததே. இதனாலும் சீவன் சிவனாகவே ஆகிவிடுகிறது எனலாம். இது மூன்றாம் அம்சம்

முத்தி நிலையில் ஓர் உயிர் சிவபெருமானுக்கு எல்லா வகையாலும் இணையாக ஆகிவிடுகிறது என்று கூறுகின்ற ஒரு பிரிவினர் சிவசமவாதிகள் என்ற பெயருடன் சைவத்திற்குள்ளேயே அகச்சமயிகளாக உள்ளனர். இது நான்காவது அம்சம்.

இந்த நான்கு அம்சங்களையும் இணைத்துக்கொண்டு சமணம் காட்டும் முத்திநிலையிலுள்ள ஆன்மாபற்றிச் சிந்திப் போம். கேவலஞானம் பெற்ற சமண சீவன் அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த சுகம் என்பனவற்றைப் பெறு-கிறது. இக் குணங்கள் அனைத்தும் சைவம் காட்டும் பதியியல்பில் அடக்கம். சீவன் முத்தியில் சிவனாகிறான் எனச் சைவம் கூற சமணர் இச் சிவசப்தத்தை விட்டுவிட்டு இறைமைக் குணங்களை மட்டும் ஏற்றிக் கூறுகின்றனர் எனலாம், அவ்வாறு கூறவே இரு தத்துவங்களும் காட்டும் முத்தி நிலையும் ஒரே தன்மையது என ஆகும் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். ஆனால் உண்மை அதுவன்று.

இறைவன் இயல்பாகவே மலங்களினின்றும் நீங்கி-யவன். அவன் ஒருகணம் கூட ஆணவத்தின் தளையில் கட்டுண்டிருந்ததில்லை. இதுபற்றியே அவன் அநாதிமல முத்தன் எனப்படுகிறான். முத்தியடைந்த உயிரின் நிலை முற்றிலும் வேறானது. அது ஆயிரக்கணக்கான பிறவிகளில் மும்மலங்களிலும் உழன்று ஈற்றில் இறையருளால் முத்தி அடைந்தது. எனவே தான் இது ஆதிமுத்தன் எனப்பட்டது. அடியார்கள் ஐந்தொழிலியற்றினாலும் அவை அரனின் திரு-வருளை முன்னிட்டே செய்யப்படுகின்றன. சிவஞான முனிவர் மாபாடியத்தில் கூறும்,

33. திருக்கடவூர் உய்யவந்ததேவர், திருக்களிற்றுப்படியார் 12.

''மாசு நீங்கியவழி ஆடையின் குணமாகிய வெண்மை ஆடை முழுதிலும் விளங்கினாற்போல மலநீங்கிய வழித் தன்வியாபக முற்றும் விரிந்து விளங்குமியல் புடைமை மாத்திரையேபற்றி முன்விளங்கிய ஏக தேச அறிவை நோக்கி முற்றறிவெனப்படும் ஆன்மாவின் அறிவு ஒன்றின் அழுந்துங்கால் மற்றொன் றினை அறியுமாறின்மைபற்றி முழுவதும் ஒருங்கே அறியும் பேரறிவாகிய பரமான்மாவின் அறிவை நோக்கிச் சிற்றறிவெனப்படும்''[34]

''அநாதி முத்தனாகிய சிவனும் ஆதிமுத்தனாகிய ஆன்மாவும் ஒரு சாதி என்பது உணர்ந்து கோடன்மாத்திரைக்கே''

எனினும்,

''சிவனும் ஆன்மாவும் சித்தாதல்பற்றி ஒரு சாதியே யாயினும் சிவனோடொப்ப ஐந்தொழில் செய்யும் உரிமையுடையனல்லனென்றொழிக''[35]

என்னும் கருத்துகள் மிக நுட்பமானவையும் இன்றியமை-யாதனவும் ஆகும். இது பற்றியே சித்தியாரும்,

''உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக்குரியன்
உயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கு முரித்தே''[36]

என்றதனோடு அமையாமல் மேலும் மிக விளக்கமாக,

''சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னிற்
சிவனருட்சித் திருவருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றான்
அவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டும்
அணைந்தாலு மொன்றாகா தநந்நியமா யிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித் திவனாமோ புத்தி
இதுவ சித்தென் றிடிவவனுக் கிவனுமசித் தாமே''[37]

என அறிவுறுத்துகிறது.

---

34. மாதவச் சிவஞானயோகிகள், மு.கா நூல், சிறப்புப்பாயிரம்.
35. மேலது. 6ஆம் சூத்திரம், 2ஆம் அதிகரணம் சிவசமவாத மறுப்பு.
36. அருணந்தி சிவாசாரியார், மு.கா.நூல் 319.
37. மேலது 320.

சைவத்தில் ஆன்மா முத்தி நிலையிலும் சிவனை நோக்கச் சிற்றறிவினன் மற்றும் பரதந்திரனுமே ஆவான். முத்தி நிலையிலும் அவன் அறிவு, அன்பு, கிரியை என்னும் மூன்றும் முதல்வனது அறிவு அன்பு கிரியைகளை இன்றியமையாது வேண்டும். பெத்த நிலையில் மல சம்பந்தமாகிய புவன போகங்களைத் தனக்கு விஷயமாகப் பெற்று மயங்கி இருந்த ஆன்மா, முத்தியில் சச்சிதானந்த வடிவமாகிய சிவபெருமானைத் தன் விஷயமாகப் பெற்றிருக்கும் என்பதே வேறுபாடு. இவ்வாறு கூறப்படுவதால் சிவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் எந்த நிலையிலும் இல்லை என்னும் பரத்துவம் சற்றும் ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்படுகிறது.

வினைகளின் நீங்கிய சீவனுக்கு மேற்பட்டது சமணத்தில் எதுவுமில்லை. கடவுள் கொள்கை இல்லாததால் ஏற்பட்ட விளைவு இது. சமண சமயம் காட்டும் முத்திநிலை எய்திய உயிரைச் சைவ சித்தாந்தி பதமுத்தி அடைந்ததாகக்கூட ஒப்பமாட்டார். சமண முத்தர் சைவத்திற்கு வந்தால், அவர் பிரளயாகலன் எனவே கூறப்படுவார். அதைத்தாண்டி விஞ்ஞானகலன் ஆக வேண்டும். பிறகே முத்தி. இதனை உமாபதி சிவாசாரியார் தம் சிவப்பிரகாசத்தில் மிக விளக்கமாக,

''அரிவையரின் புறமுத்தி கந்த மைந்தும்
அறமுத்தி திரிகுணமும் அடங்கு முத்தி
விரிவுவினை கெடுமுத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
பாடாண முத்திஇவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிறுமுத்தித் திறத்த தாமே''[38]

என எடுத்துக்காட்டுகிறார். இப்பாடலின் விரிவுவினை கெடுமுத்தி எனக் கூறப்பட்டதுதான் சமணர்கள் காட்டும் முத்தியாகும்.

இவ்வாறு சைவம், சமணம் ஆகிய இருபெரும் தத்துவங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இதுவரை ஓரளவு சுருங்கிய அளவில் ஆராயப் பெற்றன.

38. உமாபதிசிவம், சிவப்பிரகாசம் 50.

# நூலோதி


அம்பலவாண தேசிகர் — சித்தாந்த சிகாமணி, திருவாவடுதுறை ஆதீனம்.

அருணந்தி சிவாசாரியர் — இருபா இருபஃது, (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம் 1955.

,, — சிவஞான சித்தியார் சுபக்கம், (பதிப்பு) மு. திருவிளங்கம், யாழ்ப்பாணம், 1971.

,, — சிவஞான சித்தியார் சுபக்கம், (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம், 1954.

அருணாசலம், ப. — பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம் (வி உ.) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

அருணாசலம், மு. — சைவ சமயம், சென்னை, 1969.

அருணைவடிவேல் முதலியார் (உ.ஆ.) — சிவபோக சாரம். தருமபுர ஆதீனம், 1977.

அறிவுடை நம்பி, ம. சா. — திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணி பதிப்பகம், மதுரை, 1986.

,, (ப.ஆ.) — போதமும் சுபக்கமும், வளவன் வெளியீடு, மதுரை, 1978.

,, (உ.ஆ.) — மூவர் தேவாரம் முதல் ஐந்து பதிகங்கள், கருமணி பதிப்பகம், மதுரை, 1981.

| | |
|---|---|
| ஆறுமுக நாவலர் | சைவ வினா விடை இரண்டு பகுதிகள்,<br>ஆறுமுகநாவலர்<br>வித்தியாநுபாலன அச்சகம்,<br>சென்னை, 22ஆம் பதிப்பு 1977, |
| இஞ்ஞாசி, ஞா. | 'சமணம்'<br>நம் நாட்டுச் சமயங்கள்<br>(ப. ஆ.) ஆல்பர்ட் மனுவேல்,<br>கிறித்தவ இறையியல்<br>இலக்கியக்குழு,<br>சென்னை, 1965, பக். 161-190. |
| இரட்டைப் புலவர்கள் | ஏகாம்பரநாதருலா,<br>கழகம், சென்னை. |
| இராசமாணிக்கனார், மா, | சைவ சமய வளர்ச்சி.<br>பாரிநிலையம், சென்னை, 1972. |
| இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். | சமயங்கள்,<br>கழகம், சென்னை, 1962. |
| இராமநாதபிள்ளை. ப. (உ..ஆ.) | மெய்கண்ட சாத்திரம்<br>இரு பகுதிகள்,<br>கழகம், சென்னை,<br>மறுபதிப்பு 1974. |
| இலட்சுமணன், கி. | இந்தியத் தத்துவ ஞானம்,<br>பழனியப்பா பிரதர்சு, சென்னை,<br>இரண்டாம் பதிப்பு 1970. |
| இளங்கோவடிகள் | சிலப்பதிகாரம்,<br>(ப.ஆ.)உ.வே.சாமிநாதையர்<br>கபீர் அச்சுக்கூடம், சென்னை,<br>எட்டாம் பதிப்பு 1968. |
| இளம்பூரணர் (உ..ஆ.) | தொல்காப்பியம் பொருளதிகாரம்,<br>(பதிப்பு) கழகம், சென்னை,<br>ஆறாம் பதிப்பு 1974. |

| | |
|---|---|
| உமாபதிசிவம் | சிவப்பிரகாசம், (ப.ஆ.) கு. சுந்தரமூர்த்தி, காசிமடம், திருப்பனந்தாள், 1983. |
| ,, | திருவருட்பயன், (ப.ஆ.) கு. சுந்தரமூர்த்தி, காசிமடம், திருப்பனந்தாள், 1978. |
| கந்தையாபிள்ளை, ந. சி. | இந்து சமய வரலாறு, சென்னை, 1960. |
| காரைக்காலம்மையார் | அற்புதத் திருவந்தாதி, (உ. ஆ.) அ. இராசகோட்டியப்ப பிள்ளை, காரைக்காலம்மையார் பெண்கள் வைதிக வித்தியாலய வெளியீடு, விருதுநகர், 1960. |
| குமரகுருபரர் | திருச்செந்தூர்க் கந்தர் கலி-வெண்பா, (பதிப்பு) காசிமடம், திருப்பனந்தாள், 1929. |
| ,, | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், (ப.ஆ.) உ. வே. சாமிநாதையர், கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1947. |
| குமரகுருபரன்பிள்ளை, டி. எம். (ப.ஆ.) | பதினோராந் திருமுறை, ஸ்ரீ குமரகுருபரர் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963. |
| கோவிந்தராசமுதலியார், கா. ர. (உ. ஆ.) | பன்னிரு பாட்டியல், கழகம், சென்னை, 1970. |
| சதாசிவப் பண்டாரத்தார், தி. வை. | தமிழ் இலக்கிய வரலாறு 13, 14. 15 ஆம் நூற்றாண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1963. |

| | |
|---|---|
| சமண மாமுனிவர்கள் | நாலடியார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1989. |
| சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.) | கலைசைக் கோவை, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1935. |
| சாம்பசிவன், ச. | 'வள்ளுவர் கடவுட் கொள்கை,' திருக்கோயில் திங்களிதழ், சென்னை, நவம்பர் 1974. |
| சாம்பசிவன், ச. (உ.ஆ.) | வள்ளுவர் தெள்ளுரை, திருவள்ளுவர் கழகம், மதுரை, 1970. |
| சீத்தலைச் சாத்தனார் | மணிமேகலை, (ப.ஆ.) உ. வே. சாமிநாதையர், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1965. |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | தேவாரத் திருப்பதிகங்கள் (பதிப்பு) தருமபுர ஆதீனம், 1967. |
| சுப்பிரமணியபிள்ளை, கா. | சைவ சித்தாந்த உண்மை வரலாறு, கழகம், சென்னை. |
| ,, | தமிழ் நாட்டு இந்து சமயங்களின் சுருக்க வரலாறு, கழகம், சென்னை, 1927. |
| ,, | மெய்கண்டாரும் சிவஞான போதமும், மணிவாசக மன்றம், நெல்லை, 1932. |
| சேக்கிழார் | திருத்தொண்டர் மாக்கதை, (ப.ஆ.) ப. இராமநாதபிள்ளை, கழகம், சென்னை, 1970. |
| தாயுமானவர் | திருப்பாடல்கள் (பதிப்பு) கழகம், சென்னை, 1975. |

திருக்கடவூர்உய்யவந்ததேவர் — திருக்களிற்றுப்படியார், (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம், 1954.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் — தேவாரத் திருப்பதிகங்கள் (பதிப்பு) கழகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1973.

,, — தேவாரத் திருப்பதிகங்கள் 1, 2, 3, (பதிப்பு) தருமபுர ஆதீனம், 1953, 1954, 1955.

திருத்தக்கதேவர் — சீவகசிந்தாமணி (ப ஆ.)உ. வே. சாமிநாதையர், தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1969.

திருநாவுக்கரசர் — தேவாரத் திருப்பதிகங்கள் 4, 5, 6, (பதிப்பு,) தருமபுர ஆதீனம், 1957, 1961, 1963

திருநாவுக்கரசு, மறை. — பெரியபுராண ஆய்வுரை இரண்டாம் தொகுதி அப்பர், மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை, 1974.

,, — பெரியபுராண ஆய்வுரை மூன்-றாம் தொகுதி - சம்பந்தர் மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை, 1975.

திருமாளிகைத் தேவர் முதலானோர் — திருவிசைப்பா திருப்பல்-லாண்டு, (பதிப்பு) தருமபுர ஆதீனம், 1969.

திருமூலர் — திருமந்திரம், (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம்,

துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு — சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு 1978.

| | |
|---|---|
| நச்சினார்க்கினியர் (உ.ஆ.) | தொல்காப்பியம்எழுத்ததிகாரம், (பதிப்பு) கழகம், சென்னை, 1972. |
| பகழிக்கூத்தர் | திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், கழகம், சென்னை. |
| பன்னிருவர் | பதினோராந் திருமுறை, (பதிப்பு) கழகம், சென்னை, 1971. |
| பிங்கல முனிவர் | பிங்கலந்தை, (பதிப்பு) கழகம், சென்னை, 1968. |
| மறைஞான சம்பந்தர் | சிவதருமோத்தரம், முத்தமிழாகர அச்சுக்கூடம், திருநெல்வேலி, 1867. |
| மறைமலையடிகள் | சிவஞானபோத ஆராய்ச்சி, கழகம், சென்னை, 1971. |
| மனவாசகங்கடந்தார் | உண்மை விளக்கம் (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம், 1956. |
| மாணிக்கவாசகர் | திருவாசகம் (பதிப்பு) கழகம்,சென்னை.1974. |
| மாதவச் சிவஞான முனிவர் | கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி திருவாவடுதுறை ஆதீனம்,1951 |
| ,, | திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், கழகம், சென்னை, 1979. |
| ,, | சிவஞானபோதமும் சிவஞான பாடியமும், (பதிப்பு) கழகம், சென்னை, 1936. |
| ,, | சிவஞான போதமும்.சிவஞான பாடியமும், (பதிப்பு) திருவாவடுதுறை ஆதீனம், 1954. |

| | |
|---|---|
| மீனாட்சிசுந்தரம் பிள்ளை | சேக்கிழார் பிள்ளைத்தமிழ். (உ.ஆ.)பாலூர் கண்ணப்ப முதலியார், ஸ்ரீகந்தப்பெருமான் தேவஸ்தானம், திருப்போரூர், 1964. |
| ,, | தியாகராசலீலை |
| ,, | பிரபந்தத் திரட்டு (ப. ஆ.) உ. வே. சாமிநாதையர், கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை, 1926 |
| முத்துராமன் | சைவசித்தாந்தம் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975. |
| மெய்கண்டதேவர் | சிவஞானபோத மூலமும் உரையும். (பரி.) முருகேச முதலியார், சென்னை, 1875. |
| வச்சிரவேல் முதலியார், க. | சிவஞானபாடியத் திறவு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. |
| வரதராச அய்யர் | தமிழ் இலக்கிய வரலாறு |
| வில்லிபுத்தூரார் | வில்லிபாரதம் 4 பகுதிகள், (பதிப்பு) எஸ். ராஜம், சென்னை, 1959. |
| வெள்ளைவாரணனார், க. | பன்னிரு திருமுறை வரலாறு இரு பகுதிகள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1962, 1969. |
| — | அகநானூறு. (பதிப்பு) எஸ்.ராஜம், சென்னை, 1958. |
| — | ஐங்குறுநூறு. (பதிப்பு) எஸ்.ராஜம், சென்னை, 1957. |

— கலித்தொகை,
(பதிப்பு) எஸ். ராஜம்,
சென்னை, 1957.

— குறுந்தொகை,
(பதிப்பு) எஸ்.ராஜம்,
சென்னை, 1957.

— நற்றிணை,
(பதிப்பு) எஸ் ராஜம்,
சென்னை, 1957,

— பதிற்றுப்பத்து,
(பதிப்பு) எஸ்.ராஜம்,
சென்னை, 1957.

— பதினெண்கீழ்க்கணக்கு இரு பகுதிகள்,
(பதிப்பு) எஸ். ராஜம்,
சென்னை, 1959.

— பத்துப்பாட்டு,
(பதிப்பு) எஸ். ராஜம்,
சென்னை, 1957.

— புறநானூறு.
(பதிப்பு) எஸ். ராஜம்,
சென்னை, 1958.

Stevenson — The Heart of Jainism.

— Tamil Lexicon Vol. I,
University of Madras,
Madras, 1982,

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 4 | இலக்கிய நிகளில் | இலக்கியங்களில் |
| 28 | 4 | வர்ழ்கையில் | வாழ்க்கையில் |
| 33 | 23 | தொகுத்குக் | தொகுத்துக் |
| 34 | அ.கு2 | தேவாாம் | தேவாரம் |
| 36 | 7 | வானாய் நில வானாய் | வானாய் நில னானாய் |
| 43 | 26 | இரணியாக்களை | இரணியாக்கனை |
| 47 | 22 | ஏவீி | ஏவி |
| 48 | 16 | டாமென்னும் | பீடமென்னும் |
| 51 | 18 | எதிரிலிருந்து | எதிரிலிருந்த |
| 67 | 15 | ஆட்கொ | ஆட்கொள் |
| 79 | 32 | பிக்சைக் | பிச்சைக் |
| 81 | 25 | சிடைக்கவில்லை | கிடைக்கவில்லை |
| 93 | 3 | சங்கோத்தரவிதித்தி | சங்கோத்தரவிருத்தி |
| 95 | 6 | பெமானுக்குச் | பெருமானுக்குச் |
| 96 | 9 | வார் | வர் |
| 98 | 17 | தம்மைம் | தம்மைப் |
| 99 | 4 | னது | வது |
| | 10 | பதாகப் | தாகப் |
| | 29 | பிள்யைார் | பிள்ளையார் |
| 100 | 10 | நினைத்ததற்கு | நினைத்தற்கு |
| 114 | 3 | அமைந்திருந்தல் | அமைந்திருத்தல் |
| | 11 | ளல்லவே | வல்லவே |
| 108 | 29 | வேலைகளில் | வேளைகளில் |
| 109 | 12 | இணைத்துச் | இணைத்துப் |
| 110 | 7 | கூரிய | கரிய |
| 111 | 3 | அவனயை | அனசூயை |
| | 21 | மீனவும் | மீளவும் |
| 113 | 1 | தது | நீக்கவும் |
| 115 | 2 | றல்கும் | நல்கும் |
| | 30 | மற்றோரர் | மற்றோர் |

| | | | |
|---|---|---|---|
| 118 | 6 | தம்மையன் | தன்மையன் |
| 122 | 24 | நாயினேன் | நாயினேன் |
| 127 | 1 | சொல்ல்லைப் | சொல்லைப் |
| 128 | 2 | சவ லை | சைவ |
| 129 | 17 | ஒன்றை | ஒன்று |
| 131 | 13 | குடந்பு | குடம்பு |
| 136 | 24 | ஒலியைக் | ஒளியைக் |
| 140 | 16 | கூறினர்லும் | கூறினாலும் |
| | 24 | பார்க்களில் | பாக்களில் |
| 141 | 21 | சுவகளின் | சுவடிகளின் |
| | 29 | இச்சவடி | இச்சுவடி |
| 142 | 3 | திருப்பனந்தான் | திருப்பனந்தாள் |
| 144 | 6 | சேக்ழாரும் | சேக்கிழாரும் |
| | 23 | திருஞானசப்பந்தர் | திருஞானசம்பந்தர் |
| 147 | 21 | சிறப்ப | சிறப்பு |
| 149 | 10 | உலகின் | உலகில் |
| 151 | 13 | பெருமைமை | பெருமையை |
| 154 | 18 | சௌந்திராந்திகள் | சௌந்திராந்திகர் |
| 155 | 32 | கரரணமான | காரணமான |
| 158 | 20 | மலர்ப்பதற்தே | மலர்ப்பதத்தே |
| | அ·கு 15 | மணவாசகய்கடந்தார் | மணவாசகங்கடந்தார் |
| | அ·கு 16 | அருணந்திசிலம் | அருணந்திசிவம் |
| 159 | 3 | ஒருவரைவான் | ஒருவனாவான் |
| 163 | 16 | ஆவணத்தை | ஆணவத்தை |
| 165 | 33 | குளிதலும் | குளிர்தலும் |
| | அ·கு 27 | சிவஞானபோதம் குத். | சிவஞானபோதம் சூத். |
| 168 | 17 | அவரவரோ | அவரவரே |
| | 21 | வினைத்கு | வினைக்கு |
| | 23 | ஞ்ரான | ஞான |
| | 33 | அபிமானித்தலையும் | அபிமானித்தலையும் |

| | | | |
|---|---|---|---|
| 169 | 30 | ஆன்மானானது | ஆன்மாவானது |
| 170 | 16 | ளைச் | களைச் |
| | 21 | மும்மலங்களையும் | மும்மலங்களையும் |
| 171 | 9 | அலிவுயிர்களின் | அவ்வுயிர்களின் |
| | 9 | சங்சிதவினை | சஞ்சிதவினை |
| 175 | அ.கு 38 | சம்பம்தர் | சம்பந்தர் |
| 176 | 19 | சுபகத்தில் | சுயக்கத்தில் |
| | அ.கு 39 | சமபந்தர் தேவாாம் | சம்பந்தர் தேவாரம் |
| 177 | 3 | உயிரர | உயிரா |
| | 22 | மதைத்தாலும் | மனத்தாலும் |
| 180 | 25 | வீர்நிழல் | நீர்நிழல் |
| 181 | 3 | நிறங்களையை | நிறங்களைக் |
| | 22 | பஞ்சாக்ரெம் | பஞ்சாக்கரம் |
| 183 | 19 | திருவைந்ததழுத்தை | திருவைந்தெழுத்தை |
| 185 | 8 | தம்றைப் | தம்மைப் |
| | 31 | சிவன்மித்தனானவன் | சீவன் முத்தனானவன் |
| 189 | 17 | துணை | துணைக் |
| 191 | அ கு 5 | மணவாசகய்கடந்தார் | மனவாசகங் கடந்தார் |
| 195 | 27 | தாண்டுகொள் | தாண்டுகொண் |
| 200 | 16 | ஒள்றுகூடி | ஒன்றுகூடி |
| | 34 | மிக்கியத்துவம் | முக்கியத்துவம் |
| 201 | 21 | என்றும் | என்னும் |
| | 22 | யாவுன | யாவுள |
| 204 | 5 | சீவகசிந்தாமணீ | சீவகசிந்தாமணி |
| | 26 | அனவும் | அளவும் |
| 205 | 26 | அவனில் | அளவில் |

—o—